ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதா ரஸ மஞ்சரீ

இரண்டாம் பாகம்

'பகவத் விஷயம்'

தொகுத்து, வெளியிடுபவர்

ஸ்ரீ.உ.வே. ந்யாய வேதாந்த வித்வான் "வாக் அம்ருத வர்ஷீ"

வேளுக்குடி K. வரதாசார்யஸ்வாமி

1981

http://acharya.org

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸுதா ரஸ மஞ்சரீ

இரண்டாம் பாகம்

'பகவத் விஷயம்'

தொகுத்து, வெளியிடுபவர்

ஸ்ரீ.உ.வே. ந்யாய வேதாந்த வித்வான் "வாக் அம்ருத வர்ஷீ"

வேளுக்குடி K. வரதாசார்யஸ்வாமி

1981

http://acharya.org

SRI PADMAVATHI AMMAVARU

SRI VENKATESWARA SWAMIVARU

Copyrights with
T. T. Devasthanams.

Price: 0-50 Ps.
T.T.D. Press, Tirupati

http://acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

"ஸுதா ரஸ மஞ்ஜரீ"

முன்னுரை

பேரின்ப வாழ்வு பெற இன்றியமையாதது உண்மை உணர்வு; தத்வ ஞானம். இந்த அறிவு பெற பகவான் நமக்கு பற்பல சாஸ்திரங்களை உபகரித்துள்ளான். அவற்றுள் சாரீரகமும் திருவாய்மொழியும் இரு கண் எனத் தகும் இரண்டு திவ்ய சாஸ்திரங்கள். சாரீரகம் என்றும் ப்ரஹ்ம மீமாம்ஸை என்றும் உத்தர மீமாம்ஸை என்றும் கூறப்படுகின்றது ப்ரஹ்ம ஸூத்ரம். ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரமான ஸ்ரீ வேத வியாசர் இதனை அருளிச் செய்தார். திருவாய்மொழியை அருளிச் செய்தவர் நம்மாழ்வார். இவரையும் பகவதவதாரம் என்று கூறலாம். திருக் குறுங்குடி நம்பியே திருக்குருகூர் நம்பி (ஆழ்வார்) ஆக அவதரித்தார் என்பர் பெரியோர். வ்யாஸரும் ஆழ்வாரும் அருளிச் செய்த சாரீரகமும் திருவாய்மொழியும் அமிர்தமாகும். அமிர்தமே ஸுதை. சரீரத்திற்கு போஷகமான அமிர்தம் தாழ்ந்தது. ஆத்மாவிற்கு போஷகமான இந்த அமிர்தமே உயர்ந்தது. மாதவன் வங்கக் கடல் கடைந்து அம்ருதத்தை எடுத்து தேவர்கட்கு ஈந்தான். தேவர்கள் பகவானை விட்டு அம்ருதத்தை விரும்பிய ப்ரயோஜநாந்தரபரர்கள். அவர்கட்கு பகவான் கொடுத்த அம்ருதமும் அஸாரமாகும். வியாஸரும், ஆழ்வாரும் உபநிஷத்தாகிற திருப்பாற்கடலையும் ரஹஸ்யத்ரயமாகிற திருப்பாற்கடலையும் கடைந்து அவற்றின் ஸாரமாகிய அமிர்தமாக சாரீரகத்தையும் திருவாய் மொழியையும் எடுத்து பக்த சிகாமணிகட்கு வழங்கினர். இதுவே சாலச் சிறந்த அமிர்தம். "பாராசர்ய வசஸ்ஸுதாம்" என்று ஸ்ரீ ராமாநுஜர் சாரீரகத்தை அம்ருதமாகக் கொண்டாடுகிறார். திருவாய் மொழியை "பக்தாம்ருதம்" என்று நாதமுனிகள் கொண்டாடுகிறார். நம்மாழ்வாரும் தம்முடைய திருவாய் மொழியை "தொண்டர்க்கமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்னேன்" என்று அமிர்தமாகக் கூறுகின்றார். இவ்வமிர்தம் ஆத்மஸ்வரூப போஷகம். இவ்விரண்டும் கொண்டே ஆத்ம க்ஷேமம் பெறவேண்டும்.

ஶாரீரகத்தில் ஸ்ரீவேதவ்யாஸர் சதுஸ்ஸூத்ரியான உபோத்காதத்துக்கநந்தரம் ஈக்ஷத்யதிகரணமான ஶாஸ்த்ராரம்பத்தில் பரமாத்மா ஜகத் காரணபூதன் அசித் விலக்ஷணன் என்பதனை அறுதியிட்டார். அவ்வதிகரணத்திலேயே "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்று அவனே மோக்ஷோபாய பூதன் என்று அறுதியிட்டார். ஜகத் காரணத்தையிறே வேதாந்தம் மோக்ஷோபாயமாக அறுதியிட்டது. அடுத்த ஆநந்தமயாதி கரணத்தில் அவனே பரமப்ராப்யபூதனென்பதனையும், அவன் பக்த விலக்ஷணனென்பதனை

http://acharya.org

யும் முக்த விலக்ஷணன் என்பதனேயும் உபய விலக்ஷண னென்பதனேயும், "ஆநந்தமய: அப்யாஸாத்" "காமாச்ச நாநுமா நாபேக்ஷா" "பேதரோ ऽநுபபத்தே:" "பேத வ்யபதேசாச்ச" என்று ஸூத்ரகாரர் அறுதியிட்டார். அடுத்த அந்தராதி கரணத்தில் அவன் திவ்யமங்களவிக்ரஹ விசிஷ்டன் என்றறுதியிட்டார். இவற்றினுடைய விவரணமே மேல் 149 அதிகரணங்களாகும். ஆக ஜகத்காரணபூதன் உபாயோபேயபூதன் ப்ரக்ருதிபுருஷ விலக்ஷணன் திவ்ய விக்ரஹ விசிஷ்டன் பரமாத்மா என்று வ்யாஸ ஸித்தாந்தம் தேறுகிறது.

நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் அவனே உபாயபூதன் என் பதனே "அருளினன்" என்று முதற்பத்திலும், அவனே ப்ராப்யபூதன் என்பதனே "மிக்கார்வேத விமலர் விழுங்கும் அக்காரக்கனி" என்று இரண்டாம்பத்திலும், அவன் திவ்ய விக்ரஹவிசிஷ்டன் என்பதனே "முடிச்சோதி அடிச்சோதி கடிச்சோதி" என்று மூன்றும் பத்திலும் அருளிச்செய்தார். இதன் விவரணமே மேலிற்பத்துக்களாகும். ருசி ஜநக விக்ரஹ யோகத்தைத் திருக்குறுங்குடிப் பதிகத்திலும், உபாய பாவத்தை வானமாமலேப் பதிகத்திலும், உபேயபாவத்தைத் திருக் குடந்தைப் பதிகத்திலும் ஆழ்வார் விவரிக்கிறார்.

ஆக பரமாத்மா ஸ்ரீமந்நாராயணன் சிதசித் விலக்ஷணனுய் ஜகதேக காரண பூதனுய் உபய லிங்க விசிஷ்டனுய் உபய விபூதி விசிஷ்டனுய் உபாயோபேய பூதனுய் திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனுய் வேதாந்த வேத்யனுவான் என்றவர்த்தம் ஸுதாத்வய ரஸமாகும்.

இவ்விரண்டிற்கும் பல பெரியோர்கள் வ்யாக்யானம் இட்டருளி யுள்ளார்கள். ப்ரஹ்ம மீமாம்ஸைக்கு பாஷ்யம் அருளிச் செய்தார் ஸ்வாமி எம்பெருமானுர். இதுவே "ஸ்ரீ பாஷ்யம்" எனப் படுகின்றது. அவருடைய நியமநம் கொண்டு திருவாய்மொழிக்கு திருக்குருகைப் பிரான் பிள்ளான் வ்யாக்யானம் இட்டருளினுர். அதனே அனுஸரித்து நஞ்சியர், நம்பிள்ளே தொடக்கமான பூர்வாசார்யர்களும் வ்யாக்யானம் இட்டருளினுர்கள். இவர்களே திருவாய் மொழியைக் காத்த குணவாளர் எனப்படுகின்றுர்கள். இவ் வியாக்யானங்களே "பகவத்விஷயம்" எனப்படுகின்றது.

ஸ்ரீபாஷ்யத்தையும் பகவத் விஷயத்தையும் அனுஸரித்து சாரீரகம், திருவாய்மொழி என்ற இரண்டு திவ்யப் ப்ரபந்த ரத்னங்களில் கூறப் படும் அர்த்தங்களேத் தொகுத்து வெளியிடப் பெறுகிறது ஓர் கிரந்தம். இதுவே "ஸுதா ரஸ மஞ்ஜரீ". இதில் ஸ்ரீபாஷ்ய ஸாரார்த்தங்களே பதினறு வித்வான்கள் எழுதுகின்றுர்கள். சாரீரகத்தில் பாதங்கள் பதினறு. திருவாய்மொழியில் பத்துப் பத்துக்கள் உள்ளனவாகை யால் அவற்றின் அர்த்தங்களே பத்து வித்வான்கள் எழுதுகிறுர்கள். இவ்வம்ருதத்தைப் பாநம் செய்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆத்மக்ஷேமம் பெறுவார்களாக—

பதிப்பாசிரியர்

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பொருளடக்கம்

ஸுதா ரஸ மஞ்ஜரீ. இரண்டாம் பாகம்
பகவத்விஷயம்
ஸ்ரீபராங்குச வசஸ்ஸுதா

			பக்கம்
*		ரஹஸ்யத்ரய ஸாரம் முதலியன	1—8
1.	(அ)	பகவத் விஷயாவதாரிகை. ஸ்ரீ. உ. வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி. சென்னை	1—8
2.	(ஆ)	பகவத் விஷயம் முதற்பத்து ஸாரம் ஸ்ரீ. உ. வே. திருநாங்கூர். P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமி. ப்ருந்தாவநம்	1—8
3.	(இ)	பகவத் விஷயம். இரண்டாம் பத்து ஸாரம் ஸ்ரீ. உ. வே. R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.	1—12
4.	(ஈ)	பகவத் விஷயம் மூன்றும் பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. V. K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.	1—20
5.	(உ)	பகவத் விஷயம்: நான்காம்பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. ஆழ்வார் திருநகரி இராம க்ருஷ்ண அய்யங்கார் ஸ்வாமி, சென்னை.	1—8
6.	(ஊ)	பகவத் விஷயம் ஐந்தாம் பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. S. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி B.A., L.T., ஸ்ரீரங்கம்	1—8
7.	(எ)	பகவத் விஷயம் ஆறும் பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. T. A. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருப்பதி	1—18
8.	(ஏ)	பகவத்விஷயம் ஏழாம் பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. S. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, புத்தூர்.	1—12
9.	(ஐ)	பகவத் விஷயம் எட்டாம் பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. பிள்ளைலோகம் பாஷ்யகாராசார்ய ஸ்வாமி, சென்னை.	1—4
10.	(ஒ)	பகவத் விஷயம் ஒன்பதாம் பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. திருநாங்கூர் P. B. K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.	1—12
11.	(ஓ)	பகவத் விஷயம் பத்தாம் பத்து ஸாரம். ஸ்ரீ. உ. வே. T. A. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.	1—18
12.	(ஔ)	ஆழ்வாரும் எம்பெருமானாரும்	1—6
13.	(ஃ)	ஆழ்வாரும் தேசிகனும் ஸ்ரீ. உ. வே. V. N. ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி, திருவிண்ணகர்.	1—12
14.	(க)	ஆழ்வாரும் மணவாளமாமுனியும்	1—14

http://acharya.org

This book is published with the financial assistance of

Tirumala Tirupati Devasthanams

under their scheme

'Aid to Publish Religious Books'.

இந்த க்ரந்தத்தை
தென்னாடும் வடநாடும் தொழநின்ற
செங்கோலுடைய திருவரங்கச் செல்வன்,
சுவையன், திருவின் மணாளன்
திருவடித் தாமரைகளில் மாநஸிகமாக ஸமர்ப்பிக்கிறேன்

இந்த க்ரந்தத்தை மிகுந்த பக்தி ச்ரத்தைகளுடன் அச்சிட்டு உதவிய
லிபர்ட்டி அச்சகம் உரிமையாளர்.
ஸ்ரீ. உ. வே. T. S. நரஸிம்ஹாசார்யஸ்வாமிக்கு
அடியேனுடைய நன்றி கலந்த ப்ரணாமத்தை ஸமர்ப்பிக்கிறேன்:

இந்த க்ரந்தத்தில்
அடியேனுடைய அநவதாநத்தால் ஏற்பட்ட
அச்சுப் பிழைகளைப் பொறுத்துத்
திருத்திக்கொள்ளுமாறு அடியார்களை வேண்டுகிறேன்.

Copy Right Reserved: விலை. (Price) Rs. 10/-

Rh. 26383
Sl. No. 137
P. No. 8
of Typed Sheets

புத்தகம் கிடைக்குமிடம்: நேரில் பெற்றுக் கொள்ளவும்

SRI. K. VARADACHARYA,
15, Thambu Chetty Street,
MADRAS-600 001

Printed at The Liberty Press, Madras-600 001.

http://acharya.org

ரஹஸ்யத்ரய ஸாரம்

ரஹஸ்யங்கள் மூன்றும் நமக்கு ஜ்ஞாந அநுஷ்டாந ப2லநித4ாநங்களாய்க்கொண்டு த4ாரக போஷக போ4க்3யங்கள். "வ்யக்தம் ஹி ப4க3வாந் தே3வ: ஸாக்ஷாந் நாராயண: ஸ்வயம் | அஷ்டாக்ஷர ஸ்வரூபேண முகே2ஷு பரிவர்த்ததே ||" என்கிறபடியே தே3ஶிக ஜிஹ்வையிலே இருந்து ஶிஷ்ய ஹ்ருத3யகு3ஹாந்த4காரத்தைக் கழித்துப் பரஶேஷதைகரஸமான பரிஶுத்3த4 ஸ்வரூபத்தை வெளியிட்டு ஸத்தாலாப4த்தைப் பண்ணுகையாலே திருமந்த்ரம் த4ாரகம். சரமோபாயத்திலே ப்ரவர்த்திக்கும்படியான ஜ்ஞாநவிஶேஷோபசய ஹேதுவாகையாலே ஶ்ரோதவ்யஶேஷமில்லாதபடி உபாயோபதே3ஶபர்யவஸாநமான சரமஶ்லோகம் போஷகம். ஸக்ருது3ச்சாரணத்தாலே பரமபுருஷார்த்த2 ஹேதுவாய்க்கொண்டு ஸதா3நுஸந்த4ாநத்தாலே க்ருதார்த்த2னுக்குகையாலே த்3வயம் போ4க்3யம். இப்படியிறே ரஹஸ்யத்ரயவைப4வமிருப்பது. இவற்றின் ஸாரார்த்த2 ஸங்க்3ரஹமாவது :—விவேகம்தான் மூன்றுபடியாயிருக்கும். ஆத்மாநாத்மவிவேகமென்றும், உபாயாநுபாய விவேகமென்றும், புருஷார்த்த2ா புருஷாத்த2 விவேகமென்றும். இந்த விவேகத்துக்கு ஸ்த்த2ாநமாயிருப்பதும் மூன்றுபடியாயிருக்கும். தத்வமென்றும் வித4ாநமென்றும் அபி4மதமென்றும். இதில் ஸ்வரூபப்ரதிபாத3கமான திருமந்த்ரம் தத்வமாவது. ஹிதவித4ாயகமாய் ஶரண்யாபி4மதியாலே ப்ரவ்ருத்தமான சரமஶ்லோகம் வித4ாநமாகிறது. புருஷார்த்த2 ப்ரதிபாத3கமான மந்த்ரரத்நம் அபி4மதமாவது.

திருமந்த்ரார்த்த2ஸங்க்3ரஹம்

இதில் தத்வரூபமான திருமந்த்ரமும் பத3ரூபத்தாலே மூன்றுபடியாயிருக்கும். இதில் ப்ரத2மபத3த்தாலே சேதநனுடைய ஸ்வரூபம் சொல்லுகிறது. மத்4யமபத3த்தாலே ஸ்த்தி2தி சொல்லுகிறது. த்ருதீய பத3த்தாலே வ்ருத்தி சொல்லுகிறது. இந்த ஸ்வரூப ஸ்த்தி2தி ப்ரவ்ருத்திகள் மூன்றும் எம்பெருமானிட்ட வழக்காயிருக்கும். ப்ரத2ம பதத்தாலே இவனுடைய அநந்யார்ஹத்வம் சொல்லுகிறது. மத்4யமபத3த்தாலே அநந்யஶரணத்வம் சொல்லுகிறது. த்ருதீயபத3த்தாலே அநந்யபோ4க்3யத்வம் சொல்லுகிறது. இவனுக்கு ப்ரதிஸம்ப3ந்தி4யாயிருக்கிறவனுடைய ஶேஷித்வம் சொல்லுகிறது ப்ரத2மபத3த்தாலே. அவனுடைய ஶரண்யத்வம் சொல்லுகிறது மத்4யம பத3த்தாலே. அவனுடைய போ4க்3யத்வம் சொல்லுகிறது த்ருதீய பத3த்தாலே. ப்ரத2ம பத3த்திற் சொல்லுகிற ஜ்ஞாத்ருத்வமும், மத்4யம பத3த்திற் சொல்லுகிற கர்த்ருத்வமும், த்ருதீய பத3த்திற் சொல்லுகிறபோ4க்த்ருத்வமும் எம்பெருமானிட்ட வழக்காயிருக்கும்.

திருமந்த்ரம் ஸாமாந்யேந ஸ்வரூபபரமாயிருக்கும். சிலர் வாக்யத்ரயமென்று நிர்வஹிப்பர்கள். சிலர் வாக்யைக வாக்யத்தாலே ஏகவாக்யமென்று நிர்வஹிப்பர்கள். சிலர் ஸ்வரூப புருஷார்த்த2பரமென்று நிர்வஹிப்பர்கள்.

*

http://acharya.org

சிலர் அர்த்த₂ பஞ்சகபரம் என்று நிர்வஹிப்பர்கள். சிலர் ப்ரபத்தியையும் கூட்டி ஷடர்த்த₂பரமென்று நிர்வஹிப்பர்கள். "சிலர் ஆத்ம ஸமர்ப்பணபர மென்று நிர்வஹிப்பர்கள். "திருவெட்டெழுத்தும் கற்று நானுற்றதும் உன்னடி யார்க்கடிமை" என்று பத₃த்ரயத்துக்கும் தாத்பர்யார்த்த₂ம் ததீய ஶேஷத்வ மென்று அருளிச்செய்தார் திருமங்கையாழ்வார். ப்ரத₂மாசார்யரான நம் மாழ்வாரும் "பயிலும் சுடரொளி" "நெடுமாற்கடிமை"களிலே இவ்வர்த்த₂த்தை அருளிச்செய்தாரிறே. ஆக, ப்ரத₂மபத₃ஸித்₃த₄மான ஶேஷிகளும் ததீ₃யரேயாய், மத்₄யமபத₃ஸித்₃த₄மான ஶரண்யரும் ததீ₃யரேயாய். த்ருதிய பத₃ஸித் த₄மான ப்ராப்யரும் ததீ₃யரேயான படியால் திருமந்த்ரத்துக்குத் தாத்பர்யமான அர்த்த₂ம் ததீ₃ய ஶேஷத்வமென்றறிகை.

ப்ரணவந்தான் அக்ஷரஸ்வபா₄வத்தாலே மூன்றுபடியாயிருக்கும்—அகார மென்றும் உகாரமென்றும் மகாரமென்றும். அதில் அகாரம் காரணத்வத்தை யும் ரக்ஷகத்வத்தையும் ஶேஷித்வத்தையும் ச்ரிய:பதித்வத்தையும் சொல்லக் கடவதாயிருக்கும். இதில் காரணத்வத்தாலும் ரக்ஷகத்வத்தாலும் உபாய பா₄வத்தை வெளியிடுகிறது. ஶேஷித்வத்தாலும் ச்ரிய:பதித்வத்தாலும் உபேய பா₄வத்தை வெளியிடுகிறது.

அகாரம் ப்ரக்ருதியென்றும் ப்ரத்யயம் என்றும் இரண்டாய், இதில் ப்ரக்ருதியான அகாரம் உபாயத்தைச் சொல்லுகிறது. ப்ரத்யயமான சதுர்த்தி, உபேயத்தைச் சொல்லுகிறது என்றபடி. உகாரத்தாலே பிறர்க்குரியன் அன்று என்னுமிடம் சொல்லி, நமஸ்ஸாலே தனக்குரியன் அன்று என்னு மிடமும் சொல்லுகிறது. நாராயணபத₃த்தில் உண்டானப₃ஹுவ்ரீஹிஸமா ஸத்தாலும் தத்புருஷஸமாஸத்தாலும் அந்தர்யாமித்வமும் ஆதா₄ரத்வமும் சொல்லுகிறது. அந்தர் யாமித்வத்தாலே எம்பெருமானுடைய ஶரீரித்வம் சொல்லுகிறது. ஆதா₄ரத்வத்தாலே அதிஶயம் சொல்லுகிறது. ஆக இப்படி ப்ரணவத்தாலே தன் ஸ்வரூபம் ப₄க₃வத₃நந்யார்ஹஶேஷத்வம் என்று ப்ரதிஜ்ஞைபண்ணி. ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவர்த்தகமான மத்₄யமபத₃த்தாலே அத்யந்த பாரதந்த்ர்யம் என்று உபபாதி₃த்து. த்ருதிய பத₃த்தாலே இதுவும் ஶரீரத்வநிப₃ந்த₄நம் என்று உபபாதி₃த்து. கீழ் ப்ரஸ்துதமான ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்கிறது.

"ப்ரத₂மபத₃த்தாலே பாணிக்₃ரஹணம் பண்ணுகிறது. மத்₄யமபத₃த் தாலே மணநீராட்டுகிறது. த்ருதீயபத₃த்தாலே சதுர்த்தி₂படுக்கையாயிருக் கிறது" என்று பிள்ளையுறங்கா வில்லிதாஸர் நிர்வஹிப்பர். திருமந்த்ரத்துக்குத் தாத்பர்யார்த்த₂ம் ஸகல வேத₃ ஶாஸ்த்ர ருசி பரிக்₃ருஹீதம். வாக்யார்த்த₂ம் ப்ராப்யஸ்வரூபநிரூபணம். ப்ரத₂நார்த்த₂ம் ஆத்மஸ்வரூபநிரூபணம். அநு ஸந்தா₄நார்த்த₂ம். ஸம்ப₃ந்தா₄நுஸந்தா₄நம்.

http://acharya.org

சரமஸ்லோகார்த்த2ஸங்க்3ரஹம்

சரமஸ்லோகம் மூன்று படியாயிருக்கும்—பரித்யாக3மென்றும் ஸ்வீகார மென்றும் ஸோகநிவ்ருத்தியென்றும். "ப்ராப்தி ஹேதுத்வ பு3த்3தி4விட்டு ப்ரீதிஹேதுவென்று அநுஷ்டி2ப்பார்" என்று நம்பிள்ளை அருளிச்செய்வர். "மாம்" என்கிற பத3த்தாலே ஸாத்4யோபாயங்களிற்காட்டில் ஸித்3தே4ாபாய மான தன்னுடைய வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறான். "பதர்க்கூட்டை விட்டுப் பர்வதத்தை அண்டை கொள்ளுமாபோலே" என்றும் நம்பிள்ளை அருளிச்செய்வர். "இந்த ஸித்3தே4ாபாயத்தைவிட்டு ஸாத்4யோபாயங்களில் அந்வயித்தானாகில் மரக்கலத்தை விட்டுத் தெப்பத்தைப் பற்றுமோபாதி" என்று நிர்வஹிப்பர் ஸோமாசியாண்டான். அன்று "உன்முகம் காணில் முடிவேன்" என்கையாலே முகம் தோற்றாமல் நடத்தினேன். இன்று "உன் முகம் காணவிடில் முடிவேன்" என்கையாலே முகம் தோற்றி நின்று நடத் தினேன் என்று தன் வ்யாபாராதி3களைக் காட்டுகிறான். அதாகிறது—"என் கையில் மடல் உன் கையிலே வரும் படியாகவும், என் தலையில் முடி உன் தலையிலே வரும்படியாகவும்வேணு மென்று ஆசைப்பட்டு, உன்கால் என் தலையிலே படும்படி தாழநின்றேன்"என்று தன் ஸௌலப்4யத்தைக் காட்டு கிறான் "மாம்" என்று என்றபடி. அவதா4ரண ரூபமான ஏகஶப்3த3த் தாலே ஸாத்4யஸாத4நங்களினுடைய ப்ருத2க்3ப4ாவஜந்யமான த்3வித்வத்தை யும், ஸ்வீகர்த்தாவினுடைய அந்வயத்தால் வருகிற த்3வித்வத்தையும் வ்யா வர்த்திக்கையாலே ஶரண்யனுடைய சுணையுடைமையைச் சொல்லுகிறது. "மாஶுச:" என்கிற பத3த்தாலே "வ்ரஜ" என்கிற விதி4யோபாதி. "மாஶுச:" என்கிற இதுவும் விதி4யாகையாலே ஸ்வீகாரத்தோபாதி ஶோகநிவ்ருத்தியும் கர்த்தவ்யமென்கை. அதாவது உன்னைப் பார்த்து நிர்ப4ரனாய். என்னைப் பார்த்து நிர்ப4யனாய் இரு என்கை. முன்பு ஶோகித்திலையாகில் அதி4கார ஸித்3தி4யில்லை. பின்பு ஶோகித்தாயாகில் ப2ல ஸித்3தி4யில்லை என்றபடி. ப4ாஷ்ய காரர் ஆழ்வானுக்குச் சரமஸ்லோகத்தை உபதே3ஶித்து, 'இருந்தபடியென்?' என்று கேட்டருள, "ஒரு ஜந்மத்தில் நின்று ஒரு ஜந்மத்திலே போந்தாப் போலேயிருந்தது" என்று பணித்தார். நஞ்ஜீயர் சரம ஶ்லோகார்த்த2த்தைக் கேட்டு, "தலைச்சுமை போட்டாப் போலே இருந்தது" என்றார். திருமந்த்ரம் திருமுகப் பாசுரமாயிருக்கும். சரமஶ்லோகம் வேட்டாயிருக்கும். த்3வயம் படியெடுப்பாயிருக்கும், சரமஸ்லோகத்துக்குத் தாத்பர்யார்த்த2ம்ஶரண்யருசி ப்ரிக்3ருஹீதம். வாக்யார்த்த3ம் ப்ராபகஸ்வரூபநிரூபணம். ப்ரத4ாகார்த்த2ம் ஈஶ்வரஸ்வரூப நிரூபணம். அநுஸந்த4ாநார்த்த2ம் நிர்ப4ரத்வாநுஸந்த4ாநம்.

த்3வயார்த்த2ஸங்க்3ரஹம்

த்3வயம்—இருபத்தைந்து திருவக்ஷரமாய், வாக்யத்3வயமாய். ஆறு பத3மாய் பத்தர்த்த2மாயிருக்கும். இதில் பூர்வ க2ண்ட3த்திலும் உத்தரக2ண் ட3த்திலும் மாமலர் மங்கையாகிற ஸ்ரீரத்நத்தோடே கூடுகையாலே இருதலை

http://acharya.org

மாணிக்கமாயிருக்கும். அவன் தே3வகிபுத்ர ரத்நமாயிருக்குமோபாதி இதுவும் மந்த்ர ரத்நமாயிருக்கும். இந்த மந்த்ரரத்நம்தான் ஸ்ரீமத்பராங்குஶமுநிகள், ஸ்ரீமந்நாத2முநிகள், யாமுநமுநிகள், ராமாநுஜமுநிகள், ஸ்ரீவரவரமுநிகள் ஆகிற முனிவர்களுடைய நெஞ்சாகிற செப்பிலே வைத்துச் சேமிக்கப் பட்டிருக்கும்.

இந்த த்3வயம், அர்த்த2ப்ராத4ாந்யத்தாலே மூன்று படியாயிருக்கும். விஶேஷண ப்ரத4ாநமென்றும் விஶேஷ்ய ப்ரத4ாநமென்றும் விஶிஷ்டப்ரத4ாந மென்றும். ஆஶ்ரயண த3ஶையில் விஶேஷணப்ரத4ாநமாயிருக்கும். உபாய த3ஶையில் விஶேஷ்யப்ரத4ாநமாயிருக்கும். போ4கத3ஶையில் விஶிஷ்ட ப்ரதா4நமாயிருக்கும். ப்ரத2மபத3த்தில் விஶேஷண ப3லத்தாலே ப்ராயஶ்சித் தவ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. ப்ரத2மபத3த்தாலே உபாயாந்தர வ்யாவ் ருத்தியைச் சொல்லுகிறது. த்3விதீயபத3த்தாலே உபேய வ்யாவ்ருத் தியைச் சொல்லுகிறது. க்ரியாபதத்தாலே அதி4காரி வ்யாவ்ருத் தியைச் சொல்லுகிறது. உத்தரவாக்யத்தில் ப்ரத2மபத3த்தாலே ப்ராப் யாந்தர வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. த்3விதீயபத3த்தாலே தே3வதாந்தர வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. இதில் சதுர்த்தி2யாலே ப்ரயோஜநாந்தர வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. த்ருதீய பத3த்தாலே ஸ்வப4ாவ வ்யாவ்ருத்தியைச் சொல்லுகிறது. ப்ரத2மபத விஶேஷணத்தில் ப்ரத2மாக்ஷரத்தாலே புருஷகாராத்3யப4ாவவாதி3களை நிரஸிக்கிறது. அநந்தர பத3த்தாலே நிர்குண3ணப்3ரஹ்மவாதி3களை நிரஸிக்கிறது. ப்ரத2மபத3ாந்த மான த்3விவசந(ாந்தபத3)த்தாலே நிர்விக்3ரஹவாதி3களை நிரஸிக்கிறது. அநந்தரபத3த்தாலே உபாயத்3வித்வ வாதி3களை நிரஸிக்கிறது. க்ரியாபத3த் தாலே அத்4யவஸாயா ப4ாவ வாதி3களை நிரஸிக்கிறது. மதுப்பாலே அநித்ய யோக3 வாதி2களை நிரஸிக்கிறது. உத்தரவாக்யத்தில் ப்ரத2மபத3த்தாலே ஆத்ம ஸாம்யவாதி3களை நிரஸிக்கிறது. அநந்தர பத3த்தாலே ஈஶ்வர ஸாம்ய வாதி3களை நிரஸிக்கிறது. இதில் சதுர்த்தி3யாலே கிஞ்சித்கார புருஷார்த்த2 ப்ரதிப4ட வாதி3களை நிரஸிக்கிறது. அநந்தரபத3த்தாலே ஸ்வப்ரயோஜந வாதி3களை நிரஸிக்கிறது—என்று நிர்வஹிப்பர் நடுவிற்றிருவீதிப்பிள்ளை.

க்ரியாபத3த்தாலே உபாய ப்ரார்த்த2னை. சதுர்த்தி2யாலே உபேய ப்ரார்த்த2னை. இவையிரண்டும் அதி4காரி க்ருத்யம். த்3வயத்துக்குத் தாத்பர் யார்த்த2ம் ஆசார்யருசி பரிக்3ருஹீதம். வாக்யார்த்த2ம் ப்ரார்த்த2நா(ப்ராபக?) ஸ்வரூப நிரூபணம். ப்ரத4ாநார்த்த2ம் மிது2ந கைங்கர்யம். அநுஸந்த4ா நார்த்த2ம் ஸ்வதோ3ஷாநுஸந்த4ாநம். ஏவம்பூ4தமான த்3வயத்தில் நிஷ்டை2 யாவது—ஸ்வாசார்ய புரஸ்ஸரமாகக் கோவலர் பொற்கொடியான பிராட்டி யிருக்க ஶரணம்புக்குக் கொடிவழியாகச் சென்று ப்3ரஹ்மதருவை ஆஶ்ரயித்து இளைப்பாறியிருக்கை.

ஸ்ரீமச் ச2ாரீரகாத்4யாய சதுஷ்டயார்த்த2ங்களான காரணத்வ ஶேஷித்வ ப்ராபகத்வ ப்ராப்யத்வங்கள் ரஹஸ்யத்ரயமான ஶாஸ்த்ர ஸாரத்தாலே இங் ஙனே நிஷ்கர்ஷிக்கப்பட்டதாயிற்று.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவாய்மொழியும் ரஹஸ்யத்ரயமும்

(ஸ்ரீ.உ.வே வேளுக்குடி K. வரதாசார்ய ஸ்வாமி)

திருமந்திரமும் த்வயமும் சரமச்லோகமும் ரஹஸ்ய த்ரயமெனப்படுமவை

(1) திருமந்திரம்—இதிலே கூறப்பட்ட அர்த்தங்கள் முமுக்ஷுக்கள் அறிய வேண்டுமர்த்தங்களான ஐந்து: பரஸ்வரூபம் ஜீவஸ்வரூபம் உபாய ஸ்வரூபம் உபேயஸ்வரூபம் விரோதிஸ்வரூபம் என்ற ஐந்து.

நம்மாழ்வார் "உயர்வற" என்ற முதற்பாட்டிலே "நலமுடையவன்" என்று பரஸ்வரூபத்தையும், "என் மனனே" என்று ஜீவஸ்வரூபத்தையும், "அருளினன்" என்று உபாயஸ்வரூபத்தையும், "மயர்வு" என்று விரோதி ஸ்வரூபத்தையும், "தொழு தெழு" என்று உபேயஸ்வரூபத்தையும் ஸங்க்ரஹித்து, "உயர் திண் அணை ஒன்று" என்று பரஸ்வரூபத்தையும்," பயில் ஏறு கண் கரு" என்று ஜீவஸ்வரூபத்தையும், "வீடு சொன்னால் ஒரு கொண்ட" என்று விரோதி ஸ்வரூபத்தையும், "மோற்ற ஆராவமுதே மானேய் பிறந்த" என்று உபாயஸ்வரூபத்தையும், "எம்மா ஒழிவில் நெடு வேய்" என்று உபேயஸ்வரூபத்தையும் விஸ்தரேண அருளிச் செய்து, மற்றைய எண்பதிலே பரமவிசதமாக அருளிச் செய்தார். ஆகத் திருவாய் மொழி அர்த்தபஞ்சக ப்ரதிபாதகத்வேந திருமந்த்ர விவரணமாகிறது.

"ஞாலத்தூடே" (6-9-3) என்கிறபாட்டில் அகாரார்த்தத்தை ஸக்ரம மாக அருளிச் செய்தார். இப்பாட்டில் அர்த்த பஞ்சகமும் கூறப்பட்டுள்ளது.

அகாரார்த்தத்தை முதல் இரண்டு பத்துக்களாலும், மகாரார்த்தத்தை இரண்டாம் இரண்டு பத்துக்களாலும், நமஶ்ஶப்தார்த்தமான ஸித்தோபாயத்தை ஐந்தாம் பத்தாலும், நமஶ்ஶப்தார்த்தமான உபாயவரணத்தை ஆறும் பத்தாலும், நமஶ்ஶப்தார்த்தமான அநிஷ்டநிவ்ருத்தியை ஏழு எட்டு என்ற இரண்டு பத்துக் களாலும், நாராயணாய ஶப்தார்த்தமான இஷ்டப்ராப்தியை ஒன்பது பத்து என்கிற இரண்டு பத்துக்களாலும் ஆழ்வார் அருளிச் செய்தபடியால் திருமந்த்ர விவரணம் திருவாய்மொழியென்னலாம்:.

ப்ரணவார்த்தத்தை "கண்கள் சிவந்து" பதிகத்தாலும், நமஶ்ஶப்த ஶாப்தார்த்தத்தை "கருமாணிக்கம்" பதிகத்தாலும், நம்ஶ்ஶப்த ஆர்த்த அர்த்தத்தை "நெடுமாற் கடிமை பதிகத்தாலும், நாராயண ஶப்தார்த்தத்தை" "கொண்ட" பதிகத்தாலும், ஆய என்ற சதுர்த்தியின் அர்த்தத்தை "பண்டை" திருவாய்மொழியாலும் அருளிச் செய்திருக்கிற படியாலும் திருவாய்மொழி மூலமந்த்ர விவரணமெனலாம்.

"சீலமில்லா" (4-7-1) என்ற பாட்டிலும், "குரைகழல்கள் (4-3-7) என்ற பாட்டிலும், "கோவாகிய" (9-8-7) என்ற பாட்டிலும், "ஒழிவில்" (3-3-1) "வேங்கடங்கள்" (3-3-6) என்ற பாட்டுக்களிலும் மூலமந்த்ரார்த்தமான அர்த்த பஞ்சகத்தை அருளிச் செய்தார்.

http://acharya.org

ப்ரணவார்த்தத்தை "உலகமுண்ட" பதிகத்தாலும், "நமஸ்ஸப் தார்த்தத்தை "உண்ணிலாவிய" பதிகத்தாலும், "நாராயணாய" ஸப்தார்த் தத்தை "கங்குலும்" பதிகத்தாலும் ஆழ்வார் அருளிச்செய்தார்.

"கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசி" (5-2-6) என்ற பாட்டிலே ஆழ்வார் "வியாதி பகை பசி" என்று "வ்யாதி துர்பிக்ஷதஸ்கரா": என்று கூறப்பட்ட "விஷயப்ராவண்யம்" "ஸ்வரக்ஷணேஸ்வாந்வயம்" "ஆத்மா பஹாரம்" என்ற விரோதிகளைக் கூறுகிறார். இவையித்தனையும் மூலமந்த் ரார்த்த விரோதிகளிறே.

இவ்வளவால் திருவாய்மொழி திருமந்திர விவரணம் என்றதாயிற்று.

(2) த்வயம்—த்வயார்த்தம் தீர்கசரணாகதியென்றது ஸாரஸங்க்ரஹத் திலே—அதிலே கண்டு கொள்வது.

(3) சரமஸ்லோகம்:—பூர்வார்த்தத்திலே "மாம்" என்று தன் ஸௌல. ப்யத்தைக் கூறினான் கண்ணன். அவனே சரணவரணார்ஹன்—உத்தரார்த்தத் திலே "அஹம்" என்று தன் ஸக்தி பூர்த்தியைக் கூறுகிறான் கண்ணன்— சரணாகதர்களுடைய விரோதி பாபங்களைப் போக்கவல்ல ஸர்வசக்தன் அவனே யிறே.

ஆழ்வார் "கண்ணன் கழல்கள்" (4-1-3) என்றருளிச் செய்தார். இது மாமின் அர்த்தம். ஆழ்வார் "பனைத்தாள் மதகளிறு அட்டவன்" (4-1-4) என்றருளிச் செய்தார். இது அஹமின் அர்த்தமாகும்.

ஆழ்வார் முதற்பத்தால் பரத்வத்தையும், இரண்டாம் பத்தால் பரத்வஸ்த் தாபகமான காரணத்வத்தையும், மூன்றாம் பத்தால் காரணத்வசங்கித தோஷ வ்யாவ்ருத்யர்த்தமாக வ்யாபகத்வத்தையும், நான்காம் பத்தால் வ்யாப்தி நிறம்பெற நியந்த்ருத்வத்தையும் அருளிச் செய்து பரன் அவனே என்கிறார். ஐந்தாம் பத்தால் அவன் காருணிகனாகையாலே பரமஸௌலபன் என்றார்—ஆறாம்பத்தால் கீழ்க்கூறிய பரத்வஸௌலப்யபூர்ணன் விஷயத்தில் பரிபூர்ண சரணாகதியை அநுட்டித்தார். இது சரமஸ்லோகத்தின் பூர்வார்த்தத் தின் அர்த்தமாகும். ஏழாம் பத்தால் அவன் சக்தத்வத்தையுபபாதிக்கிறபடியா லும், எட்டாம் பத்தால் அவன் ஸத்யகாமன் என்று கூறுகிறபடியாலும், ஒன்பதாம் பத்தால் அவன் ஆபத்ஸகன் என்றபடியாலும், பத்தாம் பத்தால் அவன் ஆர்த்திஹரன் என்று கூறுகிறபடியாலும் விரோதிகளைப் போக்கவல்ல ஸர்வசத்தி, புருஷார்த்தப்ரதத்வத்துக்கநுகுணமாக ஸத்யகாமன், விரோதி களைப் போக்கவல்ல ஆபத்ஸகன், விரோதிகளைப் போக்குகிறான் ஆர்த்திஹரன் என்கிறார்—இது சரமஸ்லோகத்தின் உத்தரார்த்தத்தின் அர்த்தமாகும். உத்தரார்த்தத்தில் அஹம்ஸப்தத்தாலே சக்தத்வ ஸத்யகாமத்ம ஆபத்ஸகத் வங்களும் "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று ஆர்த்திஹரத்வமும் கூறப்பட்டதிறே.

இவ்வளவால் திருவாய்மொழி ரஹஸ்யத்ரய விவரணம் என்றதாயிற்று. மேலும் விவரணத்தை பூர்வர்கள் வ்யாக்யானங்களிலே கண்டுகொள்க.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வேதாந்த த்வயம்

	உபநிஷத்து	திருவாய்மொழி	
(1)	ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: (தை. உப)	—உயர்வற உயர் நலமுடையவன்	(1-1-1)
(2)	விஜ்ஞாநமாநந்தம் ப்ரஹ்ம (ப்ருஹ—உப.)	—இனனுணர் முழுநலம்	(1-1-2)
(3)	நதத்ஸமஶ்சாப்யதிகஶ்ச (ச்வேதா. உப)	—மிருநரையிலனே	(1-1-2)
(4)	நாராயண பரோ ஜ்யோதி: (தை. உப).	—பயிலும் சுடரொளி மூர்த்தி	(3-7-1)
(5)	யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ (சா. உப).	—பங்கயக்கண்ணனை	(3-7-1)
(6)	ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: (சா. உப)	—செம்பொன் திருவுடம்பு	(2-5-1)
(7)	அப்ராப்ய மநஸா ஸஹ (தை. உப)	—எண்ணின் மீதியன்	(2-2-1)
(8)	யதோ வாசோ நிவர்த்தந்தே (தை. உப).	—சொல்லளவன்று.	(8-2-6)
(9)	ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம தஜ்ஜலான்—(சா. உப.)	—தானே உலகெல்லாம் தானே படைத்து—	(10-5-3)
(10)	நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே	—பெரியவப்பனைப்பிரமன் அப்பனை—	(8-1-11)
(11)	தேநேதம் பூர்ணம் புருஷேண (தை. உப)—	—தானேயாகி நிறைந்து	(10-7-2)
(12)	ஆபோ வா இதமக்ரே	—பெரிய நீர் படைத்து அங்குறைந்து.	(8-1-5)
(13)	அந்தர்யாமிப்ராஹ்மணம்	—ஒருயிரேயோ—	(8-1-5)
(14)	தாம் வராஹோ பூத்வாऽஹரத் (தை. ஸம்.)	—ஏனமாய் நிலம் கீண்ட	(5-7-6)

http://acharya.org

	உபநிஷத்து	திருவாய்மொழி	
(15)	விசக்ரமே ப்ருதிவீமேஷ (புருஷஸூக்தம்)	—வன்மாவையமளந்த	(3-2-2)
(16)	ஸ்வேந ரூபேண அபி நிஷ்பத்யதே (சா. உப)	—தன்மை பெறுத்தி	(3-7-7)
(17)	ஸர்வபூதாந்தராத்மா நலிப்யதே லோகதுஃகேந (கடோபநிஷத்	யாவையும் யவரும் தானாய் —அவரவர் சமயம் தோறும் தோய்விலன்	(3-4-10)
(18)	யத்தத் அத்ரேச்யம் (மு. உப.)	—பொறியுணர்வவையிலன்	(1-1-2)
(19)	ஸப்ரஹ்மா ஸசிவ:ஸேந்த்ர:—	—அயனும் சிவனும் திருமால்	(8-8-11)
(20)	அந்தர்பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய—	—கரந்தசிலிடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும் கரந்தெங்கும் பரந்துளன்	1-1-10
(21)	ச்வோऽபாவா மர்த்யஸ்ய யதந்தகைதத்-(கட. உப)—	—பெருநாடு காண இம்மையிலே பிச்சை தாம் கொள்வர்	(4-1-1)
(22)	பஹுதா விஜாயதே—	—பலபிறப்பாய்	(1-3-2)
(23)	ஜ்ஞாதய : பர்யுபாஸதே ஜாநாஸி மாம்—(சா-20)	—இல்லத்தாரும் புறத்தாரும் மொய்த்து.	(8-8-8)
(24)	தமீச்வராணாம் பரமம்மஹேச்வரம்.	—மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ!	(8-1-5)
(25)	ததேதத்ப்ரேய: புத்ராத்ப்ரேய: மித்ராத் (ப்ரு. உப).	—கொண்ட பெண்டிர் மக்கள்	(9-1-1)
(26)	வாசா விரூபநித்யயா—(தை ஸம்)	—தோற்றங்களாயிரம்	(6-8-11)
(27)	நாஸ்யா ப்ரஹ்மவித்குலேபவதி (மு. உப)—	—நல்ல பதத்தால் மனைவாழ்வர்	(8-10-11)
(28)	வாஸுதேவ: ஸர்வம் (கீதை)	—எல்லாம் கண்ணன்	(6-7-1)
(29)	விபூதீனாம் நாஸ்த்யந்த-(கீதை)	—எல்லையில் சீர்	(2-5-9)
(30)	ப்ரஹ்ம தத் பராதாத் (ப்ரு. உப)	—நாரணற் காளன்றி யாவரோ	(7-5-2)

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

முதல் திருவாய்மொழியும் இரண்டாம் திருவாய்மொழியும் அத்யாய சதுஷ்டயாத்மக ஶாரீரக மீமாம்ஸா சாஸ்த்ர ஸமாநார்த்தகமாயிருக்கும்

சாரீரகம்—திருவாய்மொழி

பூர்வ த்விகம்—உயர்வற (1.1)

சதுஸ்ஸூத்ரீ—உயர்வற (1.1.1)

ஈக்ஷத்யதிகரணத்ரயம்—மனனகம் (1.1.2)

ஆகாசாதிகரணசதுஷ்டயம்—இலனது (1.1.3)

த்ரிபாதீ— — —நாமவன்—அவர்-நின்றனர் (1.1.4, 1.1.5, 1.1.6)

இரண்டாமத்யாயம் முதற்பாதம்—திடவிசும்பு—(1.1.7)

,, ,, இரண்டாம் பாதம்—சுரரறி-உளன் (1.1.8),(1.1.9)

,, ,, மூன்றும் நான்காம் பாதங்கள்—பரந்த-கரவிசும்பு (1.1.10, 1.1.11)

சாரீரகம்— திருவாய்மொழி

உத்தர த்விகம்— வீடுமின் (1.2)

மூன்றுமத்யாயம் முதற்பாதம்—வீடுமின் (1.2.1)

,, இரண்டாம் பாதம்—மின், நீர் (1.2.2, 1.2.3)

,, மூன்றும் பாதம் —இல், அற்றது, பற்று, அடங்கு (1.2.4, 1.2.5, 1.2.6, 1.2.7)

,, நான்காம் பாதம் —உள்ளம் உரை (1.2.8)

நான்காமத்யாயம் முதற்பாதம்— ,, இரண்டாம் பாதம் } ஒடுங்க (1.2.9.)

,, மூன்றும் பாதம் ,, நான்காம் பாதம் } எண் (1.2.10)

இவ்விரண்டு திருவாய்மொழிகளின் விவரணமே மேலுள்ளதடைய என்பர் பெரியோர்.

Released by Maran's Dog ,Toronto, Canada

http://acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமந்திரம்

ஓம் (ஸ்வரூபம்)

நம: (உபாயம்)

நாராயணாய (புருஷார்த்தம்)

ஸ்ரீமந்நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே (உபாயம்)

ஸ்ரீமதே நாராயணாய நம: (புருஷார்த்தம்) (த்வயம்)

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ (உபாயம்)

அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: (புருஷார்த்தம்) சரம ச்லோகம்

திருவாய்மொழி

ஸித்தபஞ்சகம் (முதல் ஐந்து பத்துக்கள்)
பரஸ்வரூபம். ஜீவஸ்வரூபம். உபாயஸ்வரூபம்- (இவைஸித்தம்)

- முதலிரண்டு பத்துக்கள் பரமாத்மபரங்கள்
- இரண்டாம் இரண்டு பத்துக்கள் ஜீவாத்மபரங்கள்
- ஐந்தாம் பத்து ஸித்தோபாய பரம்

} (இவைஸித்தம்)

ஸாத்யபஞ்சகம் (மேல் ஐந்து பத்துக்கள்)
உபாயவரணம், அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்தி (இவைஸாத்யம்)

- ஆறும் பத்து உபாயவரணபரம்
- ஏழாம் பத்து, எட்டாம் பத்து } அநிஷ்டநிவ்ருத்திபரம்
- ஒன்பதாம் பத்து, பத்தாம் பத்து } இஷ்டப்ராப்திபரம்

} இவைஸாத்யம்

ஸ்ரீபதி: சேதநஸ்யாஸ்ய ஹேதுத்வேந — ஸமாச்ரித: அநிஷ்டஹாநிம் இஷ்டஸ்ய ப்ராப்திம்ச குருதே ஸ்வயம்

திருவாய்மொழி

ஸர்வேச்வரன் உபாயபூதன் என்கிறார் முதற்பத்தால். அவனே உபேயபூதன் என்கிறார் இரண்டாம் பத்தால்-அவன் திவ்யவிக்ரஹ விசிஷ்டன் என்கிறார் மூன்றும் பத்தால்–அவனையொழிய ப்ராப்யமில்லை என்கிறார் நான்காம்பத்தால் - அவனையொழிய ப்ராபகம் இல்லை என்கிறார் மேல் ஆறு பத்துக்களால் - ஆக திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனான ஸ்ரீமந் நாராயணனே உபாயோபேயபூதன் என்பது திருவாய்மொழியின் ஸாரம். இதுவே ரஹஸ்யத்ரய ஸாரம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆசார்யஹ்ருதய ஸாரம்

(1) காருணிகனான ஸர்வேச்வரன் அறிவிலா மனிசர் உணர்வென்னும் சுடர் விளக்கேற்றிப் பிறங்கிருள் நீங்கி மேலிருந்த நந்தா வேத விளக்கைக் கண்டு நல்லதும் தீயதும் விவேகிக்கைக்கு மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினால் அருள் செய்தான்.

(2) முனிவரையிடுக்கியும் முந்நீர் வண்ணனையும் வெளியிட்ட சாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு விசிஷ்ட நிஷ்க்ருஷ்ட வேஷங்கள் விஷயம்.

(3) தோல்புரையே போமதுக்குப் பழுதிலா யோக்யதை வேணும். மனமுடையீர் என்கிற ச்ரத்தையே யமைந்த மர்மஸ்பர்சிக்கு நானும் நமருமென்றும்படி ஸர்வருமதிகாரிகள்:

(4) கர்ம கைங்கர்யங்கள் ஸத்யா ஸத்ய நித்யா நித்ய வர்ண தாஸ்யாநுகுணங்கள்.

(5) இவற்றுக்கு விதிராகங்கள் ப்ரேரகங்கள்.

(6) மண்டினாரும் மற்றையாரும் ஆச்ரயம்.

(7) வேத வித்துக்களும் மிக்க வேதியரும் சந்தஸாம் மாதாவாலும் அதுக்கும் தாயாய்த் தாயினுமாயின செய்யுமத்தாலும் பிறப்பிக்கு மது இருவர்க்கும் ச்ரேஷ்ட்ட ஜன்மம்.

(8) அந்தணர் மறையோரென்றும் அடியார் தொண்டரென்றும் இவர்களுக்கு நிரூபகம்;

(9) ஒருதலையில் க்ராம குலாதி வ்யபதேசம் குலந்தரும் என்றும் மாசிற்குடிப் பழியென்று பதியாகக் கோயிலில் வாழுமென்பர்கள்.

(10) விப்ரர்க்கு கோத்ர சரண ஸூத்ர கூடஸ்த்தர் பராசர பாராசர்ய போதாயனாதிகள்; ப்ரபந்நஜந கூடஸ்த்தர் பராங்குச பரகால யதிவராதிகள்.

(11) அத்யயந ஜ்ஞாநாநுஷ்டாநங்களாலே ப்ராஹ்மண்யமாகிறாப்போலே சந்தங்களாயிரமும் அறியக்கற்று வல்லாரானால் வைஷ்ணவத்வஸித்தி.

(12) எவ்வுலகத்தெவ்வெவையும் என்கையாலே வேதம் பஹுவிதம்.

(13) இதில் ஸம்ஸ்க்ருதம் த்ராவிடம் என்கிற பிரிவு ருகாதிபேதம் போலே.

(14) செந்திறத்த தமிழ் என்கையாலே ஆகஸ்த்யமும் அநாதி.

(15) வடமொழி மறையென்றது தென்மொழிமறையை நினைத்திறே.

(16) வேதசதுஷ்டயாங்கோபாங்கங்கள் பதினாலும் போலே இக்காலுக்கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றையெண்மர் நன்மாலைகளும்.

(17) ஸகல வித்யாதிக வேதம் போலே இதுவும் திவ்ய ப்ரபந்த ப்ரதாநம்.

http://acharya.org

(18) சொல்லப்பட்ட என்ற விதில் கர்த்ருத்வம் ஸ்ம்ருதி அத்தை ஸ்வயம்பூ படைத்தான் என்றது போலே.

(19) நால் வேதம் கண்ட புராணரிஷி மந்த்ரதர்சிகளைப் போலே இவரையும் ரிஷி முநி கவியென்னும்.

(20) படைத்தான் கவியென்ற போதே இதுவும் யதா பூர்வகல்பநமாமே.

(21) இயற்பா மூன்றும் வேதத்ரயம் போலே; பண்ணார் பாடல் பண்புரையிசை கொள் வேதம் போலே.

(22) பரம ஸத்வத்தோடேயுள்ளியுரைக்கும் நிறை ஞானத்தயனும் சிவனும் திருமாலருள் கொண்டு இவர் பாடினார்.

(23) ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றும் தெளிந்தும் கண்டமைமைப்பாலே ஓதியுணர்ந்தவர் இன்னும் ஆசாபாசபத்தர்; அவன் வழங்கும் திவ்ய சக்ஷுஸ்ஸாலே நேரே கார் செறிந்த நீருடி கட்கரிய யரும் பொருளை கண்டபோதே யாமுறுமை யென்றும்படி இவர்க்கு வன்பாசங்கள் நீங்கிற்று.

(24) அவர்களுக்கு காயோடென்றுமிவையே தாரகாதிகள். இவர்க்கெல்லாம் கண்ணனிறே.

(25) அழுநீர் துளும்பக் கடலும் மலையும் விசும்பும் துழாய் திருமாலென்று எங்கே காண்கேன் என்னும் இவரலமாப்பு அவர்களுக்குப் புத்ர வியோகத்திலே.

(26) பலஸாதந தேவதாந்தரங்களில் இவர்கள் நினைவு பேச்சிலே தோன்றும்.

(27) திருமாலவன் கவியென்ற வாயோலைப்படியே மாற்றங்களாய்ந்து கொண்டு உரிய சொல் வாய்த்த விது வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள் போலே அருளிச் செயலில் ஸாரம்.

(28) பாஷ்ய காரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்கள் ஒருங்க விடுவர்.

(29) உதாத்தாதி பதக்ரம ஜடா வாக்ய பஞ்சாதி பாத வ்ருத்த ப்ரச்ந காண்டாஷ்டகாத்யாயாம்ச பர்வாத்யலங் காரங்கள் போலே எழுத்தசை சீர் பந்தம் அடிதொடை நிரை நிரையோசை தளையினம் யாப்புப் பாத்துறை பண்ணிசை தாளம் பத்து நூறாயிரம் முதலான செய்கோலம் இதுக்குமுண்டு.

(30) மண்ணுடின ஸஹ்ய ஜலம் தோதவத்திச் சங்கணித்துறையிலே துகில் வண்ணத் தெண்ணீராய் அந்தஸ்த்தத்தைக் காட்டுமாபோலே அல்ப ச்ருதர் கலக்கினச்ருதி நன்ஞானத் துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ் பொருளையறிவித்தது.

(31) மேகம் பருகின ஸமுத்ராம்பு போலே நூற்கடல் சொல் இவர் வாயன வாய்த்திருந்தினவாறே ஸர்வதா ஸர்லோப ஜீவ்யமாமே.

(32) ம்ருத்கடம் போலன்றே பொற்குடம்.

http://acharya.org

(33) பெரும் புறக்கடலும் ச்ருதிஸாகரமும் அலேத்தாழ்ந்தோடு மிடங்களில் அயோக்யர்க்குச் சமைத்த மடுவும் சாய்கரகமும் மாநமேய சரமம்.

(34) வீட்டுன்ப இன்பப் பாக்களில் த்ரவ்ய பாஷா நிரூபணஸமம் இன்பமாரியில் ஆராய்ச்சி.

(35) பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய் நூல்களும் க்ராஹ்யங்கள். பிறவி பார்க்கில் அஞ்சாமோத்தும் ஆறு மூன்றும் கழிப்பனும்.

(36) க்ருஷ்ண க்ருஷ்ணத்வைபாயநோத்பத்திகள் போலன்றே க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வ ஜன்மம்.

(37) மீந நவநீதங்கள் கந்திக்குமிடமும் வெறி கொள் துழாய் கமழுமிடமும் தன்னிலெர்க்குமோ.

(38) ஆற்றில் துறையில் ஊரிலுள்ள வைஷம்யம் வாசாமகோசரம்.

(39) தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளி வரும் ஜநிகள் போலே ப்ரஹ்ம ஜன்மமும் இழுக்கு என்பார்க்குப் பண்டை நாளில் பிறவி யுண்ணுட்டுத் தேசிறே.

(40) ஆதித்ய ராமதிவாகர அச்யுதபாநுக்களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி சோஷியாத பிறவிக்கடல் வற்றி விகஸியாத போதில் கமல மலர்ந்தது வகுள பூஷண பாஸ்கரோதயத்திலே.

(41) வம்ச பூமிகளை யுத்தரிக்கக் கீழ்க்குலம் புக்க வராஹ கோபாலரைப் போலே இவரும் நிமக்நரை யுயர்த்தத் தாழ விழிந்தார்.

(42) தமிழ் மாமுனி திக்கு சரண்யம் என்றவர்களாலே க்வசித் க்வசித் என்று இவராவிர்ப்பாவம் கலியும் கெடும் போலே ஸூசிதம்.

(43) ஊழிதொறும் சோம்பாது ஒன்றிப் பொருள் என்று அளிமகிழ்ந்து முற்றுமாய் நின்று நாலுரைத்து யோகுபுணர்ந்து கண் காண வந்து ஆள் பார்க்கிறவன் உலகினதியல்வை நல்வீடு செய்ய இணக்குப்பார்வை தேடிக் கழலலர் ஞானமுருவின முழுதுமோட்டின பெருங்கண் எங்குமிலக்கற்று அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப்படிந்து துளங்குகிறவர் மேலேபடப் பக்கம் நோக்கறப் பண்ணின விசேஷ கடாக்ஷம்.

(44) ச்ரமணீ விதுர ரிஷிபத்னிகளைப் பூதராக்கின புண்டரீகாக்ஷன் நெடு நோக்கு சாபமிழிந்தென்னப் பண்ணுமிறே.

(45) அதாவது மயர்வற மதிநலமருளுகை.

(46) முற்று மூண்ண முன்னம் பாரித்து உழுவதோர் நாஞ்சில் கொண்டு பெருக முயலும் பத்தியுழவன் க்ருஷிபலமிறே.

(47) முந்நீர் வாழ்ந்தார் சூட்டும் கோவை ஆழி யென்கிற ஸாக்ஷாத்க்ருத ஸ்வபரவ்ருத்தாந்தர்க்கு யாத்ருச்சிகாதிகள் உண்டாகில் தோன்றும்.

http://acharya.org

(48) வாவா றில்லை வெறிதே என்றறுதியிட்டபின் வாழ்முதல் என்கிற ஸாக்ருத மொழியைக் கற்பிக்கலாவதில்லை.

(49) நலமருளினன் என்கொல் என்று ஆபாதசூடம் அருளால் மன்றுமிவர்க்கு அன்புக்கடியானதுவே அடிசேருகைக்கும ஸாதநம்.

(50) ஜ்ஞாநத்தில் தன் பேச்சு. ப்ரேமத்தில் பெண் பேச்சு.

(51) தேறும் கலங்கியென்று தேறியும் தேருதும் ஸ்வரூபம் குலையாது.

(52) அடியோம் தொடர்ந்து குற்றேவல் அடிச்சியோம் அடிக்கீழ்க்குற்றே வலாகை அவஸ்ததாந்தாம்.

(53) ஸம்பந்தோபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞா வஸ்தைகளுக்குத் தோழி தாயார் மகளென்று பேர்.

(54) இவற்றில் ப்ராவண்யம் இவள் பரமே யென்னவுண்டாய் ஷோடச கலா பரிபூர்ண சந்த்ர மண்டலம் போலே பதினாறு திருநக்ஷத்ரம் நிரம்பினவரே தேவபோக்யமானவதில் அம்ருதம் போலன்றிக்கே என்னுல் தமிழரிசை காரர் முதற்பத்தர் வானவரென்னம்மான் பார்பர வென்னும் படி ஸேச்வரவிபூதி போக்யமான பாலோட முதன்ன மென்மொழி முகம் செய்தது.

(55) நீர்பால் நெய்யமுதாய் நிரம்பின ஏரி நெளிக்குமா போலே பரபக்த்யாதிமய ஜ்ஞானம்ருதாப்தி நிமிகிற வாய் கரைமிடைந்து மொழிபட்டு அவா விலந்தாதியென்று பேர் பெற்றது.

(56) மெய்ந்நின்று மங்கவொட்டுக்கு நடுவு அநுபவ கர்போபதேசம்.

(57) இவற்றுக்கு மந்த்ர வித்ய நுஸந்தாந ரஹஸ்யங்களோடே சேர்த்தி.

(58) அளிப்பான் அடியேன் அடைக்கலம் சூடிய பொய் யாதானும் அழுந்தார் என்று ஸ்வரூப விரோதி நிவ்ருத்திகளையும், தாமரையுந்திப் பெருமா மாயன் ஆளாகவே வாழியயென்று ப்ராப்ய பலங்களையும், நெறிகாட்டி மனத்துக் கொண்டு கண்ணுலடித்து கண்டிலமால் யாதாகிலென்று உபாயத்தையும்சொன்னவை மந்த்ரச்லோகங்களோடே சேரும்.

(59) த்வயார்த்தம் தீர்க்க சரணாகதியென்றது ஸார ஸங்க்ரஹத்திலே.

(60) மூன்றில் சுருக்கிய ஐந்தையும் உயர் திண்ணணை ஒன்று, பயிலேறு கண் கரு, வீடு சொன்னல் ஒருக் கொண்ட, நோற்ற நாலும், எம்மாவொழிவில் நெடுவேய், என்கிற விருபதிலே விசத மாக்கி எண்பதிலே பரப்புகையாலே ஐந்தையும்; அருளினன் வீடுபெற்ற வென்கையாலே ஐந்திலு மிரண்டையும்; தொழுது களித்தேன் சொல்லுப் பெற்றேன் பணிசெய் என்கிற முக்தலக்ஷண வ்ருத்தியாலே இரண்டிலொன்றையும் இதுக்கு ப்ரமேயமென்றும்—

———

நம்மாழ்வார்

ஆழ்வார் திருநகரி

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்வருமறையின் பொருள்
அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே

http://acharya.org

பகவத் விஷயாவதாரிகை

பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ ஸத்யகாமத்வ ஆபத்ஸகத்வ ஆர்த்தி ஹரத்வ விசிஷ்டன் மயர்வையறுக்க, தத்வ வேதந மறப்பற்று, ஜ்ஞப்திபல முக்தி தலேசேர நிஷ்கர்ஷித்து, மோக்ஷபலவ்ருத்தி செய்ய அர்த்தித்து, புருஷார்த்த பலாந்யருசி யொழிந்து, விரக்தி பலராகம் கழியமிக்கு, ப்ரேமபலோபாயத்தே புகுந்து, ஸாதநபலோபகாரக் கைம்மாறின்றி, க்ருதஜ்ஞதாபலப்ரதிக்ருதமானத்தையுணர்ந்து, ஆத்மதர்சன பலப்ராப்தி மரணா வதியாகப் பெற்று, காலாஸத்தி பல கதிக்குத் துணை கூட்டின தம் பேற்றைப் பிறரறியந் பத்துத் தோறும் வெளியிடுகிறார்.

ஆசார்யஹ்ருதயம்

218

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. வித்வான் வேளுக்குடி K. வரதாசார்ய ஸ்வாமி, சென்னை.

இவர், சென்னை முத்தியாலுப்பேட்டை ஸ்ரீக்ருஷ்ணன் கோயிலுக்கு ஸமீபத்தில் 31—1—1921 (ரௌத்ரி, தை, விசாகத்தில்) பிறந்தார்.

இவர் முறைப்படி உபநீதராய் 1935 முதல் 1938 வரை சென்னை ஸ்ரீ காருமானி ஆதிகேசவலு செட்டியார் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் பயின்று தேர்ச்சி பெற்றார். 1938 முதல் 1942 வரை திருப்பதி ஸ்ரீவேங்கடேஸ்வர ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தில் ந்யாய சாஸ்த்ரம் பயின்று உத்தீர்ணரானார். 1942, 1943 வருடங்களில் திருவரங்கத்தில் உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் செய்தார். 1943 முதல் 1950 வரை சென்னையில் ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு ஸ்ரீவேங்கடாசார்யஸ்வாமி ஸந்நிதியில் உபயவேதாந்தரஹஸ்ய க்ரந்தங்கள் அனைத்தையும் அதிகரித்து உத்தீர்ணரானார். இவர் 1953 முதல் உபந்யாஸங்கள் நிகழ்த்தி வருகிறார். ஆஸேது ஹிமாசலம் இந்தியாவில் இவர் உபந்யாஸம் நிகழ்த்தாத இடமேயில்லை என்று சொல்லலாம்.

உபய வேதாந்தாசார்யர் என்றும் வாகம்ருதவர்ஷீ என்றும் ராமாநுஜஸித்தாந்த திவாகர என்றும் த்ராவிடாம்நாய காமதேநு என்றும் பிருதங்களைப் பெற்றவர்—

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயாவதாரிகை

ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

ச்ரிய: பதியான ஸர்வேச்வரனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர் நம்மாழ்வார். அவர் அருளிச் செய்துள்ள திவ்யப்ரபந்தங்கள் நான்கு. அவற்றுள் திருவாய்மொழி சாலச் சிறந்ததாகும். "வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மசாஸ்த்ரேஷு மாநவம் பாரதே பகவத் கீதா புராணேஷு ச வைஷ்ணவம்" என்கிறபடியே வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள் போல் இது அருளிச் செயலில் ஸாரம் என்பர் நம்பெரியோர்.

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்தவர்கள். "ஜகதிவிததம் மோஹநமிதம் தமோ யேநாபாஸ்தம்" என்கிறபடியே வருத்தும் புறவிருள் மாற்ற இதயத்திருள்கெட எய்தற்கரிய மறைகளை இந்தமிழால் செய்தற்குலகில் வந்தவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் செஞ்சொல் அந்தமிழினின்பப்பாக்களை ஓதி நாம் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோம். பொருளைக் காண முகத்திரண்டு கண்கள் உள. அதேபோல பரம் பொருளான புருஷோத்தமனைக் காண இரு கண்கள் உபய வேதாந்தங்களாகும். "ஸ்வம் ஸம்ஸ்க்ருத த்ராவிடவேத ஸூக்தைः பாந்தம்" என்றருளிச் செய்கிறார் ஸ்ரீபராசர பட்டர். வடமொழி மறை (8. 9. 8) என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிற அடை மொழியை உற்று நோக்கினால் தென் மொழி மறையும் உண்டு என்று தேறுகிறது. வடமொழி மறைக்கு ஆறங்கங்களுள், "சீக்ஷாயாம்வர்ண சிக்ஷா பதஸமதிகம: வ்யாக்ரியா நிர்வசோப்யர்ம் சந்த: சந்தச்சிதௌ ஸ்யாத் கமயதிஸமயம் ஜ்யோதிஷம் ரங்கநாத. கல்பே அநுஷ்டாநமுக்தம்" என்று ஸ்ரீபராசர பட்டரும், "சிக்ஷாம் வர்ணஸ்வரார்தே: ஸுபத விபஜநம் தந்நிருக்தம் விசித்ராம் சந்தோவர்க வ்யவஸ்தாம் ஸமயநியம நம் ஸாத்வநுஷ்டாந க்லுப்திம்" என்று தேசிகனும் அருளிச் செய்தபடியே சிக்ஷா வ்யாகரணம் சந்த: நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்று அவற்றின் ஸாஹாய்யம் கொண்டே வேதார்த்தங்களை யறியக்கூடும். அதே போல கலியன் வாயொலிகளான ஆறும் அங்கங்களாகும். மற்றையோரான ஆழ்வார்கள் எண்மர் பாடல்களும் உபாங்கங்களாகும் இவற்றைக் கொண்டே ஆழ்வார் பாசுரங்களைத் தெளியப்ராப்தம் என்று கொண்டார்கள் நம் பூர்வர்கள். சதுர் தசவித்யாஸ்தாநங்களில் அங்கங்களான உபாங்கங்களான எல்லாக் கலைகளிலும் வேதம் தன்னேற்றம் பெற்றிருக்குமாபோலே நம்மாழ்வார் நற்கலைகள் நான்கும் அருளிச் செயலில் ஸாரம் என்றபடி. இருந்தமிழ் நூல் புலவன் கலியன். இருந்தமிழ் நூல் திருவாய் மொழியிறே. ஆழ்வார் "என்னெஞ்சத்

http://acharya.org

துள்ளிருந்து இங்கிருந்தமிழ் நூல் இவை மொழிந்து (10. 6. 4) என்றருளிச் செய்தாரிறே. நம்மாழ்வார் அங்கியான நான் மறை ஸாரத்தைக் கண்டவர். இவர் ஓர் ரிஷி. "ரிஷிம் ஜுஷாமஹே...ஸஹஸ்ரஶாகாம் ய: அத்ராக்ஷீத்" என்றிறே பட்டர் அருளிச் செய்தது. தத்தாத்ருக்தாம்பர்ணீ தடகத சடஜித் த்ருஷ்ட ஸர்வீயஶாகா" என்றும் "ஸாரம் வேத்யம் ஸ்வவேதே ஸகலமகதயத் ஸாநுகம்போ சடாரி;" என்றும் "அசேஷவர்ணார்ஹவேத" என்றும் மறைமுடி தேசிகனும் அருளிச் செய்தாரிறே.

வடமொழி மறை வேதநூல். இது இருந்தமிழ்நூல். அது ஆஜ்ஞை. இது ஆணை. அது வசையில் நான்மறை. இது ஏதமில் ஆயிரம். அது சுடர்மிகு சுருதி. இது செவிக்கினிய செஞ்சொல். அது ஓதுகின்றது உண்மை. இது பொய்யில் பாடல். அது பண்டைநான்மறை—நிற்கும் நான்மறை. இது முந்தை ஆயிரம்: அழிவில்லா ஆயிரம். ஆக ஸம்ஸ்க்ருத வேததுல்யம் த்ராவிட வேதம். இதனைக் கண்ட ரிஷி நம்மாழ்வார். இவரை பகவான் விசேஷ கடாக்ஷம் பண்ணியருளினன்-அதாவது மயர்வற மதிநலம் அருளினன் என்றபடி. "ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேனாக்லிஷ்டகர்மணா சுபேநமநஸா த்யாதம் கவாம் வ்ருத்தி மபீப்ஸதா" என்கிறபடியே கோரக்ஷணத்துக்காக நெருஞ்சிக்காட்டை தத்போக்யமான புல்லாம்படி திருவுள்ளத்தாலே ஸங்கல்பித்த ஸர்வசக்தியானவன் கோரக்ஷணத்துக்குப் போலே ஜகத்ரக்ஷணத்துக்கும் தானே கடவனை கையாலே ஜகத்தினுடைய ஹிதார்த்தமாக "எனைத்தோர் பிறப்பும்—எதிர் சூழல்புக்கு—எனக்கே அருள்கள் செய்ய—அம்மான் திரிவிக்கிரமனை—விதி சூழ்ந்தது" (2. 7.) என்று அனேக ஜன்மங்கள் நான் பிறந்த ஜன்மங்களுக்கு எதிரே பிறந்து வந்து எனக்கே தன்ப்ரஸாதங்களைப் பண்ணும்படி ஸர்வேச்வரனை க்ருபைகாற்கட்டிற்று என்று இவர் பேசும்படி, க்ருபையை இவரொருவர் விஷயமாகவும் ஒரு மடைப்படுத்தி, தன்னோடொத்த ஜ்ஞாந சக்திகளையுடையராம்படி பண்ண. இப்படியவனால் திருந்தின இவர் ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்றும்படியாக்கினர். ஸர்வேச்வரன் ஆழ்வாரொருவருக்கே மயர்வறமதிநலம் அருளினன். ஆழ்வார் உலகுக்கே மயர்வற மதிநலம் அருளினர். "பெருங்கண் எங்கும் இலக்கற்று அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப் படிந்து துளங்குகிற இவர் மேலே பட்டது என்றபடி. இது பக்கம் நோக்கறப் பண்ணின விசேஷ கடாக்ஷமிறே. "எங்கும் பக்க நோக்கறியான் என் பைந் தாமரைக்கண்ணனே" என்ருரிறே ஆழ்வார். இங்கே ஆளவந்தார் ஐதிஹ்யம் அநுஸந்தேயம். "நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா. கேவலம் ஸ்வேச்சயை வாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந" என்றும் "நிர்ஹேதுக கடாக்ஷேண மதீயேந மஹாமதே ஆசார்ய விஷயீகாராத் ப்ராப்நுவந்தி பராம் கதிம்" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வேச்சையாலே நிர்ஹேதுகமாகப் பண்ணப்பட்ட விசேஷ கடாக்ஷம்,

http://acharya.org

"ஸர்வஜ்ஞரான பாஷ்யகாரர் திருவடிகளிலே ஸேவித்து ததபிமதவிஷய மாய் ஸகலசாஸ்த்ரங்களையுமாராய்ந்து அறுதியிட்டிருக்குமவராகையாலே ஆப்ததமராயிருக்கும் திருக்குருகைப் பிரான் பிள்ளான் இன்பமிகுமாறுயிரத் திலே" ஆநந்தாதி கல்யாண குணங்களை உடையனை தான், மேலே பொன்னும் நாறினைப் போலே நிர்ஹேதுகமாக எனக்குத் தன் திறத்தில் அஜ்ஞாநகந்த மில்லாததொருபடி தன்னையுள்ளபடியறிவித்து" என்றருளிச் செய்துள்ளார். பட்டர் திருவடிகளை யாச்ரயித்து உஜ்ஜீவித்த நஞ்ஜீயரும் "அருளினன்— இத்தலை நன்மை தீமைபாராதே நிர்ஹேதுகமாகத் தன்க்ருபையாலே தந்தருளினன். எனக்குத் தந்தருளினன் என்றுதொழிவான் என்னென்னில்: அஸந்நேவ ஸ பவதி என்று சொல்லுகிற கணக்கிலே பகவத் விஷயீகாரத்துக்கு முன்பு தம்மை யஸத்கல்பராக நினைத்திருக்கையாலே" என்றருளிச் செய்தருளினர். "முந்நீர் வாழ்ந்தார் சூட்டும் கோவை ஆழியென்கிற ஸாக்ஷாத்க்ருத ஸ்வபர வ்ருத்தாந்தர்க்கு யாத்ருச்சிகாதிகள் உண்டாகில் தோன்றும்" என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் ஆசார்ய ஹ்ருதயத்தில் அருளிச் செய்தார். "வெறிதேயருள் செய்வர்" என்று இவ்வர்த்தத்தை (ஆழ்வார்) ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே. "செய்வார்கட்கு" என்று அருளுக்கு ஹேது ஸுக்ருதம் என்றுகின்றதேயென்னில் :—அப்போது 'வெறிதே' என்கிறவிடம் சேராது என்று ஸ்ரீலோகதேசிகனும் அருளிச் செய்தார். செய்வார்கட்கு என்றது-தான் செய்ய நினைத்தவர்களுக்கு என்றபடி—"யமேவ ஏஷவ்ருணுதே" என்று அவன் வரணத்தைக் கூறி, "தேந லப்ய:" என்றதிறே ச்ருதி. "ப்ரியதம ஏவஹி வரணீயோ பவதி" என்ற ஸ்ரீபாஷ்ய வாக்யமும்" ப்ரீதிவிஷய மாத்ரஸ்ய ந வரணீயத்வம்: கிந்து ஸ்வயம் உபஸ்த்திதஸ்ய ஸ்வீகார ஏவ. அத: தத்வ்யாவ்ருத்யர்த்தம் ப்ரியதம இத்யுக்தம் " என்ற ச்ருதப்ரகாசிகாவாக்யமும் இங்கேயநுஸந்தேயங்கள் : அருள் பெறுவார் மற்றையோர். அவன் அருள் தருவான் இவருக்கேயிறே. இப்படியவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தால் ஆழ்வார் தத்வங்களை விசதமாக அறியவல்லராம்படியானர். ஆழ்வார் தத்வதர்சியிறே. ஆழ்வார் கலியுகாரம்பத்தில் ஸ்ரீவிஶிஷ்டாத்வைதஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமரிறே.

இதரதர்ஶநங்களில் தத்வங்களைப் பதினறென்பார் ஆறென்பார் இருபத்தைந்து என்பார் இருபத்தாறு என்பார் முப்பத்தாறு என்பாராய் பஹுப்ரகாரங்களிலே விப்ரதிபத்தி பண்ணுவர்கள். ஆழ்வார் வேதாந்த ஸித்தங்களான தத்வத்ரயத்தை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்த தத்வதர்சியிறே—இவ்விஷயத்தைச் சற்று விவரிக்கிறேன். மதாந்தரஸ்த்தரை இருவகையாகப் பிரித்துப் பார்க்கலாம். சிலர் வேத பாஹ்யர்கள். வேதப்ராமாண்யத்தை அங்கிகரியாதார். இவர்கள் ப்ரமாணதூஷகர்—மற்றையோர் வேதகுத்ருஷ்டிகள். வேதப்ராமாண்யத்தை யங்கீகரித்தும் வேதார்த்தங்களை விபரீதமாகக் கூறுமவர்கள். இவர்கள் ப்ரமேயதூஷகர், இவர்கள் இருவருக்கும் ஸ்ரீமந்நாராயணனுடைய அநுக்ரஹ ப்ராப்தியில்லை. "யாவேதபாஹ்யா: ஸ்ம்ருதய: யா: ச கா: ச குத்ருஷ்டய:

http://acharya.org

ஸர்வா: தா: நிஷ்பலா: ப்ரேத்ய தமோ நிஷ்டா ஹி தா: ஸ்ம்ருதா: என்று மநு பகவானும் "பாஹ்யா: குத்ருஷ்டய இதி த்விதயேபி அபாரம் கோரம் தம: ஸமுபயாந்தி நஹீக்ஷஸே தாந்" என்று கூரத்தாழ்வானும் அருளிச் செய்தார்கள். அப்படியன்றிக்கே ஆழ்வார் தத்வத்ரயத்தை வேதாந்தக் கட்டளையிலே ஸாக்ஷாத்கரித்தவர்.

ப்ரக்ருத்யாத்மப்ராந்தி: கஹதி சிதசில்லக்ஷணதியா
ததா ஜீவேசைக்யப்ரப்ருதி கலஹை: தத்விபஜநாத் |
அதோ போக்தா போக்யம் ததுபய நியந்தேதி நிகமை:
விபக்தம் ந: தத்வத்ரய முபதிசந்தி அகுதநிய:"

என்று தேசிகன் தத்வத்ரய சிந்தகாதிகாராரம்பத்திலே யருளிச் செய்தாரிறே. தத்வத்ரயவாதம் வேதாந்தஸித்தம். வைதிக பரம்பராகதமுமாகும். கலியுகாரம்பத்தில் தத்வத்ரய ஸித்தாந்த ப்ரவர்த்தகரிறே நம்மாழ்வார். இவர் தத்வதர்சிமாத்ரமேயன்று பரமவிரக்தர் பரமபக்தரும் கூட. இவருடைய வைராக்யம் அநிதரஸாதாரணமானது. தேவதாந்தர வைராக்யம்: ஐஸ்வர்ய கைவல்ய வைராக்யம், ஆத்மாத்மீய வைராக்யம்: லோகயாத்ரா வைராக்யமென்று வைராக்யம் பஹுவிதம்: இவைபித்தனையும் ஆழ்வார்க்குப் பரம பரிபூர்ணம். திருவாய்மொழி நான்காம் பத்தில் வைராக்யத்தைப் பூர்ணமாகத் தம்மிடத்திலுள்ளதை ப்ரகாசப் படுத்துகிருர்—ஐஸ்வர்ய கைவல்ய வைராக்யத்தை "ஒரு நாயகம்" பதிகத்தாலும், தேவதாந்தரவைராக்யத்தை "தீர்ப்பாரையாமினி" பதிகத்தாலும், ஆத்மாத்மீய வைராக்யத்தை "ஏருளும்" பதிகத்தாலும், லோகயாத்ரா வைராக்யத்தை "நண்ணுதார்" பதிகத்தாலும் வெளிப்படுத்தினர் ஆழ்வார். ஒரு நாயகம் பதிகம் உபதேசப்பத்து. உலகத்தார்க்கு ஐச்வர்ய கைவல்ய ப்ராவண்யம் கூடாது என உபதேசிக்கிருர். அது தன்னையே ஸ்வாநுபவமாகக் கூறுகிருர் "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர் கண்டொழிந்தேன். ஐங்கருவி கண்ட வின்பம்...சிற்றின்பம்" என்று. ஆக ஆழ்வார் வைராக்யத்தை உபதேசித்தவர் மட்டுமல்லர் வைராக்யத்தைப் பூர்ணமாக உடையவர். தீர்ப்பாரைப் பதிகத்தில் தேவதாந்தர வைராக்யம் ப்ரகாசிதம். இந்தப் பதிகம் தோழிப் பாசுரமாயமைந்துள்ளது. ஆழ்வார் மோஹங்கதர். அவைஷ்ணவஸஹவாஸம் ஆழ்வார்க்கு அஸஹ்யம். அது தன்னைத் தோழிப்பாசுரத்தாலே கூறுகிருர் ஆழ்வார் மோஹித்திருக்க அவைஷ்ணவர்கள் உள்ளே நுழைந்தார்கள். அது மோஹித்த ஆழ்வார்க்கு பாதகமாயிற்று. இதனுல் தேறுவது-தேவதாந்தர ஸம்பந்தமோ தத்ஸம்பந்திஸம்பந்தமோ ஆழ்வார்க்கு ஜ்ஞாதமாயே பாதகம் என்பதன்று. ஸத்தயா பாதகம் என்றபடி. ஆக பரதேவதாஸம்பந்தமும் தத்ஸம்பந்தி ஸம்பந்தமும் ஸத்தயா ஸாதகமென்றும், தேவதாந்தர தத்ஸம்பந்தி ஸம்பந்தங்கள் ஸத்தயா பாதகமென்றும் கூறுகிறபடி. இதனுல் ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவத்வ பூர்த்தி கூறப்பட்டது.

http://acharya.org

ஏறாளும் பதிகத்தில் கூறப்பட்ட வைராக்யம் ஆத்மாத்மீய வைராக்யம். அவன் விரும்பினால் ஆத்மாவும் ஆத்மீயமும் உத்தேச்யம். அன்றாகில் அவை த்யாஜ்யம் என்றபடி-ஸீதை "நஹிமே ஜீவிதேநார்த்த:... விநா ராமம் மஹாரதம்... என்றாப் போலவும், ஆளவந்தார் " நதேஹம்...தவசேஷத்வ விபவாத் பஹிர் பூதம் க்ஷணமபி ஸஹே" என்றாப் போலவும் ஆழ்வார் அருளிச் செய்கிறபடி. ஆத்மவைராக்யம் ஆத்மீயவைராக்யம் என்ற இந்த இரண்டினுள் ஆத்மீய வைராக்யத்தை முந்துறக் கூறிப் பின்னை ஆத்மவைராக்யத்தைக் கூறுகிறார் ஆழ்வார் இப்பதிகத்தில். இதன் தாத்பர்யத்தை இருபத்து நாலாயிரத்தில் பெரிய வாச்சான் பிள்ளை யருளிச்செய்கிறார் "ஆழ்வாருடைய ஆத்மாவிற் காட்டில் ஆத்மீயமான ஆழ்வார் திருமேனியை பகவான் முந்துறமுன்னம் ஆசைப் பட்டானாகையாலே அவன் விரும்பிய அடைவிலே விடுகிறார்" என்று. "ஈசனுகப்புக்கு வேறுபடில் என்னுடைமை மிக்கஉயிர் என்றனக்கும் வேண்டா எனும் மாறன்" என்றிறே ஜீயர் அருளிச் செய்தது.

நண்ணாதார் பதிகத்தில் "இவையென்ன உலகியற்கை-கொடுவுலகம் காட்டேல்" என்று லோகயாத்ரா வைராக்யத்தைப் பரிபூர்ணமாகக் கூறுகிறார். ஸாதுக்களுக்கெல்லாம் உபமாநபூமியான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப் போல எல்லாம் அவன் விபூதி, எல்லாம் வைஷ்ணவம் என்று பார்க்கும் ஆழ்வார்க்கு லோகத்தாரிடம் காணப்படும் விஷம புத்தி அஸஹ்யமாகிறது. இப்படி வைராக்ய பரிபூர்ணர் ஆழ்வார். ஆழ்வாருடைய பக்தி பக்திஶாஸ்த்ரமர்யாதாதீதமான பக்திவிஶேஷம், "கொண்ட பெருங்காதலுக்குப் பத்திமை நூல் வரம்பில்லையே" என்றருளிச் செய்கிறார் ஆசார்யஹ்ருதயத்தில் நாயனார். ஆழ்வாருடைய ஒரோவைபவத்துக்கு ஒரோ அதிகாரி த்ருஷ்டாந்த மாகலாம் அத்தனை போக்கி ஆழ்வாருடைய நிகிலவைபவத்துக்கும் ஆழ்வாருக்கு ஆழ்வாரே ஸமாநர் என்பர் நம் பெரியோர். இளைய பெருமாள் ஸ்ரீபரதாழ்வான் ஸ்ரீசத்ருக்நாழ்வான் தசரதசக்ரவர்த்தி யசோதைப் பிராட்டி ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் ஸ்ரீவிபீஷணாழ்வான் திருவடி அர்ஜுநன் பெரிய பிராட்டியார் தொடக்கமான பிராட்டிமார்கள் கோபிமார்கள் இவர்கள் இத்தனை பேர்களோடும் ஸாம்யம் பெற்றவர் நம்மாழ்வார். இவருடைய பக்தி ப்ரகர்ஷம் அநிதரஸாதாரணமானது. வாயும் திரை பதிகம் முடியானே பதிகம் கடல் ஞாலம் பதிகம் முதலான பதிகங்களை ஸேவிப்போமானால் இவருடைய பக்தி ப்ரகர்ஷம் என்னே என்று வியக்கும் படியாயிருக்கும். "ஈரநெல் வித்திமுளைத்த நெஞ்சப் பெருஞ்செய்" என்றும் "காதல் கடல்புரைய" என்றும் "காதல் கடலில் மிகப்பெரிதால்" என்றும் "ஏழ் கடலும் கழியப்பெரிதால்" என்றும், சூழ்ந்து...பெரும்பாழ் அதனில் பெரிய பரநன் மலர்ச்சோதி. அதனில் பெரிய சுடர் ஞானவின்பம். அதனில் பெரிய என்னவா" என்றும்இத் யாதிகளாலே தம்முடைய பக்தி ப்ரகர்ஷத்தை ஆழ்வார் தாமே யருளிச் செய்கிறாரிறே. ஆழ்வாருக்கு பகவான் பக்தியை வளர்த்த படியிது. இவருடைய பக்தி பலாத்காரத்தாலே விளைந்த திவ்ய ப்ரபந்தமிறே திருவாய்மொழி. "அவா விலந்தாதி" என்று ஆழ்வார் தாமே யருளிச் செய்கிறார். அவா உந்த ஆழ்வாருக்குத் திருவாய்மொழி வெளிப் புறப்பட்டது.

http://acharya.org

ஸ்ரீமைத்ரேயபகவான் மேலே மேலே ப்ரச்நம் செய்ய ஸ்ரீபராசரபகவான் ஸ்ரீ விஷ்ணு புராணம் அருளிச் செய்தாரிறே. மைத்ரேயன் இல்லையேல் ஸ்ரீ பராசரர் ஸ்ரீ விஷ்ணுபுராணம் அருளிச் செய வியலாது. அதே போல ஆழ்வார் திருவாய்மொழி பாடியது அவா உந்த உந்த. இவருடைய திருவாக்கு பக்தி பரீவாஹமாயிறே யிருப்பது. இவருடைய ஸ்ரீமைத்ரேய பகவான் அவா என்றிறே நம்பிள்ளை திவ்ய ஸூக்தி.

ஆழ்வார் அபிநிவேஶபலாத்காரத்தாலே அருளிச் செய்த திருவாய் மொழி த்வய விவரணம் என்பர் நம் பெரியோர். ப்ரணவார்த்தத்தையும் நமஸ்ஸப்தார்த்தத்தையும் திருவிருத்தத்தாலும், நாராயணபதார்த்தத்தைத் திருவாசிரியத்தாலும், சரமஶ்லோகார்த்தத்தைப் பெரிய திருவந்தாதியாலும் விவரித்த ஆழ்வார் த்வயார்த்தத்தை விசதீகரிக்கிறார் திருவாய் மொழியில் என்பது ஸம்ப்ரதாயம்: "இவற்றுக்கு மந்த்ர வித்யநுஸந்தாந ரஹஸ்யங் களோடே சேர்த்தி" என்பது ஆசார்ய ஹ்ருதயவாக்யம். மந்த்ரரஹஸ்யம் திருமந்த்ரம். விதிரஹஸ்யம் சரமச்லோகம். அநுஸந்தாந ரஹஸ்யம் த்வயம்... இம் மூன்று ரஹஸ்யங்களில் அர்த்தங்களை நான்கு ப்ரபந்தங்களால் விசதீகரித் தார் ஆழ்வார். அவற்றுள் த்வயார்த்தப்ரதிபாதகம் திருவாய் மொழி. "த்வயார்த்தம் தீர்க்க சரணாகதியென்றது ஸார ஸங்க்ரஹத்திலே" என்றருளிச் செய்கிறார் ஆசார்ய ஹ்ருதயகாரர். ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் "த்வயார்த்தப்ரதிபாதகம் திருவாய் மொழி" என்பதனை "ஸாரஸங்க்ரஹம்" என்ற ரஹஸ்ய ப்ரபந்தத்தில் அருளிச் செய்துள்ளார் என்றபடி. த்வயார்த் தங்கள் பத்து. "தசைதான் மந்தாரம் த்ராயதே" என்று ஸ்ரீபராசரபட்டரும் அருளிச் செய்தாரிறே. ஆழ்வாரும் திருவாய் மொழி பத்துப் பத்துக்களாலும் த்வயத்தில் கூறப்பட்ட பத்தர்த்தங்களை அருளிச் செய்துள்ளார் என்றபடி— பரத்வம் காரணத்வம் வ்யாபகத்வம் நியந்த்ருத்வம் காருணிகத்வம் சரண்யத்வம் சக்தத்வம் ஸத்யகாமத்வம் ஆபத்ஸகத்வம் ஆர்த்தி ஹரத்வம் என்ற பகவானு டைய தசவிதகுணங்களைத் திருவாய் மொழியில் ஆழ்வார் அநுபவிக்கிறார் என்றும் கூறலாம். ஒவ்வோர் பத்திலும் மூன்று விஷயங்கள் உள. அதாவது (1) இன்னகல்யாண குணத்தோடு கூடியவன் என்கிறார் ஒவ்வோர் பத்திலும் (2) அவன் தனக்கு என்ன நன்மையைச் செய்தான் என்கிறார் ஒவ்வோர் பத்திலும், (3) தான் பகவானடியாகப் பெற்ற நன்மையை நாட்டார் எல் லோரும் பெற்று வாழ வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி கருணாதிரேகத் தாலும், ஜகத்துக்கும் அவனுக்குமுள்ள ஸம்பந்தத்தை அறிந்திருக்கிறபடி யாலும், அதாவது நித்யரோடு துல்யமான பகவத் ஸம்பந்தம் ஸம்ஸாரி களுக்கு இருக்க 'இவர்கள் அவனையிழந்து கிடக்க வொண்ணாது என்று கொண்டு என்றபடி—இப்படி ஸம்பந்தஜ்ஞாநத்தாலும், ஸம்ஸாரத்தில் ஸம்ஸாரிகள்படும் க்லேசம் பொறுக்க மாட்டாமையாலும் ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கிறார் ஆழ்வார். ஆழ்வார் பாசுரம் இரண்டு விதமாயிருக்கும்: ஸ்வாநுபவமாயும் பரோபதேசமாயும்: ஆழ்வார் பாசுரம் இரண்டு விதமா யிருக்கும் தன்பேச்சாகவும் பெண்பேச்சாகவும்: ஆழ்வார் பாசுரம் இரண்டு

http://acharya.org

விதமாயிருக்கும் ஸ்வாபதேசமாகவும் அந்யாபதேசமாகவும் : என்றபடி. இப்படி ஆழ்வார்பகவானுடைய பத்து அவதாரங்கள் போன்ற திருவாய்மொழி பத்துப் பத்துக்களாலும் பத்து குணங்களை அநுபவிக்கிறார். முதற்பத்தால் பரத்வமும் அந்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற காரணத்வத்தையிரண்டாம் பத்தாலும், காரணத்வ சங்கிததோஷமில்லாமைக்காக வ்யாபகத்வத்தை மூன்றும் பத்தாலும், ஆகாசம் போல பகவானுக்குக்கவலவ்யாப்தியே என்று சங்கியாமைக்கு நியந்த்ருவத்தை நான்காம் பத்தாலும், இப்படி பரத்வத்தை நான்கு பத்துக்களாலே விவரித்து கேவல பரத்வமேயன்று, ஸௌலப்யம் பரமபரிபூர்ணம் என்பதனைக் காருணிகத்வத்தைக் கூறுகிற ஐந்தாம் பத்தாலும் விவரித்தருளி, இப்படி பரத்வஸௌலப்யபூர்ணன் திருவடிகளே யுபாயமாகையால் அவனே சரண்யன் என்றத்யவஸித்து சரணாகதி பண்ணும் முகத்தாலே அவனுடைய சரண்யத்வத்தை ஆறும்பத்தாலும் அருளிச்செய்தார் ஆழ்வார். "ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே" என்று ஸ்ரீவிபீஷணவாக்யம். அவன் சரண்யத்வத்தைக் கூறி ததுபபாதகமான ஸௌலப்ய பரத்வங்களை ராகவாய மஹாத்மநே" என்றான். ஆழ்வார் முதலிட்டு ஐந்து பத்துக்களால் பரத்வஸௌலப்யங்களை யறுதியிட்டு அவனே சரண்யனாகையால்-ஆறும்பத்தால் சரணாகதியை யநுட்டித்தார். இப்படி த்வயத்தில் பூர்வ வாக்யார்த்தம் நிரூபிதமாயிற்று. இனி மேலிட்டு நான்குபத்துக்களாலே உத்தர வாக்யார்த்த நிரூபணம் செய்யப்படுகிறது. சக்திமானிறே ஶரணாகதன் கார்யம் செய்வான். அவன் சக்தியை ஏழாம்பத்தாலும், ஸத்யகாமனிறே புருஷார்த்த ப்ரதனாவான். அவன் ஸத்ய காமத்வத்தை எட்டாம் பத்தாலும் விவரித்தார் ஆழ்வார். அவனே ஆபத்ஸகன். மற்றையோர் ஆபத்வர்த்தகரே யல்லது ஆபந்நிவர்த்தகர் அல்லர். அவனுடைய ஆபத்ஸகத்வத்தை ஒன்பதாம் பத்தால் அருளிச் செய்து, அவன் தனக்கு ஆர்த்தி ஹரணன் என்பதனைப்பத்தாம் பத்தில் அருளிச் செய்தார் ஆழ்வார்.

"அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்" என்றிறே அவருடைய இறுதிப் பாசுரம்.

"ஸ்ரீபதி : சேதநஸ்யாஸ்ய ஹேதுத்வேந ஸமாச்ரித :

அநிஷ்டஹாநிம் இஷ்டஸ்ய ப்ராப்திம் ச குருதே ஸ்வயம்"
என்று நின்றதிறே.

இப்படிப் பத்துப்பத்துக்களாலும் கொண்டாடப்படுகிற பத்து கல்யாண குணங்களையும் இனி பத்து வித்வான்கள் கட்டுரைகள் மூலமாக அனுபவிக்க ப்ராப்தம்.

* * * *

http://acharya.org

திருவாய்மொழி

தனியன்கள்

நாதமுனிகளருளிச்செய்தது

பக்தாம்ருதம் விஶ்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீஶடகோபவாங்மயம்
ஸஹஸ்ரஶாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்.

ஈஶ்வரமுனிகளருளிச்செய்தது

திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்
மருவினிய வண்பொருநலென்றும் *—அருமறைக
ளந்தாதி செய்தானடியிணையே யெப்பொழுதும் *
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

சொட்டைநம்பிகளருளிச்செய்தது

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும் *
இனத்தாரை யல்லா திறைஞ்சேன் *—தனத்தாலும்
ஏதுங் குறைவிலே னெந்தை சடகோபன் *
பாதங்கள் யாமுடைய பற்று.

அனந்தாழ்வானருளிச்செய்தது

ஏய்ந்தபெருங் கீர்த்தி யிராமாநுசமுனி தன்
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன் *—ஆய்ந்தபெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ்வேதந்தரிக்கும் *
பேராத வுள்ளம் பெற.

பட்டரருளிச்செய்தவை

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும் *—ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த *
இதத்தா யிராமா நுசன்.

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும் *
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதும் குருகையர்கோன் *
யாழி னிசை வேதத் தியல்.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருக்குறுங்குடி நம்பி

http://acharya.org

பரத்வம்

(1) பரபரனாய் நின்ற வளவேழ் வைப்பாமவையுளும்பர்வான வரதிபதி, மயர்வறமன்னி மனம் வைக்கத் திருத்தி (2) மறக்குமென்று நல்கி விடாதே மன்ன, அயர்ப்பிலணறுத்தேன் என் சொல்லி மறப்பனோவென்னும்படி தத்வஜ்ஞரானவர் (3) சுடரடியெம்பிரானை விடாது கண்டாய் நீயும் நானும் என்கிற ஸஹ்ருதயானுபவம் ஸம்ஸாரிகளுக்கு மாம்படி, (4) வீடுமினென்று த்யாஜ்யோபாதேய தோஷகுண பரித்யாக ஸமர்ப்பணக்ரமத்தை ஸாலம்பந மந்த்ரமாக உபதேசித்து (5) எளிதாக அவதரித்துப் பிழைகளை ஸஹித்துப் புரையறக் கலந்து அல்பஸந்துஷ்டனாய் அம்ருதமே ஔஷதமாக்கி, (6) நீர் புரையத்தன்னை நியமித்து போகத்தை ஸாத்மிப்பித்து பக்தி கணைகளுக்கு ஒக்க வருமவனுடைய ஸேவைக்கு (7) எளிமையுமினிமையுமுண்டு, தொழுதால் அரும் பயனாய தரும், உத்யோகத்தே வினைகளும் மாளும், அவனுரைத்த மார்க்கத்தே நின்று இருபசை மலமறவுணர்வு கொண்டு நலஞ் செய்வதென்று தாம் மயர்வற மதிநலம் அருளி பஜநத்திலே சேர்க்கிறார் முதல்பத்தில்.

ஆசார்யஹ்ருதயம்

219-1

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி.

இவர், ஸ்ரீ பெரும்பூதூர் மஹா வித்யாலயத்தில் பன்னிரண்டாண்டு காலம் ந்யாயம் வ்யாகரணம் மீமாம்ஸை வேதாந்தம் என்னுமிந்த நான்கு ஶாஸ்த்ரங்களையும் பூர்ணமாக அத்யயநம் செய்தவர். தம்முடைய திருத்தகப்பனார் ஸ்ரீ உ.வே. திருநாங்கூர் ப்ர. ப. ஸ்ரீக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் முமுக்ஷுப்படி பகவத் விஷயம் இந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களைக் காலக்ஷேபம் செய்தவர், ந்யாயத்தில் உத்தரவாதங்களையும் ஸ்ரீபாஷ்யம் ச்ருத ப்ரகாஶிகை ஸ்ரீவசநபூஷணம் முதலிய க்ரந்தங்களையும் ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீ. உ. வே. மஹா வித்வான் ஆஸூரி பெரிய ராமாநுஜாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் அடிபணிந்து பயின்றவர். பிறகு அந்த வித்யாலத்திலேயே இரண்டு ஆண்டுகாலம் உபாத்யாயராக விருந்து பணி புரிந்தவர். பிறகு கூர்ஜர தேசத்தில் உள்ள வட்தால் என்றும் நகரத்தில் ஸ்ரீ ஸ்வாமி ஸத்யநாராயண ஸம்ஸ்க்ருத மஹா வித்யாலயத்தில் ப்ரதாநாசார்யராக இருபத்தைந்தாண்டுகளிருந்து ந்யாய வேதாந்தங்களை ப்ரவசநம் செய்தவர். பிறகு ஸ்ரீரங்கத்தில் குவளகுடி ஸ்ரீசிங்கமையங்கார் ஸ்வாமி பாடசாலையில் ஒன்றரை வருட காலம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் நடத்தியவர். பிறகு அயோத்தியில் ஸ்ரீராமாநுஜ ஸம்ஸ்க்ருத மஹா வித்யாலயத்தில் இரண்டு ஆண்டுகள் ப்ரதாநாசார்யனாக விருந்து ஸ்ரீபாஷ்யம் முதலான வேதாந்த க்ரந்தங்களை ப்ரவசநம் செய்துப் பலரை ஸ்ரீபாஷ்யாதிகாரிகளாக ஆக்கியுள்ளார். பிறகு பிருந்தாவனத்தில் ஸ்ரீரங்கஜீமந்திரத்தில் தேவஸ்தாந வித்வானாகவ்ெதேவஸ்தாநாதிகாரிகளால் நியமிக்கப்பட்டு எட்டாண்டுகளாக ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயாதி க்ரந்தங்களைப்ரவசநம் செய்து வருகிறார். ஆளவந்தார் அருளிச் செய்த ஸித்தித்ரயத்திற்கும் சோளசிம்மபுரம் மஹாசார்யரின் ப்ரதம ஶிஷ்யரான ஸ்ரீநிவாஸாசார்யர் அருளிய யதீந்த்ரமததீபிகைக்கும் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே வ்யாக்யாநம் இட்டருளியவர்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

"பரத்வம்"

ஸ்ரீ.உ.வே. திருநாங்கூர் ப்ர.ப அண்ணங்கராசார்யர் ஸ்வாமி
(வித்வான், ஸ்ரீரங்கமந்திர். விருந்தாவனம்)

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம் |
ஸஹஸ்ரசாகோப நிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம். ||

வகுளாபரணம் வந்தே ஜகதாபரணம் முநிம் |
ய: ச்ருதேருத்தரம் பாகம் சக்ரே த்ராவிட பாஷயா ||

திருமாலால் அருளப்பட்ட சடகோபனால் அருளிச் செய்யப்பட்ட திருவாய்மொழி "த்ராவிட வேத ஸாகரம்" என்றும் "பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்றும் போற்றப்படுகிறது. ஸாகரம்–ரத்நாகரம் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீசடகோபவாங்மயமும் பரமார்த்த ரத்நாகரமானது "மற்றெல்லாம் பேசிலும்" என்கிற படியே அறிய வேண்டுமர்த்தமெல்லாம் இதற்குள்ளே உண்டு" என்கிறபடியே முமுக்ஷுக்களறிய வேண்டும் அர்த்த பஞ்சகமும் திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கப்படுகிறது. இது பெரியவங்கிபுரத்து நம்பிகளின் நிர்வாஹம். பன்னீராயிரப்படியில் "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:" என்கிற கிரமப்படி, முதல் இரண்டு பத்து "ப்ராப்ய ஸ்வரூப பரம்" என்று வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் நிர்வஹித்தருளினார். த்வயார்த்த விவரணம் திருவாய்மொழி என்று நம்பிள்ளை முதலான நம் பூர்வாசார்யர்கள் முக்கியமாக நிர்வஹித்துப் போருவர்கள். ஆழ்வாரை "தீர்க்க சிந்தயந்தீ" என்றும், திருவாய்மொழியை ஸ்ரீராமாயணம் போலே "தீர்க்க சரணாகதி" என்றும் நம் பூர்வர்கள் அருளிச் செய்வர்.

பிள்ளையுலகாசிரியன் ஸார ஸங்க்ரஹத்தில் மந்த்ர ரத்னத்திலுள்ள ஆறு பதங்களின் அர்த்தமாக 1 ஶ்ரிய: பதித்வம் 2. நாராயணத்வம் 3. ஸர்வ சரண்யமான அவனுடைய சரணாரவிந்தயுகளம் 4. அதின் ப்ராபகத்வம் 5. தத்கோசரமாக சேதனன் செய்யும் ப்ரார்த்தனாகர்ப்பமான விஸ்ரம்பமாகிற சரணாகதி 6. மிதுனத்தின் கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தித்வம் 7. நிரதிசய போக்யத்வம் 8. ஸர்வ ஸ்வாமித்வம்

http://acharya.org

9. நித்ய கைங்கர்யம் 10. கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணம் என்கிற எம்பெருமானின் பத்து குணங்களை அருளிச் செய்தார். அவர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், எம்பெருமானின் பத்திநய தோற்றம்போலே திருவாய்மொழியின் பத்துநூறான பத்து பத்துக்களில், எம்பெருமானின் பரத்வம் முதலிய பத்து குணங்களைப் பொருளாக அருளிச் செய்தருளினார். அவையாவன: 1. பரத்வம் 2. காரணத்வம் 3. வ்யாபகத்வம் 4. நியந்த்ருத்வம் 5. காருணிகத்வம் 6. சரண்யத்வம் 7. சக்தத்வம் 8. ஸத்யகாமத்வம் 9. ஆபத்ஸகத்வம் 10. ஆர்த்திஹரத்வம் என்பனவாம். எல்லாப் பத்துக்களிலும் எல்லா குணங்களும் ப்ரதிபாதிக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு பத்துக்கு ஓரோர் குணத்திலே நோக்கு என்று திருவுள்ளம். அதில் முதல் பத்தில் எம்பெருமானுடைய பரத்வத்தை முக்கியமாக அனுபவிக்கிறார்.

ஆரம்பத்திலேயே "அயர்வறுமமரர்களதிபதி" என்று நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகன் பரன் என்று எம்பெருமானின் பரத்வத்தை அருளிச்செய்தார். ஸர்வாதிகமான பரம்பொருளுக்கு அஸாதாரணமான லக்ஷணம் அநவதிகாதிசய (மிகவுயர்ந்த) அஸங்க்யேய கல்யாண குணங்களையுடையவனாயிருக்கை. அத்தை "உயர்வறவுயர் நலம் உடையவன்யவனவன்" என்றருளிச் செய்தார். நித்யஸூரி நிர்வாஹகத்வரூபமான பரத்வத்தை முதலிலே சொல்லிப் பின்னை கல்யாண குணங்களை சொல்லலாயிருக்கச் செய்தேயும் பரப்ரஹ்மமான பரம்பொருள் "நிர்குணம்" என்று சொல்லும் மாயாவாதிகளின் மிடற்றைப் பிடித்தாப்போலே "உயர்வறவுயர்நலம் உடையவன்யவனவன்" என்று ஆழ்வார் அருளிச்செய்வதே என்று ஆழ்வான் ஈடுபட்டதாக ஐதிஹ்யம். எம்பெருமானுக்கு "உத்" என்று ஒரு அஸாதாரணமான திருநாமம். "தஸ்ய உதிதி நாம" (சாந்..2) நிரஸ்த நிகிலஹேயன்–ஹேயப்ரதிபடன் என்று பொருள். "உயர்வற" என்று உகாரத்தில் தொடங்கி "உயர்ந்தே" என்று தகாரத்தில் முடித்ததனால் உத்கீத ஸாமத்துக்கு உள்பொருளாய் நிகிலஹேய ப்ரத்யநீகனாய் ஸ்வாபாவிகமான எண்ணிறந்த கல்யாண குண விசிஷ்டனாய் இருக்கும் மஹாபுருஷனே திருவாய்மொழியில் போற்றப்படும் பரதத்வம் என்று விளங்கா நின்றது. ஹேயப்ரத்யநீகமானவிடத்தில் ஸகல கல்யாண குணங்களும் தானாகவே கூடும்.

ஆழ்வார், எம்பெருமானுடைய பரத்வத்தை உயர், திண், அணை, ஒன்றும் என்கிற நான்கு திருவாய்மொழிகளில் அருளிச் செய்திருக்கிறார். அதிலும் பரத்வத்தில் பரத்வத்தையருளிச் செய்தார் முதல் திருவாய்மொழியில். பரமபுருஷனான ஸர்வேச்வரன், யோகஜ்ஞானகம்யமான பரிசுத்தாத்மஸ்வரூபத்தைக் காட்டிலும் இந்த்ரியஜன்ய ஜ்ஞான விஷயமான ப்ராக்ருத சப்தாதி விஷயத்துக்கு ஆச்ரயமான அசித்தைக் காட்டிலும் விலக்ஷணமாய் "ஆநந்தமய:" "உணர்முழுநலம்" என்று கட்டடங்க ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய் காலத்ரயத்திலும் ஸமாப்யதிக ரஹிதனாயிருக்கும். வருங்காலம் நிகழ்காலம் கழிகாலமான முக்காலத்திலும் ஒப்பார் மிக்காரை இலையாய மாமாயன். இதுவும் பரத்வ லக்ஷணமாகும். எம்பெருமானார், "ஸ்வாதீன த்ரிவித சேதநாசேதன ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்" என்று எம்பெருமானை விசேஷிக்

http://acharya.org

கிறார். பத்த முக்த நித்யர்களான சேதனர்களையும், கால, பாத, த்ரிபாத்விபூதி ரூபமான அசேதனங்களையும் எல்லாக் காலத்திலும் தனக்கு அதீனமாக நடத்துமவனே பரதத்வமாகும். நாமவன், அவரவர், நின்றனர் என்கிற மூன்று பாசுரங்களில் இந்த பரத்வ குணத்தையருளிச் செய்தார்.

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவை மிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தோறும்
உடன்மிசையுயிரெனக்கரந் தெங்கும்பரந்துளன்
சுடர் மிகு சுருதியுள் இவையுண்டசுரனே

(திருவாய்மொழி—*1. 1. 7*)

என்கிற பாட்டு மிகவும் முக்கியமானது. இவையுண்ட சுரன் "யஸ்யப்ர்ஹ்மச க்ஷத்ரஞ்ச" என்கிறபடியே ஸர்வ ஸம்ஹர்த்தா—ஸர்வேச்வரன். அவனே பஞ்சபூத பௌதிக ரூபமாய் உருவாயும், அருவாயுமிருந்தாலும் அவைகளைக் காட்டிலும் விலக்ஷண மானவன். 'உளன்சுடர்மிகு சுருதியுள்" என்கிறார் ஆழ்வார். அபௌருஷேயமாய் நித்ய நிர்துஷ்டமாய் பாஹ்யகுத்ருஷ்டி ஸமயங்களாலே அவிசால்யமான மிக்க தேஜஸ்ஸையுடையதாயிருக்கும் வேதைகவேத்யன் இவன் என்கிறது ஈடு. "சுருதி" என்ற அபேத சுருதி, "மிகு சுருதி" என்று பேத சுருதி "சுடர் மிகு சுருதி" என்று அந்தர்யாமி ப்ராஹ்மணம் விவக்ஷிதம் என்பர் சிலர். சரீர சரீரிபாவ ஸம்பந்தத்தாலேயே எல்லாம் ப்ரஹ்மமே என்று "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்கிற சுருதி சொல்லுகிறது. "சுராறிவருநிலை' என்கிற பாசுரத்தில் "வரன் முதலாயவை முழுதுண்ட பரபரன்" ஸர்வஸம்ஹர்த்தாவாய் ஸர்வஸ்ரஷ்டாவாய் ஸர்வாந்தர்யாமியான ஸர்வேச்வரனே பரபரன் என்கிறார். வ்யஷ்டி ஸ்ருஷ்டி லய காரணமாக ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ராதி களுக்கும் அந்தர்யாமியாய் நின்று நாராயணனே புரமொரு மூன்றெரித்துஅமரர்க்கு மறிவியந்து அரனயனென உலகழித்தமைத்துளனே என்றருளிச் செய்தார். "யதஸ் தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய" (வி.பு) "ஸதஸச்சாஹமர்ஜுன" (கீதை) என்கிறபடியே ஸத்வம்போலே அஸத்வமும் பாவரூபமான தன்மையே. ஸ்தூல ஸூக்ஷ்மரூபமான இவ்வவஸ்தைகளையுடையவன் ஸர்வேச்வரன். ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டனான பரம புருஷனே காரணமானவன்; ஸ்தூல சிதசித்விசிஷ்டனான பரமபுருஷனே கார்யமான ஜகத் ரூபமாயிருக்கிறான், என்று

"உளனென விலனென இவைகுணமுடைமையில்
உளவிருதகைமையொடு ஒழிவிலன் பரந்தே" (திருவாய்மொழி *1. 1. 9*)

என்று விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை புறமதத்தை நிரஸித்து நிலைநாட்டி அருளினார். "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலான்" என்கிற சுருதியின் அர்த்தம் இதுவேயாகும். "அணோரணீயாந் மஹதோ மஹீயாந்" என்கிற சுருதி பரதத்வம் அணுக்களைக் காட்டிலும் பரம அணுவாய் மஹத்தான வஸ்துவைக் காட்டிலும் பரம மஹத்தா

http://acharya.org

யிருக்கும் என்று ஓதா நின்றது. "பரந்ததண்பரவையுள்" என்கிற பாசுரத்தில் "கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே" என்று அணுக்களிலும் அந்தர்யாமியாய் எங்கும் பரந்துளன் என்றருளிச் செய்தார். இவ்விடத்தில் ஈடு விபுத்வத்தை அவனுக்குச் சொல்லி அணுத்வத்தை இவனுக்குச் சொல்லி இதுக்குள்ளே அவன் குறைவற வ்யாபித்திருக்கும் என்னுமது கூடுமோவென்னில் "இவையுண்ட கரனே" சிறுவடிவைக் கொண்டு பெரியவற்றையெல்லாம் தன் வயிற்றில் வைத்தால்...... பின்னையும் அவ்வயிறே இடமுடைத்தாம்படி இருக்கவல்ல ஸர்வசக்தி சிறியவற்றில் குறைவறவிருக்க மாட்டானோ என்கிறார். "கரன்" இப்படி ஸூத்ருடப்ரமாண ஸித்தன்" "ச்ருதேஸ்து சப்த மூலத்வாத்" என்றபடி. "ரஸோஹமப்ஸு கௌந்தேய" (கீதா) என்கிறபடியே பஞ்சபூதங்களுக்கும் அஸாதாரணமான சப்தாதி குணங்களுக்கும் நிர்வாஹகனாய் பரனாய் நின்றவன் ஸர்வேச்வரன் என்று. "வரனவில் திறல் வலி அளிபொறையாய் நின்ற பரன்" (திருவாய்மொழி 1. 1. 11) என்றருளிச் செய்தார். இவ்வண்ணம் பரத்வத்தில் பரத்வத்தை முதல்பத்தில் முதல் திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச்செய்தார். "உபக்ரமோபஸம்ஹாரௌ அப்யாஸ:" என்று ஆறு விதமான தாத்பர்யலிங்கங்களை மீமாம்ஸகர்கள் நிரூபித்தார்கள். உபக்ரமத்தில் முதல் திருவாய்மொழியில் பரத்வ நிரூபண ப்ரகாரத்தை நிரூபித்தேன். உபஸம்ஹாரத்தில் முதல் பத்து 10ந் திருவாய்மொழியிலும் 'உம்பர் வானவராதியஞ்சோதியை' என்று ஆதியஞ்சோதி உருவான பரதத்வத்தை அருளிச் செய்தார். முதற்பத்திற்கு பரத்வத்திலே நோக்கு என்பதற்கு "அப்யாஸம்" என்கிற அடையாளமுண்டு. அப்யாஸம் ஆவது திருப்பித் திருப்பி ஒரு அர்த்தத்தையே சொல்லுவது. ஆசார்யஹ்ருதயத்தில் நாயனார் "வளவேழுலகின் முதலாய வானோரிறையை" "எப்பால்யவர்க்கும் நலத்தாலுயர்ந்துயர்ந்து அப்பாலவன்" "எவையும் யாவரும் தன்னுள்ளே ஆகியுமாக்கியும் காக்கும் அவையுள் தனி முதலம்மான்" என்று முதல் பத்தில் அநேகவிடங்களில் எம்பெருமானுடைய பரத்வத்தை அருளிச் செய்தார். இதுவே அப்யாஸமாவது.

நித்யஸூரி நிர்வாஹத்வம்போல ஜகத் காரணத்வமும் பரத்வ லக்ஷணமாக "யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே............தத் ப்ரஹ்ம" என்கிற சுருதி குறிப்பிடுகிறது.

எம்பெருமான் ஆழ்வாருக்கு மயர்வறமதிநலமருளினான். மயர்வற மதிநலம் அருளினதுக்கு முன்பு "அஸந்நேவஸ பவதி" என்கிறபடியே தன்னை அஸத்கல்பராக நினைத்திருந்தபடியால் எனக்கு மதிநலமருளினன் என்று அருளிச் செய்யவில்லை. "யானேயென்னையறியகிலாதே யானேயென்தனதே" என்றிருந்தது மதிநலமருளுவதற்கு முன்னிருந்த நிலை. மதிநலமருளின பிறகு பிறந்த நிலை "யானே நீ என்னுடைமையும் நீயே" என்கிற நிலையாம். எம்பெருமான் ஆழ்வாருக்கு மதிநலமருளினான். ஆழ்வார், பரம க்ருபையினாலே பராநர்த்தம் கண்டு ஸஹிக்கமுடியாத தன்மையை உடையவராதலால் விமுகரான உலகத்தினரெல்லாம் மதிநலம் பெற்று உஜ்ஜீவிக்கும்படி அருள் கொண்டு ஆயிரம்பாடி அவ்வருமறையின் பொருள்களையெல்லாம் ஸம்சய விபர்யயமற அருளிச் செய்தார். ஆதலால் ஆழ்வாரின் அருளே இவ்வுலகினில் மிக்கதாகும்.

http://acharya.org

சார்ந்தவிருவல் வினைகளையும் சரித்து மாயப்பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம் வைக்கும்படி எம்பெருமானால் திருத்தப்பட்டு ஈரிலின்பத்திருவெள்ளத்தில் திளைத்த உள்ளத்தினரான இவ்வாழ்வார் சேதனர்களைத் திருத்தியபடியாவது:—

ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேச்வரன் வண்புகழ் நாராயணனே. ஸம்ஸார பந்த ஹேதுவான "நீர் நுமது என்கிற அஹங்கார மமகாரங்களை "அஸங்க சஸ்த்ரேணத்ருடேன சித்வா" என்கிற அஸங்கமாகிற சஸ்த்ரத்தாலே வேர்முதல் மாய்த்து இறைசேர்மின். எம்பெருமான் திருவடிகளை ஆச்ரயித்து அநுஸந்தானம் செய்வதற்கு உரிய மந்த்ரம் பெரிய திருமந்த்ரமே. எம்பெருமானை நம்மால் ஆச்ரயிக்க முடியுமோ? அவன் மிகப் பெரியவனன்றோ! என்றஞ்ச வேண்டா. அவன் பத்துடையடியவர்களுக்கு எளியவன். நிலவரம்பிலபலபிறப்பாய் எளிவருமியல்வினன். அவனுடைய உணர்வு கொண்டுணர்ந்து, கணக்கறு நலத்தனன் அந்தமிலாதியம் பகவன் வணக்குடைத் தவநெறி வழிநின்று இருபசையறுத்து அவனை வழிபடுங்கோள். அவனை வணங்கி வழிபட உத்யோகிக்கும்போதே பஜன விரோதிகள் தானே அகன்றுபோம். கழிமின் தொண்டர்கள் கழித்துத் தொழுமின் அவனைத் தொழுதால் வழிநின்ற வல்வினை மாள்வித்து அழிவின்றியாக்கம் தரும். பகவானை வழிபடுவது வேப்பங்குடி நீர்போல் கசப்பாக இருக்குமென்று அகல வேண்டா. அமுதிலுமாற்ற இனியனுயிருப்பதால் அவனுடைய அநுஸந்தானமும் "ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்துமவ்யம்" என்கிறபடியே மிகவும் இனியதாக இருக்கும். நம் பிழையைக்கண்டு அஞ்ச வேண்டா. "என்பிழைத் தாள் திருவடியின் தகவினுக்கு" என்கிறபடியே அவனுடைய பொறை ப்ரஸித்தமானது. அவனுடைய பெருமையையும் நம்முடைய சிறுமையையும் கண்டு அஞ்ச வேண்டா. அவன் ஸுசீலன். நம்மை ஸ்வீகரிப்பதினாலேயே அவன் பெரும் புகழ் படைத்து உளனாகத் தன்னை நினைத்திருக்குமவன். அவன் மிகப் பெரியோன். நாம் அகிஞ்சனர்கள். நம்மாலவனை ஆராதிக்க முடியாது என்று அஞ்ச வேண்டா. ஆர்வத்தோடு நாம் ஸமர்ப்பிக்கும் அணுவளவான வஸ்துவையும் அவன் பெருப்பேறாகக் கொண்ட பரிபூர்ணனவன். குடிலர்களான நம்மால் அவனை ஆச்ரயிக்கப்போமோ என்று அஞ்ச வேண்டா. அவன் நீர்புரை வண்ணன். நம் நினைவுக்குத் தகுந்தபடி தன்னையாக்கிக் கொண்டு நம்மோடு பழகக்கூடியவன். "ஓடும்புள்ளேறிச் சூடும் தண்துழாய் நீடுநின்றவை ஆடுமம்மான். ஆகிலும் அவனை நம்மால் ஆச்ரயிக்கப்போமோ

"ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதிபி:
நராணும் க்ஷீண பாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே
பஹுநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே"

என்கிறபடியே அநேக ஜன்மார்ஜிதமான புண்யத்தினாலன்றோ அது ஸித்திப்பது என்றஞ்ச வேண்டா. விமுகர்களுக்கு அதிதூரஸ்த்தனாலும் ஆநுகூல்யமும் ஆசாலேசம் உடையவர்களுக்கு பக்திக்கும் பரிகணனைக்கும் ஒக்கவருமவன். அவன் நம் அவஸ்த்

http://acharya.org

தாநு குணமாக (ஸாத்மிக்க ஸாத்மிக்க) பொறுக்கப் பொறுக்க அநுபவிப்பிக்க வல்லவிரகன். ஆகையால் வண்புகழ் நாரணன் திருவடிகளைப் பற்றி நலம் செய்வதே நலம் என்று உபதேசித்தருளினர் முதற்பத்தில்.

ஜகத்காரண வஸ்துவே பரம்பொருள். நாராயணனே பரனாவான். திருமகளார் தனிக்கேள்வன். பெருமையுடைய பிரான். அவன் இருமெய்வினை கடிந்து அரும்பயனாய மோக்ஷத்தையும் தருமவன். வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் வள்ளல் மணிவண்ணன். ஶ்ரிய: பதித்வமும், கருட வாஹநத்வமும், திருமுடியில் திருத்துழாய் வலயத்தைச் சூடுவதும், பொருமாநீள்படை ஆழிசங்கங்களைத் தரிப்பதுவும் பரத்வ சின்னங்களாகும். ஆக முதற்பத்தில் ஆழ்வார் ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதன ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகத்வமான பரத்வே பரத்வத்தைத் தானும் அநுபவித்து நமக்கும் அநுஸந்திக்கைக்காக பரம க்ருபையினாலே உபதேசித்தருளினர். நாரணன் திண்கழலைப் பற்றி வணங்கி வழிபடுவதே உய்யும்வகை என்பது முதல் பத்தின் உபதேசப் பத்தின் ஸாராம்சமாகும்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப்ர. ப. அண்ணங்கராசார்யர்

ஆழ்வார் பெருமை

நாளும் பெரிய பெருமா ளரங்கர் நகைமுகமுந்
தோளுந் தொடர்ந்தென்னை யாளும் விழியுந் துழாய்மணக்குந்
தாளுங் கரமுங் கரத்திற்சங் காழியுந் தண்டும்வில்லும்
வாளுந் துணைவரு மேதமி யேனை வளைந்துகொண்டே.

மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத் தாற்கடைந்து
துறைப்பாற் படுத்தித் தமிழா யிரத்தின் சுவையமிர்தங்
கறைப்பாம் பணைப்பள்ளி யானன்ப ரீட்டங் களித்தருந்த
நிறைப்பான் கழலன்றிச் சன்ம விடாய்க்கு நிழலில்லையே.

பிறவாத பேறு பெறுதற்கெஞ் ஞான்றும்
மறவா திறைஞ்சென் மனனே — துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண்குருகூர் நம்பிதிருத் தாள்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

http://acharya.org

ஸ்ரீபராங்குசாஷ்டகம்

த்ரைவித்யவ்ருத்தஜநமூர்த்தவிபூஷணம் யத் ஸம்பச்ச ஸாத்விகஜநஸ்ய யதேவ நித்யம்,
யத் வா சரண்யமசரண்யஜநஸ்ய புண்யம் தத் ஸம்ச்ரயேம வகுளாபரணாங்க்ரியுக்மம் :

யாதொரு நம்மாழ்வார் திருவடியிணையானது பரம வைதிகர்களுடைய முடிக்கு அலங்காரமாயிருக்கின்றதோ, யாதொரு திருவடியிணையே ஸர்வ காலமும் ஸாத்விகர்களுக்கு ஸகலைச்வர்யமுமாக இருக்கின்றதோ, யாதொரு திருவடியிணையே புகலொன்றில்லாதவர்களுக்குத் தஞ்சமா யிருக்கின்றதோ, அப்படிப்பட்ட பரமபாவனமான நம்மாழ்வாரது திருவடியிணையை ஆச்ரயிக்கக் கடவோம்.

பக்திப்ரபாவபவதத்புதபாவபந்த ஸந்துக்ஷிதப்ரணயஸாரரஸௌகபூர்ண:,
வேதார்த்தரத்நநிதிரச்யுததிவ்யதாம ஜீயாத் பராங்குசபயோதிரஸீமபூமா.

பக்தியின் கனத்தாலுண்டாகி ஆச்சரியமான அபிப்ராய விசேஷங்களினால் வளர்க்கப்பட்ட சிறந்த ப்ரணயமாகிற தீர்த்த ப்ரவாஹத்தாலே [நவரஸஸமூகத்தாலே] நிறைந்ததாயும், வேதப்பொருளாகிற நவரத்னங்களுக்கு நிதியாயும், எம்பெருமானுக்கு திவ்யமான ஸ்தானமாயும் அளவில்லாத பெருமையையுடையதாயுமிருக்கிற நம்மாழ்வாராகிற கடல் நெடுநாள் வாழ வேணும்.

ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்த்வமிவோதிதம்.
ஸஹஸ்ரசாகாம் யோத்ராக்ஷீத் த்ராமிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம்.

யாவரொருமுனிவர் ஆயிரம் பாசுரங்களையுடையதான த்ராவிடப்ரஹ்ம ஸம்ஹிதையை ஸாக்ஷாத் கரித்தாரோ, க்ருஷ்ணபக்தியே வடிவெடுத்து அவதரித்த தென்னலாம்படியான அந்த சடகோப முனிவரை ஸேவிக்கிறோம்.

யத்கோஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணோ வஸதி யத்ர ஸசங்கசக்ர:,
யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா: தஸ்மை நமோ வகுளபூஷணபாஸ்கராய.

ஸூர்யனுடைய ஆயிரம் கிரணங்கள் வெளியிருளைப் போக்குவதுபோல யாவரொரு ஆழ்வாருடைய ஆயிரம் பாசுரங்கள் ஸகல சேதநர்களுடையவும் அகவிருளைத் தொலைக்கின்றவோ, ஸூர்யனிடத்தில் நாராயணன் சங்கு சக்கரங்களோடு கூடி விளக்குவது போல அப்பெருமான் யாவரொரு ஆழ்வாரிடத்தில் அவ்விதமாகவே உறைகின்றானோ, வேதப்ரதிபாத்யமான ஸூர்ய மண்டலத்தை அந்தணர்கள் வணங்குவதுபோல யாவரொரு ஆழ்வாருடைய திவ்ய ஸ்தலம் செவிப்பட்டவுடனே பரம பாகவதர்கள் கையெடுத்துக் கும்பிடுகிறார்களோ அப்படிப்பட்ட நம்மாழ்வாராகிற ஸூர்யனுக்கு வணக்கமாகுக.

பத்யுச் ச்ரிய: ப்ரஸாதேந ப்ராப்தஸார்வஜ்ஞ்யஸம்பதம்,
ப்ரபந்த ஜநகூடஸ்தம் ப்ரபத்யே ஸ்ரீபராங்குசம்.

திருமால் திருவருளால் ஸர்வஜ்ஞத்வமாகிற ஸம்பத்தைப் பெற்றவரும் ப்ரபந்ந ஜனங்களுக்குத் தலைவருமான நம்மாழ்வாரைத் தஞ்சமாகப் பற்றுகிறேன்.

http://acharya.org

சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்திதூஷகம்,
அஜ்ஞாநாம் ஜ்ஞாநஜநகம் திந்த்ரிணீமூலஸம்ச்ரயம்.

குடிலபுத்திகளுடைய துர்ப்புத்தியைத் தொலைப்பவரும் அறிவில்லாதவர்களுக்கு நல்லறிவை நல்குமவரும் திருப்புளியாழ்வாரடியிலே வீற்றிருப்பவருமான நம்மாழ்வாரை வணங்குகிறேன்.

வகுளாபரணம் வந்தே ஜகதாபரணம் முநிம்,
யச் ச்ருதேருத்தரம் பாகம் சக்ரே த்ராவிடபாஷயா.

யாவரொரு ஆழ்வார் வேதத்தின் உத்தரகாண்டமாகிய உபநிஷத்தைத் தமிழ் மொழியினால் வெளியிட்டருளினாரோ, உலகுக்கெல்லாம் அலங்காரபூதரான அந்த நம்மாழ்வாரை வணங்குகிறேன்.

நமஜ்ஜநஸ்ய சித்தபித்திபக்திசித்ரதூலிகா
பவாஹிவீர்யபஞ்ஜநே நரேந்த்ரமந்த்ரயந்த்ரணா.
ப்ரபந்நலோககைரவப்ரஸந்நசாருசந்த்ரிகா
சடாரிஹஸ்தமுத்ரிகா ஹடாத் துநோது மே தம:.

தம்மை வணங்குமவர்களுடைய ஹ்ருதயமாகிற சுவரிலே பக்தியாகிற சித்திரத்தை யெழுதுங் கருவியாயும், ஸம்ஸாரமாகிற ஸர்பத்தினுடைய வீரியத்தைத் தணிக்கும் விஷயத்தில் விஷவைத்யனுடைய மந்த்ரப்ரயோகச் சிடிகை போன்றதாயும், ப்ரபந்ந ஜனங்களாகிற ஆம்பல் மலர்களை விகஸிப்பிக்கவல்ல அழகிய நிலாபோன்றதாயுமிருக்கிற நம்மாழ்வாருடைய திருக்கைத்தலமுத்திரையானது என்னுடைய அகவிருளை எப்படியாவது தொலைத்தருளவேணும்.

மாறன் பராங்கதிதந்தடியேனை மருட்பிறவி
மாறன்பரானகுழாத்துள்வைப்பான் தொல்லை வல்வினைக்கோர்
மாறன் பராமுகம் செய்யாமல் என்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்க வென்னெஞ்சினும் வாக்கினுமே.

சிந்திக்கத் தித்திக்கும் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்குளே யின்புளிமேவும்-நம்தங்
கருவரங்கங்கைத்து அழலும் காவிரியினூடே
திருவரங்கத்தே வளரும் தேன்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மிக்கார் வேத விமலர் விழுங்கும் அக்காரக்கனி

http://acharya.org

காரணத்வம்

(1) சோராத மூவா வேர் முதலாய் உலகம் படைத்தவ னென்கிற சிதசித்த்ரய த்ரிவித காரணமானவன் அறியாதன வறி விக்க உள்ளம் தேறிந்தூமனம் மருளிலென்னும் ஜ்ஞான பலமான வொளிக்கொண்ட மோக்ஷம் தேடிவாட, (2) உலராமலாவி சேர்ந்து சிக்கெனப் புகுந்து ஸம்பந்திகளும் சேர்தல் மாறின ரென்ன வாழ்வித்து உபகரிக்கிற நீந்தும் கெடலில் எம்மாவீட்டை உபயாநுகுணமாக்கினவர், (3) ஆச்ரயணீயனுக்கு பூர்வோக்த பரத்வத்தை ஸ்தாபிக்கிற ஸகலபல ப்ரதத்வ காரணத்வ சேஷசா யித்வ ச்ரிய; பதித்வ ஸௌலப்யாதிகளை திண்ணனவேணவதென்று வெளியிட்டு, (4) கள்வாதீர்த்தனென்று வசனப்ரத்யக்ஷங்களுங் காட்டி, (5) புலனைந்தென்று ஸம்ஸாரமோக்ஷ ஸாதந துக்காநந்த ரஸம் முன்னாக விதிக்கிற அந்தர்கத குணோபாஸநத்தை (6) மதித் துப் பெருக்கி மூழ்கியமுந்திக் கீழ்மை வலஞ் சூதும் செய்து இளமை கெடாமல் செய்யும் க்ஷேத்ர வாஸ ஸங்கீர்த்தநாஞ்ஜலி ப்ரத க்ஷிண கதி சிந்தநாத்யங்கயுக்தமாக்குகிறார் இரண்டாம் பத்தில்.

ஆசார்யஹ்ருதயம்

220-2

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. வித்வான், R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

(1) இவர் 5—8—1927 ஆடிவிசாகத்தில் பிறந்தார்.

(2) தகப்பனார்:- ஸ்ரீ. உ. வே. ந்யாய வேதாந்த வித்வான் R. ரங்கராஜ அய்யங்கார் ஸ்வாமி. (கீர்த்திமூர்த்தி) கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபை வித்வான்.

(3) வித்யாப்யாஸம்:- திருத்தகப்பனாரிடம் ஸாஹித்யமும், ஸ்ரீ. உ. வே. கோவிந்தாசார்ய ஸ்வாமியிடம் வ்யாகரணமும், ஸ்ரீ. உ. வே. உத்தமசீலி ந்யாய வேதாந்தவித்வான் ரங்க ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியிடமும், ஸ்ரீ உ. வே. மஹாமஹோபாத்யாய, கொடவாசல் நரஸிம்மா சார்ய ஸ்வாமியிடமும் ந்யாயமும் மைலாப்பூர் ஸம்ஸ்க்ருத கலாசாலையில் மீமாம்ஸையும் கற்றார்.

(4) ஸ்ரீ. உ. வே. வித்வான் உத்தமசீலி ரங்கஸ்ாமி அய்யங்கார் ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்ய ஶ்ருத ப்ரகாஶிகா காலக்ஷேபம். மற்றும் சிலவேதாந்தக்ரந்த காலக்ஷேபம் ஸ்ரீ. உ. வே. வித்வான் மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமியிடமும் ஆயிற்று. பகவத் விஷயமும் ரஹஸ்யக்ரந்தங்களும் திருத்தகப்பனாரிடத்தும் ஸ்ரீ. உ. வே. கோவிந்தாசார்ய ஸ்வாமியிடம் செய்தவர்

(5) ப்ரயாக் யூனிவர்ஸிடியில் ஹிந்தியில் "ஸாஹித்ய ரத்ரம்" பிருது பெற்றவர்.

(6) சேலம் செவ்வாப்பேட்டை ஸபை—"வேத நெறி வித்தகர்" "அருளிச் செயல் அருளமுதுச் செல்வர்" என்று பட்டம் வழங்கியது.

(7) சேலம் பட்டர் ராமாநுஜர் என்ற புலவர் அளித்தவை "ப்ரவசநமணி "சதுரகவி" என்று

(8) ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் "பஞ்சமாம்நாய ரத்நம்" என்று பிருதம் அளித்தது

(9) மேட்டுப்பாளையம் ஸபை "ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய பாஸ்கரன்" என்று பட்டம் அளித்தது.

(10) பெங்களூர் வில்ஸன் கார்டன் திருப்பாவை ஸபை கமிட்டியில் Dr. ராம அய்யங்கார் ஸ்வாமி "ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர்" என்று விருதளித்து கௌரவித்தார்.

http://acharya.org

(11) சேலம் செவ்வாப்பேட்டை ஸௌராட்டிரஸபை. "கலிமலிந்த சீர் நம்பி" என்றும் விருதளித்தது.

(12) ஸ்ரீவைஷ்ணவஸுதர்சநம் ஆசிரியர் ஸ்ரீ உ.வே. S. க்ருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி "விஷ்ணுபரத்வஸ்தாபக தீரசிகாமணி" என்று பட்டமளித்தார்.

(13) வேலூர் திருப்பாவைக் கமிட்டி "ஸ்ரீவைஷ்ணவரத்நம்" என்று பிருதளித்து கௌரவித்தது.

http://acharya.org

"காரணத்வம்"

ஸ்ரீ உ.வே, R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஸ்ரீரங்கம்

ஸ்ரீ மதே சடகோபாய நம :
ஸ்ரீ மதே ராமாநுஜாய நம :
ஸ்ரீ மதே வரயோகிநே நம :
ஸ்ரீ வரத நாராயண குரவே நம :

त्वद्दिव्यसूक्ति परिशीलनशक्तिहीनः
कुर्यां महं कथमहो शठकोपसूरे ।
आकस्मिकीं तव कृपां अवलंब्य कुर्वे
मायाबलप्रशमनीं विवृतिं सुखेन ॥

ச்ரிய : பதியாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் அயர்வறுமமரர்கள் அதிபதியாய் அப்ராக்ருத திவ்யமங்கள-விக்ரஹ விசிஷ்டனான ஸர்வேச்வரன் நித்யஸம்ஸாரியான ஆழ்வாரை விசேஷ கடாக்ஷம் பண்ணியருளி மயர்வற மதிநலம் அருளி यमेवैष वृणुते तेन लभ्यः तस्यैष आत्मा विवृणुते तनूं स्वां என்கிறபடியே தன் ஸ்வரூப ரூப குண விபூதிகளை கையிலங்கு நெல்லிக்கனி யெனக் காட்டியருள - கண்டு அநுபவித்த ஆழ்வார் தாம் அநுபவித்த படியே எம்பெருமானுடைய குணத்தையும் அவன் தம் திறத்தே செய்த உபகாரத்தையும், தம்மளவே நில்லாது இவ்வுலக மாந்தருக்கும் உணர்த்தி அவர்களையும் திருத்தித் திருமாமகள் கேள்வனுக்கு உடைமை ஆக்கத் திருவுள்ளம் கொண்டு "அருள் கண்டீர் இவ் வுலகினில் மிக்கதே" என்கிற தம் மிக்க கிருபையால் செய்த உபதேசத்தையும் தெள்ளத் தெளிவுறக் காட்டித் தருகிறது யாழினிசைவேதத்தியலான திருவாய் மொழியில் ஒவ்வொரு பத்தும்.

சாரீரகத்தில் गुणैः स्वभावतश्च यत्रानवधिकातिशयस्सो ऽस्यमुख्यो ऽर्थः என்று ப்ரஹ்ம சப்தார்த்தத்தை விவரிக்கும் வழியாலே எம்பெருமானின் பரத்வத்தைச் சொல்லி जन्माद्यस्य यत : என்கிற அடுத்தஸூத்ரத்திலே பரப்ரஹ்மத்துக்கு ஜகத் காரணத்வத்தை லக்ஷணம் சொல்லு மாற்றாலே சொன்னது போல ஆழ்வாரும் முதல்பத்தாலே பரத்வத்தை அருளிச் செய்து இரண்டாம் பத்தாலே காரணத்வத்தை அருளிச் செய்கிறார்.

(1) சோராத எப்பொருட்கும் ஆதியாம் சோதிக்கே
ஆராத காதல் குருகூர்ச் சடகோபன். (2–1–1)

(2) ஓவாத் துயர்ப் பிறவியுட்பட மற்றெவ் வெவையும்
மூவாத் தனி முதலாய் மூவுலகும் காவலோன் (2-8-5)

இ

http://acharya.org

(3) சீர்மை கொள் வீடு சுவர்க்க நரகீறு
ஈர்மைகொள் தேவர் நடுவா மற்றெப்பொருட்கும்
வேர் முதலாய் வித்தாய்ப் பரந்து தனி நின்ற
கார்முகில் போல் வண்ணன் என் கண்ணனை நான் கண்டேனே (2-8-10)

(4) பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் புகழ் மேல்
மருவில் வண் குருகூர் வண் சடகோபன்
தெருள் கொள்ளச் சொன்ன ஓராயிரத் துளிப்பத்து
அருளுடையவன் தாளணைவிக்கும் முடித்தே. (2-10-11)

என்கிற பாசுரங்களிலே. ப்ரவாஹ ரூபத்தாலே நித்யமாய்ப் போருகிறதும் துயரை விளைவிப்பதுமான பிறவி முதலானவற்றுக்கும் அவற்றையுடைய பொருள்களுக்கும் அத்விதீயமான காரணம் எம்பெருமான். அவ்வெம்பெருமான் சேதனர்க்கு தன்னை வழிபட வேண்டுமென நினைத்து உபகரணங்களைக் கொடுத்து விட, கொடுத்த உபகரணங்களைக் கொண்டு வழி கெட நடவா நின்றால் இப்போது இங்ஙனே போயிற்றதாகில் க்ரமத்திலே நம் பக்கலிலே ருசியைப் பிறப்பித்து மீட்டுக் கொள்ளுகிறோம் என்று அநுமதி தானத்தைப் பண்ணி உதாஸீனனாயிருக்கும். இப்படித் தன் நினைவைத் தப்பிப் போரச் செய்தேயும் கர்ஷகனாயிருப்பான் ஒருகால் நிஷ்பல மாயிற்றே என்று சோம்பிக்கை வாங்காதே மேலே மேலே உத்யோகிக்குமா போலே ஒருகாலல்லா ஒரு கால் ஆகிலும் ஆகிறது என்று ஸ்ருஷ்டியா நிற்கும். அந்த எம்பெருமானே வேர் முதலாய் வித்தாய் என்று த்ரிவிதகாரணமும் என்றார். உபாதான-நிமித்த-ஸஹகாரி என்று காரணம் மூன்று விதம். வேர்-ஸஹகாரி காரணம். முதல்-நிமித்த. காரணம். வித்து-உபாதான காரணம். பத்த-முக்த-நித்யரென்கிற த்ரிவித சேதனர்க்கும் ப்ரக்ருதி-நித்ய விபூதி-காலம் என்று மூவகை அசேதனத்திற்கும் காரணமாவான். ஸூக்ஷ்ம சேதநாசேதநவிசிஷ்டனாய்க் கொண்டு எம்பெருமான் உபாதான காரணமாகவும். ஞானசக்த்யாதி குணங்களோடு கூடியவனாய் ஸஹகாரி காரணமாகவும் ஸங்கல்ப விசிஷ்டனாய் நிமித்த காரணமாகவும் ஆகிறான் என்று எம்பெருமானுடைய காரணத்வத்தை அருளிச் செய்தார்.

இப்படிக் காரண பூதனான எம்பெருமான் தமக்குச் செய்த உதவியை அருளிச் செய்கிறார்.

(1) ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாயா
ஒத்தாயெப் பொருட்கும் உயிராய் என்னைப் பெற்ற
அத்தாயாய்த் தந்தையாய் அறியாதனவறிவித்த
அத்தா! நீ செய்தன அடியேன் அறியேனே. 2-3-2

என்ற பாசுரத்திலே शरीरमेव हि मातापितरौ जनयत: என்கிறபடியே அநித்யமாய் நச்வரமாய் துயர் தருமதான சரீரத்தைக் கொடுக்கும் மாதாபிதாக்களைப் போலன்றிக்கே ஞானவிகாஸத்தைப் பண்ணித்தரும் ஆசார்யனாய் அபய

http://acharya.org

ப்ரதானமும் ஸ்ரீ கீதையும் அருளிச் செய்து அறியாதனவான தத்வஹித புருஷார்த்தங்களை அறிவித்தான் என்றருளிச் செய்தார்.

அதனால் ஆழ்வார் அடைந்த பயன்

மாறி மாறிப்பல பிறப்பும் பிறந்து அடியை அடைந்துள்ளந்தேறி
ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினேன்
பாறிப்பாறி அசுரர் தம் பல்குழாங்கள் நீறெழப்பாய் பறவை யொன்
றேறிவீற்றிருந்தாய் உன்னை என்னுள் நீக்கேல் எந்தாய் (2-6-8)

என்ற பாசுரத்திலே-மாறி மாறிப் பிறந்து வாரா நிற்க திருவடிகளைக்கிட்டி நெடு நாள் விஷய வாஸனையாலும் பகவதலாபத்தாலும் உண்டான மனமாசு தீர்ந்து உள்ளம் தெளிந்து பெரிய ஆனந்தக் கடலில் மூழ்கினேன். திருவடி திருவனந் தாழ்வான் அவகாஹிக்கிற விஷயத்திலே நான் அவகாஹிக்கப் பெற்றேன் என்றார்.

இங்கு: ஈறில் என்றதால் ஐச்வர்யத்தையும்
இரு என்றத்தால் கைவல்யத்தையும் நீக்கி
ஈறிலின்பத் திருவெள்ளம் என்றத்தால்
அந்தமில் பேரின்பத்தைக் காட்டினார்.

உள்ளந் தேறியபின் தாம் அடைந்த நிலையைத் தெரிவிக்கிறார்

வாமனன் என் மரகத வண்ணன் தாமரைக் கண்ணினன்
காமனைப் பயந்தாய் என்றென்றுன் கழல் பாடியே பணிந்து
தூமனத் தனாய்ப் பிறவித்துழதி நீங்க என்னைத்
தீ மனம் கெடுத்தாய் உனக்கென் செய்கேன் சிரீதரனே (2-7-8)

என்ற பாசுரத்திலே ஆழ்வார் பந்த மோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவான நெஞ்சின்றிக்கே மோக்ஷத்துக்கே உரியதான நெஞ்சையுடையேனும் படி பண்ணி பிறவியினால் வரும் துக்கம் நீங்கும் படியாக உன்னையும் அற்ப விஷயங்களையும் உகக்கும் பொல்லாத நெஞ்சைத் தவிர்த்தாய். மருவித் தொழும் நெஞ்சையும் தந்தருளினாய். இத்தால் அம்ருதத்தையும் விஷத்தையும் ஒக்க விரும்பும் மனத்தைத் தவிர்ந்து அநந்யப்ரயோஜனமாய் உன்பாத பங்கயமே மருவித் தொழும்மனம் உடையேனானேன் என்றார்.

இங்கு ஆழ்வார் திவ்ய ஸூக்தியில்:
மருவித் தொழும் மனமே தந்தாய் என்ற விடத்திலே

(1) तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥

http://acharya.org

என்ற ச்லோகத்தின் பொருளும்
"தீ மனம் கெடுத்தாய்" என்ற விடத்திலே

(2) तेषामेवानुकंपार्थमहमज्ञानजं तमः ।
नाशयाम्यात्मभावस्थः ज्ञानदीपेन भास्वता ॥

என்ற ச்லோகார்த்தமும் அமைந்துள்ளது என்று பெரியோர்கள் அருளிச் செய்வார். அது உய்த்துணரத்தக்கது.

பொருளென்றிவ் வுலகம் படைத்தவன் புகழ் மேல்
மருளில் வண்குருகூர் வண் சடகோபன். (2-10-11)

என்ற பாசுரத்திலே உலகம் படைத்த எம்பெருமான் புகழ் மேல் அதாவது கல்யாண குணங்களிலே அடியேன் மருளில்லாதவனானேன். அதுக்கடி தேவரீர் மயர்வற மதி நல மருளியதே என்றார்.

எம்பெருமானுடைய நிர்ஹேதுகக்ருபையாலே தமக்குப் பிறந்த ஞானத்திற்குப் பயன் மோக்ஷமாகையாலே

களிப்பும் கவர்வு மற்றுப் பிறப்பும் பிணி மூப் பிறப்பற்று
ஒளிக் கொண்ட சோதிய மாய் உடன் கூடுவதென்று கொலோ
துளிக்கின்றவானிந் நிலம் சுடராழி சங்கேந்தி
அளிக்கின்ற மாயப்பிரான் அடியார்கள் குழாங்களையே (2-3-10) என்று

இவ்வுலக விஷயங்களின் லாப-அலாபங்களாலே வரும் களிப்பும் க்லேசமும் ஜன்ம வ்யாதி ஜரா மரணங்களும் நீங்கி சுத்த ஸத்வ மயமான எல்லையில் தேஜோ ரூபமான திருமேனியுடையோமாய் ஆழியும் சங்குமேந்தி வானமும் பூமியும் ரக்ஷிக்கும் எம்பெருமான் அடியராம் நித்ய சூரிகளின் திரளிலே போய்ப் புகுருவது எப்போதோ என்று அம் மோக்ஷத்தைப் பெறுவதில் உள்ள ஆசையாலே ஆழ்வார் அத்தைத் தேடி, அது அப்போதே கிட்டப் பெறுமையாலே

(2–4-1) வாடி வாடும் இவ்வாணுதலே என்று கொம்பையிழந்த தளிர் போலே வாடி அவனைக் காணு மாசையுள் நைந்து அக்னி ஸகாசத்திலே அரக்கும் மெழுகும் போல் உருகி உள்ளம் மலங்க வெவ்வுயிர்த்து கண்ணீர் மிகக் கலங்கி உள்ளம் உருகிமனஸ்ஸுக்கு தாரகமான ஆத்மாவும் உலர்ந்து நிற்க.

ஆழ்வார் வாட்டத்தை நீக்கி எம்பெருமான் மோக்ஷத்தைக் கொடுக்கப் புகுந்தான்.

அவ்வாத்மாவின் தாபம் ஆறும்படி

அந்தாமத் தன்புசெய்து என்னாவிசேர் அம்மானுக்கு
அந்தாம வாழ்முடி சங்காழி நூலாரமுள (2-5-1)

http://acharya.org

என்று பரம பதத்திலுள்ளார் பக்கல் பண்ணும் ஸ்நேஹத்தை என் பக்கலிலே பண்ணி கமர் பிளந்த தரையிலே நீர்பாய்ச்சுவாரைப் போலே **உள்குளாவி புலர்ந்து உலர்ந்து** என்கிற என் ஆவியிலே விடாயர் மடுவிலே வந்து சேருமா போலே வந்து சேர்ந்து

சிக்கெனச் சிறிதோரிடமும் புறப்படாத்தன்னுள்ளே உலகுகள்
ஒக்கவே விழுங்கிப்புகுந்தான்—என்னைத் தாமரைக்கண்ண ன்(2-6-2)

என்னும் பாசுரத்திலே ஆடியாடியில் பிறந்த ஆற்றாமையால் வந்த தாபமும் தீர்ந்து கண்ணும் குளிர்ந்திருக்கின்ற எம்பெருமான், தாம் ஆழ்வாரை அநுபவிக்கும் போது அந்யபரதை ஆகவொண்ணாது என்று பார்த்து உலகரக்ஷணத்துக் குறுப்பான வ்யாபாரமெல்லாம் பண்ணி வேறொன்றில் கண்வையாது ஆழ்வாரை அநுபவிப்பதையொழிய வேறு பயன் கருதாது—ஆழ்வாரை விட்டு இனிப்பேரேன் எனப்புகுந்தான் என்றருளி.

செடியார் நோய்களெல்லாம் தீர்ந்து என்கீழ்மேல் எழுபிறப்பும்
விடியாவெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினரே (2-6-7)

என்ற பாசுரத்தால் ஆழ்வாரோடு ஸம்பந்தி ஸம்பந்திகளையும், எம்பெருமானுடைய தாமரைக் கண்கள் நோக்காலன்றித் தன் முயற்சியால் போக்கவரிதாய் ஒரு காலும் முடிந்து வெளிச் சிறப்பதன்றியே எல்லையில்லாத் துன்பத்தையும் தாபத்தையும் தரவல்லதான ஸம்ஸாரமாகிற நரகத்தைக் கிட்டும் தண்மையைத் தவிர்த்து அவர்களை முக்தராக்கினபடியையும்

எமர் ஏழேழு பிறப்பும் கேசவன் தமர் மாசதிர்
இதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா (2-7-1)

என்கிற பாசுரத்தாலே தம்மோடு கீழ் ஏழ்படிகாலும் மேல் ஏழ்படிகாலும் ஸம்பந்திஸம்பந்திகளாயிருப்பார் அனைவரும் தன் ஸம்பந்தமே காரணமாக கேசவன் தமராகிற பெருஞ்சதிரைப் பெற்றனர். **எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால்** என்கிறபடியே எம்பெருமானுடைய நிர்ஹேதுகக்ருபையாகிற பெருஞ்சதிரைப் பெற்றனர். அத்தால் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயானது ஊற்று மாறாதே பெருகுவதே என்று இவர் தாமே ஆச்சரியப்படும்படி தம்மை வாழ்வித்தபடியையும் அருளிச் செய்து,

இப்படித் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகள் அளவும் வெள்ளமிடுகிற ப்ரீதியாலே எம்பெருமான்

1. **நீந்தும் துயரில்லா வீடு** (2-8-2) என்றும்
2. **கெடலில் வீடு செய்யும்** (2-9-11) என்றும்
3. **எம்மா வீட்டுத் திறமும் செப்பம்** (2-9-1) என்றும்

கடக்க வரிதான பிறவி முதலியனவும் அபக்ஷய விநாசங்களையும் கடத்தும் துக்க லேசமுமில்லாததும்—**தனக்கே யாக** எனைக்கொள்ளுமீதே என்று நிச்சயித்த

http://acharya.org

அஹங்காரலேசமுமில்லாததும் ஐச்வர்யகைவல்யங்கள் முதலான அல்ப புருஷார்த்தங்களன்றிக்கே சால உயர்ந்ததுமான மோக்ஷத்தைக் கொடுக்கத் தேடினன் என்றார்.

ஆழ்வார் அறுதியிட்ட மோக்ஷம்

எம்பெருமான் தமக்கென்று மோக்ஷம் தருவானாகில் அவ்வாறு அளிக்கப்படும் மோக்ஷம் அஹங்காரத்தைக் கொண்டதாகையாலே ஐச்வர்யமும் கைவல்யமும் போன்று தம் ஸ்வரூபத்திற்குச் சேராது. அதுபற்றிய பேச்சும் தமக்கு அஸஹ்யமாயிருக்கும். **நின் செம்மாபாதபற்புத்தலை சேர்த்து ஒல்லை-அம்மா அடியேன் வேண்டுவதீதே**—ஆதலால் ப்ராப்த சேஷியான உன்னுடைய, உட்புறம் [உள்ளங்கால்] சிவந்து மேலே கரியனவாய் பரம பூஜ்யமான திருவடிகளை அடியேன் தலையிலே கொக்கு வாயும் படுகண்ணியும் போலே சேர்த்தருள வேணும் என்று வகுத்த சேஷியான எம்பெருமான் ஸ்வரூபத்துக்கும் சேஷபூதனை தன் ஸ்வரூபத்திற்கும் சேரும்படி எம்பெருமான் தமக்கு பரம புருஷார்த்தத்தை உபகரித்தான் என்று அறுதியிட்டார்.

परगतातिशयाधानेच्छया उपादेयत्वमेव यस्य स्वरूपं सः शेषः परः शेषी
इति हि शेषशेषिभावलक्षणम्। शेषभूतश्चेत् शेषिणोऽतिशया धानायैव हि भवति॥

என்கிற ஸூக்திகள் குறிக்கொள்ளத்தக்கது. இதன் பொருள் பரனுக்கு ஓர் அதிசயத்தை விளைவிப்பதே சேஷபூதனுக்கு ஸ்வரூபம். அதற்காகவே அவன் இருக்கிறான். ஆதலால் தம் கைங்கர்யத்தால் அல்லது தனக்கு மோக்ஷம் கொடுப்பதால் எம்பெருமானுக்கு உகப்பை விளைக்குமவனே சேஷபூதன். இப்படி உகக்குமவன் சேஷியாகிறான். ஆகவே இருவர் ஸ்வரூபத்திற்கும் சேருமாறு எம்பெருமான் ஆழ்வார்க்கு மோக்ஷமளித்தான் என்பது கருத்து.

ஆழ்வார் உலகமக்களுக்குச் செய்தருளிய உபதேசம்

இவ்விதம் அறுதியிட்ட ஆழ்வார் அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவர் உணர்ந்து நன்னெறியில் வாழ்வதற்காக-ஸர்வஸமாச்ரயணீயனை எம்பெருமானுடைய (முதற்பத்திலே விசதமாக அருளிச் செய்த) ஸர்வஸ்மாத்பரத்வத்தை நிலைபெறுத்துவதற்குத் தேவையான ஸகல பலப்ரதத்வத்தை

1. **திண்ணன்வீடு முதல்முழுதுமாய்**
   எண்ணின் மீதியன் எம்பெருமான் [2-2-1]

என்ற பாசுரத்தில் வீடு முதல் முழுதுமாய் மோக்ஷம் முதலாக ஐச்வர்யம் கைவல்யம் முதலிய அனைத்துப் பலங்களையும் தருமவன் எம்பெருமான் என்றதாலும்‘ காரணத்வத்தை :–ஞானசக்தி முதலான கல்யாண குணங்களை உடையவனும் தாங்கள் அநீச்வரராயினும் ஸர்வேச்வரனோடு ஒப்பாவார் என்கிற ஸம்சயத்தை உண்டாக்குகிற தேவ ஜாதியையும் மற்றும் மானுடர் முதலிய அனைத்துப் பொருள்களையும் தன் ஸங்கல்பத்தாலே படைப்பதற்குத்தகுவான்

http://acharya.org

என்னுமிடத்தைக் கோள் சொல்லிக் கொடுக்கும் புண்டரீகாக்ஷனுமாவான் என்று கூறுகிற

தரும் சீர்த் தன்தனி முதலினுள்ளே
மிகும் தேவும் எப்பொருளும் படைக்க
தரும் கோலத்தாமரைக்கண்ணன். (2-2-5) என்கிற பாசுரத்திலும்

கருத்தில் தேவும் எல்லாப் பொருளும்
வருத்தித்த மாயப்பிரானை (2-2-8) என்கிற பாசுரத்திலும்

.......................தன்னுந்தியுள்ளே வாய்த்த திசைமுகன் இந்திரன் வானவர்
ஆக்கினன்.................. (2-2-9) என்கிற பாசுரத்திலும் வெளியிட்டு

தேவும் எப்பொருளும் படைக்கப் பூவில் நான்முகனைப் படைத்த
தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே. (2-2-4)

என்கிற பாட்டிலே தேவஜாதியையும் மற்றைப் பொருள்களையும் படைக்க வென்று ஒரு பூவிலே நாலு பூப்பூத்தாற்போலே நான்முகனைப் படைத்த எம்பெருமான் கண்ணனுக்கல்லது மற்றையோர்க்குப் பூவும் பூசனையும் தகாது. பூத்தகுவது ஸுகுமாரனுக்கு பூசனை தகுவது முதன்மையுடையவனுக்கு, என்று சொல்லியவித்தால் ஸௌகுமார்யத்தையும் முதன்மையையும் திண்ணன் வீடு என்கிற திருமால்பரத்துவத்தை அவதாரத்தே காட்டுகிற திருவாய்மொழியாலே வெளியிட்டார்.

அணைவது அரவணைமேல் பூம்பாவையாகம்
புணர்வதிருவரவர் முதலும் தானே
இணைவனும் எப்பொருட்கும் வீடு முதலாம்
புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே. (2-8-1) என்னும் பாசுரத்தில்

அணைவது அரவணை மேல்—விடாயர் மடுவிலே விழுமாபோலே எம்பெருமான் மென்மை நாற்றம் குளிர்த்தி இவற்றை இயல்பாக உடைய திருவனந்தாழ்வானோடே அணைவதாகிற சேஷசாயித்வத்தையும்

பூம்பாவையாகம் புணர்வது—போக்யதையே வடிவாக உடையவளும் இயற்கையான [நிருபாதிக] பெண்மையை உடையவளுமான பெரியபிராட்டியாரோடே கலந்து வர்த்திக்கிறதாகிற ச்ரிய : பதித்வத்தையும்

இணைவனும் எப்பொருட்கும்—நான்முகன்-சிவன் இவர்களுக்குக் காரண பூதனாகையாலே வந்த மேன்மையை உடையவன்-தேவர்-மானுடர்-விலங்கு-தாவரங்கள் தோறும் ஸஜாதீயனாய் வந்து அவதரிப்பான் எம்பெருமான். நான்முகன்-ருத்திரன் இவர்கள் நடுவே வந்தவதரிப்பது உபேந்திரனாவது. சக்ரவர்த்தி ஸ்ரீவஸுதேவர்கள் அளவிலே அமைத்து [ஸங்கோசித்து] வந்து பிறப்பது, பெருங்கேழலாவது, குப்ஜாம்ரவ்ருக்ஷமாவது ஆகாநிற்பன் என்கிற அவனுடைய அவதாரத்தால் வந்த எளிமையையும்.

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

இப்படித் தாழவிட்டுப் பிறப்பது எதற்காகவென்னில், விடு முதலாம்-மோக்ஷமளித்தருள என்ன, அவதரித்த இடங்களிலே மோக்ஷமளித்த இடமுண்டோ என்னில்

ஸ்ரீ ராமாவதாரத்தில் பெரிய உடையாருக்கு

(1) मया त्वं समनुज्ञातः गच्छ लोकान् अनुत्तमान् ।

(2) संस्कारं अकरोत्तस्य ब्रह्ममेधेन राघवः ।
स्वपदं च ददौ तस्मै योगिध्येयं सनातनम् ॥

[என் அநுமதிபெற்று மேலான உலகினை அடைவாய் (1) ராமபிரான் ப்ரஹ்மமேதத்தாலே பெரிய உடையாருக்கு ஸம்ஸ்காரம் செய்து தன் பதத்தையும் அளித்தான் (2)] என்கிறபடியே மோக்ஷமளித்தான்.

ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில்: கண்டாகர்ணன் என்ற பிசாசத்துக்கு

अक्षय्यः स्वर्गवासस्ते यावदिन्द्रो भविष्यति ।
नष्टे शक्रे ततः स्वर्गात् सायुज्यं मम गच्छतु ॥

[இந்திரன் உள்ளதனையும் உனக்கு அழிவில்லாதஸ்வர்க்க வாஸம் ஏற்படும். இந்திரன் போனவுடன் ஸ்வர்க்கத்தை விட்டு என் ஸாயுஜ்யத்தை அடைவாய்] என்கிறபடியே மோக்ஷமளித்தான் என்றத்தால் எம்பெருமானுடைய மோக்ஷம் கொடுக்கும் தன்மையையும்

புலனைந்துமேயும் பொறியைந்து நீங்கி
நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்
அலமந்து வீய அசுரரைச் செற்றான்
பலமுந்து சீரில்படிமின் ஓவாதே. (2-8-4)

என்ற பாசுரத்திலே-அந்தமில்பேரின்பமான பரமபதத்தை அர்ச்சிராதி மார்க்கத்தாலே சென்று கிட்ட ஆசையுடையீர்! நினைக்கின்ற விஷயத்தின் இனிமையாலே सुसुखंकर्तुं என்கிறபடியே ஸாதநதசையே தொடங்கி ஸ்வரூபமாயிருக்கும் எம்பெருமானுடைய கல்யாண குணங்களிலே படியுங்கோள் என்று சொன்னவாற்றால் எம்பெருமானுடைய முமுக்ஷுக்களாலே உபாஸிக்கப்படுகின்றவனுதலையும் வெளியிட்டருளினர்.

எம்பெருமான் நாரணனேஸர்வஸ்மாத்பரன் என்னுமர்த்தத்திற்குச் சான்றாக

கள்வா! எம்மையும் ஏழுலகும் நின்
னுள்ளே தோற்றிய இறைவ! என்று
வெள்ளேறன் நான்முகன் இந்திரன் வானவர்
புள்ளூர்திகழல் பணிந் தேத்துவரே. (2-2-10)

स ब्रह्मा स शिवः सेन्द्रः என்கிற ப்ரம்மாசிவன் இந்திரன் தேவர் முதலியோர், எம்பெருமான் நாரணன் பிராட்டியும் தானுமாய் இருக்கிற இருப்பிலே புகப்

http://acharya.org

பெருமையாலே திருப்பாற்கடலின் இக்கரையிலே நின்று கூப்பிட்டால் இவர்களுக்குக் காட்சி கொடுக்க பெரிய திருவடி திருத்தோளிலே புறப்பட்டால் அவன் திருவடிகளில் விழுந்து வணங்கி—நீ அவதரித்துத் தாழ நின்று ஸ்வாதந்த்ர்யத்தை மறைத்து பாரதந்த்ர்யத்தை மேற்கொண்டு உனது முதன்மையையும் மேன்மையையும் பிறர் அறியாவண்ணம் மறைத்து நின்ருய். ஆகிலும் எங்களையும் நாங்களிருந்த லோகங்களையும் உன் ஸங்கல்பத்தாலே தோற்றுவித்தாய். ஆதலால் எங்களுக்குக் காரணமான நீயே ஸ்வாமி என்று ஏத்துவர் என்கிற மற்றைத் தேவர்களுடைய வார்த்தையையும்

> தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்
> சேர்த்தி யவையே சிவன் முடிமேல் தான் கண்டு
> பார்த்தன் தெளிந்தொழிந்தபைந்துழாயான் பெருமை
> பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே. (2-8-6.)

பாசுபதாஸ்த்ரத்தைப் பெறுவதற்காக மலர் முதலியவற்றைக் கொண்டு சிவனை ஆராதிக்கப்போகும் அர்ஜுனனை நோக்கி காக்குமியல்வினனாகிய கண்ணபிரான் அம்மலர்களை நம்காலிலே இடு என்றருளிச் செய்ய,

(1) पादोदकेन स शिवः स्वशिरोधृतेन (2) शिवः शिवोऽभूत् – என்றும்

ருத்ரனை சுத்தனாய் சிவன் என்று சொல்லும்படி செய்தருளிய கண்ணன் உலகளந்த திருவடிகளிலே அம்மலர்களை இட.

> पार्थो विजेता मधुसूदनस्य पादारविन्दार्पित चित्रपुष्पं ।
> ददर्श गंगाधर मौलिमध्ये बभूव वीरः कृतनिश्चितार्थः ॥

[வீரனும் விஜயனும் குந்திபுத்ரனுமான அர்ஜுனன் கண்ணன் திருவடிகளில் ஸமர்ப்பித்த பூக்களை கங்காதரனும் ருத்திரன் தலையில் கண்டு கண்ணனே ஸர்வஸ்மாத்பரன் என்று நிர்ணயித்தான்] என்கிறபடியே தான் இட்ட மலர்களை சிவன் தலையில் கண்டு பார்த்தன் எம்பெருமான் கண்ணனுடைய பரத்வத்திலே கலங்காதே தெளிவு பெற்ருன். அர்ஜுனன் கண்ணன் திருவடிகளிலே இட்ட மலர்களையொத்த மலர்களை அல்ல. தான் இட்ட மலர்களையே கண்டான். அதையும் பக்கங்களில் காணுது இவன் தலையிலே கண்டான். ஆப்தர் சொல்லிக் கேட்கையன்றிக்கே ச்ருதிஸ்ம்ருத் யாதிகளாலன்றிக்கே தானே ப்ரத்யக்ஷமாகக் கண்டான் என்ற பொருள் கொண்ட இப்பாசுரத்தாலே स तु पार्थो महामनाः [கீதாபாஷ்யம்] என்கிற படியே பெரிய ஞானத்தை உடைய அர்ஜுனனுடைய ப்ரத்யக்ஷத்தையும் காட்டி அருளினர்.

> புலனைந்துமேயும் பொறியைந்தும் நீங்கி
> நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்
> அலமந்துவீய அசுரரைச் செற்ருன்
> பலமுந்துசீரில்படிமின் ஒவாதே. (2-8-4)

http://acharya.org

என்னும் பாசுரத்திலே அவனைத்தொழ இழிவார்க்கு—புலனைந்துமேயும் பொறியைந்து நீங்கி என்றதால் சப்தாதி விஷயங்களிலே மூட்டி ரசிப்பிக்கும் இந்த்ரிய ப்ராவச்யத்தைத் தவிர்ந்து என்கையாலே அல்ப-அஸ்திரத்வாதி தோஷங்கள் நிறைந்த ஐம்புலவின்பங்களை அநுபவித்திருக்கும் இவ்வுலக வாழ்வின் துன்பத்தைக் காட்டியும், நலமந்தமில்லதோர் நாடு புகுவீர் என்றதால் அந்தமில் பேரின்பமாய் தேசவிசேஷமான பரமபதத்தேபுக வேண்டியிருப்பீர் என்கையாலே மோக்ஷத்தின் ஆனந்தத்தைக் காட்டியும், பலமுந்துசீரில்படியின் ஓவாதே—சில கார்யங்கள் ஆரம்பத்திலே வருத்தம் தருவனவாய் முடிவிலே இன்பமயமாக இருக்கும். எம்பெருமானுடைய கல்யாண குணங்களின் அநுபவம் அங்ஙனன்றிக்கே இன்பமயமாகவே இருப்பதால் ஆரம்ப நிலையிலிருந்தே பலமாக [ஃபல] வே இருக்கும். த்யானிக்கப்படும் விஷயம் இனியதாக இருப்பதாலே ப்ராப்ய [குணாநுபவ] தசை போலே ஸாதந [த்யான] தசையிலும் இனிதாயிருக்கையாலே பலம் முற்பட்டிருக்கிற கல்யாண குணங்களிலே அவகாஹியுங்கோள் என்று கூறுமாற்றால் ஸாதநரஸத்தையும் காட்டி,

வேதாந்தங்களிலே,

(1) दहरं विपाप्मं परवेश्मभूतं यत् पुण्डरीकं पुरमध्यसंस्थम् ।
तत्रापि दहं गगनं विशोकः तस्मिन् यदन्तः तदुपासितव्यम् ॥ (तैत्तिरीय उपनिषत्)

[சரீரத்தின் நடுவில் தாமரை மலர் போன்ற உருவமுடையதும் பரம்பொருளுக்கு உறைவிடமுமான அல்பமான ஹ்ருதயம் உள்ளது. அந்த ஹ்ருதயத்திலும் சுடர்ச்சோதியாய் விளங்குகின்றவனும் சோகம் முதலிய குறையற்றவனும் ஆன மிக ஸூக்ஷ்மமான பரம்பொருள் உள்ளான். அவனுள் இருக்கும் குணங்களை உபாஸிக்க வேண்டும்].

(2) अथ यदिदं अस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म ।
दहरोऽस्मिन्नन्तर आकाशः । तस्मिन् यदन्तः तत्
अन्वेष्टव्यं तद्वाव विजिज्ञासितव्यम् । (छान्दोग्य उपनिषत्)

பரப்ரம்ஹத்தின் உறைவிடமாகையாலும் ஒன்பது வாசல்தானுடைக்குரம்பை] யாகையாலும் புரமாகச் சொல்லப்பட்ட சரீரத்தில் அற்பமாய் தாமரைமலர் போல் வடிவுடையதான இருதயம் எம்பெருமானுக்கு உறைவிடம். அதில் தானும் சுடர்ச்சோதியாய் அண்டிஞரையும் ஒளிக்கொண்ட சோதியமாய் ஆக்க வல்லவனுமாய் ஸூக்ஷ்மமான பரப்ரம்மம் உள்ளது. அதனுள் உள்ளதை ச்ரவண மனனங்களாலே அறிந்து த்யானிக்க வேணும்] என்று ஆசார்யன் சிஷ்யனை விதிக்க, சிஷ்யன்—यदिद अस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरेऽस्मि न्नन्तर आकाशः किं तत्र विद्यते यदन्वेष्टव्यम् यद्वव विजिज्ञासितव्यम्

[சரீரத்தினுள் தாமரை மலர்வடிவமான ஹ்ருதயம் இருப்பதாகவும் அதனுள் பரப்ரம்மம் இருப்பதாகவும் அதனுள் இருக்குமதை ச்ரவண மனனங்களாலே அறிந்து த்யானிக்க வேண்டும் என்றீர். அந்த பரமாத்மாவினுள் என்ன இருக்கிறது.] என்று கேட்க ஆசார்யன் :—

http://acharya.org

अस्मिन् कामाः समाहिताः। एष आत्माऽपहतपाप्मा विजरो विमृत्युः विशोकः
विजिघित्सः अपिपासः सत्यकामः सत्यसंकल्पः ॥

[இந்த பரம்பொருளிடம் அனைவராலும் விரும்பப்படும் குணங்கள் உள்ளன. இந்த பரமாத்மா பாபம் மூப்பு-மரணம் சோகம் பசி தாகம் இவையில்லாதவன் ஸத்யகாமன்-ஸத்யஸங்கல்பன்] என்று பதில் அளித்தார் என்கிற ப்ரச்ந-ப்ரதிவசனங்களாலே ஹ்ருதயத்தினுள் உறைகின்ற பரமாத்மாவையும் அவனுள்ளே இருக்கும் குணங்களையும் த்யானிக்க வேண்டும் எனத் தெளிவாக விதித்துள்ள அந்த அந்தர்கதமான அபஹதபாப்மத்வம் முதலான குணங்களின் உபாஸனத்தை "அலைந்து வீய அசுரரைச் செற்றவன் பலமுந்து சீரில்படியின் ஓவாதே"

என்று விதித்து–அவ்வுபாஸனத்திற்கு சாஸ்த்ரங்கள் நிஷேதித்ததை விட வேண்டியிருத்தலால் அவற்றைக் காட்டி விடுமாறும், அவ்வுபாஸனத்திற்கு உடலான க்ஷேத்ரவாஸம் முதலான அங்கங்களைக் காட்டி அவற்றைச் செய்யுங்கோள் என்றும் உபதேசிக்கிறார்.

சதிரிள மடவார் தாழ்ச்சியை மதித்து
திறமுடை வலத்தால் தீவினை பெருக்கி
வல்வினை மூழ்கி நாகமுந்தி கீழ்மை செய்து
வலம் கழித்து சூதென்றுகளவும் சூதும் செய்து கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்

[பிறரை அகப்படுத்திக்கொள்ளவல்ல சாமர்த்யமும் பருவத்தின் இளமையையும் உடைய மடவார் திறத்தில் நீங்கள் பண்ணும் தாழ்ச்சியை மதித்தும்-திரண்ட பலத்தால் ப்ரயோஜநாந்தரங்களிலே ப்ராவண்யமாகிற பாவத்தைப் பெருக்கியும்-உங்களால் போக்கிக் கொள்ள முடியாத மஹாபாபங்களிலே மூழ்கி-பிரிவால் வரும் க்லேசத்தை அநுபவித்து-எம்பெருமானையொழிய மற்றதில் ப்ராவண்யத்தைச் செய்து-தன்னை ஆச்ரயிக்க உறுப்பாக ஸர்வேச்வரன் தந்த மநுஷ்ய சரீரத்தைக் கொண்டு பலத்தை [बल] உண்டாக்கி பின்னை அவனைப் பற்றாது இதர விஷயப்ராவண்யத்துக்கு உடலாக்கி அநர்த்தப்பட்டு-நமக்கு நல்ல ஆதாயமென நினைத்து சதுரங்கம் முதலியதும் பரத்ரவ்யாபஹாரமும் செய்து கள்ளனாய் வஞ்சனாய் இளமையைப்பாழே போக்காது]

(1) बाल्ये एव चरेत् धर्मं [இளமையிலேயே அறம் செய்யவேண்டும்] என்றும்

(2) तस्मात् बाल्ये विवेकात्मा यतेत श्रेयसे सदा

[ஆகையால் மனத்தில் விவேகமுடையவன் எப்போதும் இளமையிலேயே ச்ரேயஸ்ஸுக்கு முயற்சிக்கக்கடவன்] என்றும் சொல்லுகிறபடியே இளமையிலேயே செய்ய வேண்டியதான திவ்யதேசவாஸத்தை 1. வளரிளம்பொழில் சூழ் மாலிருஞ்சோலை சார்வது சதிர் 2. மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை போதவிழ்மலையே புகுவது பொருளே.

[வளரவளர இளமையாகவே இருக்கும் சோலை சூழ்ந்த திருமாலிருஞ்சோலையைக்கிட்டுமிதுவே சாதுர்யம். பேடையை உற்றமயில் சேர்ந்திருக்கி

http://acharya.org

மதாய் பூக்களைச் சூடி நிற்கும் திருமாலிருஞ்சோலையைக் கிட்டுமிதுவே இவ்வாத்மாவுக்குப் பயன்]. என்ற பாசுரங்களாலும்—

3. 'மாலிருஞ்சோலைபதியது ஏத்தி:' என்று திருமாலிருஞ் சோலைப்பதியைத் துதித்து எழுவதே பயன் என்கையாலே ஸங்கீர்த்தனத்தையும்

4. 'மாலிருஞ்சோலை தொழக்கருதுவதே துணிவது சூதே' என்று-திருமாலிருஞ் சோலையைத் தொழவேணும் என்று மனத்திலே பாரிப்பது ஒன்றே இவ்வாத்மாவுக்கு ஸம்ஸாரத்தை வெல்லவேறேது என்கையாலே அஞ்ஜலியையும்

5. 'வலம் செய்து நாளும் மருவுதல் வழக்கே.' என்கிற பாட்டால் வானோர் ப்ரதக்ஷிணமான அநுகூலவ்ருத்தியைப் பண்ணும் திருமாலிருஞ்சோலையை நாள்தோறும் ப்ரதக்ஷிணம் செய்துகிட்டியிருத்தல் ந்யாய்யம் என்கையாலே ப்ரதக்ஷிணத்தையும்

6. 'மாலிருஞ்சோலை நெறிபடவதுவே நினைவது நலமே' என்கிற பாசுரத்தில் திருமாலிருஞ்சோலைக்குப்போம் மார்க்கத்தைப்பற்றிச் சிந்தை செய்வதுவே புருஷார்த்தம் என்கையாலே கதி சிந்தனத்தையும் ஆகிற அங்கங்களைச்செய்து எம்பெருமானது பலமுந்துசிரில் படிமின் என்று உபதேசித்தார்.

ஆக இரண்டாம் பத்தால்

1. எம்பெருமானுடைய காரணத்வத்தை அறிவித்தல்
2. ஸர்வேச்வரனால் ஆழ்வார் தாம் அறியாதன அறிவிக்கப் பெற்று உள்ளம் தேறுதல்
3. ஞான பலமான மோக்ஷத்தைத் தேடி வாடுதல்

(4) அந்த வாட்டம் தீர எம்பெருமான் ஆழ்வார்க்கு விசேஷமாக அருள் செய்து மோக்ஷம் கொடுக்க இருந்தது.

(5) அந்த மோக்ஷத்தின் தன்மையை ஆழ்வார் அறுதியிட்டுப் பேசியது

(6) ஆழ்வார் இவ்வுலக மக்களுக்கு உபதேசிக்க ஒருப்பட்டு விட வேண்டுமவற்றை விட்டு திவ்ய தேசவாசம் முதலான அங்கங்களோடு ஸகுணப்ரஹ்மத்தின் உபாஸனத்தை விதித்தது

முதலிய அரும்பொருள்கள் அறிவிக்கப் பெற்றனவாம்.

वाग्राशी लेखने चैव ये दोषाः समुपस्थिताः ।
दोषान् निरस्य संरक्ष श्रीमन् नारायण प्रभो ॥

---

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவேங்கடமுடையான்

http://acharya.org

வ்யாபகத்வம்

(1) முழுதுமாய் எங்கணு மொழிவற அருவாகி நின்று தோய்விலனும் ஸர்வவ்யாபகன் தீர்ந்த வடியார்களைத் தாளிணைக் கீழ்க் கொள்ளும் தன் படிக்கும் (2) நீதந்த மாமாயப் புணர்வினைப் பிறப்பழுந்தி அலமருகின்றேன் வேரறவரிந்து எந்நாளெங்கு வந்து தலைப்பெய்வனென்று கழித்துப்புகும் தங்காதலுக்கும் ஸத்ரு சமாகக் கண்டு கொள்ளென்னும் (3) ஊனமில்மோக்ஷ பலமான முடிச்சோதியில நுபவத்தாலே நித்யவஸ்து நீடு பெற்று அவச்சேத மற்ற வடிமை செய்யவேண்டும்படி ஸர்வாத்மபாவத்தைப் புகழ்ந்து, (4) சொல்லிப் பாடியேத்திப் பிதற்றி எழுந்தும் பறந்தும் துள்ளிக் குனித்துத் தடுகுட்டக்கும்பிடு நட்டமிட்டுச் சிரிக்கக் குழைந்து நையும் ப்ரீதியுகளத் தம்மடியாரென்ன உடன் கூடும் ஸாத்யம் வளர, (5) பைகொள் பாம்பு போலே இந்த்ரியவ்ருத்தி நியமமறப் பாட வந்த கவியன்றிக்கே படைத்தான் ச்லோகக்ருத்தாய், (6) குறை முட்டுத் பரிவிடர் துயர் துன்பமல்லல் துக்கம் தளர்வு கேடுகளின்றி அம்ருதாநந்த மக்நரானவர், செய்யதாமரைக் கண்ணன் அமரர் குலமுதலென்று அஞ்சாதபடி எளிவருமிணைவனும் என்றவை பரத் வமாம்படி (7) அவனுகும் ஸௌலப்யகாஷ்டையைக் காட்டி, வழியைத் தருமவன் நிற்க இழியக் கருதுவதென்னுவது, வேண்டிற் றெல்லாம் தரும், தன்னுகவே கொள்ளும், கவிசொல்ல வம்மி னென்று (8) முக்தைச்வர்யத்தை முன்னிட்டு ச்வவ்ருத்தியை மாற்றி ஸ்வவ்ருத்தியிலே மூட்டுகிறுர் மூன்ரும் பத்தில்.

ஆசார்யஹ்ருதயம்

221-8

http://acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ உ. வே. வித்வான் ஸ்ரீவில்லிபுத்தூர் விஞ்சிமூர் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் சன்னிதி தீர்த்தகாரர் திருமலை விஞ்சிமூர் ஸ்ரீ. உ. வே. வித்வான் குப்பண்ணையங்கார் ஸ்வாமி. அவருடைய திருக்குமாரர் ஸ்ரீ. உ. வே. வி. கே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.

இவர் ஸ்ரீவில்லிபுத்தூரில் அஷ்ட கோத்ரம் சிவகிரி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியிடம் ஸம்ஸ்கிருத ஆரம்பக் கல்வி பயின்றார். பிறகு சென்னையில் காருமானி ஆதிகேசவலு செட்டியார் ஸம்ஸ்கிருத பாடசாலையில் சேர்ந்து ஸம்ஸ்கிருதப் புதுமுகத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். அதன் பிறகு மதுரையில் இராமேச்வரம் தேவஸ்தான ஸம்ஸ்கிருத பாடசாலையில் சேர்ந்து ஸமப்ரதான வித்வான் பட்டம் பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கம் மகாவித்வான் திரு. நா அப்பணையங்கார் ஸ்வாமியிடம் பல ஆண்டுகள் தமிழ்க் கலைகளின் ஆழ்பொருள்களையெல்லாம் கற்றுத் தெளிந்தார். அதன் பயனாகத் தனித் தமிழ்ப் பண்டித பரிட்சைகளிலும் தேர்ச்சி பெற்றார். மதுரை கனபாடி ஸ்ரீ. உ. வே. சேஷாத்திரி அய்யங்கார் ஸ்வாமியிடம் அருளிச் செயல் அத்யயனம் செய்தார்.

சென்னை திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும் சில ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமி ஸன்னிதியில் 15 ஆண்டுகள் மிக நெருங்கிப் பழகி வந்தார். அந்த ஸ்வாமியிடம் பகவத் விஷயம் முதலிய ஸம்ப்ரதாய கிரந்தங்களையும், ஸ்ரீராமாயணம் முதலிய இதிகாஸ புராணங்களையும் கூடவே இருந்து காலக்ஷேபம் பண்ணினார். அவருடைய பேரன்புக்கு இலக்காகி காரப்பங்காடு ஸ்வாமி ஸம்பந்தம் பெற்றவர்களில் இவரும் ஒருவரானார்.

திருக்கண்ணபுரம் பண்டிதரத்னம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி. திருநாங்கூர் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி. திருமலை திருப்பதி ஜீயர் ஸாதுராமாநுஜாசார்யஸ்வாமி, விஞ்சிமூர் ஸ்ரீ. உ. வே. ஆழ்வார் அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. நல்லார் கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி இவர்களிடம் சில குறிப்பான கிரந்தங்களைக் காலக்ஷேபம் பண்ணினார். காஞ்சி ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் திருவருளுக்கும் பாலப் பிராயம் தொடங்கி இலக்கானவர். வை. மு. கோபால கிருஷ்ணமாசாரிய ஸ்வாமியின் புத்தகப் பதிப்புக் காரியங்களுக்குச் சில காலம் கூட இருந்து சேவை செய்துள்ளார். திருச்சி திவான்பகதூர், டி. எம். நாராயணசாமி பிள்ளை முதலிய பிரமுகர்களுக்கு ஸம்ப்ரதாய விஷயங்களைப் பாடம் கற்பித்து வந்தார். தற்பொழுதும் மதுரையில் பிரமுகர் சிலருக்குப் பாடம் நடத்தி வருகிறார்.

http://acharya.org

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆதரவில் மதுரைப் பகுதியிலுள்ள சன்னிதிகளில் ஸம்ப்ரதாய கிரந்தங்களைப் ப்ரவசனம் செய்து வருகிறார். டெல்லி, பெங்களூர், முதலிய வெளியிடங்களிலும் உபன்யாசங்களுக்குச் சென்று உபன்யாஸ கோஷ்டியிலும் விளங்கி வருகிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீ அருளாளப் பெருமாள் எம்பெருமானார் சன்னிதி கைங்கர்யமும், சிஷ்ய நிர்வாகமும் ஜன்ம ஸித்தமாய் ஏற்பட்டு அவற்றையும் நிர்வகித்து வருகிறார்.

நம் வேளுக்குடி ஸ்வாமிக்கு இளமை முதல் நெருங்கியவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

விருதுகள் :

சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்வான் A, வித்வான் D, தமிழ்ப் பண்டிட் தேர்ச்சி பெற்றது. சேலம் வாசவி மகாலில் திருப்பாவை காலக்ஷேபம் செய்த போது கமிட்டியாரால், "அருளிச் செயல் வல்லான்", "ஸ்ரீஸூக்தி சதுரர்" என்ற விருது வழங்கப்பட்டது. "இந்து சமய அறநிலை ஆட்சித்துறைச் சமயச் சொற்பொழிவாளர்" என்ற விருது அறநிலைத் துறையினரால் அளிக்கப்பட்டுள்ளது.

http://acharya.org

"வியாபகத்வம்"

ஸ்ரீ.உ. வே. வித்வான் V. K. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூர்.

அணிந்துரை

திருமகள் கேள்வனை செல்வத் திருமாலின் திருவருளுக்கு இலக்கான வர் நம்மாழ்வார். அநாதி காலமாய் வந்த இவருடைய அறியாமையைப் போக்கி ஞான, பக்திகளைக் கொடுத்து அவற்றை நாடும் நகரமும் நன்கறிய விளங்க வைத்தான் எம்பெருமான். இதற்கு ஆழ்வார் திருவாய் மலர்ந் தருளிய திருவாய் மொழியே சான்றாகும். எம்பெருமான் அவருக்குத் தன் னுடைய தனிப் பெரும் சிறப்புக்களை எல்லாம் காட்டிக் கொடுத்தான். அவற்றைத் தாம் அனுபவித்ததன்றி நாட்டாருக்கும் அவ்வநுபவத்தைப் பாசு ரங்கள் வாயிலாக உணர்த்துகிறார். அவ்வநுபவத்தில் பிறந்த திவ்யப் பிரபந்தமே திருவாய் மொழியாகும். பத்து நூறுகளைக் கொண்ட (ஆயிரம் பாடல்களான) இத்திருவாய் மொழியில் மூன்றாவது நூறான மூன்றாம் பகுதி யைப் பார்க்கலாம்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய "ஆசார்ய இதயம்" என்னும் நூலில், திருவாய்மொழி ஒவ்வொரு பத்திற்கும் (ஒவ்வொரு நூறுக் கும்) ஆழ்வாரின் திருவுள்ளக் கருத்தை ஆராய்ந்து அறுதியிட்டுத் தொகுத் தளித்திருக்கிறார். அவ்வழியிலேயே நாமும் பார்ப்போம்.

வேதத்தில் ஒரு கருத்தை அறிய முற்படுகையில் பலபல இடங்களிலும் சிதறிக் கிடக்கும் அதற்குப் பொருத்தமான தொடர்களை ஒன்று சேர்த்து நோக்கினால் தான் அக்கருத்தின் முழுமை தெரியும். அவ்வாறே தமிழ் மறை யான திருவாய் மொழியிலும், ஒவ்வொரு நூறு பாசுரங்களைக் கொண்ட ஒவ் வொரு பத்திலும் ஆழ்வாருடைய கருத்து இன்னது என்று அறிய அந்த நூறு பாசுரங்களிலும் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் தொடர்களை ஒன்று சேர்த்து நோக்கியே அந்தந்தப் பத்தின் முழுக் கருத்தையும் அறிய வேண்டியிருக்கிறது. சங்கப் புலவர்களும், தாம் இயற்றிய தொகை நூல்களில், முன் பின்னாகத் தொடர்களைச் சிதற வைத்து, அவற்றை ஒன்று சேர்த்துப் பார்க்கும் நுண் ணறிவு உடையவர்களான பேராசிரியர்களுக்கே விழுப் பொருள் விளங்குமாறு பாடல்களை அமைத்திருக்கிறார்கள். அவ்வாறே, திருவாய் மொழியிலும் முன் பின்னாகக் கிடக்கும் தொடர்களை ஒருங்கிணைத்து ஆழ்வாருடைய இதயக் கருத்து இன்னது என்று ஸாரமாக "ஆசார்ய இதயத்தில்" எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

ஈ

http://acharya.org

மூன்றும் பத்தின் முகவுரை :

பூவுலகில் காணப்படும் பொருள்கள் அனைத்திலும் இறைவன் உள்ளும் புறமும் நிறைந்திருக்கின்றான். அங்ஙனம் இருப்பினும், அப்பொருள்களிடத்திலுள்ள நன்மை தீமை எவையும் அவ்விறைவனிடம் சாருவதில்லை. இச்சிறப்பியல்புடைய இறைவன், கீழ் இரண்டு நூறுகளில் ஆழ்வார் முடிவு செய்த படிக்கு அவருக்கு அனுபவத்தைப் பண்ணி வைத்தான். அதாவது, "தலைவனை எம்பெருமானுடைய விருப்பத்திற்கு ஏற்பச் செயல்பட வேண்டியவனே அடிமையான இச்சீவன் என்றும், தனக்காக எதுவுமில்லாமல் அவனுக்காகவே இருப்பது ஜீவனின் கடமை என்றும், இதுவே வீடு பேறு என்றும், இதுவே வேதாந்த விழுப்பொருள் என்றும் ஆழ்வார் கீழே முடிவு செய்துள்ளபடியாகும். இதை அனுசரித்து எம்பெருமான் தன்னுடைய திவ்விய மங்கள விக்கிரகத்தை ஆழ்வார் கண்டு அநுபவிப்பதே தனக்கு விருப்பமாகக் கருதி ஆழ்வாருக்குத் தனது திருமேனி அழகைக் காட்டிக் கொடுத்தான்.

இவரும் அவன் வலிய வந்து தனக்குக் காட்டிக் கொடுத்த திருமேனி அழகை அனுபவித்து மிகவும் களித்து நின்றார். அக்களிப்பின் மிகுதியாலே எம்பெருமானிடம் கரை புரண்ட காதல் மிகுந்தது இவருக்கு. அக்காதலால் அவனுக்கு எல்லா அடிமைகளையும் செய்ய வேண்டுமென்ற பேராவல் கொண்டார். அவ் வாவலுக்கேற்ப இறைவனும் தான் எங்கும் எப்பொருளிலும் எக்காலத்திலும் உறைந்திருக்கும நிலையைக் காட்டிக் கொடுத்து, மேலும் தன்னிடத்தில் மிக்க காதல் பெருகுமாறு செய்தான். அக்களிப்பின் மிகுதி அவனளவிலே நில்லாமல் அவன் தொண்டர் தமக்கும் தொண்டராகும் ஆசையை உண்டு பண்ணியது. அதனால், அத்தொண்டர்கள் இறைவனை அனுபவிக்கும் நெறி முறைகளைத் தாம் நினைத்து அதனால் மிக்க மகிழ்சியடைந்தார். அம் மகிழ்ச்சியும் கட்டுக்கடங்காமல் வளர்ந்தது. அதனால் ஐம்புலன்களில் ஒவ்வொன்றும் மற்றைப் புலன்களுடைய அனுபவத்தையும் சேர்த்து அனுபவிக்க வேண்டுமென்ற பெருவிடாய் உடையவரானார். தம்முடைய புலன்கள் பகவானை வழிபடுவதிலேயே உரிமையாய் மூழ்கி இருப்பதையும் மற்றை உலகியலில் ஈடுபடாமல் வெறுத்திருப்பதையும் உணர்ந்தின்புற்றார். இவ்வாறு தாம் அனுபவிக்கும் பகவத் விஷய அனுபவத்திற்கு எவ்வித இடர்ப்பாடுமில்லாமல் தாம் அனுபவிக்கும் பெருமையை நினைந்து அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். அம் மகிழ்ச்சியால் உலகில் திரியும் ஆன்மாக்களை நோக்கி உபதேசிக்கலானார். அவர்களோ பகவானுடைய மேன்மைகளையும் தம்முடைய தாழ்வுகளையும் கண்டு, "ஞானிகளால் காணக்கூடிய பகவானை அறிவிலிகளான நாம் எப்படி அணுக முடியும்" என்று எண்ணிப் புறம் திரியலாயினர். இதைக் கண்ட ஆழ்வார், அவர்கள் இவ்வாறு இறைவனை அஞ்சி அகலாமைக்கும், அவனைக் கூடுகைக்கும் அவர்களை நோக்கி உபதேசிக்கலானார். இவ்வுபதேசம் கீழ் இரண்டு நூறுகளிலும் உபதேசித்த உபதேசங்களைக் காட்டிலும் சீர்மையுடைய

http://acharya.org

தாக அமைந்தது. அதாவது பரமபதத்திலிருந்து இராமன், கண்ணன் என்று அவதரித்த விபவ எம்பெருமானுடைய எளிமை குணம் கீழே பேசப்பட்டது. இங்கு (இந்த மூன்றாவது நூறில்) அவன் அர்ச்சா வடிவத்துடன் சேவை கொடுத்துக் கொண்டிருக்கும் (அர்ச்சாவதார) எளிமை உபதேசிக்கப்படுகிறது என்பதாம். அவனே அர்ச்சிராதி மார்க்கத்தின் வாயிலாக நமக்கு வீடு பேற்றையும் அருளுபவன். நமக்காக அவன் மிக எளிய முறையில் நின்றும், இருந்தும், கிடந்ததுமான கோலங்களில் கோவில்களில் காத்துக்கிடக்கிறான். அவனைப் புறக்கணித்துத் திரிவதும், பாபச் செயல்களையுடைய புல்லிய மனிதர்களைப் பாடி வீணாகப் பாப மூட்டையைத் தாங்குவதும் பயனில்லை. வீணாக நரகத்திலே அழுந்த வேண்டாம். பயனற்ற வீண் செயல்களைச் செய்ய வேண்டாம். அடியார் விருப்பத்தையெல்லாம் வேண்டியபடி கொடுத்தருளுவான். அவ்வெம்பெருமான் இறுதியில் தனக்கு ஒப்பாகவே வீடுபேற்றில் பயனையும் கொடுப்பான். அத்தகைய கருணை வள்ளலை வாய் படைத்த பயன் பெறும்படி வாயினால் பாடி, அவனுக்குத் தொண்டு செய்வீராக! இழி தொழிலான நரஸ்துதியை ஒழிப்பீராக! என்னைப் போலவே அவன் குணக்கடல் ஆடுவதில் ஈடுபட்டு அவனைப் பாடிப் பயனடைவீராக! என்று, தம் கண்ணில் காணும் உலகர்களைப் புன் நெறி விலக்கி நன்னெறிப்படுத்துகிறார். இதுவே மூன்றாம் பத்தின் சுருங்கிய கருத்தாம்.

மூன்றாம் பத்தில் ஆழ்வாருடைய இதயம் இன்னது என்பதற்குச் சுருக்கமான அட்டவணை

1. எம்பெருமான் எங்கும் என்றும் எதிலும் நிறைந்தவன்.
2. எம்பெருமான் அடியார்களுக்கு அருளும் கொடைத்தன்மை.
3. ஆழ்வாருக்கு உடற் பொறையில் உண்டாகும் வெறுப்பும், எம்பெருமான் திருவடி சேர்தலில் உண்டான விருப்பும்.
4. ஆழ்வாருடையவும் எம்பெருமானுடையவும் இயல்புக் கேற்ப ஆழ்வாருக்கு எம்பெருமான் காட்டிக் கொடுக்கிற வீடு பேறு.
5. ஆழ்வாருக்கு அவ்வநுபவத்தில் ஏற்பட்ட கலக்கம் தீர்தல்.
6. காலமெல்லாம் அடிமை செய்ய வேண்டுமென்ற ஆசைப்பாடு.
7. எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கும் இறைவன் புகழ் பாடுதல்.
8. அடியார்கள் எம்பெருமானை ஈடுபடுகிற முறைமையைக் கண்டு தாம் அவர்களிடத்தில் ஈடுபாடு கொள்ளல்.

http://acharya.org

9. ஆழ்வாருடைய ஐம்பொறிகளும் அவரைப் போலவே பகவானிடம் ஈடுபாடு கொள்ளும் சிறப்பு.

10. எம்பெருமானைப் பாடுவதற்காகவே அமைந்த தம்முடைய பெருமை கூறல்.

11. தாம் எவ்விதக் குறையுமின்றி இன்பக்கடலில் திளைத்திருத்தல்.

12. உலகிற்கு எம்பெருமானுடைய அர்ச்சாவதாரப் பெருமையை எடுத்துரைத்தல்.

13. வாய்படைத்த பயன்பெற இறைவனைத் துதிக்குமாறு தமது லட்சியத்தையே புலவர்களுக்கும் உலகத்திற்கும் உபதேசித்து உலகை நன்னெறிப் படுத்தல்.

1. எம்பெருமான் எங்கும் என்றும் எதிலும் நிறைந்தவன்

வேதாந்தங்கள் எம்பெருமானுடைய தனிப்பெரும் சிறப்பைக் கூறுகையில், காலம், பொருள், இடம் இவற்றால் வரையறுக்கப்பட்ட அனைத்துப் பொருள்களையும் காட்டிலும் வேறுபட்டவன்' என்று கூறுகிறது. அதாவது ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் அது ஒரு காலத்தில் தோன்றி ஒரு காலத்தில் மறைகிறது. அதனால் அந்தப் பொருள் கால வரைக்கு உட்பட்டதாகிறது. அஃது ஓர் இடத்தில் இருப்பதால் (எல்லாவிடத்திலும் இல்லாததால்) இடத்திற்கு உட்பட்டதாகிறது. அந்தப் பொருள் பிற பொருளைக் காட்டிலும் வேறுபட்டு அது அதுவாகயிருப்பதால் பிற பொருளைக் காட்டிலும் வரையுறுக்கப் பட்டதாகிறது. உதாரணமாகக் குடம் என்ற ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் அது ஒரு காலத்தில் தோன்றி ஒரு காலத்தில் மறைகிறது. அதனால் அது காலத்திற்குட்பட்டதாகிறது. வேறு பொருள்களைக் காட்டிலும் 'குடம்' என்று பிரிந்திருப்பதால் பொருள் வரையறைப்பட்டு நிற்கிறது. ஓரிடத்திலிருப்பதால் இடவரையறைப்பட்டதாகிறது. இம்மூன்று தன்மைகளும் இறைவனை ஒழிந்த அனைத்துப் பொருள்களுக்கும் உண்டு. இறைவனோ மேற்கூறிய மூன்று வரையறைக்கும் அப்பாற்பட்டு விளங்குகிறான். எல்லாக் காலத்திலும் இருப்பதால் கால வரையறை அவனுக்கு இல்லை. எல்லாவிடத்திலும் நிறைந்திருப்பதால் இடவரையறை அவனுக்கில்லை. எல்லாப் பொருளுக்கும் உள்ளேயும் வெளியேயும் நிறைந்து அந்தந்தப் பொருளும் அவனாகவே ஆயிருத்தலால் பொருளைப் பற்றிய வரையறையும் அவனுக்கில்லை. ஆகவே கால இடப்பொருள் வரையறையும் அவனுக்கில்லை. ஆகவே கால இடப்பொருள்

http://acharya.org

களால் ஏற்பட்ட அளவுபட்ட தன்மை பகவானுக்கு இல்லை. ஆதலால் இது பற்றியே அவன் தனிப் பெரும் சிறப்பு உடையவனுகிருன். இப்பெருமை அவன் எல்லாப் பொருளிலும், எல்லாயிடத்திலும், நிறைந்து நிற்பதாலேயே அவனுக்கு அமைந்திருக்கிறது. இதையே மூன்றும் பத்தில் முக்கியமாக ஆழ்வார் குறிப்பிடுகிருர். இவற்றில் எல்லாப பொருளிலும் அவன் இருக்கிருன் என்ற போது அந்தந்தப் பொருளிலுள்ள நன்மை தீமைகள் அவனைச் சாருமே! என்று விஞ எழும். இதைப் பற்றி எவ்விதக் குற்றமும் அவனுக்கு வராது. அவனுடைய தூய்மைக்கு இதனுல் மாசில்லை. அவன் எல்லாப் பொருளிலும் இருந்தாலும், அவ்வவப் பொருளிலுள்ள நன்மை தீமைகள் அவனைச் சாரா வண்ணம் அவன் பற்றற்றவனுகவே இருக்கிருன். அதனுலேயே அவனுக்குப் "பற்றற்ருன்" பற்றிலனீசன் என்று நூல்கள் கூறுகின்றன என்று விடை காண வேண்டும். இதை ஆழ்வார், "முழுதுமாய் முழுதியன்ருய்" 'ஏழ்ச்சிக் கேடின்றி எங்ஙனும் நிறைந்த எந்தாய்" "எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற" "அளவிடை ஐம்புலன்கள் அறியா வகையால் அருவாகி நிற்கும்" "யாவையும் யவரும் தாஞய் அவரவர் சமயம் தோறும் தோய்விலன்" என்ற தொடர்களால் மேற் கூறிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிருர். இதனுல் எம்பெருமானுடைய ஸர்வ வியாபகத்துவம் (எங்கும் நிறைந்த தன்மை) கூறப்படுகிறது.

2. எம்பெருமான் அடியார்களிடத்தில் காட்டும் கொடைத்தன்மை

"அடைய வேண்டிய லட்சியப் பொருள் எம்பெருமானைத் தவிர வேறு எதுவுமில்லை என்றும், அவனை அடைவதற்கு அவனைத் தவிர வேறு வழி எதுவுமில்லை" என்றும் உறுதி பூண்டிருப்பவரே அடியவராவார். அத்தகைய அடியவர்களைப் பிறவிப் பெரும் கடலில் புகாவண்ணம் எம்பெருமான் பாது காக்கிருன். பிறப்பறுத்துக் கொள்ள ஆசைப்படும் அவ்வடியவர், வினைப் பயனுல் மேலும் பல பிறவிகள் எடுக்க வேண்டியிருந்தாலும் அவற்றைத் தவிர்ப்பான். தற்பொழுது வினைப்பயனுல் எடுத்திருக்கும் உடல் முடிகிற போது அவ்வுடலில் இருந்தும் ஆன்மா வெளிப்படுகையில் அவ் ஆன்மாவை (வீடு பேற்றை அடைவதற்குரிய வழியான) அர்ச்சிராதி வழியாலே அழைத்துக் கொண்டு வைகுந்த மா நகரிலே சேர்ப்பான். அங்கு ஆன்மாவின் இலக்கணமான அடிமைத் தன்மையை அவன் உணரும்படி காட்டி தருவான். அவ் ஆன்மாவும் தனது அடிமை இலக்கணத்தை உணர்ந்து நடந்து கொள் வான். அதாவது பகவான் சீரிய சிங்காசனத்தில் எழுந்தருளியிருக்க அவ னுடைய திருவடி வைக்கும் அணை போலத்தான் அத்திருவடிக் கீழேயிருந்து குற்றேவல் புரிவான். இத்தகைய சிறப்பை, தன்னையே எல்லாமாகப் பற்றி யிருக்கும் அடியவர்க்கு எம்பெருமான் செய்து கொடுப்பான். இதை, "தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணி கொள்ளவல்ல ஆர்ந்த புகழ் அச்சுதன்"

http://acharya.org

என்றும், "சன்மசன்மாந்திரம் காத்து அடியார்களைக் கொண்டு போய்த் தன்மை பெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க் கொள்ளும் அப்பன்" என்றும் ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதனால், அடியார்களிடத்தில் எம்பெருமான் மிகவும் உதாரனாய் (வள்ளலாய்) இருப்பவன் என்று அவனுடைய கொடைத் தன்மை உணர்த்தப்படுகிறது.

3. ஆழ்வாருக்கு உடற்பொறையில் உண்டாகும் வெறுப்பும், எம்பெருமான் திருவடி சேர்தலில் உண்டான விருப்பும்

இறைவன் உலகத்தைப் படைப்பதும், ஆறறிவு விளங்க மனித உடலைத் தருவதும், ஆன்மாக்கள் தன்னை வந்து அடைவதற்காகவேயாம். அதை உணர்ந்து செயல்படாமல், ஆன்மா தன் உடல் விருப்பத்திற்கேற்ப அவ்வழியே சென்று தனக்குக் கேட்டை விளைவித்துக் கொள்கிறது. சத்துவ, ரஜஸ், தமோ குணங்களான முக்குண வேறு பாட்டாலே பல வகையாகப் பிரிந்தும், அறிய முடியாததும், தவிர்க்க முடியாததுமான தேவர், மனிசர், விலங்கு, தாவரம் என்ற உடல்களிலே ஆன்மா அமிழ்கிறது. இவ்வாறான முக்குணத்தினால் இவ் ஆன்மா எடுக்கும் சரீரத்திற்கு அடிப்படை, ஆதியில் தன் விருப்பம் போல் நடந்த வினையே யாகும். அவ்வினை மீண்டும் பாபத்தில் கொண்டு போய்ச் சேர்க்க அப்பாபம் நால்வகையான பிறவிகளையும் மாறி மாறி உண்டாக்கிக் கொண்டே சுழல்கிறது. இவ்வாறு சுழலும் ஆன்மாவிற்குப் பிறவிப் பெருங் கடலைத் தாண்டவோ, அதன் ஆழம் காணவோ முடிகிறதில்லை. பிறவிக் கடலிலே வீழ்வதற்கு வினை செய்ததே யொழிய, அதிலிருந்தும் கரையேற வழி காணத் தெரியவில்லை. பாபப் புதரிலே அகப்பட்டு இறைவனை அடைய வழி தெரியாமல் அலமறுகிற ஆன்மாவை இறைவன் தானே தன் கருணை மூலம் கரையேற்றுகிறான். அநாதிகாலமாய் வருகிறதும், அளவுக் கடங்காமல் இருப்பதும், தன் முயற்சியால் கடக்க முடியாததும் மிகக் கொடூரமுமான பாபத் தொடர்களை மீண்டும் தலை எடுக்காமல் களைந்து எறிகிறான் ஈசுவரன். ஆழ்வார் ஆகிற ஆன்மா இவ்வாறான பிறவிப் பெரும் கடலில் அலைகையில் பகவான் தன்னுடைய கருணையினாலேயே இவருடைய வினைகளை வேரறுத்துக் கரையேற்றி இவருக்கு அருள் செய்திருக்கிறான். இவ்வுண்மைகளை ஆழ்வார், "அந்நாள் நீதந்த ஆக்கையின்வழியுழல்வேன்" "பல்மாமாயப் பல் பிறவியில் படிகின்றயான்" "பொல்லா வாக்கையின் புணர்வினை" "வினையியல் பிறப் பழுந்தி" "கொடுவினைத்தூற்றுள் நின்று பாவியேன் பலகாலம் வழி திகைத்தல மருகின்றேன்" என்று பிறவிப்பெருங்கடலில் தாம் பட்ட துன்பங்களையும், "வினைகளை வேரறப் பாய்ந்து" "தொன்மாவல் வினைத் தொடர்களை முதலரிந்து" என்று பகவான் அவற்றைக் களைந்த முறையையும் கூறுவதால் அறியலாம்.

http://acharya.org

எம்பெருமான் ஆழ்வாருடைய வினைகளையெல்லாம் வேரறுத்துத் தன்னுடைய சிறப்புக்களையும் காட்டி கொடுத்த பிறகு அவருக்கு இவ்வுடலைத் துறந்து விரைவில் அவனைக் கிட்டவேண்டும் என்ற ஆசை மிகுந்தது. இவருக்கு எம்பெருமான் கொடுத்த ஞானத்தால் இவர் தம்முடைய பழவினைகளை யெல்லாம் கழிந்து போனதையும், இனி அவ்வினை காரணமாக வரும் பிறப்பும் தமக்கு இல்லை என்பதையும் அறிந்து கொண்டார். மேலும் தம்முடைய அடிமைத் தன்மையும் எம்பெருமானுடைய தலைமைத் தன்மையையும் நன்கு அறிந்தார். தற்பொழுது ஆன்மா பெற்றுள்ள உடல் இன்னும் எவ்வளவு காலம் இருக்குமோ! என்று அஞ்சினார். எம்பெருமானை நோக்கி, "நான் உன்னை அடையக் கூடிய நாளை எனக்குச் சொல்ல வேண்டும். அந்த நாளை நினைத்தாவது நான் மகிழ்ச்சியோடு இருப்பேன்" எந்நாள்யான் உன்னை இனி வந்து கூடுவன்" என்று கேட்கலானார். உனக்கு அடிமையாய் உள்ள நானே இவ்வுடலைக் கழித்துக் கொண்டு உன்னை வந்தடைவது என்பது முறையாகுமோ? நீ அல்லவோ அதைச் செய்து கொடுக்க வேண்டும். நானாக வந்து உன்னை எப்படி அடையமுடியும்? எனக்கு இவ்வுடலோடே இங்கிருப்பது மிகவும் அற வெறுப்பாய் உள்ளதே! என்று தமக்கு இவ்வுடலோடு இங்கிருப்பது விருப்பமில்லை என்பதையும், தானாக அவனை அடைவது முறைமையற்றது என்பதையும் "எங்கு வந்து அணுகிற்பன்" எங்கு இனித்தலைப் பெய்வன்" என்ற தொடர்களால் கூறுகிறார். மேலும், இருக்கும் நாளில் பகவானுடைய கல்யாண குணங்களை அனுபவித்தே பொழுது போக்கிக் கடைசியில் இவ்வுடலைத் துறந்து "குழந்தை தாய் முலைப்பாலில் வாய் வைப்பது போல அவன் திருவடிக் கீழே சேர வேண்டும்" என்று தமக்குரிய ஆசைப்பாட்டை "காயங்கழித்து அவன் தாளிணைக் கீழ்ப்புகும் காதல்" என்று தெரிவிக்கிறார். ஆக, மேற்கூறிய தொடர்களால், எம்பெருமான் தன்னுடைய பழம் பெரும் வினைகளெல்லாம் தலைக் காட்டாமல் ஒழித்த உதவியும், இனி இவ்வுடலோடு இவ்வுலகில் இருப்பதில் வெறுப்பும், விரைவில் இவ்வுடலை விட்டுத்தன் அடிமைத் தன்மைக்குச் சேர அவன் திருவடிக்கீழே அமரப்போகும் நாள் என்றைக்கு வருமோ? என்று துடிக்கிற ஆசைப்பாடும் அறியலாகிறது.

4. ஆழ்வாருடையவும், எம்பெருமானுடையவும் இயல்புக் கேற்ப ஆழ்வாருக்கு எம்பெருமான் காட்டிக்கொடுக்கிற மோக்ஷம்

"எம்பெருமான், தன்னையே எல்லாமாகப் பற்றியிருக்கும் அடியவருக்குத் தானே தன் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் அடிமைச் செல்வத்தைக் கொடுக்கிறான்" என்கிற எம்பெருமானுடைய இயல்பு "தீர்ந்த அடியவர் தம்மை ....என்ற தொடரால் கீழே கூறப்பட்டது. ஆழ்வாரும், எம்பெருமானுக்கு அடிமை செய்வதில் ஆசைப்பட்டும், அதற்குத் தடையாய் நிற்கும்

http://acharya.org

வினைகளையும், உடற் பொறையையும் கண்டு வெறுத்தும், ஸ்வாமியான அவன் சொத்தான இவ்வான்மாவை எப்பொழுது தன்வசம் ஆக்குவனோ என்று அவனை அடைவதில் மிக்க ஆர்வம் காட்டியும் பேசியிருப்பதை மேலே கண்ட தொடர்களால் உணரலாம் இதனால் ஆழ்வாருடைய இயல்பை அறியலாம் அல்லவா? இதுகாறும் கூறியவற்றால் இருவரது இயல்பும் நன்கு விளங்கும் அன்றோ! அடியார்களை மேல் விழுந்து விரும்பும் இயல்புடைய இறைவன் தன்னிடம் ஆராத காதல் கொண்டு தன்னை அடையத் துடிக்கும் அடியவரான ஆழ்வாரைக் கண்டால் விடுவனா! ஆழ்வார் ஆசைபட்டப்படியே அவருக்கு விண்ணுலகம் தர விரைவானாயினன். ஆயினும், அங்கு போவதற்கு முன்பே அவ்வனுபவத்தை இங்கேயே இப்பொழுதே அவருக்குத்தர வேண்டும் என்று கருதி அப்பரமபத அனுபவத்தை இங்கேயே அனுபவிக்கும்படி செய்தான். அதாவது, தன்னுடைய திருமேனி அழகை ஆழ்வார் நன்கு கண்ணாரக் கண்டு அனுபவிக்கும்படி திருமாலிருஞ்சோலை மலையில் அர்ச்சாரூபியாய் நின்று தன் வடிவழகைக் காட்டிக் கொண்டு நின்றான். "முடிச்சோதி" என்ற திருவாய் மொழி முழுவதும் எம்பெருமான் திருமேனி அழகை ஆழ்வார் அனுபவித்துப் பேசியதன்றோ' அதுவே மோட்ச அனுபவமாகும்.

இனி ஊனமில்லாத மோட்சம் எது என்பதைப் பார்ப்போம்.

மெய்ப்பொருள் கண்டவரான ஞானியர் ஒரு பொருளைக் காணும் பொழுது அப்பொருளை மேல் எழப்பாராமல் அப்பொருளினுள்ளே அழியாமல் இருக்கும் ஸத்துப் பொருளான பரம் பொருளையே காண்பார்கள். உதாரணமாக, "கோச்சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை"! என்பது ஒரு அரசனுடைய பெயராகும். இதில் 'அரசன்' என்ற சாதியும், 'சேரன்' என்ற குடியும், 'யானைப்பார்வை' உடையான் என்ற வடிவும், 'சேய்' என்ற இயற்பெயரும், "மாந்தரன் சேரல் இரும்பொறை" என்ற சிறப்புப் பெயரும் விளங்கக் குறிக்கப்படுகிறது. இவற்றுள் சாதி, குடி, வடிவு, இயற்பெயர், சிறப்புப்பெயர் எல்லாம் அழியக்கூடிய உடலைப்பற்றி வருவதால் உடல் அழியும் பொழுது இவை அனைத்தும் அழிந்து விடுகின்றன. இத்தகைய உடலைத் தாங்கி நிற்பது அழியாத ஆத்மதத்துவமாகும். அவ்வான்ம தத்துவத்தையும் தாங்கி நிற்பது பரமாத்ம தத்துவமாகும். ஞானிகள், அழியக்கூடிய உடலையும் மாறுபடுகிற ஆன்மாவையும் நோக்காமல் இரண்டுக்கும் ஆதாரமாய் இருக்கிற பரமாத்மதத்துவத்தையே காண்பார்கள். அவர்களே "மெய்ப் பொருள் கண்டார்" என்று அழைக்கப்படுகிறார்கள். இதனைத் தமிழ்மறை "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்று இயம்புகிறது. இப்படியே உலகில் காணும் அசையும் பொருள் அசையாப்பொருள் எல்லாவற்றையுமே காண வேண்டிய அவசியமாகும். இம்முறையைக் கொண்டு உலகைக் காண்கின்ற ஞானிக்கு வெளிப் பொருள் புலனாகாமல் உட்பொருளாகிற பரம் பொருளே

http://acharya.org

புலனாகக் கூடியதாம். ஒருகால் வெளிப்பொருளையும் அவர்கள் நோக்குவாரா ஞல் அப்பொருளை உள்ளிருக்கும் பரம் பொருளுக்கு உறைவிடமாக உடலாகக் கருதி அதையும் பரம் பொருளாகவே காண்பார்கள். அதனுல் தான் ஞானிகள் எல்லாப் பொருளையும் பரம்பொருளாகவே காண்கிருர்கள் என்று நூல்கள் கூறுகின்றன. இம்முறையைப் பின்பற்றியே ஞானிகளுக்குத் தலைவரான நம் மாழ்வார் பகவானை அனுபவிக்கையில், மோட்சம் (வீடுபேறு) என்ற பொருள் 'பகவானே' என்று அனுபவிக்கிருர். பகவானை ''ஊனமில் மோட்சம்'' என்று அழைக்கிருர். இப்படி எல்லாப் பொருளையும் பகவாஞகவே கண்டு அனு பவிப்பதால் பகவானைப் பரிபூரணமாக அனுபவித்தவர் ஆகிருர் ஆழ்வார். இதுவே ஊனமில்மோட்சம் எனப்படுகிறது. இவ்வனுபவம் ''புகழுநல்லொருவன் என்கோ'' என்ற திருவாய் மொழியில் அறியலாம். இரண்டாவது நூறில் கீழ்பத்தில் ''ஒளிக் கொண்ட சோதியமாய் உடன் கூடுவது என்று கொலோ'' என்று பரமபத்தில் சென்று எம்பெருமானை அனுபவிக்க வேண்டுமென்று ஆழ்வார் ஆசைப்பட்டுக் கொண்டிருந்ததாக அறியப்படுகிறது. எம்பெரு மானுக்கு ஆழ்வாரிடத்தில் ஏற்பட்ட அளவிறந்த அன்பினுல் அங்கு போய் அனுபவிக்கும் அனுபவத்தை இங்கேயே அனுபவிககும்படி செய்தானவன், இவ்வனுபவம் ''முடிச் சோதியாய்'' என்ற திருவாய் மொழியில் எம்பெருமானது வடிவழகையும் ஒப்பனை அழகையும் அனுபவித்துப் பேசியிருப்பதால் வெளி யாகிறது. ஆகவே புகழுநல்லொருவன்-முடிச்சோதி இவ்விரண்டு திருவாய் மொழிகளிலும் ஆழ்வார் அனுபவித்த பகவதனுபவமே ஊனமில் மோட்சானு பவம் என்பதாயிற்று.

5. ஆழ்வாருக்கு அவ்வனுபவத்தில் ஏற்பட்ட கலக்கம் தீர்த்தல்

மேற்படி ''முடிச்சோதி'' என்ற திருவாய் மொழியில் அனுபவித்த அனுபவம் ''தெற்குத் திருமலை'' என்று போற்றப்படுகிற திருமாலிருஞ்சோலை மலை அழகர் விஷயமாகும். அவனேமாமாயன், வஞ்சகள்வன் அல்லவா? அவனுடைய வடிவழகிலே மூழ்கித் துடிக்கலாஞர் ஆழ்வார். இதற்கு ஒரு உதாரணம் காண வேண்டும். பெருவிடாய்ப்பட்ட ஒருவன் வியாதியினுல் வாய் திறக்க முடியாமலிருக்கிருன். குளிர்ந்த நறுமணம் கமழும் தண்ணீரும் அவன் அருகில் இருக்கிறது. அவன் அத் தண்ணீரைப் பருக முடியாமல் துடிப்பா னல்லவா? அதுபோல எம்பெருமானுடைய வடிவழகை முற்ற அனுபவிக்கப் பெறமுடியாமல் துடிக்கலாஞர் ஆழ்வார். அப்பொழுது அழகப்பிரானை எம் பெருமான், ஆழ்வாரைப் பார்த்து ''ஆழ்வீர்! எத்தனை காலம் ஆனுலும் உம் முடைய கண் முதலான உருப்புக்கள் நம்மை முற்ற அனுபவிப்பதற்குப் போது மான தகுதி உடையதாக ஆகமாட்டா. கடலைக் காணப் புகுந்தவன் எத்தனை காலம் கடலைக் கண்களால் கண்டு கொண்டிருந்தாலும் கடல் முழுவதையும் காண முடியுமா? காண முடியாதல்லவா? காண முடியாமைக்குக் காரணம் கடல் பெருமையா? அல்லது புலன்களின் வலிக் குறைவா? எருன்ல் கடலின் பெரு

http://acharya.org

மையைக் குறை கூற முடியாதன்றே. காண்கின்றவனுடைய கண்களுக்கு அதைக் காண்கிற அளவு சக்தி இல்லை என்கிற குறையே உண்மையானது. அதுபோல நம்மை முழுக்க அனுபவிக்க முடியாததற்குக் காரணம் நம்முடைய அழகைக் குறை சொல்ல முடியாது. உம்முடைய உறுப்புகளுக்கு அதைக் காணும் போதுமான சக்தி இன்மையே குறையாகும். நீர் மட்டுமில்லை! வலிய உறுப்புக்கள் பெற்றவரான நித்ய சூரிகளுக்கும் நம்மை அனுபவிக்கப் புகுந்தால் இப்படியே தான் இருக்கும். யாராயிருந்தாலும் நம்மை அளவிட்டு அறிய முடியாது. இது நம்முடைய இயல்பு. இதற்காக நீர் வீணுகக் கலங்க வேண்டாம். உம்முடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே நாம் வடக்குத் திருமலையிலே நிற்கிரேம். நீர் நம்மை எப்படியெல்லாம் அனுபவிக்க விரும்புகிறீரோ அப்படியெல்லாம் அங்கு அனுபவிப்பீராக" என்று வடக்குத் திருமலையில் நிற்கும் நிலையைக் காட்டிக் கொடுத்தான். "முடிச்சோதியில்" காட்டிக் கொடுத்த அழகர் அழகை முழுக்க முழுக்க அனுபவிக்க முடியவில்லையே' என்றும் "அதற்கான வலிமை தம்மிடத்தில் இல்லையே" என்றும் முறையிட்டு "முந்நீர்ஞாலம்" என்ற திருவாய்மொழியில் பேசினர். அதில் கடைசியாக வடக்குத் திருமலையில் நிற்கும் நிலையைக் காட்டி ஆழ்வாரை ஆற்றுவித்தான் எம்பெருமான். என் கண்ணனைக் கண்டு கொண்டு நிலைபெற்று என் நெஞ்சம் பெற்றது நீடுயிரே" என்று பேசினர். என் நெஞ்சம் நிலைபெற்றது. உயிர் நீடு பெற்றது என்று ஆறுதல் அடைந்தார்.

6. காலமெல்லாம் அடிமை செய்யவேண்டும் என்ற ஆசைப்பாடு

அடுத்து "ஒழிவில் காலமெல்லாம்" என்ற திருவாய்மொழியில், அவன் வடக்குத் திருமலையில் நிற்கும் நிலையை அனுபவித்து அவ்வனுபவ இன்பத்தாலும், தம்முடைய அடிமை பயனுக வேண்டும் என்ற விருப்பதாலும், அடிமை செய்ய வேண்டும் என்று பாரிக்கலானர். இங்ஙனம் அடிமை செய்கையில் எல்லாக் காலத்திலும் அடிமை செய்ய வேண்டும். எல்லாவிடத்திலும் அடிமை செய்யவேண்டும். இளைய பெருமாளைப் போலக் கூடயிருந்தும், பரதாழ்வானைப் போலப் பிரிந்து நின்றும் எல்லா நிலைகளிலும் அடிமை செய்ய வேண்டும். பிறருக்குக் கூறு கொடுக்காமல் தாமே அனைத்தும் செய்ய வேண்டுமென்று பேசலானர்.

7, எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கும் இறைவன் புகழ் பாடுதல்

ஆழ்வாருடைய கைங்கரியப் பாரிப்பைப் பார்த்து அவருடைய பாரிப்புக் கீடாக அக்கைங்கரியத்தைப் பெறுவதற்குத் தானும் மிக்க ஆவல் உடையவனுன் எம்பெருமான். இதைத் தெரிவிக்கவே எம்பெருமான் தன்னுடைய எங்கும் பரந்த தன்மையைக் காட்டிக் கொடுத்தான். இதை அறிந்த ஆழ்வார், "நமக்

Released by Maran's Dog ,Toronto, Canada

காகவே எம்பெருமான் என்றும் எங்கும் எல்லாப் பொருளிலும் பரந்து நிற்கிருன். எல்லாம் அவனுக்கு சரீரமாய் அவன் எல்லாவற்றுக்கும் ஆத்மாவாக எல்லாம் அவன் என்று சொல்லும்படியாக இருக்கிருன்'' என்ற தன்மையை அறிந்து "புகழுநல்லொருவன் என்கோ'' என்ற திருவாய் மொழியில் அவனுடைய பரப்புத் தன்மையைப் புகழ்ந்து பேசலானுர். பஞ்ச பூதங்களும் அவன். பஞ்ச பூதங்களுடைய காரியமும் அவன். மாணிக்கம் முதலான ஒளிப் பொருள்களும் அவன். கரும்புக் கட்டி முதலிய சுவைப் பொருள்களும் அவன். இசை முதலிய ஒலிப் பொருள்களும் அவன். வீடு முதலிய பேறுகளும் அவன். பிரமன் முதலிய தேவனும் அவன். எல்லாவற்றுக்கும் காரணமான மூலப்ரகிருதியும் அவன். ஜீவாத்மாக்களும் அவன் என்கிருர். இவற்றை எல்லாம் தனக்குச் சரீரமாய்க் கொண்டு இவற்றிற்கு ஆத்மாவாகதான் இருப்பதால் அவனையும் அப்பொருள்களையும் ஒற்றுமைப்படுத்தி இவ்வாறு எல்லாம் அவனே என்று பேசினுர். எல்லாப் பொருளுக்குள்ளேயும் அவன் இருந்தாலும் அவ்வவ் பொருளிலுள்ள நன்மை தீமைகள் அவனைச் சார்வதில்லை அவன் எப்பொழுதும் மாசில்லாதவனுகவே இருக்கிருன் என்ற அவனுடைய தனிப்பெரும் பெருமையையும் பேசி அனுபவித்தார். அதில் இவ்வனுபவம் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டு பண்ணியது. அடுத்து ''மொய்ம்மாம்பூம் பொழில்'' என்ற திருவாய் மொழியில் அது வெளிாகிறது.

8. அடியார்களிடத்தில் ஈடுபாடு கொள்ளல்

"புகழுநல்லொருவனில்'' ஏற்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கே "மொய்ம்மாம்பூ பொழிலில்'' முக்கரணங்களாலும் முழுகிக் களிக்கும்படி அமைந்தது. இதில், "எம்மானைச் சொல்லி'' "பண்கள் தலைக் கொள்ளப்பாடி" "முனிவின்றி ஏத்தி" "பேர் பல சொல்லிப் பிதற்றி'' என்று கூறுவனவற்ருல் வாய்மொழி மகிழ்ச்சியை அறியலாம். ''எழுந்தும் பறந்தும் துள்ளாதார" "ஏத்திக் குனிப்பார்" தடுகுட்டமாய் "கும்பிடு நட்டமிட்டாடி'' "உலோகர் சிரிக்க நின்ருடி'' என்பனவற்ருல் உடல் மகிழ்ச்சியை உணரலாம். "நெஞ்சம் குழைந்து" என்பதிஞல் மனமகிழ்ச்சியை அறியலாம். இம்முக்கரண மகிழ்ச்சியும் ஆழ்வாருக்கு அளவு கடந்து பெருகியது. அவ்வளவுகடந்த மகிழ்ச்சி, அவன் அடியார்க்கும் அடியாராய்க் கடை நிலத்தில் நிற்கும் ஆசையை உண்டு பண்ணியது. அதஞல், "தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம்மடியாரடியோங்களே'' என்று அடியாருக்கு அடியவ்ராய் இருக்கும் இருப்பேதாம் அடைய வேண்டிய லட்சியம் என்று அறுதியிட்டார். கீழ் இரண்டாவது நூறில் "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்று பேசினவர், இங்கு இப்பொழுது அவர்களோடு சமமாகயிருந்து பகவானை அனுபவிப்பது கூடாது. அடியவருக்கு அடியவராய்க் கடை நிலத்தில் நின்று அனுபவிப்பதே சாலச்சிறந்தது என்று அடிமையின் எல்லையிலே நிற்க ஆசைப் பட்டுப்பேசலானுர். இதுவே மொய்ம்மாம்பூம் பொழில் அனுபவமாகும்.

http://acharya.org

9 ஆழ்வாருடைய ஐம்பொறிகளும் அவரைப் போலவே பகவானிடம் ஈடுபாடு கொள்ளும் சிறப்பு

திருவனந்தாழ்வானை எவன் படுக்கையாகக் கொண்டுள்ளானோ அவனே மேலான பரம்பொருளாம், பரம்பொருளுக்கு இது ஒரு தனிப் பெரும் அடையாளமாகும். அத்தகைய திருவனந்தாழ்வான் கண்களாலேயே ஒலிகளையும் கேட்பார். அதாவது பாம்புகளுக்குக் கண்ணே தான் காது. அதனாலேயே அதற்கு "கட்செவி" என்று பெயர் அமைந்தது. அத்திருவனந்தாழ்வான் ஒரு உறுப்பினாலேயே மற்றொரு உறுப்பினுடைய செயலைச் செய்வது போல ஆழ்வாருடைய ஒவ்வொரு உறுப்பும் மற்றைய உறுப்புக்களுடைய செயல்களையும் சேர்த்துச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றது. நெஞ்சு நினைப்பதோடு பேச ஆசைப்படுகிறது. வாய் பேசவதோடு நினைக்க ஆசைப் படுகிறது. கைகள், தம் செயலோடு பேச ஆசைப்படுகின்றன. கண்கள், தம் செயலோடு கைகள் செய்யும் தொழிலைச் செய்ய ஆசைப்படுகின்றன. செவிகள், தம் செயலோடு கண்கள் செயலான பார்வையையும் விரும்புகின்றன. உயிர், கேட்க ஆசைப்படுகிறது. இக்கருத்து "முடியானே" என்ற திருவாய்மொழியில் சொல்லப்படுகிறது. இதனால், ஆழ்வாருடைய உறுப்புக்கள் கட்டுக் கடங்காமல் பெருவிடாய்ப்பட்டு அவனை அனுபவிக்க விரும்புகிற சிறப்பு அறியலாகிறது. இத்தகைய உறுப்புக்களைப் பெற்றதால் ஆழ்வார் சிறப்பு உடையவராகிறார்.

10. எம்பெருமானைப் பாடுவதற்காகவே அமைந்த தம்முடைய பெருமை கூறல்

மேலும் ஆழ்வாருடைய வாய், பரனை பகவானைத் தவிர அபரரான நரரைப் பாடுவதில்லை. "வாய் கொண்டு மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன்" என்கிறார் இவர். தம்முடைய நலனுக்காகவே இவ்வுலகத்தையெல்லாம் பகவான் படைத்திருக்கிறான் என்று எண்ணினார். அவ்வுதவியை நினைத்தே அவன் விஷயத்திலேயே கவிபாடும் உறுதி கொண்டார். இதனை "ஒன்றி ஒன்றி உலகம் படைத்தான் கவியாயினேற்கு" என்ற தொடரால் அவர் தாமே வெளியிட்டிருக்கிறார். இது "சொன்னால் விரோதம்" என்ற திருவாய்மொழியில் அறியலாம்.

11. தாம் எவ்விதக் குறையுமின்றி இன்பக்கடலில் திளைத்திருத்தல்

இவ்வாறு பகவத் விஷயத்தைக் கவிபாடப் பெற்றமையால் வந்த ஏற்றத்தைக்கூறிக் கொண்டார் ஆழ்வார். அடுத்து உலகத்தவரை நோக்கலானார். அவர்களோ பகவத் விஷயத்தை அறவே மறந்து உலகியலில்

http://acharya.org

மண்டிக் கிடப்பதைக் கண்டார். "நல்ல வேளையாக அவர்களைப் போல நாம் உலக மாயையில் அகப்படாமல் தப்பினோமே" என்று தம்முடைய வேறு, பாட்டை நினைத்து மகிழலானார் அடுத்து "சன்மம் பல பல என்ற திருவாய் மொழியில், வினைப் பயனைத் துய்க்கும் உலகத்தவர் போல அவர்கள் நடுவில் ராமன், கண்ணன் என்று தோன்றிய அவதாரத்தையும், அவ்வவ அவதாரங் களில் நடத்திய பெருமைகளையும் பேசலானார். மேலும் அதில் திருவாபரணக் கோர்வை, திவ்ய ஆயுதச் சேர்த்தி, சேராததைச் சேர்த்து வைக்கும் திறமை முதலிய எல்லாச் சிறப்புக்களையும் முழுக்க முழுக்க அனுபவித்து இன்புற்றார். அவ் ஆனந்தத்தால் தமக்கு எவ்விதக் குறையுமில்லையென்று பேசி மகிழ லானார். அதில் முதல் பாசுரத்தில் பரமபதத்தில் போய் அனுபவிக்க வேண்டிய அனுபவங்களை எம்பெருமான் இங்கேயே கொடுத்திருப்பதால் அங்கு போக வில்லை என்கிற குறை தமக்கில்லை என்பதை உலகில்.........சீர்பரவப் பெற்ற நான் ஒரு குறை விலனே" என்றார்.

2வது பாசுரத்தில், இவ்வுலகில் அனுபவிக்கும் அனுபவத்திற்கு தனக் கொரு தடையுமில்லை என்பதை "நிறை புகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும் யானொரு முட்டிலேனே" என்கிறார். 3வது பாசுரத்தில், எம்பெருமானுடைய இனிமையை நுகர்ந்து அம்மகிழ்ச்சியால் அவனுக்கு அடிமை செய்கையில் முயற்சி உடைய தமக்கு உலகத்திலுள்ள சிற்றின்ப ஈடுபாட்டால் வரும் இதய துக்கம் இல்லை என்பதை, "அவன் திறத்துப்பட்ட பின்னை இறையாகிலும் யான் என் மனத்துப்பரிவிலனே" என்கிறார். 4ம் பாசுரத்தில், தம்மைப் பற்றினரைக்கைவிட்டு விடும் இதர தேவதைகளைப் பற்றாமல் அடியவரை ஒரு பொழுதும் கைவிடாதவனை வகுத்த சேஷியான எம்பெருமானைப் பற்றிய தமக்கு ஒரு துக்கமுமில்லை என்பதை, "அச்சுதனைப் பற்றியான் இறையேனும் இடரிலேனே" என்று கூறுகிறார். 5ம் பாசுரத்தில், பாரதக் கதையை உதாரணம் காட்டித் தமக்குத்துயரில்லை என்பதை உணர்த்துகிறார். அதாவது, கண்ண பிரானிடம் அந்தணன் ஒருவன் அடைக்கலம் புகுந்தான். தன்னுடைய மனைவி நான்கு மக்களைப் பெற்றும் பெற்ற அவ்வப்பொழுதே அக்குழந்தைகள் ஏதோ ஒரு தெய்வத்தால் ஒளிக்கப்பட்டன என்றும், அக் குழந்தைகளை மீட்டுத்தர வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டான். அப்பொழுது கண்ணபிரானும் அவனையும் அர்ச்சுனனையும் தன்னுடன் தேரில் ஏற்றிக் கொண்டு பரமபதம் சென்றான். அங்கிருந்த பிள்ளைகள் நால்வரையும் அப்படியே அழைத்துக் கொண்டு வந்து அவ் அந்தணனிடம் ஒப்படைத்தான்" இது பாரதத்தில் வந்த வரலாறு. இதில் "பரம பதத்திற்குப் போனவர்கள் எப்படித் திரும்பி வந்தார்கள்" என்று கேள்வி எழும். நாச்சிமார்கள் கண்ணபிரானுடைய அவதார குணங்களை அனுபவிக்க ஆசைப்பட்டு அவ்வெம்பெருமானை வைகுந்த லோகத்திற்கு வரவழைப்பதற்காகவே அந்தணக் குழந்தைகளை

http://acharya.org

வைகுந்தத்திற்கு அழைத்துப் போனார்கள் என்றும், வைதிகன் பிள்ளைகளுக்குப் பரமபதத்தை அடைய வேண்டும் என்ற ஆசையால் அழைத்துச் செல்லவில்லை என்றும் ரகசியத்தை உணர வேண்டும். அவர்களுக்கு அந்த ஆசையில்லாததனாலேயே அங்கிருந்து அவர்கள் திரும்பிவர நேர்ந்தது என்பது ரகசியம். அவர்களைப் போல் அல்லாமல் நாம் மிக்க ஆசையுடன் வைகுந்த மாநகர் செல்ல வேண்டும் என்றிருப்பதால் அவர்களைப் போல இங்கு மீள வேண்டி வருமோ! என்றதுக்கமில்லை' என்கிறார். இதை, "வைதிகன் பிள்ளைகளை உடலொடும் கொண்டு கொடுத்தவனைப் பற்றி ஒன்றும் துயரிலனே" என்றார். 6வது பாசுரத்தில், கண்ணபிரானுடைய குணங்களை அனுபவிக்கப் பெற்ற தமக்குப் பரமபதம் போகப் பெறவில்லையே'' என்ற துக்கம் சிறிதுமில்லை என்பதை "மாயன் புகழ்துற்றயான் ஓர் துன்பமிலனே'' என்கிறார். 7வது பாசுரத்தில், இவ்வுலகப் படைப்பு முதலானவையெல்லாம் பகவானுடைய விளையாட்டுக் காரியம் என்பதை தாம் நன்கு அறிந்திருப்பதால் இனி இவ்வுலகத்தில் பிறக்கையாகிற துக்கம் தனக்கில்லை" என்பதை, "இன்புறும் இவ் விளையாட்டுடையானைப் பெற்று ஏதும் அல்லல் இலனே'' என்கிறார். 8வது பாசுரத்தில் தன்னுடைய எண்ணத்தினாலேயே படைப்பு முதலிய அனைத்தையும் செய்ய வல்ல மிக்க ஆற்றல் உடைய பகவானைப் பற்றிய தனக்கு ஒரு துக்கமில்லை என்பதை "ஞானம் அஃதே கொண்டு எல்லாக் கருமங்களும் செய் எல்லையில் மாயனைக் கண்ணனைத்தாள் பற்றி யான் ஒரு துக்கமிலனே" என்கிறார். 9ம் பாசுரத்தில், உலகில் நடவாத காரியங்களை நடத்திக் காட்டும் மிக்க ஆற்றல் உடைய எம்பெருமானைப் பற்றின தமக்கு ஒரு தளர்ச்சியுமில்லை என்பதை 'வல்லானைப் பெற்று ஒன்றும் தளர்வினனே" என்கிறார். 10வது பாசுரத்தில் ஆன்மாக்கள் அவனைப் புறக்கணித்தாலும் அவன் அவற்றை அந்தர்யாமியாய் நின்று பாதுகாக்கும் தன்மையையும், தன்னை அனுசரிக்கும் அடியவரைப் பாதுகாக்கவே அவதாரங்கள் பல செய்து ரட்சித்த தன்மையையும் அறியப்பெற்ற தமக்கு ஒரு கேடுமில்லை என்று பேசி பரமானந்தத்திலே திளைக்கலானார்.

12. உலகிற்கு எம்பெருமானுடைய அர்ச்சாவதாரப் பெருமையை எடுத்துரைத்தல்

"செய்ய தாமரை கண்ணன்" என்ற திருவாய் மொழியில் அர்ச்சாவதாரப் பெருமையைப் பேசுகிறார். இதுவே இம்மூன்றும் பத்திற்கு முக்கியமான உயிர்ப் பகுதியாகும். இதில், "செய்ய தாமரைக் கண்ணன்" "முதல்மூவர்க்கு முதல்வன்" "வானவர் ஏத்த நின்ற பரமன்" "வானவர் தம்மை ஆளும் அவனும் நான்முகனும் செம்மையால் அவன் பாத பங்கயம் சிந்தித் தேத்தித் திரிவரே" "விண்ணோரிறை" "தோற்றக் கேடவை இல்லவையுடையான் அவன் ஒரு மூர்த்தி" "உயர நின்றதோர் சோதி" "அமரர்குலமுதல்" "பரஞ்சுடர்" என்ற

http://acharya.org

அனேக தொடர்களால் எம்பெருமானுடைய மேன்மை உரைக்கப் பெறுகின்றது. இம் மேன்மையைப் பார்க்கிற உலகர், "இத்தகைய மேன்மையை உடைய எம்பெருமானைப் பேரறிவாளர்களான நித்ய ஸூரியர்கள் கிட்டி அநுபவிக்கலாமே ஒழிய அறிவொன்றுமில்லாதவர்களான உலகப் பற்றுடைய நாம் எங்ஙனே அணுக முடியும்?" என்று அஞ்சிப் பின் வாங்குவதை ஆழ்வார் அறிந்தார். அவர்களைப் பார்த்ததும் ஆழ்வாருக்கு இரக்கம் ஏற்பட்டது. இவ்வாறு அஞ்சி அகலும் உலகோரை நோக்கி, எம்பெருமானுடைய எளிமையை எடுத்துரைக்கலானார். "உலகீர்காள்! உங்களுடைய அறிவு கேட்டையும் எம்பெருமானுடைய மேன்மை ஒன்றையும் பார்த்து பயந்து ஓடவேண்டாம். ஏற்கனவே நான் கீழே "பத்துடையடியவர்" "அணைவது அரவணை" என்ற திருவாய் மொழிகளில் "பகவானுக்கு எளிமையே இயல்பு என்றும்" "அவன் தேவர் மனிதர், விலங்கு, தாவரம் முதலிய எல்லாப் பிறப்புகளிலும் அததற்குப் பொருத்தமாக அது அதுவாகவே தன்னை அமைத்துக் கொண்டு அவதரிக்கிறான்" என்றும் "எளிவரும் இயல்வினன்", "இணைவனாம் எப்பொருட்க்கும் என்று கூறியுள்ளேன். இப்பொழுது அதையும் காட்டிலும் அவனுடைய எளிமையின் எல்லை நிலத்தை உங்களுக்கு காட்டிக் கொடுக்கிறேன். நீங்கள் அதை அறிந்து அஞ்சி அகலாமல் அவ் எம்பெருமானை அணுகுவீராக" என்று அர்ச்சாவதாரப் பெருமையை உலகுக்கு உபதேசிக்கலானார்.

"ஓ, சம்சாரிகளே! பகவான் தன்னை விரும்புவரிடம் தான் மிகவும் அன்புடையவனாய் இருக்கிறான். பரம் பொருள் என்று பேசப்படுகிற அவன் எங்கும் வியாபித்திருக்கிற பெருமையுடையவனல்லவா? ஆயினும் அவன் ஒரு திருமேனியோடு காட்சிதருகிறான் என்றால் அது தன்னை விரும்பும் அடியார்களுக்காவே தான் அமைத்துக் கொண்டதாகும். பரமபதத்தில் ஒரு திருமேனியோடும் இருக்கிறானே, அதுவும் தன்னை விரும்பும் அங்குள்ள நித்ய சூரிகளுக்காகவே யாம். இங்குள்ள அடியவர்களும் அவனை எந்த எந்த விதத்தில் நினைக்கிறார்களோ அந்தந்த உருவத்தில் அவர்களுக்குத் தன்னை அமைத்துக் கொடுக்கிறான். இதைக் கீதையிலும் அவனே சொல்லியிருக்கிறான். சாஸ்திரங்களும், "தன்னைப் பூசிக்கும் பக்தனிடம் பகவான் அவனுடைய சௌகரியங்களுக்குத் தகுந்தாற் போலத் தன்னுடைய நிலைகளை ஆக்கி கொள்கிறவன்" என்று கூறுகின்றன. ஆகவே அடியார்கள் தங்கள் மனதில் எதைக் கொண்டு அவனுடைய திருமேனியைத் தங்களுக்கு வழிபட உபயோகமாகச் செய்து கொள்ளக் கருதுகிறார்களோ அதையே தனக்கு திருமேனியாக அவனும் ஏற்றுக் கொள்கிறான். "பக்தன் நினைத்ததை நாம் எப்படி ஏற்றுக் கொள்வது? என்று எம்பெருமான் அதைப் புறக்கணிப்பதில்லை. எம்பெருமான் தனக்கு ஒரு திருமேனியைக் கொண்டிருப்பதே பக்தர்களை ஈடுபடுத்தத்தானே! அத்தகைய பக்தர்கள் தாங்களே மேல் விழுந்து (பொன்னோ, வெள்ளியோ, மரமோ) ஏதாவது ஒன்றைக் கொண்டு எம்பெருமானை வழிபட வேண்டுமென்று உருவம் அமைத்தால் அதையே தனக்கு மிகவும் விருப்பமான திருமேனியாக ஏற்பதில்

http://acharya.org

தடை ஏதுமில்லை. அவ்விக்கிரகத்தை அப்ராகிருதமாகக் கருதி மிக மகிழ்ச்சி யோடு அதில் ஸாந்நித்யம் செய்கிறான் என்று நூல்களும் கூறுகின்றன. ஆகவே நீங்கள் அவனை வழிபடுவதற்கு அஞ்ச வேண்டாம். உங்கள் நினைவை அனுசரித்து அவன் உங்கள் பின்வர இருக்க, அவனுடைய மேன்மையை மட்டும் நினைத்து நீங்கள் அவனைப் புறக்கணித்து. அகலுவது நியாயமில்லை. ஆகவே அவனை, நீங்கள் நினைத்தபடி அர்ச்சாவடிவத்தில் பூசியுங்கள் என்று அர்ச்சாவ தாரத்தின் எளிமையை 'செய்யதாமரைக் கண்ணன்'' என்ற திருவாய் மொழி யில் உபதேசிக்கிறார். இதை நெஞ்சினால் நினைப்பான்யவன் அவனுகும் நீள் கடல் வண்ணனே'' என்ற தொடரால், உணரலாம். இங்குக் கூறப்பட்ட இறை வனுடைய அர்ச்சாவதாரத்தின் எளிமைக்கு மேலே ஓர் எளிமை கிடையாது என்பது.முடிந்த பொருளாகும். இதனால் எளிமையின் எல்லை நிலமே அர்ச்சாவ தாரம்' என்பதாயிற்று. ''செய்ய தாமரைக் கண்ணன்'' என்ற திருவாய் மொழியில் இவ்வாறு அர்ச்சாவதாரச் சிறப்பையும், எளிமையையும் உபதேசித் தார். அடுத்து ''சொன்னால் விரோதம்'' என்ற திருவாய் மொழியில் சம்சாரி களுடைய இழவுக்கு நொந்து அவர்களைத் தீ வழி விலக்கி நல்வழிப்படுத்துகிறார். சம்சாரிகள் ஐம்புல நுகர்ச்சியில் ஈடுபட்டவராய், அதற்கு உதவியாகச் செல் வந்தரைக் கவிபாடிப் பொருள் தேடி அலைவதைப் பார்த்து ''சொன்னால் விரோதம் என்ற பத்து பாடல்களாலும் அவர்களை நல்லுரை கூறி உபதேசித்து திருத்தலானார்.

13. வாய்படைத்த பயன் பெற இறைவனைத் துதிக்குமாறு தமது லட்சியத்தையே புலவர்களுக்கும் உலகத்திற்கும் உபதேசித்து உலகை நன்னெறிப்படுத்தல்

''ஓ, புலவீர்! எம்பெருமானை விட்டு அற்ப மனிதரைக் கவிபாடி என்ன பயன்? சாஸ்திரங்கள், அழிவில்லாத இடம் பரமபதம் என்றும், அங்கு போனவர் மீண்டும் இங்கு வருவதில்லை என்றும், அங்கு (கைங்கர்யம்) தொண்டு செய்வதற்கு எவ்விதத் தடையும் இல்லை என்றும் பெருமையாகக் கூறுகின்றன. எம்பெருமானை அணுகுடல் தன்னை அடியவர்களுக்கு அவன் தானே உபாயமாய் நின்று அவர்கள் கருதிய பலனை எல்லாம் அருளுகிறான். மேலும் அப்பரம பதத்திற்குப் போகின்ற வழிக்கு அர்ச்சிராதி வழி என்று பெயர். அவ்வழி மிகவும் இன்பமயமாயிருக்கும். அவ்வழியின் சுகத்தை அறிந்தவர், பரம பதமோ, பகவத் அனுபவமோ அவையெல்லாம் ஒரு சிறுங்காய் என்று கூறி அர்ச்சிராதி வழியையே மிக இன்பமயமானது என்று அவ்வழியே போதும் என்பார்கள். அத்தகைய பேரின்ப மார்க்கமான அர்ச்சிராதி வழியை அவ்வெம் பெருமான் தானே தரக் கூடியவன்! அவனே இப்பிறவிக் கடலில் உழலும் ஆன்மாக்களை அவ்வழியில் கொண்டு போக மிகவும் ஆசையுடையவனாயிருக்கிறான். இவ்வுலகத்தில் ஏவனாவது தன் மீது ஆசை கொள்ளமாட்டானா என்று ஏங்கி நிற்கிறான் அவன்,

http://acharya.org

உங்கள் வார்த்தையைக் கேட்க இப்படி எம்பெருமான் ஆசைபட்டுக் கிடக்க நீங்கள் அவனை விட்டு விட்டு ஒரு சிறப்புமில்லாத அற்பர்களைப் புகழ்கிறீர்களே. நீங்கள் புகழ்கிற புகழ்ச்சி எதுவும் அவர்களிடமில்லையே. உங்களுக்குக் கொடுக்கும் பொருளும் அவரிடமில்லையல்லவா? அப்படியேயிருந்தாலும் கொடுக்கும் மனமும் அவர்களுக்கிருக்காதே. உங்கள் தலை தெரிந்தால் தங்கள் தலையை மறைத்துக் கொண்டு “நம்மிடம் பொருள் கேட்க வருகிறான்” என்று ஓடி ஒளிந்து கொள்வார்களே. அத்தகைய அற்பர்களை நீங்களும் விடாமல் பின் தொடர்கிறீர்களே! அத்தகைய அற்ப மனிதரைப் பின் செல்வதை விட்டு விடுங்கள். அவர்களைப் பற்றி எத்தனை சிறப்பித்துப் பாடினாலும் நீங்கள் சிறப்பித்தவை எல்லாம் பொய் ஆவதால் பாபகரமுமாகும். அப்பாபத்தினால் இப்பொழுது உள்ள நிலையைக் காட்டிலும் இன்னமும் கீழ்ப்பிறப்புக்களை எடுக்க வேண்டி வரும். நீங்கள் அறிவுடையவராய் இருப்பதினால் இப்பொழுது இருக்கும் நிலைக்கு மேலே உயர வழி தேடுவதுதானே பொருத்தமானது. கீழ் நோக்கிப் போவதினால் என்ன பயன்? அற்ப மனிதரைப் பாடுவதினால் உங்களுடைய ஸ்வரூபம் அழிவதோடு உங்கள் விருப்பமும் நிறைவேறாது. எம்பெருமானே நீங்கள் வேண்டின அனைத்தையுந் தரக்கூடிய வள்ளல், வீடு பேற்றை அளிக்கையில் அங்கு தனக்குரிய சிறப்புக்கள் அனைத்தையும் கொடுத்துத் தன்னைப் போலவே உங்களை ஆக்கி விடுவான். இதனைப் பெறுவதற்கு நீங்கள் ஆயாசமான காரியம் எதுவும் செய்ய வேண்டாம். அற்பர்களைப் புகழ்ந்து உங்கள் வாயைப் பாழாக்காமல் “வாய்படைத்த பயன் பெறும்படி அவன் விஷயத்தில் கவிபாடினால் போதும். அதற்காக என்னுடன் வாருங்கள்” என்று உலகோரை அழைக்கலானார். ஆகவே பகவத் விஷயத்தைக் கவிபாடினால் கிடைப்பது பகவத் அனுபவமும், அவனோடு ஒத்த சகல சிறப்புக்களைப் பெறுவதுமாம். இக்கருத்தை “வழியைத் தரும் நங்கள் வானவர் ஈசன் நிற்க” என்றும் “தன்னாகவே கொண்டு” என்றும் வரும் தொடர்களால் அறியலாம். இவ்வான்மாவுக்கு முக்தி நிலையில் கிடைக்கும் பேறு இன்னது என்பது இதனால் சொல்லப்பட்டதாயிற்று. இம்முக்திப் பேற்றை ஆன்மாக்கள் பெறுவதற்காகவே அவனுளன். பகவானைத் தவிர அற்ப மனிதர்களைக் கவிபாடுவதும், அவர்பின் செல்வதும், அவர்களுக்கு அடிமை செய்வதும் நாய்த் தொழில் போல மிகவும் ஈனமானது. பகவத் விஷயம் கற்பக மரத்தின் நிழல் போல மிகவும் இனிமையானது. கற்பகம் மரம் போல வேண்டியதெல்லாம் தரக்கூடியது. எத்தனை புகழ்ந்தாலும் அவன் பெருமைக்குப் போதாது. “புகழு நல்லொருவன்” என்ற திருவாய்மொழியில் தான் அவன் புகழைப் பாடி மகிழ்ந்தது போல நீங்களும் உங்களுடைய வாய்படைத்த பயன் பெறுமாறு உங்கள் கவிகளைப் பகவத் விஷயத்தில் பயன்படுத்துவீராக, என்னுடன் கூடுவீராக” என்று தம்முடைய வழியிலே அவர்களை ஈடுபடுத்துகிறார். இதுவே மூன்றாம் பத்தின்ஸாரமாகும்.

http://acharya.org

சடகோபரந்தாதி

சிறப்புப்பாயிரம்

தேவிற்சிறந்த திருமாற்குத் தக்கதெய்வக்கவிஞன்
பாவிற்சிறந்த திருவாய்மொழிபகர்பண்டிதனே
நாவிற்சிறந்தவம்மாறற்குத்தக்கநன்னாவலவன்
பூவிற்சிறந்தவாழ்வான் கம்பநாட்டுப் புலமையனே.

★ ★ ★

1. வேதத்தின் முன்செல்கமெய்யுணர்ந்தோர்விரிஞ்சன்முதலோர்
கோதற்றஞானக்கொழுந்தின்முன்செல்கருணங்கடந்த
போதக்கடலெங்கடென்குருகூர்ப்புனிதன்கவியோர்
பாதத்தின்முன்செல்லுமேதொல்லைமூலப்பரஞ்சுடரே.

2. சுடரிரண்டேபண்டுமூன்றாயின நுகர்ந்தகைந்
திடரிரண்டாய்வரும்பேரிருள்சீப்பனவெம்பிறப்பை
யடரிரண்டாமலர்த்தாளுடையான்குருகைக்கரசன்
படரிருங்கீர்த்திப்பிரான்றிருவாய்மொழிப்பாவொடுமே.

3. தனமாஞ்சிலர்க்குத்தவமாஞ்சிலர்க்குத்தருமநிறை
கனமாஞ்சிலர்க்கதற்காரணமாஞ்சிலர்க்காரணத்தி
னினமாஞ்சிலர்க்கதற்கெல்லையுமாந்தொல்லைபேர்வருண
வனமாலையெம்பெருமான்குருகூர்மன்னன்வாய்மொழியே.

4. ஆயிரமாமறைக்குமலங்காரமருந்தமிழ்க்குப்
பாயிரநாற்கவிக்கும்படிச்சந்தம்பனுவற்கெல்லாந்
தாயிருநாற்றிசைக்குத்தனித்தீபந்தண்ணங்குருகூர்ச்
சேயிருமாமரபுஞ்செவ்வியான்செய்தசெய்யுட்களே,

5. அந்தமிலாமறையாயிரத்தாழ்ந்தவரும்பொருளைச்
செந்தமிழாகத்திருத்திலனேனிலத்தேவர்களுந்
தந்தம்விழாவுமழகுமென்னுந்தமிழார்கவியின்
பந்தம்விழாவொழுகுங்குருகூர்வந்தபண்ணவனே.

6. நாய்போற்பிறர்கடைதோறு நுழைந்தவரெச்சினச்சிப்
பேய்போற்றிரியும்பிறவியினேனைப்பிறவியெனு
நோய்போமருந்தென்னுநன்றிருவாய்மொழிநோக்குவித்துத்
தாய்போலுதவிசெய்தாய்க்கடியேன்பண்டென்சாதித்ததே.

http://acharya.org

7. சாதிக்குமேபரதத்துவத்தைச்சமயத்திருக்கைச்
சேதிக்குமேயொன்றுசிந்திக்குமேயதனைத்தெரியப்
போதிக்குமேயெங்குமோங்கிப்பொதுநிற்குமெய்யைப்பொய்யைச்
சோதிக்குமேயுங்கள்வேதமெங்கோன்றமிழ்ச்சொல்லெனவே.

8. சொல்லென்கெனோமுழுவேதச்சுருக்கென்கெனோவெவர்க்கு
நெல்லென்கெனோவுண்ணுநீரென்கெனோமறைநேர்நிறுக்குங்
கல்லென்கெனோமுதிர்ஞானக்கனியென்கெனோபுகல
வல்லென்கெனோகுருகூரெம்பிரான்சொன்னமாலையையே.

9. செய்யன்கரியனெனத்திருமாலைத்தெரிந்துணர
வய்யங்கரியல்லமாட்டாமறைமதுரக்குருகூ
ரய்யன்கவியல்லவேற்பிறவிக்கடலாழ்வதல்லா
லுய்யும்வகையொன்றும்யான்கண்டிலேனிவ்வுயிர்களுக்கே.

10. அந்தணர்க்கோநல்லருந்தவர்க்கோவன்றியோகியராய்
வந்தவர்க்கோமறவாதியர்க்கோமகரக்குழைசேர்
சுந்தரத்தோளனுக்கோவவன்றொண்டர்கட்கோசுடர்த்தோய்
சந்தனச்சோலைக்குருகைப்பிரான்வந்துசந்தித்ததே.

11. பண்ணுந்தமிழுந்தவஞ்செய்தனபழநான்மறையு
மண்ணும்விசும்புந்தவஞ்செய்தனமகிழ்மாறன்செய்யு
மெண்ணுந்தகைமைக்குரிய மெய்யோகியர் ஞானமென்னுங்
கண்ணும்மனமுஞ்செவியுந்தவஞ்செய்தகாலத்திலே.

12. சோராதனவுளவோபெருஞ்செல்வர்க்குவேதஞ்செப்பும்
பேராயிரந்திண்பெரும்புயமாயிரம்பெய்துளவத்
தாரார்முடியாயிரங்குருகூர்ச்சடகோபன்சொன்ன
வாராவமுதக்கவியாயிரமவ்வரியினுக்கே.

13. பொன்னையுரைப்பதப்பொன்னொடன்றேபுலமைக்கொருவ
னுன்னையுரைத்துரைத்தற்குளரோவுயர்நாற்கவியும்
பின்னையுரைக்கப்பெறுவதல்லாற்பெருந்தண்குருகூர்த்
தென்னையுரைக்குமியற்குமிசைக்குஞ்சிகாமணியே.

14. பாவைத்திருவாய்மொழிப்பழத்தைப்பசுங்கற்பகத்தின்
பூவைப்பொருகடற்போதாவமுதைப்பொருள்சுரக்குங்
கோவைப்பணித்தவெங்கோவை யல்லாவென்னைக்குற்றங்கண்டென்
னாவைப்பறிப்பினுநல்லரென்றேமற்றைநாவலரே.

http://acharya.org

15. இழைத்தாரொருவருமில்லாமறைகளையின்றமிழாற்
குழைத்தார்குருகையிற்கூட்டங்கொண்டார்குமரித்துறைவர்
மழைத்தார்த்தடக்கைகளாலென்னைவாளின்வரம்பிடைநின்
றழைத்தாரறிவுந்தாரங்கும்போயவர்க்காட்செய்வனே.

16. சுரக்குந்திருவும்வறுமையுந்தீருந்தொடக்குவிட்டுக்
கரக்குமிருவினைமேன்மையுங்காணுங்கயல்குதிப்பத்
திரக்குங்கழைநெடுந்தாளிற்றொடுத்தசெந்தேனுடைந்து
பரக்கும்பழனவயற்குருகூர்வளம்பாடுமினே.

17. பதியத்தமிழென்ன நான்மறையென்ன விப்பார்புரக்கு
மதியந்தமிலொளிமாலைகளென்ன மறைத்தமிழி
னதியந்தருங்கவியாயிரஞ் செய்தளித்தானமுதம்]
பொதியந்தருநதியங்குருகூரெந்தை பூசுரர்க்கே.

18. பாவகத்தாற்றன்றிருவவதாரம்பதினென்றென்றிப்
பூவகத்தாரறியாதவண்ணந்தன்னையேபுகழ்ந்து
நாவகத்தாற்கவியாயிரம்பாடிநடித்தளித்த
கோவகத்தாற்கன்றியென்புறத்தார்செய்குற்றேவல்களே.

19. குணம்வேண்டுமேநற்குலம்வேண்டுமேயக்குலத்தொழுக்காம்
பிணம்வேண்டுமேசெல்வப்பேய்வேண்டுமேபெருந்தண்வகுள
மணம்வேண்டுந்தண்டெரியற்பெருமான்செய்யுண்மாமணியின்
கணம்வேண்டுமென்றறிவாரைக்கண்டாற்சென்றுகைதொழுமே.

20. அவரேயயற்குமரற்குமல்லாவமரர்க்குமெல்லாம்
பவரேகையுற்றென்பணிகொள்ளுமோபடர்நீரிலிட்ட
நவரேகையுட்கொள்ளச் செய்ததல்லானம்பிமாறனைப்போ
லெவரேதிருவாயிரமோக்கமாலையிசைத்தவரே.

21. மனையும்பெருஞ்செல்வமுமக்களுமற்றைவாழ்வுந்தன்னை
நினையும்பதமெனநின்றபிரான்குருகூர்நிமலன்
புனையுந்தமிழ்க்கவியாலிருணீங்கிப்பொருள்விளங்கி
வினையுந்திரிவுற்றனகுற்றநீங்கினவேதங்களே.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பொலிந்துநின்ற பிரான்—திருக்குருகூர்

http://acharya.org

நியந்த்ருத்வம்

(1) ஈசனேயீசனீசன் பாலென்ன ஏர்கொள்வானத்தும் ஆயேயென்கிற வ்யாப்தி நிறம் பெறத் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தா, ஒழிவில் காலத்துக்குச் சேரப் பூர்வபோகங்களை யோதுமாலெய்தின சாபலத்துக்குச் சேர ஸமகாலமாக்கிப் (2) போதால் வணங்காமை தீர்த்த ப்ரணயித்வத்திலே காதல் மையல் ஏறிய பித்தாய், (3) தேச தூரத்துக்குக் கூவியுங்கொள்ளா யென்றது தீரக் கண்ட சதிரையும் ஒரு நிலமாகக் காட்ட, வீவி லின்பம் கூட்டினையென்று முக்த போக மாநஸ ப்ராப்திபலமான தேவதாந்தர ஆத்மாத்மீய லோகயாத்ரைச்வர்யாக்ஷரங்களில் வைராக்யம், உன்னித்து உயிருடம்பினுல் கொடுவுலகம் வேட்கை யெல்லா மொழிந்தேனென்ன வுடையரானவர், (4) ஒரு நாயக மென்று ராஜ்யஸ்வர்காத்மாநுபவ அல்பாஸ்திரத்வ ஸாவதிகத் வாதிகளையும், (5) ஆடுகள்ளிறைச்சி கருஞ்செஞ்சோருகிற நித்யங் களாலே இளந்தெய்வத்துக்கு இழைத்தாடும் நிஹீநதையையும் (6) பேசநின்ற தேவதாऽஜ்ஞாநாசக்தி ஸாபேக்ஷத்வாதிகளையும் (7) இலிங்கத்து விளம்பும் பாஹ்ய குத்ருஷ்டி மத தமோநிஷ்ட தையையும் சொல்லி, ஒடிக்கண்டீர் (8) கண்டும் தெளியகில்லீர் அறிந்தோடுமின் ஆட்செய்வதே உறுவதாவதென்று விரக்தி பூர்வ கமாக ஆச்ரயணத்தை ருசிப்பிக்கிருர் நாலாம்பத்தில்.

http://acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீ. உ. வே. வித்துவான். ஆழ்வார் திருநகரி இராமகிருஷ்ண அய்யங்கார ஸ்வாமி

ஸ்ரீ. உ. வே. திருமலை நல்லான் ராமகிருஷ்ண ஐயங்கார் ஸ்வாமி ஆழ்வார் திருநகரியில் பரிதாபி வருஷம் சித்திரை மாதம் விசாக நக்ஷத்திரத்தில் ஒரு விலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்தில் பிறந்தவர். இளமைக் கல்வியைப் பிறந்த ஊரிலேயே முடித்துக் கொண்டு மதுரை ராமேச்வர தேவஸ்தான பாட சாலையில் சேர்ந்து வடமொழியில் சிரோமணிப் பட்டம் பெற்று, அதன் பிறகு வட மொழியிலும் தமிழிலும் சென்னை சர்வகலாசாலையின் வித்வான் பட்டம் பெற்றார். உபநிஷத்துக்கள், இதிஹாஸ புராணங்கள் ஸ்ரீபாஷ்ய பகவத் கீதாதி கிரந்தங்கள், ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்கள், கம்பனின் கவிதைகள் முதலியவற்றில் ஆழ்ந்த ஞானம் படைத்த இவர், சுமார் 50 வருஷகாலமாக உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபங்கள் ஸாதித்து வருகிறார். இரண்டு மொழி களிலும் கவிதா ஸாமர்த்யம் அருளப் பெற்ற இவர் சில வடமொழிக் காவ்யங் களை இயற்றியும், வடமொழியில் பூர்வாசாரியர்கள் அருளிய சில ஸ்தோத்ரங் களை பொருட்சுவை குன்றாமல் தமிழ்க் கவிதைகளாக யாத்துமிருக்கிறார். ஸ்ரீஆண்டாளின் திவ்ய சரித்திரத்தை நாடகமாகத் தமிழில் எழுதி வெளியிட்டி ருக்கிறார். திருப்பாவை தண்டகம், ஸ்ரீகோதாதண்டகம் முதலிய வடமொழி நூல்களும், திருக்கச்சிநம்பி நான்மணி மாலை, ஆண்டாள் அந்தாதி முதலிய தமிழ்க் கவிதைகளும், ஸ்ரீஸதுதி, ஸ்ரீகுணரத்ன கோசம் போன்ற ஆசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு இவர் இயற்றியுள்ள தமிழ்க்கவிதைகளும் இவர் மேதா விலாஸத்திற்குச் சான்றாகும்.

மிகவும் கடினமான வேதாந்த விஷயங்களை, பாமரரும் உணர்ந்து கொள்ளும்படி எளிய தமிழ் நடையில் உபந்யஸிப்பது இவரது அநேக சிறப்புக் களில் ஒன்று. கடந்த ஒரு வருஷ காலமாக சென்னை திருவல்லிக்கேணி வான மாமலை மடத்தில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபமும், தி. நகரில் ஆசார்ய ஹ்ருதய கால க்ஷேபமும் ஸாதித்து வருகிறார்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நியந்த்ருத்வம்

நான்காம் பத்து நல்கும் நற்பொருள்

ஸ்ரீ. உ.வே. ஆழ்வார் திருநகரி திருமலை நல்லான் சக்ரவர்த்தி
இராமகிருஷ்ண ஐயங்கார் ஸ்வாமி

திருமாலவன் கவிகளான நம்மாழ்வார் திவ்யப்ரபந்தங்கள் நான்கு. திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன அவை. ப்ரபந்நஜநகூடஸ்த்தர் என்று போற்றப்படும் நம்மாழ்வார், ப்ரபந்நர்களான முமுக்ஷுக்கள் அறிய வேண்டிய மூன்று ரஹஸ்யங்களையும் இந்த நான்கு திவ்யப்ரபந்தங்களாலும் விவரித்திருப்பதாக ஸம்ப்ரதாயம் வல்லோர் பகருகின்றனர். திருவிருத்தம் திருவாசிரியம் என்னும் இரண்டு திவ்ய ப்ரபந்தங்களாலும் முதல் ரஹஸ்யமான திருமந்திரம் விவரிக்கப்படுகின்றதென்றும், பெரிய திருவந்தாதியால் சரமச்லோகம் என்னும் ரஹஸ்யம் விவரிக்கப்படுகின்றதென்றும், திருவாய்மொழியால் த்வய மந்திரம் என்னும் ரஹஸ்யம் விவரிக்கப்படுகின்றதென்றும் அவர்கள் விளக்கம் தருகின்றனர்.

சரணாகதி மந்திரமாகிய த்வயத்தை விவரிப்பது பற்றித் திருவாய்மொழி "தீர்க்க சரணாகதி" என்று பேர் பெற்றது. த்வயத்திற்சொல்லப்படும் பத்து அர்த்தங்களும் திருவாய்மொழியில் முறையே பத்துப் பத்துக்களாலும் விவரிக்கப்பட்டுள்ளன என்கின்றனர் ரஹஸ்யத் துறையில் தேர்ந்த நம் ஆசிரியர்கள். த்வயத்திற்சொன்ன பத்து அர்த்தங்களாவன: (1) ச்ரிய:பதித்வம், (2) நாராயணத்வம், (3) நாராயணன் திருவடிகள், (4) அவற்றின் உபாயத்வம், (5) அவற்றைப் பற்றிய ப்ரார்த்தனையை உள்ளடக்கிய மஹாவிச்வாஸம், (6) கைங்கர்யத்தினை நல்கும் திவ்யதம்பதிகளுடைய அகலகில்லாத சேர்த்தி, (7) கைங்கர்யத்தினை ஏற்கும் எம்பெருமானது மிக்க இனிமை, (8) அனைவரையும் ஆளும் ஸ்வாமித்வம், (9) நித்ய கைங்கர்யம், (10) அதனுக்கிடையூறானவை அனைத்தும் விலகல் என்னுமிவையாம்.

இந்த முறையைக் கொண்டு பார்த்தால், திருவாய்மொழியின் நான்காம் பத்தினால் ஸ்ரீமந் நாராயணன்தானே உபாயம் என்னும் விஷயமே ப்ரதானமாகப் பேசப்படுவது என்பது புலனாகும். உபாயமாவது அல்லன நீக்கி நல்லன நல்குவது. "நேவி நின்று தொழுவார் வினைபோக மேவும் பிரான்" என்று அல்லன போக்குதலும் "கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை" என்று நல்லன ஆக்குதலும் நான்காம் பத்தில் கூறப்பட்டுள்ளமை காண்க.

http://acharya.org

இனி, வேறொரு வகையாகவும் த்வய மந்திரத்தைத் திருவாய்மொழி விவரிப்பதாகச் சான்றோர் விளக்குகிறார்கள். த்வயமந்திரம் இரண்டு பிரிவுகள் கொண்டது. அதுபற்றியே அம்மந்திரத்திற்கு அப்பெயர் அமைந்ததாகவும் சொல்லப்படுகிறது. உபாயமான சரணத்தை (திருவடியைப்) பற்றி பேசுவது முதற்பிரிவு. உபேயமான கைங்கரியத்தைப் பற்றிப் பேசுவது இரண்டாவதான பிரிவு. திருவாய்மொழியால் இரண்டாம் பிரிவு முன்னர் மூன்று பத்துக்களால் விவரிக்கப்படுகிறது. பின்னர் மூன்று பத்துக்களாலே முதற்பிரிவு விவரிக்கப்படுகின்றது. அதனையடுத்து ஏழாம்பத்தால் "கடல் ஞாலம் காக்கின்ற மின்னு நேமியினாய்" என்று உபாயத்திற்கு உறுப்பான குணம் உடைமையும், எட்டாம்பத்தால் "உங்களோடெங்களிடையில்லையே" என்று தம்மைச் சேர்ந்தார் திறத்தும் தமக்கு நசையில்லாமையும், ஒன்பதாம் பத்தில் "நாராயணன் நங்கள் பிரானவனே" என்று எம்பெருமானோடு தமக்கு இயல்பாக அமைந்த ஸம்பந்தமும், பத்தாம் பத்தால் தாம் பிரார்த்தித்தபடியே "வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்" என்று பேறு பெற்றமையும் பேசப்படுகின்றன என்பர்.

இம்முறையினைப் பின்பற்றித் திருவாய்மொழியின் நான்காம் பத்தினுல் கீழ்க்கூறிய அடிமை என்னும் இப்பேற்றினைப் பெறுதற்கு உபாயம் திருநாரணன் தாளே என்றும், முறையே அழிவதும் அளவுபட்டதுமான ஐசுவரியமும் கைவல்யமும் இப்பேற்றினைப் பெறுதற்கு இடையூறாய் நிற்பவை என்றும் நம்மாழ்வார் முதலில் ஒருநாயகப்பதிகத்தினுல் அறிவுறுத்தி, இறுதியில் "ஐங்கருவிகண்ட இன்பம்" என்று, உண்டாகி அழிவதாக ஐசுவரியஸுகத்தையும், "தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்" என்று கைங்கர்யத்தை நோக்கச் சிறியதாக அளவுபட்டுத் தோற்றுவதாகக் கைவல்ய ஸுகத்தையும் "ஒழிந்தே"னென்று தாமே அநுஸந்திப்பதாக ஆசாரியர்கள் நிர்வஹித்தனர். ஆக, ஐசுவரிய கைவல்யங்களை ஒழித்து கைங்கரியமாகிற பேற்றினைப்பெறுத்துவது திருநாரணன்தாளே என்பது இந்நான்காம் பத்தின் திரண்ட பொருளாகத் தேறுகின்றது.

இனி, எம்பெருமானிடம் ப்ரதானமாக ஒவ்வொரு குணம் ஒவ்வொரு பத்திலும் பேசப்பட்டு, அத்தகைய குணம் வாய்ந்த அவனால் தாம் பெற்ற பேற்றினை நம்மாழ்வார் பத்துத் தோறும் வெளியிடுவதாக ஆசார்யஹ்ருதயகாரர் நிர்வஹித்தருளுவர். அம்முறையிற்காணும்போது நான்காம் பத்தினுல் எம்பெருமானது நியந்த்ருத்வம் ப்ரதானமாகப் பேசப்பட்டு அத்தகைய அவனால் மூன்றாம்பத்தில் தாம் பெறப்பாரித்த கைங்கர்யம் என்னும் புருஷார்த்தத்துக்குப் பயனாக ஏனைய புருஷார்த்தங்களான ஐசுவரிய கைவல்யங்களில் நசை நீங்கின பேறு தமக்கு ஏற்பட்டதென்று நம்மாழ்வார் வெளியிடுவதாகக் கொள்ளல் வேண்டும்.

http://acharya.org

முதற்பத்திலே பரத்வம் ப்ரதான்மாகப் பேசப்பட்டு, அத்தகைய அவனால் தத்துவ ஞானத்தில் மறதியற்ற பேறு தமக்கு ஏற்பட்டதென்றும், இரண்டாம் பத்திலே காரணத்வம் ப்ரதானமாகப் பேசப்பட்டு, அத்தகைய அவனால் மோக்ஷத்தைத் தம் ஸ்வரூபத்துக்கேற்ப வடிகட்டும் (நிஷ்கர்ஷிக்கும்) பேறு தமக்கு ஏற்பட்டதென்றும், மூன்றாம் பத்திலே வியாபகத்வம் ப்ரதானமாகப் பேசப்பட்டு அத்தகைய அவனால் வடிகட்டின மோக்ஷத்தின் பயனான கைங்கர்யத்தை வழுவிலாது செய்யவேண்டும் என்று ப்ரார்த்திக்கும் பேறு தமக்கு ஏற்பட்டதென்றும், நான்காம்பத்திலே நியந்த்ருத்வம் ப்ரதானமாகப் பேசப்பட்டு அத்தகைய அவனால் கைங்கர்ய புருஷார்த்தத்தின் பயனாக ஐசுவர்ய கைவல்யங்களில் நசையற்ற பேறு தமக்கு ஏற்பட்டதென்றும் நம்மாழ்வார் வெளியிடுகிறார் என்று தொடர்பு கண்டு கொள்க.

தொடக்கத்தில் "மறுகலில் ஈசனை" என்று நியமிக்கும் ஈசுவரனைச் சொல்லி, இறுதியில் "ஈசன்பாலோர் அவம்பறைதல்" என்று முடிப்பதால் இந்த நான்காம்பத்தில் ஈசனும் தன்மையான நியாமகத்வம் ப்ரதானமாகப் பேசப்படுகின்றதென்பது தெளிவு. "ஐங்கருவி கண்ட இன்பம், தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன்" என்கையாலே ஐசுவரிய கைவல்யங்களில் நம்மாழ்வார் நசையறும் பேறு பெற்றமை வெள்ளியிடப்படுகிறது.

இங்ஙனம் நான்காம் பத்திற் சொல்லப்படும் விஷயத்தை ஆசார்ய ஹ்ருதயகாரரே விரித்துரைப்பதை இனிக்காண்போம். பரமபுருஷன் காரணப் பொருளாய் எங்கும் பரந்துள்ளதாக மூன்றாம் பத்திலே பேசப்பட்ட வியாப்தி, ஆகாசம் எங்கும் பரவியுள்ளமை போன்றதன்று; ஈசனைப் அதாவது நியமிப்பவனைப் அவன் எங்கும் பரந்துள்ளமையாகும் என்கிறது நான்காம் பத்து. பரந்துள்ளமை மட்டும் கூறப்படின் ஆகாசமும் பரம்பொருளாம்; அங்ஙன் ஆகாமைக்காக நியமிப்பதாயிருப்பதென்கிறார். நியமித்தலை மட்டும் கூறிடினோ அரசனும் நியமிப்பவனாதலின் பரம்பொருளாக நேரிடும். அங்ஙன் ஆகாமைக் காக பரந்துள்ளமையோடு சேர்த்து நியமித்தலைக் கூறுதல் வேண்டும். ஏனைய அரசர்கள் ஆங்காங்கே திரிந்தும், கார்த்த வீர்யார்ஜுனன் மக்கள்தவறிழைக்கக் கருதும்போது அவர்கள் முன்னர்த்தன் வரபலத்தாலே தோன்றியும் நியமிப்பவராயிருந்தனர். ஈசன், அங்ஙனன்றி "எண்டிசையும் தவிராது நின்றான் தன்னை" என்றபடி ஜாதி, வ்யக்திதோறும் முழுதும் வியாபித்திருப்பதுபோல ஒவ்வொரு பொருளிலும் பூர்ணமாக வியாபித்திருந்து நியமிப்பவனாயுள்ளான். இது தோன்ற "வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல வீவில்சீர் ஆற்றல் மிக்காளும் அம்மானை" என்று ஆழ்வார் அருளிச் செய்த அழகு காண்க. ஏனையோர் ஆளுவதற்கும் அம்மான் ஆளுவதற்கும் உள்ள வேறுபாடு தோற்ற "வீற்றிருந்து" என்பது கவனித்தற்கு உரியது. ஒவ்வொரு பொருளிலும் தான் பரிபூர்ணமாக வியாபித்து நின்று நியமிப்பவனாயிருந்தாலுதல் பிறருக்கு இன்றி அவனுக்கே உரிதாயமைந்ததாகிய தன்மை என்க.

http://acharya.org

இத்தகைய ஸர்வேசுவரன் கீழே ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி அடிமை செய்ய வேண்டும் என்று ஆழ்வார் பாரிக்கும் போது எல்லா இடங்களிலும் போல் எல்லாக் காலத்திலும் செய்ய வேணுமென்று, கீழ்க்கழிந்த காலத்திலும் அடிமையினைச் செய்ய வேட்கை மீதூர்ந்து ஆசைப்பட்டதற்கேற்பக்காலத்தாலும் தேசத்தாலும் கைகழிந்த தன்னுடைய அருஞ்செயல்களை எல்லாம் அந்தந்த இடத்திலும், அந்தந்த காலத்திலும் சேர்ந்தனுபவிக்கும்படி காட்டியருளினன். "ஆதியங்காலத் தகலிடம் கீண்டவர் பாதங்கள் மேலணி பைம்பொன் துழாய் என்றே ஒதும் மால் எய்தினள்" என்று எம்பெருமானது நிலைகளின் பண்டைய அனுபவங்களை இன்று பெற்றிடல் வேண்டும் என்று வாய்புலற்றும்படியான மதிமயக்கம் ஆழ்வார் எய்தியதாகக் கூறப்படுவது காண்க. இங்ஙனம் மயங்கிய ஆழ்வார்திறத்தில் காலத்தை வேறுபடுத்திக் காட்டுதற்கு ஏதுவானவைகளை நீக்கித் தற்காலத்திலுள்ளவைகளாகத் தம் பண்டைய நிலைகளைக் காட்டி அநுபவிக்கும்படி செய்தருளினன் ஸர்வேசுவரன் என்க.

இப்பொழுது, நப்பின்னைக்காக ஏறடர்த்த நிலையிலும், குவலயாபீடம் என்னும் வேழத்தை மருப்பொசித்த நிலையிலும் கண்ணபிரானையும், ஸீதா பிராட்டிக்காக இராவணனை அழித்த நிலையில் வில்வளைத்த கோலவல்வில் இராமபிரானையும் தன் காலத்தில் உள்ளவர்களாக நேரே கண்டநுபவிப்பவராயினர் நம்மாழ்வார். ஆயினும் பகைதெறும் தோறும் அன்னாருக்குப் பூ முதலியன கொண்டு விடாயாறுமாறு உபசரித்து உதவப் பெற்றிலேனே என்னும் குறைபாடு தோற்றிற்று நம்மாழ்வாருக்கு. அக்குறையையும், தம் திருமேனிக்கு அவருடைய நெஞ்சையும் வாசகத்தையும் கைகூப்புதலையும் முறையே சந்தனமாகவும் புனையும் கண்ணியோடு வான்பட்டாடையாகவும், அணிகலனாகவும் கொண்டு தீர்த்தருளினன் பேரன்புடைய ஸர்வேசுவரன்: அத்தகைய அன்புடைமையில் ஈடுபட்ட ஆழ்வார், காதன்மையல் ஏறிப் பேரன்புடை இறைவன் கைக்கொண்ட காரிகையாகி, அவனோடிணைந்து மட்டற்ற மகிழ்வுற்றார். அதனால் வெள்ளக் கேடாக ஒண்ணாதென்று இறைவன் சிறிது விலகி நின்றான். ஆற்றாமை மீதூர்ந்தது ஆழ்வாருக்கு. அவனுக்குப் போலியான பொருள்களையும் அவனோடு தொடர்புடைய பொருள்களையும், அவனாகவே ப்ரமித்துப் பேசுமளவுக்குப் பிரிவாற்றகில்லாது, பித்துப்பிடித்த தலைமகளாகிவிட்டார் ஆழ்வார். "பேய்ச்சிமுலை சுவைத்தாற்கென் பெண் கொடி ஏறிய பித்தே" என்றது காண்க.

இங்ஙனம் பிரிந்து பித்தேறுதற்கு இடமில்லாத பரமபதத்தில் அநுபவத்தைப் பெற்றுப் பெயர்கிலாத பேரின்பம் துய்க்க விழைந்தார் ஆழ்வார். அதுவோ ப்ரகிருதி மண்டலத்திற்கு அப்பாற்பட்டுக் கிட்டுதற்கு அரிதாயுள்ளது. ஏங்கினார். அவ்வேக்கம்

http://acharya.org

> "சீலமில்லாச் சிறியனேலும் செய்வினையோ பெரிதால்
> ஞாலமுண்டாய்! ஞானமூர்த்தி! நாராயணா! என்றென்று
> காலந்தோறும் யானிருந்து கைதலை பூசலிட்டால்
> கோலமேனி காணவாராய் கூவியுங்கொள்ளாயே."

என்னும் பாசுரவடிவமாய் வெளிப்படுகின்றது. "நான் சிறியவன்தான்; ஆனால் நான் செய்த பாபமோ மிகவும் பெரிது. இறைவன் கருணை பெரிதே; என் பாபமோ அதனினும் மிகப் பெரிது! கருணை பெருக்கெடுத்து வரினும் நெருங்க வொண்ணாதபடியன்றோ நான் செய்த பாபம் அதனைத் தடுத்து நிறுத்தி யுள்ளது! என்கிறார். இலங்கையில் பிராட்டி "மமைவதுஷ்க்ருதம் கிஞ்சித் மஹத்" [நான் செய்த பாபம் ஏதோ பெரிதாயுள்ளது.] என்றது போன்றுள்ளது ஆழ்வார் ஸ்ரீஸூக்தி. ஞாலமுண்டாயென்று ஆற்றலும், ஞானமூர்த்தி என்று அறிவும், நாராயணா என்று உறவு முறையும் பற்ற ஆபத்தில் அதன் காரணத்தையறிந்து உறவு முறையில் தன் பேறாகக் காப்பவனே என்று பல கால் தலையிலே கைசேர்த்துக் கூப்பிட்டும் உன் அழகிய மேனியைக் காண நீ வரவில்லை, என்னையும் அத்திருமேனியோடும் இருக்குமிருப்பைக் காணுமாறு கூவிக் கொள்ளவுமில்லையே என்று ஏங்குகிறார் நம்மாழ்வார்.

இத்தகைய ஏக்கம் தீருமாறு ஸர்வேசுவரன் பரமபதத்தில் திருமகளோடு எழுந்தருளியிருக்குமிருப்பைக் காட்டிக் கொடுத்தான். காட்டிக் கொடுப்பதற்காக அவன் வரவுமில்லை; இவரைக் கூவியருளவுமில்லை. இங்கிருந்தவண்ணமே பரமபதத்தில் அயர்வறுமமரர்கள் அடிமை செய்யப் பெரிய பிராட்டியாரும் தாமுமாக வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செலுத்துவதுகண்டு நெஞ்சு அதனி லீடுபடும்படி செய்தருளினான். இதனை "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர்கண்டு" என்று தாம் கண்டதாக நம்மாழ்வாரே அருளிச் செய்வது காண்க.

காலத்தால் அப்பாற்பட்ட கண்ணபிரான் நிலை, இராமபிரான் நிலை முதலிய நிலைகளைத் தற்காலத்தில் கண்டு அநுபவிக்கும்படி செய்ததுபோல தேசத்தால் அப்பாற்பட்ட பரமபதநாதன் நிலையையும் இந்தத் தேசத்தி லிருந்தே கண்டநுபவிக்குமாறு ஸர்வேசுவரன் நம்மாழ்வாருக்குப் பேரருள் புரிந்தானென்க. முக்தாநுபூதி இங்கேயே முகுந்தனருளால் நம்மாழ்வாருக்குக் கிடைக்கப் பெற்றது. "வீவிலின்பம் மிக எல்லை நிகழ்ந்தனன் மேவியே" என்றும், "கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே" என்றும் முக்தர்களுக்குப் போலத் தமக்கும் ஸர்வேசுவரனைக் கிட்டி நிரதிசயாநந்த மேற்பட்டதாகவும், திருவடிகளைச் சேர்ப்பிக்கத் தாம் அனுபவிக்கப் பெற்ற தாகவும் அவரே அருளிச் செய்வது காண்க.

போலிகண்டு அவனாக நினைந்து மேல் விழுந்த மையல் தீர ஒருகாலும், தேசத்தால் அப்பாற்பட்டுள்ள கோலமேனியைக் காணமாட்டாத ஏக்கமும், ஸம்ஸாரிகளிடையே இருத்தலினாலாகிய துக்கமும் தீர மற்றொருகாலும், ஆக

http://acharya.org

இரண்டு தடவை பரமபத நிலையை நம்மாழ்வாருக்கு ஸர்வேச்வரன் காட்டியருளினமை இங்கறியத்தக்கது.

இங்ஙனம் நம்மாழ்வாருக்கு முக்தாநுபூதி இங்கிருந்தே மானஸிகமாக ஏற்பட்டதற்குப் பயனாக எம்பெருமானைத் தவிர ஏனைய விஷயங்களில் அவருக்கு வைராக்யம் பிறந்தது. வேறு தெய்வங்களை மதித்துத் தொழாதவராயினர். "உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்" என்று தேவதாந்தரங்களில் வைராக்யம் உரைக்கப்படுவது காண்க. இங்ஙனமே "உடம்புடையான் கவராத உயிரினால் குறையிலமே" என்று தன்னிடத்திலும், "யோகணைவான் கவராத உடம்பினால் குறையிலமே" என்று உடம்பு உட்படத் தன்னைச் சேர்ந்த பொருள்களிடத்திலும் வைராக்யம் தோற்றக் கூறப்படுவதும் நோக்கத்தக்கது. உலகியலில் வைராக்யம் "கொடுவுலகம் காட்டேலே" என்பதனால் காட்டப்படுகிறது. ஐசுவர்யம் என்னும் புருஷார்த்தத்திலும் கைவல்யாநுபவம் என்னும் புருஷார்த்தத்திலும் வைராக்யம் " வேட்கை எல்லாம் விடுத்து" என்று மொத்தமாகவும், "ஐங்கருவிகண்ட இன்பம் அளவில்லாச் சிற்றின்பம் ஒழிந்தேன்" என்று தனித்தனியாகவும் எடுத்து இயம்பப்படுகின்றன.

இங்ஙனம் பரந்தாமனிடம் பேரன்பு பூண்டு, பிறவற்றில் வைராக்யம் கொண்ட ஆழ்வார், நமக்கு வைராக்யம் விளைத்து பகவானைப் பற்றுவதில் விருப்பம் உண்டாக்கும் வகையிற்பல நல்லுபதேசங்கள் புரிகிறார். ஒரு நாயகமென்னும் திருவாய்மொழியில் "உலகுடனாண்டவர், இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்" என்றும் "சுவர்க்கமெய்தியும் மீள்வர்கள்" என்றும் முறையே இம்மை மறுமைச்சிறுமை, செல்வத்தின் நிலையாமைகளையும் "இறுகல் இறப்பு" என்று பகவானுடைய அநுபவத்தை நோக்கும்போது இறுகல் (ஸங்கோசம்) ஆகத் தோற்றுதலின் கைவல்யமாம் ஆத்மாநுபவத்தின் அளவு பட்டமையையும் காட்டி ஐசுவர்ய கைவல்யங்களில் நமக்கு வைராக்யமூட்டுகிறார்.

இளந்தெய்வத்துக்கு "அங்கோர் ஆடும் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்" என்று வெறிவிலக்கின்மூலம் அணங்காடுதல் கீழ்மை என்று காட்டி, தேவதாந்தரங்களிடம் வைராக்யத்தை விளைவிக்கிறார் நம்மாழ்வார். அதனை வலியுறுத்தத் தேவதாந்திரங்களுடைய அறியாமை, இயலாமை, குறையுடைமை இவைகளையும் காண்பித்தருளுகிறார் ஆழ்வார். "பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகனவனே, கபால நன் மோக்கத்துக்கண்டு கொண்மின்" என்று அவர் காட்டுவது காண்க. தலையறுப்புண்பானும் சபிக்கப்படுவானுமாய் முறையே பிரமனும் சிவனும் ஆபத்தை வாராது விலக்கிக்கொள்ளும் வழியறியாமலும், வலுவில்லாமலும், வந்த ஆபத்தை இறைவனிடம் குரையிரந்து போக்கிக் கொள்ளுகின்ற குறையுடைமையும் கபாலமோக்ஷ விருத்தாந்தத்தில் நன்கு புலப்படுகின்றன அல்லவா? "பேசநின்ற" என்னும் அடைமொழியை சிவனுக்கும், பிரமனுக்கும், பிறர்க்கும் கொடுக்க. வேதங்களில் புனைந்துரையான சில வாக்யங்களாலும் ராஜஸ தாமஸபுராணங்களாலும் பரம்பொருளாகப் பேசப்பட்டு அவை தம்மைச் சரிந்து விழாது தாங்குதலினால் அவர்கள் நிற்கிறார்களேயன்றி ஸ்வரஸமாய் வேதங்களனைத்தும்

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ப்ரதிபாதிக்க ப்ரபலமான ஸாத்விக புராணங்களாலே பேசப்படும் மஹிமையுடன் ஸர்வேசுவரன் மூட்டுக் கொடுக்காமல் தானே நிற்பது போல அவர்கள் நிற்பதில்லை என்பது குறிப்பு.

சிவன் முதலியோர்க்குப் பெருமைபேசி நிற்கவைக்கும் லிங்கபுராணமும், புறச்சமயங்களைச் சார்ந்த சமண பௌத்தநூல்களும், இவைபோன்ற பிறவும் உண்மை பேசுவன அல்ல; பொய்யே பேசுவன. அப்பொய்ந்நூலை மெய்ந்நூலென்று ஓதி மாண்டுபோவாரை நோக்கி நீங்களும் நீங்கள் வணங்கும் தெய்வமும் நாராயணனையே ஆத்மாவாக உடையவர்களாவீர்; ஆதலின் குத்ருஷ்டி மதத்தை (மறையினை ப்ரமாணமாக ஏற்று அதனுக்கு அவப்பொருள் கூறும் மதத்தை)ச் சேர்ந்தவர்களும் பாஹ்யமதத்தை (மறையினை ப்ரமாணமாக மதிக்காத மதத்தை)ச் சேர்ந்தவர்களுமான நீங்கள் அந்நெறிகளினின்றும் விலகித் தீதில் நன்னெறியே வந்து பொலிந்து நின்ற பிரானைப் போற்றுமின்களென்று இறுதியில் உபதேசிக்கிருர்.

"இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்
மலிந்துவாது செய்வீர்களும் மற்றும் நுந்தெய்வமுமாகி நின்ருன்
மலிந்து செந்நெல் கவரி வீசும் திருக்குருகூரதனுள்
பொலிந்து நின்றபிரான் கண்டீர் ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே."

என்பது அவரது சீரிய உபதேசம்.

இலிங்கத்திட்ட புராணம்—இலிங்கத்துக் கென்று இட்டபுராணம் என்றபடி. பக்ஷபாதத்துடன் இலிங்கத்திற்குப் பெருமையைப் புனைந்துரைக்க வந்த புராணம் என்றதாயிற்று. விஷ்ணு புராணம் போலே உலகிற்குக் காரணமான பொருள் விஷ்ணு என்று பக்ஷபாதமின்றி உள்ளதை உணரப்பதன்று என்று கருத்து. சமணரோடும் சாக்கியரோடும் இலிங்கத்திட்ட புராணத்தாரையும் சேர்த்துக் கூறியது, தமோ குணத்தால் மாறுடும் புத்தியுடைமையில் உள்ள ஒற்றுமை பற்றி என்க. பாஹ்யர்களையும் குத்ருஷ்டிகளையும் சேர்த்துத் தமோநிஷ்டர் என்ருர் மநுபகவானும்.

எம்மதத்வராயினும் அவரது தெய்வத்துக்குக் கூறுமேற்றமெல்லாம் அதனுக்கந்தராத்மாவான பொலிந்து நின்ற பிரானுடைர ஏற்றமாக இசைதல் வேண்டும். அந்தந்த தெய்வத்தினுடைய ஸ்வரூபம், ஸ்த்திதிப்ரவ்ருத்திகள் அனைத்தும் ஆத்மாவான இவனுக்கு உட்பட்டவைகளாதலின் அவற்றிற்குக் கூறுமேற்றமெல்லாம் ஆத்மாவாக நிற்கும் பொலிந்து நின்றபிரானையே சார்ந்து நிற்கும். "விஷ்ணுராத்மா பவத் தஸ்ய பவஸ்ய" [அந்த ருத்ரனுக்கு விஷ்ணு ஆத்மாவாயிருந்தான்] என்று ருத்ரன் திரிபுரஸம்ஹாரம் செய்தது விஷ்ணு அவனுக்கு ஆத்மாவாய் நின்றமையினாலே எனப்படுவது இங்கறியத்தக்கது.

எல்லாப் பொருள்களுக்கும் ஆத்மாவாய் பரத்வம் பொலிந்து தோன்றும்படி நின்ற அவனுக்குத் திருநகரியில் செந்நெற்பயிர்கள்கூடக் கதிர்க் கனத்தால் அசைவது சாமரம் வீசுவதுபோலத் தோற்றுகிறது ஆழ்வாருக்கு. அறிவற்ற பொருள் எனத்தக்க செந்நெற்களும் அவனுக்குப் பணிவிடை புரிகின்றன; நீங்களுமங்கே சென்று அவனுடைய பரத்வத்தை உணர்ந்து போற்றுங்கள் என்று பிறமதத்தவருக்கு உப

http://acharya.org

தேசிக்கிறார் நம்மாழ்வார். நீங்கள் கைக்கொண்டிருந்த மதத்தில் கூறப்படும் உங்கள் தெய்வத்தின் பரத்வம் உண்மைக் கலப்பில்லாத முழுப் பொய். திருநகரியில் பொலிந்து நின்ற பிரானிடம் உள்ள பரத்வம் பொய்க்கலப் பறவேயற்ற பரிபூர்ண ஸத்யம். என்பது உங்களுக்கே புலப்படும் என்கிறார்.

மிக்க கிருபை வாய்ந்த நம்மாழ்வார், நீங்கள் பொலிந்து நின்ற பிரானைப் போற்று தற்குத் திருநகரிபோக வேண்டாம்; இருந்த இடத்திலிருந்தே திருநகரியை மனத்தால் நினையுங்கள்; அதுவே போதும், நீங்கள் உய்ந்துவிடுவீர்கள் என்கிறார்.

"ஆதிப்பிரான், அமரும் வளங் கொள் தண்பணை சூழ்ந்தழகாய திருக்குரு கூரதனை வளங்கொள் ஞானத்து வைம்மின் உம்மை உய்யக் கொண்டு போகுறிலே" என்னும்போது நம்மாழ்வார் கருணை பொங்கி வழிவது நமக்குத் தெரிகின்றதன்றோ?

"ஆதிப்பிரான் அமரும்" என்றும் "அழகாய" என்றும் திருக்குருகூரை விசேடித்தது குறிக்கொள்ளத் தக்கது. த்யானத்துக்கு உரியது காரணப் பொருளாதலின் காரணப்பொருளாகிய பொலிந்து நின்றபிரான் அமர்ந்து எழுந்தருளியுள்ளதும் மனத் திற்குப் பிடித்தமான அழகு உள்ளதுமான திருக் குருகூர், சுபாச்ரயமான அவனது திருமேனிபோன்று உய்வதற்கு உளங்கொள் ஞானத்து வைக்கத்தக்கது என்பது நம் மாழ்வார் திருவுள்ளம். "பஹிர்விஷயமாக்காதே ஞானத்தை ப்ரத்யக்ஷத்த ப்ரவண மாக்குங்கோள்" என்று திருநகரியை ப்ரத்யக்ஷத்தமாக-ஆசார்யர் வியாக்கியானம் செய் திருப்பது இங்குச் சிந்திக்கின்புறத் தக்கது.

கருணையினால் உய்வதற்கு மிகஎளியதொரு வழியைக் காண்பித்தார் நம் மாழ்வார். திருநகரியை சுபாச்ரயமாக அநுஸந்திப்பதே அமையும். கண்டியூர், அரங்கம், மெய்யம், கச்சி, பேர், மல்லை என்று பல ஊர்களில் மண்டவேண்டிய அவச்யமில்லை. திருநகரியை மட்டும் நினைத்தாலே போதும். "ஸ்ரீரங்காபிமுகோ பூத்வா ப்ரணிபத்ய நஸீத" என்றபடி திருவரங்கத்தை நோக்கி வணங்குதல் வேண்டும். திருநகரியையோ ஞானத்துள் வைத்தாலே போதும்.

இங்ஙனம் ஞானத்து வைத்தலினால் வரும் உய்வாவது பொலிந்து நின்ற பிரானுக்கு ஆட்செய்வதே என்கிறார்; அதுவே சீரிய புருஷார்த்தம்; இயல்பாதலின் எளிதிற்செய்யத்தக்கதுமதுவே என்கிறார். அனைத்தையும் தனக்கு உடலாகக்கொண்ட பொலிந்துநின்றபிரானுக்கு உடலாயமைந்த உயிரினங்கள் ஆட்செய்வது உற்றதும், எளிதிலாவதுமன்றோ? இதனை "எவ்வுலகும் மற்றும் தன்பால், மறுவில் மூர்த்தியோடு ஒத்து நின்றவண்ணம் நிற்க, குருகூரதனுள் நீள்குடக்கூத்தனுக்கு ஆட்செய்வது உறுவது, ஆவது என்று அருளிச் செய்து பகவானைப் பற்றுவதில் இனிமையை உணர்த்துகிறார்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ராஜமன்னார்குடி - ராஜகோபாலன்

உன்னித்துமற்றொருதெய்வம்தொழாள் அவனையல்லால்
நும்மிச்சைசொல்லி நும்தோள்குலைக்கப்படும்அன்னைமீர்!
மன்னப்படுமறைவாணனை வண்துவராபதி
மன்னனை ஏத்துமின் ஏத்துதலும்தொழுதாடுமே.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



தெய்வநாயகன்-வானமாமலை

http://acharya.org

காருணிகத்வம்

(1) ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளையுடையவன் எவ்விடத்தானென்னும் பாவியர்க்கும் இருகரையுமழிக்கும் க்ருபாப்ரவாஹமுடையவன் பொய்கூத்து வஞ்சக்களவு தவிர முற்றவுந்தானாய் உன்னை விட்டென்னப் பண்ணின விரத்திபல பரமாத்மராமம் (2) பேரமர் பின்னின்று கழியமிக்கு யானேயென்ன வாய்ந்து ஆற்றகில்லாது நீராய் மெலிய ஊடு புக்கு வளர (3) விஷவ்ருக்ஷபலங்கள் கை கூடினவர் அடிமை புக்காரையும் ஆட்செய்வாரையும் காண, லோக த்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு, ப்ரஹ்லாத விபீஷணர் சொற்கேளாத அரக்கரசுரர் போல்வாரைத் தடவிப்பிடித்து (4) தேசகாலதோஷம் போக எங்கு மிடங் கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜிவியுங்கோள், நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவனை (5) மேவிப் பரம்புமவரோடொக்கத் தொழில் யுக தோஷமில்லையாமென்று விஷ்ணு பக்திபரராக்கிக் கண்ணுக்கினியன காட்டலாம் படியானுர் கண்ணிலே நோக்கிக் காணும் பக்தி ஸித்தாஞ்ஜனத்தை யிடுகிருர் அஞ்சாம்பத்தில்.

ஆசார்யஹ்ருதயம்

223-5

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ.வே. வித்வான் S. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

1. பெயர்	S. ராமஸ்வாமி அய்யங்கார் (Alias) கண்ணன்ஸ்வாமி.
2. பிறந்து, வளர்ந்து நித்யவாஸம் செய்யும் இடம்	ஸ்ரீரங்கம்
3. தகப்பனார் தாயார் திருநாமங்கள்	N. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி ஆண்டாள் அம்மாள்
4. தற்சமயம் வயது	70
5. கல்வி பற்றிய விபரங்கள்.	(a) சென்னை ஸர்வகலாசாலை B.A. & L.T. பட்டங்கள் வழங்கி உள்ளது.

(b) 4000 திவ்ய ப்ரபந்தம் அத்யயனம் செய்தது. குவளகுடி ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியிடம், அஷ்டாதச ரஹஸ்ய அத்யயனமும் மேற்படி ஸ்வாமியிடமே.

(c) பஞ்ச ஸ்தவங்கள் உள்பட அனைத்து ஸ்தோத்ரபாட அத்யயனம், வானமாமலை மடம் ஜீயர் ஸ்தானத்தைதற்காலம் அலங்கரிக்கும் ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி வானமாமலை சடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகளிடம்.

(d) ஸம்ஸ்க்ருதம் ஸாஹித்யம் பயின்றது கல்லூரியிலும் இன்னும் பல பெரியோர்களிடமும்.

(e) ந்யாய சாஸ்த்ரம் பயின்றது. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி தென்பரை ஆண்டவன் ஸ்வாமியிடம்.

(f) கம்பராமாயணம், வில்லிபாரதம், செவ்வைச்சூடுவார் பாகவதம்— போன்றவை பாடம் கேட்டது. காரைக்குடி கம்பநாடர் பத்திரிகை ஆசிரியரான பேராசிரியர் மோ. வே. கோவிந்தராஜய்யங்கார் ஸ்வாமியிடம்.

http://acharya.org

6.	க்ால க்ஷேபகோஷ்டியில் அந்வயம்	சதுஸ்ஸாஸ்த்ர பண்டிதர் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ உ. வே. உத்தம சிலி ரங்க ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியிடம் ஸ்ரீரங்கம் உடையவர் ஸந்நிதியில் 15 வருடங்கள்
7.	ப்ரவசனம் பற்றிய விபரம்	மூன்று தடவைகள் பகவத் விஷயம் முற்றிலும், தொடங்கி சாத்து முறை நிகழ்த்தும் பாக்கியம் ஏற்பட்டது. மற்ற ஆழ்வார்களின் ப்ரபந்தங்கள் ஸ்ரீராமாயணம் (கம்பர், வால்மீகி) வில்லிபாரதம் ஸ்ரீ பாகவதம் (சுகப்பிரம்மம், செவ்வைச். சூடுவார் நாராயணீய ஸஹிதம்)
8.	ப்ரவசனம் நிகழ்த்திய இடங்கள்	திருச்சி, சேலம் கோயம்பத்தூர், சென்னை போன்ற பல இடங்களிலும் திருச்சியில் திருக்கச்சி நம்பி சபையில் பல வருடங்களாக நிரந்தரமாக ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் காலக்ஷேபம் செய்து வரும் பாக்கியம் கிட்டியுள்ளது. தற்சமயம் மார்கழி முழுவதும் திருச்சி திருக்கச்சி நம்பி ஸபையில் காலையில் திருப்பாவை உபந்யாஸமும் திருச்சி திருக்குறள் கழகசார்பில் இரவு ஸ்ரீ பாகவத உபந்யாஸமும் நடைபெறுகிறது.
9.	பெற்றுள்ள விருதுகள்	1. திவ்ய ப்ரபந்த திவாகரர் 2. உபந்யாஸ ரத்னம் 3. திருப்பாவை மணி விளக்கு 4. வித்யாஸாகர் 5. பெருஞ்சொற்கொண்டல் 6. சொல்லின் செல்வர்
10.	ப்ரவசனம் நிகழ்த்தி வரும் காலம்	40 வருடங்களாக

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆராவமுதன் திருக்குடந்தை

http://acharya.org

"காருணிகத்வம்"

ஸ்ரீ. உ. வே. S. ராமஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி B. A. L. T. ஸ்ரீரங்கம்

திருவாய்மொழி 5-ம் பத்து

1. எம்பெருமானின் உத்கர்ஷம்

ஸ்ரீய: பதியான ஸர்வேஸ்வரன் உபய விபூதி நாதன். அவன் அயர்வறு மமரர்கள் அதிபதி. அவன் ஒத்தார் மிக்காரை இலேயாய மாமாயன். அவன் ஸர்வஸ்மாத்பரன். தனது இப்பரத்வம் ப்ரகாசமாம்படி த்ரிவித காரணங்களும் தானேயாய் ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுவன். அவன் ஜகத் காரண பூதன். அது மட்டுமல்ல. தனது ஸ்ருஷ்டி கார்யமான சேதன-அசேதனங்களை யடைய வியாபித்து நிற்கும் பெருமையுடையவன். அதே சமயம் தனக்கு சரீரமாக அமைந்துள்ள சேதன அசேதனங்களில் உள்ள தோஷங்களால் தான் ஒன்றும் பாதிக்கப்படாமல் வர்த்திக்கும் தன்மையுடையவன். அதாவது அவன் ஸர்வவ்யாபியாய் அமலனுயுள்ளவன். இவ்வாருன தனது வ்யாப்தி, கேவலம் ஆகாச வ்யாப்தி போலல்லாமல், நிறம்பெறும்படிக் கீடாக, தன்னுல் வியாபிக்கப்பட்ட, தன்னையொழிந்த ஸமஸ்த வஸ்துக்களின் ஸகலவிதமான இயக்கங்களும், செய்கைகளும், தன் இச்சையின்படியே நடைபெறும்படி அவற்றை நியமித்துக் கொண்டு போருமவன். அவன் ஸர்வநியந்தா. அதாவது அவனன்றி ஒரணுவும் அசையாது. ஆகவே எம்பெருமான் ஸர்வஸ்மாத் பரனுய், ஜகத்காரண பூதனுய், ஸர்வவ்யாபியாய், ஸர்வ நியந்தாவாய் இப்படிப் பட்ட பல மேன்மைகளையுடையவன்.

2. ஆழ்வார் தம்மிடமுள்ள குறைகளைக் கூறுவது

நான் அநாதி காலம் விபரீதங்களையே செய்து போந்தவன். ஶப்தாதி விஷயங்களில் விருப்பத்தை உடையவனுய், அல்ப-அஸ்திரமான அந்த ஸுகாநுபவத்துக்காக மாறி மாறிப் பல பிறப்புக்கள் கொண்டவன். பிறவிக்கடலை நீந்தி எம்பெருமானை அடைய வேண்டும் என்ற இச்சை எனக்கு மனப்பூர்வமாக ஏற்பட்டதே இல்லை. இந்த ஸம்ஸாரமாகிற கடலிலே ஆழ்ந்து நோவுபட்டுக்கொண்டு இருக்கும் பொழுது கூட, "நோவுபடாநின்ருேம்" என்று அறியவும் மாட்டாதே உணர்த்தியற்று இருப்பவன். அம்ருதம் இருக்க விஷத்தை விரும்புவாரைப் போலே, ஆராவமுதாகிய எம்பெருமானை விட்டு இன்னமுதெனத் தோன்றும் சப்தாதி விஷயப்ரவணனுய்க் காலம் கழிப்பவன். இவ்வாறு எம்பெருமான் பக்கல் நான் ஆசையின்றிக்கே இருந்தாலும், அவனை உகந்தவர்கள் பேசும் வார்த்தைகளை நான் பேசி, ஸர்வக்ஞனை எம்பெருமானும் இது மெய் என்று ப்ரமிக்கும்படி பெரும்பொய் சொல்லும் ஆற்றலுடையவன். உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்தறியும் ஸர்வக்ஞனையும் வஞ்சிக்கும் கள்ள மனமுடையவன். ஆக எம்முறையில் பார்த்தாலும் நான் மிக மிகத் தண்ணிய செயல்கள் கொண்டவன். எம்பெருமான் மேன்மைக்கு எல்லை, அவனது உத்கர்ஷம் எங்கே! எனது நிகர்ஷம் எங்கே!

http://acharya.org

3. பகவத் க்ருபா ப்ரவாஹத்தின் பெருமை

ஜகத்காரணபூதனைய், ஸர்வஸ்மாத் பரனைய், ஸர்வ வியாபியாய், ஸர்வ நியந்தாவாயுள்ள ஸர்வேஸ்வரனுடைய உத்கர்ஷங்களையும், ஸம்ஸாரிகளில் தண்ணியனைய் இருக்கும் தனது தாழ்வுகளையும் ஆழ்வார் அனுஸந்தித்து, அவனை யடையத் தமக்குப் ப்ராப்தியே இல்லை; "அம்மான், ஆழிப்பிரான், அவன் எவ் விடத்தான், யானுர்" என்று அகலப்பார்க்கிருர். இந்த ஏற்றத்தாழ்வுகளை சமன் படுத்தவல்லதான க்ருபை என்ற மகா குணத்தை ஆழ்வார் அநுஸந்திக் கும்படி எம்பெருமான் ப்ரகாசிப்பித்தான். அவனது க்ருபாப்ரவாஹம் தன்னை நீசனுக நினைத்துக் கொண்டிருக்கும் ஆழ்வாரளவிலும் வந்து பாய்ந்தது. எம் பெருமான் ஸர்வசேஷி என்பதையும், அவனது திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தம் என்னுமிடத்தையும் ஆழ்வாரது உள்ளத்திலே உதிக்கச்செய்தது. எம்பெருமான் ஒடோடியும் வந்து ஆழ்வாரோடு கலந்து பரிமாறினுன். ஆழ்வார் இதுவரை செய்த தவறுகளை மறந்தவனைய், ஞானம் பிறந்த பின்பு அறியாமல் செய்ய நேரிடும் தவறுகளில் அக்ஞனைய், ஆழ்வாரிடம் மிக அன்பு கொண்டு அவன் பரிமாறும் பரிமாற்றங்களைக் கண்ட ஆழ்வாருக்கே மிக வியப்பு உண்டா யிற்று. எம்பெருமானது க்ருபா ப்ரவாஹத்தின் பெருமை அளவிட முடியாதது என்று பல படியாகக் கொண்டாடுகிருர் ஆழ்வார்.

எம்பெருமான் நிரங்குஶ ஸ்வதந்த்ரன். கர்மாநுகுணமாக ஜகந்நிர்வாஹம் செய்யும் ஸமயம் பாபிகளை தண்டிக்க வேண்டிய நிலையில் அவனது தடையற்ற ஸ்வாதந்த்ரிய புத்தியே மேலோங்கிய கரையாகி நின்று, அவனது க்ருபையைப் பாபிகள் அளவில் பாயவொட்டாமல் தடை செய்யும். பாபச் செயல்களிலே ஈடுபடும் சேதனர்களோ வென்ருல், ஒருக்கால் ஈஶ்வரனது அனுக்ரஹம் தானுகப் பெருகி வந்தாலும், தங்கள் பக்கல் அது வந்து பாயாதபடி, மனோ வாக்காயங் களில் நீசர்களாய்த் தங்களது ஸ்வாதந்த்ர்யமாகிற கரையைப் போட்டுத் தடுக்க வல்லவர்கள். ஆனுல் பகவத் கிருபை மிகவும் சக்தி வாய்ந்தது. பெருவெள்ள மிட்டுப்பெருகி, இரு கரைகளையும் உடைத்துப்பாய வல்லது. ஈஶ்வரனது நிரங்குச ஸ்வாதந்த்ர்யமாகிற கரையையும், சேதனர்களின் ஔபாதிகஸ்வாதந்ர்யமாகிற கரையையும் புரளப் பெருகி வந்து விடும். இந்தக் காருண்ய வெள்ளத்தைத் தடுக்க யாராலும் முடியாது. க்ருபா ஜனகையான பிராட்டியாலும் தடுக்க முடியாது; க்ருபா பரதந்த்ரனை ஈஶ்வரனுலும் தடுக்கமுடியாது; க்ருபா பாத்ர மான சேதனராலும் தடுக்க முடியாது. பரத்வ, காரணத்வ, வ்யாபகத்வ, நியந்த்ருத்வங்கள் போன்ற மேன்மைக்கு எல்லையான பல குணங்களை உடைய வனைய், நிரங்குச ஸ்வதந்த்ரனைய் ஈஶ்வரன் நின்ருலும், அவனிடமிருந்து க்ருபை என்ற இந்த மகாகுணம் ஊற்றெடுத்துப் பெருவெள்ளமாய்ப் பெருகிவரும் நிலை யில், அது ஈஶ்வரனது ஸ்வாதந்த்ர்யத்தைக் குலைத்து, அவனையும் தனக்குப் பரதந்த்ரனுக்கிவிடும். "தொல்லருள்" என்றபடி இக்கிருபை அவனிடம் ஸ்வா பாவிகமாகவே என்றும் உள்ளது. தன்னளவில் பெருகிவந்து, தன்னை ஈஶ்வர னிடம் ஈடுபடச் செய்த இக்கிருபைதன்னை ஆழ்வார் புலபடியாகக் கொண்டாடு கிருர்.

http://acharya.org

"நான் எம்பெருமானை மறந்து ஸ்வதந்த்ர புத்தி பண்ணித்திரிந்தேன். அவனது க்ருபாவெள்ளம் கரைபுரண்டு பெருகி வந்தாலும் என்னளவில் பாயாமல் கரை போட்டுத் தடுத்தேன். ஈஸ்வரனோவெனில் என் பக்கலிலே "ஆ, ஆ", என்று வந்து கிட்டி அருள் புரிகின்றானே! இந்த க்ருபா வெள்ளத்தில் மூழ்காமல் என்னால் தப்ப முடியுமோ? விதிவாய்க்கின்று காப்பாரார்! மேலும் நான் வேண்டாதிருக்கத் தன் பேறாகவன்றோ அவன் மேல் விழுகிறான். தன்னைச் சேர்ந்தவர்கள் பக்கல் கலி தோஷங்கள் ஒன்றும் சாராதபடியன்றோ அவன் கருணை புரிகிறான். இவ்வாறு க்ருபை செய்தலே அவனது இயற்கை என்று உணர்கிறேன். மகாபாபிகளுக்கும் கூட, ஈஸ்வர ஸ்வாதந்த்ர்யத்தைக் கண்டு அஞ்ச வேண்டாதபடி தஞ்சமாயிருப்பதொரு மகா குணமல்லவோ இது! 'வெறும் புறத்திலே ஆலத்திவழிக்கும்படியான கையிலே திருவாழியைதரித்து, ஶ்ரமஹரமாய், நீல ரத்னம் போலே அழகான வடிவை எனக்கு அனுபவிக்கக் கொடுத்துள்ளாயே' என்று மெய்யே கலக்காத பொய்யைச் சொல்லி, ப்ரேம பரவசரைப் போலே நான் பேசாநின்றேன். அதே ஸமயம் எனது மனது, ப்ராக்ருத விஷயங்களைப்பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தது. 'அசுராவேசமாய் நின்ற இரண்டு மருத மரங்களின் நடுவே போய், அவை முறிந்து விழத் தப்பிப் பிழைத்தாயே! என் பொல்லா மணியே! தேனே! இன்னமுதே!' என்று அப்போது கண்டு நின்ற பரிவளான யசோதைப் பிராட்டியைப் போலே அவனது ஔதார்யத்தையும் வடிவழகையும், போக்யதையையும், அவற்றில் ஈடுபாடே இல்லாத நான் ஸஹ்ருதயமாகவே சொல்லுவது போல் பல காலும் கொண்டாடினேன். என் அகவாய் அறியாதவன் ஒருவனல்லன் அவன். உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறியும் ஸர்வாந்தர்யாமி அவன் என்று அறிந்து வைத்தும் ஸர்வக்ஞனை அவனையும் பகட்டும் சொற்களாலே கள்ளமனம் கொண்டு கொண்டாடி அவனையும் ப்ரமிக்கச் செய்தேன். எனவே நான் பொய்யே பேசிய போதிலும், அவன் எனக்கு மெய்யான பேற்றையே உபகரித்தான். எனக்கு ஸர்வவிதபோக்யமும் தானாய் அவன் என்னோடு கலந்தான். என் பொய்யான பேச்சுக்கள் மாறின; என் கள்ள மனமும் தவிர்ந்தது. நான் விட்டவன்றும் என்னை விடமாட்டாத ப்ராவண்யாதிசயத்தைக் காட்டினான் அவன். பரம யோகிகள் நெஞ்சிலும், திருப்பாற்கடலிலும், பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்திலும் இருக்கக்கடவன் அவன், நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்த என் நெஞ்சிலே ஸ்தாவரப்ரதிஷ்டையாய்த் தங்கி விட்டான். இனி அவனை விட்டு என் கொள்வன் யான், துராராதராய், வருந்தி ஆராதித்தாலும் கிடைப்பதொன்றில்லாத விஷயங்களை நான் இனி ஒருக்காலும் பற்றமாட்டேன்", என்று இவ்வாறு ஆழ்வார் தம்மையே பேச வைத்தது ஈஸ்வரனுடைய காருணிகத்வம் என்ற கிருபாகுணம்.

http://acharya.org

4. பரமாத்ம விஷயமான ப்ரேமம் ஆழ்வார்க்கு மேலும் மேலும் வளர்வது.

ஸர்வேஸ்வரனுடைய காருண்யமடியாக ஆழ்வார்க்கு அவனிடம் உண்டான ப்ரேமம் மூன்று வகையான விரக்திகளை அடிப்படையாகக் கொண்டது. பாஹ்ய குத்ருஷ்டி மதங்கள் எம்பெருமானது ஸ்வரூப, ரூப, குண விபூதிகளைத் தெளிவாகக் காட்ட மாட்டாதவைகள். எனவே அம்மதங்களை ஆழ்வார் முற்றிலும் வெறுத்தார். இரண்டாவதாக தேவதாந்தரங்களில் பரத்வ புத்தி பண்ணி ஈடுபடாதிருக்கும்படி மனம் தேறினார். மூன்றாவதாக எம்பெருமானிடத்தில் நித்யகைங்கர்யம் தவிர, வேறு பிரயோஜனங்களை அபேக்ஷிக்காது ஒழிந்தார். இந்த மூன்று வகையான விரக்தி பூர்வகமாகவே, ஆழ்வார்க்கு எம்பெருமானிடத்தில் ராகம்-அதாவது ப்ரேமம்-தோன்றி வளர ஆரம்பித்தது. இந்தப்பிரேம-முதிர்ச்சியாலே ஆழ்வார் ஒரு நாயகி அவஸ்தையை அடைந்தார். நாயகனை உடனே காணவேண்டும் என்று துடித்தாள் பராங்குச நாயகி (ஆழ்வார்).

மடல் எடுத்தாகிலும் நாயகன் எம்பெருமானைத் தன் முன் வரச்செய்ய வேண்டும் என்னும்படி நாயகிக்கு அவா பெருகியது. ஊரவர் பழிப்பர் என்று தோழி விலக்குமளவிலும் "தனது பகவத் ப்ரேமம் ஊரவர் ஏசும் எல்லையைக் கடந்து விட்டது" என்று கூறி மடல் எடுக்கையில் துணிந்தாள் நாயகி. "இத் தசையிலும் எம்பெருமான் வந்து முகம் காட்டவில்லையே" என்று தோழி சுட்டிக்காட்ட, நாயகி, "அவன் இப்போது வந்து முகம் காட்டாவிட்டாலும், இத் தசையிலும் நான் அவனை யொழிய மற்றொன்றில் பொருந்தாதபடி பண்ணினனே! அவன் செய்தபடி பொல்லாதோ—தோழி! எனது நெஞ்சமாகிற பெரிய விளைநிலத்திலே, ஊரார் பழிச் சொல்லாகிற எருவை இட்டு, எனது தாயின் ஹிதவசனமாகிய நீரை நிறுத்தி, தன் பக்கல் ப்ரேமமாகிற நெல்லை விதைத்து, முளைக்கச் செய்து விட்டான் எம்பெருமான். அந்தப்ரேமம்-காதல்-இப்பொழுது அளவு இடமுடியாதபடி கடலொத்ததாய் விளைந்து விட்டது. நெஞ்சப் பெரும் செய்யுள் காதல் கடல் புரைய விளைவித்து விட்டான் அவன். இவ்வாறு பெருகிய காதலுடன் அவனைக் காணத் துடிக்கின்றேன் யான். அவனும் வந்த பாடில்லை. விரஹதாபத்தால் நான் கலங்கித் தவிக்கையில், தோழி! இந்தப் பாழான ஊழி காலம் போன்ற ராத்ரியும் என்னை வந்து நலிய ஆரம்பித்து விட்டது. எனது எளிமை கண்டு, ராத்ரியாகிற ஊழி முன்னே நின்று என் கண்ணை மறைக்கின்றது. என் உட்கண்ணைக் காதல் மறையாநின்றது. நான் போகுமிடமெங்கும் பின் தொடர்ந்து வந்து இந்த ப்ரேம வியாதி என்னை நலிகின்றதே! இடைந்து ஒதுங்கி நிற்க ஒரு நிழலுமில்லையே! என் செய்வேன்? இக்காதல், கழிய மிக்கதோர் காதலாய் நாள் கழியக்கழிய விஞ்சி வளரா நின்றது. பகவத்ப்ரேமியாய் என்னைக் காண விரும்பும் என் அன்னை கூட, "தர்மிலோபமே வந்து விடுமோ" என்று பயப்படும் அளவுக்கு அறவிஞ்சியது. நான் என் செய்வேன்" என்று இவ்வாறு தன் ப்ரேமத்தின் வளர்த்தியை விவரிக்கிருள்.

http://acharya.org

பிறகு பராங்குச நாயகி உருவு வெளிப்பாட்டாலே திருக்குறுங்குடி நம்பியின் வடிவழகை ஸ்மரித்து சிறிது நேரம் தரிக்கப் பார்க்கிருள். கடைசியில் அந்த அம்சமும் போய் அவளுக்குத் துவட்சியே மிகுந்தது. திருவாய்ப்பாடியில் பெண்கள் க்ருஷ்ண விரஹத்தில் அவன் படிகளை அனுகரித்துத் தரித்தாப் போலே, தானும் உபயவிபூதியுக்தன் படிகளான, அவனது ஜகத் காரணத்வாதிகள் தொடக்கமான அத்புதகர்மங்கள் அனைத்தையும் குறிப்பிட்டு, "அவற்றை நானே செய்தேன்" என்று அனுகார முகத்தாலே பகவத்விஷயத்தைக் கிட்டிப்பேசி தரிக்கப் பார்க்கிருள் பராங்குசநாயகி.

இப்படி தரிக்க வேண்டும்படியான கலக்கம் பிறந்தவிடத்திலும் அவன் வந்து முகம் காட்டாமையாலே தமக்கு அவன் பக்கல் ஏற்பட்டுள்ள ப்ரேம மிகுதி ஸ்வரூபமாயிருக்க, அத்தை உபாயம் என்று நினைத்துத் தம்மைக் கைவிடப் பார்க்கிருனே என்று நினைத்துத் தம் கையில் ஒன்றுமில்லாமையை "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று அவனுக்கு அறிவித்து, தமக்கு அவனலல்லது ஒரு க்ஷணமும் தரிக்க முடியாமையை "உன்னை விட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்" என்று அறிவித்து வானமாமலை எம்பெருமான் திருவடிகளிலே வேரற்ற மரம் போலே புகலற்று விழுந்து சரணம் புகுகிருர் ஆழ்வார்.

ஆழ்வார் இவ்வாறு பெரிய ஆர்த்தியோடே சரணம் புகச் செய்தேயும் எம்பெருமான் முகம் காட்டாமையாலே, "ஆஸ்ரிதார்த்தமாக எழுந்தருளி இருக்கிறவன் நம் கார்யம் செய்யாமை இல்லை; இன்ன இடங்களிலே செய்யக் கடவோம் என்று வ்யவஸ்திதமாயிருக்கும்; நாலு நாள் தாழ்த்ததேயாகிலும் அவன் நிச்சயம் தமக்கு முகங்காட்டுவான்" என்று மனம் தேறி, திருக்குடந்தையிலே சென்று புக்கு தம் அபேக்ஷிதங்களைப் பெறப் பார்க்கிருர். இவ்வாறு இவர் கிட்டிய அளவிலும், ஆராவமுதன் திருக்கண்களை அலர விழித்து இவரைக் குளிர நோக்கவில்லை; திருப்பவளத்தைத் திறந்து ஒரு வார்த்தை அருளிச்செய்யவில்லை; இவரை அணைக்கவும் செய்யவில்லை. "ஆராவமுதே, உனது போக்யதை எனது சரீரத்தையும் சிதிலமாக்கா நின்றது' என்று தனது பரமார்த்தியையும் வெளிப்படுத்தினர். இவரது பகவத்ப்ரேமம் இவரது சரீரத்தை "வைகலும் மெலிய" என்றபடி ஸர்வகாலமும் மெலியும்படி செய்தது, இவரது மர்மத்திலே புகுந்து ஆத்மாவையும் இடைவிடாமல் த்ரவத்ரவ்யமாம்படி செய்யும் நிலையில் காதல் வளர்ந்தது.

5. விஷ வ்ருக்ஷபலங்கள் கை கூடியவரானர்

இவ்வாறு வளர்ந்தது மட்டுமல்ல. பாகவதர்களுடன் கூடப்பெறும் பேறும் இவர்க்குக் கிட்டியது. எனவே ஆழ்வார் விஷவ்ருக்ஷ பலங்கள் கை கூடினவர்.

இகலோக வாழ்க்கை ஒரு விஷ மரத்திற்கு ஒப்பானது. இந்த விஷமரத்திலும் அம்ருதத்திற்குச் சமமான இரண்டு சுவையுள்ள பழங்கள் தோன்றும். அவைதான் பகவத்பக்தியும், பாகவதர்களோடு கூடுகையும், இந்த இரண்டு பலங்களும் ஆழ்வாருக்குக் கைபுகுந்தன.

http://acharya.org

6. பாகவத ஸமாகமம்

ஆழ்வார் கழிய மிக்கதோர் காதல்கொண்டு பகவதனுபவம் செய்வதோடு த்ருப்தியடையாதவர். உலகத்திலுள்ள ஸம்ஸாரிகளும் தம்மைப்போல் பகவதனுபவம் செய்யவேணும் என்னும் இச்சையாலே உபதேச முகத்தாலே அவர்களைத் திருத்த முனைகிறார். ஸம்ஸாரிகளை நோக்கி, "ஐஸ்வர்ய கைவல்யங்கள் அல்பாஸ்திரமானவை. க்ஷுத்ர தேவதைகளை பரதேவதைகள் என்று நினைத்து, வெறுக்கத்தக்க பதார்த்தங்களைக் கொண்டு அவைகளை பூஜிக்கிறீர்கள். ஸ்ரீமந் நாராயணன் கொடுத்துள்ள ஐஸ்வர்யாதிகளை வைத்துக் கொண்டு தான் ப்ரம்ஹ ருத்ராதி தேவதைகள் பரதேவதைகள் போல் மினுக்கிக் கொண்டு திரிகிறார்கள். அத்தேவதைகளை விட்டு விடுங்கள். அவர்களை உண்டாக்கி நியமிக்குமவனான புருஷோத்தமன் ஸ்ரீய: பதியை ஆஸ்ரயித்துத் தொண்டு செய்வதே பரம புருஷார்த்தமாகும்" என்று இவ்வாறு இவர் தெளிய உபதேசிக்கக் கேட்டுத் திருந்தி அடிமை புக்கார்கள் எண்ணிக்கையற்ற ஸ்ரீவைஷ்ணவர்கள். "ஆட்செய்து ஆழிப்பிரானைச் சேர்ந்தவன்" என்று அவர்களைத் திருத்துகையாலே இவரும் அடிமை செய்தவரானார். ஆழ்வாராலே திருந்தி அடிமைபுக்க ஸ்ரீவைஷ்ணவர்களையும், அவர்களைத் திருத்துகையாகிற அடிமையைச் செய்த ஆழ்வாரையும் காண லோகாந்தரமான ஸ்ரீவைகுண்டத்திலிருந்து நித்ய ஸூரிகள் திரளாக வந்தார்கள். த்வீபாந்தரமான ஶ்வேதத்வீப வாஸிகளாய் முக்தப்ராயரான தேவர்களும் கூட்டமாக வந்தார்கள். நேமிப்பிரான் தமர்களான இவர்களைக் கண்டதும், "கண்டோம், கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்" என்று ஸந்தோஷப் பெருக்காலே பலகாலும் வாய்வெருவி, "பொலிக, பொலிக பொலிக," என்று அத்திரள் அபிவ்ருத்தமாயிடுக என்று மங்களாசாஸனம் செய்து இனியராகிறார் ஆழ்வார்.

7. ஸம்ஸாரிகளைத் திருத்துவது

இன்னும், ஆழ்வாரது மனக்குறை நீங்கவில்லை. நாராயண பரத்வத்தை ப்ரஹ்லாதன் எவ்வளவு உபதேசித்தும் திருந்தாத ஹிரண்யனைப் போலவும், "ராமனிடம் ஸீதையைக்கொண்டு சேர்த்து, நல்லவனாவாய்" என்று விபீஷணன் எவ்வளவு உபதேசித்தும் திருந்தாத ராவணனைப் போலவும், "ஒன்றும் தேவில்" நாராயண பரத்வத்தை ஆழ்வார் தெளிய உபதேசித்தும் திருந்தாதார் பலபடியாகக் காணப்பட்டார்கள். ஹிரண்ய ராவணாதிகள் போல் அஸுர ராக்ஷஸப்ரக்ருதிகளாய்க் காணப்பட்ட ஸம்ஸாரிகளை "அரக்கர், அசுரர் பிறந்தீர் உள்ளீரேல்" என்று ஆழ்வார் அவர்களைத் தேடிப்பிடித்து அவர்களுக்கு மீண்டு உபதேசம் செய்யலானார்.

http://acharya.org

"ஸம்ஸாரிகளே, நான் மீண்டும் உங்களுக்குச் சொல்லும் ஹிதவசனங்களைக் கேட்டு உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். சரீரத்தை முடித்துப்பிராணுபஹாரம் பண்ணும் வியாதி, அது போன்ற பகை, பசி முதலான தேசதோஷங்கள் பல. கலிகால தோஷத்தின் பலனுகை பதார்த்த ஸ்வபாவங்களே மாறிவிடும். இவ்வாறான, தேசகால தோஷங்களைத் தங்கள் ஸஞ்சாரத்தாலே உருமாய்ந்து போகும்படி செய்யவல்லவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள், இவர்கள் பகவதநுபவ ஹர்ஷப்ரகர்ஷத்தாலே, பெரிய ஆரவாரத்தோடே புகுந்து ப்ரதிகூலர்களுக்குச் சிறிதும் இடமில்லாமல் எல்லா இடங்களிலும் வியாபித்துப் பரம்பியுள்ளார்கள். நீங்கள் அநந்ய ப்ரயோஜனர்களாய், அவர்களை மேவித்தொழுது உஜ்ஜீவிக்கப் பாருங்கள். மேலும் சொல்கிறேன். தேவதாந்தரங்களிடத்தில் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையை மாற்றிக்கொள்ள உங்களுக்கு விருப்பமிருக்காது. ஆனால் உண்மையை நீங்கள் புரிந்து கொள்வது மிக அவசியம். நீங்கள் வணங்கி வழிபடும் தெய்வங்கள் உண்மையிலேயே ஏற்றமில்லாதவர்கள். சில ஆபாஸ வசனங்களாலும், யுக்திகளாலும் அத்தேவதைகளுக்கு நீங்களே ஏற்றம் கற்பித்து உபாஸித்து வருகிறீர்கள். அறிவாளிகள் நகைப்பார்கள் என்று பயந்து, உங்கள் நெஞ்சுக்குள்ளேயே அத்தேவதைகளை நிறுத்தி உபாஸித்து வருகிறீர்கள். ராஜாவானவன் அரசாங்க அலுவல்கள் பலவற்றையும் கவனிக்க ஆங்காங்கே சில பேர்களை நியமித்து வைத்திருப்பது போல், "நிறுத்தினுன் தெய்வங்களாக அத்தெய்வநாயகன் தானே", என்கிறபடியே, ஸர்வேஶ்வரனே அத்தேவதைகளை உங்கள் தன்மைக்கேற்ப, ஆஶ்ரயணீயர்களாக நிறுத்தியுள்ளான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ப்ரம்ஹா, ருத்ரன், இந்திரன் போன்ற திரண்ட தேவதாஸமூகங்கள், க்ருஷ்ணனுடைய அஸாதாரண விக்ரஹத்தையே சுபாஶ்ரயமாகப் பற்றி, இந்தப்பரந்த உலகத்தில் எங்கும் ஒக்க வியாபித்து நிற்கிறார்கள். எனவே, நீங்களும் அவர்களைப் போலவே எம்பெருமான் கண்ணனை, ஆஶ்ரயிப்பீர்களானால், கலியுக காரணமாக ஏற்படும் தோஷங்களால் நீங்கள் பீடிக்கப்பட மாட்டீர்கள்", என்று உபதேசித்துத் திருந்தாத ஸம்ஸாரி சேதனர்களையும் திருத்தி விஷ்ணு பக்திபரராக்கினுர். "அரக்கர், அசுரர்" என்ற அவர்களது தன்மையை மாற்றி, விஷ்ணுபக்தி பரோதேவ:" என்றபடி தேவசப்தத்தால் அழைக்கலாம்படி பகவத் பக்திபரராக்கினுர் அவர்களையும்.

8. உபாய அத்யவஸாயிகளைத் திருத்துவது.

முன்பே திருந்தியுள்ளவர்களில் சிலர், பாகவதர்களைக் கண்டால், உகக்குமவர்களாய் இருந்த போதிலும், அவர்கள் உபாய அத்யவஸாய தசையில் நின்று, ப்ராப்ய தசையில் ஊன்றி நிற்கும் ஆழ்வாரையும், அவர் நிற்கும் தசையிலிருந்து கை வாங்குவதே நல்லது என்று பொடியுமளவுக்கு முற்பட முனைந்தார்கள். ஆழ்வார் அவர்களையும் தனது ஸ்வரூபயாதாத்ம்யத்தின் நிலையைப்

புரிந்து கொள்ள செய்கிறார். வெறும் கண்ணுக்குப் புலப்படாத பொருள்கள், அஞ்ஜநத்தைக் கண்ணிலிட்டால் எப்படிப்புலப்படுமோ, அவ்வாறே அவர்களது உபாய அத்யவஸாய ஞானத்தின் மேலே பக்தியாகிற ஸித்தாஞ்ஜனத்தை இட்டு, "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர், என்னை முனியாதே" என்றபடி, ப்ராப்ய வைலக்ஷண்யத்தின் பெருமையைக் காட்டவல்ல பக்தியை அவர்களுக்கும் உபதேச முகத்தாலே உண்டாக்குகிறார்.

★ ★ ★ ★

(1) அருள்கொண்டாடுமடியவரின்புற
அருளினனவ்வருமறையின் பொருள்
அருள்கொண்டாயிரமின்றமிழ்பாடினன்
அருள் கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே.

(2) இதுவோ திருநகரி ஈதோ பொருநல்
இதுவோ பரமபதத்தெல்லை — இதுவோதான்
வேதம் தமிழ்செய்த மெய்ப்பொருட்கும் உட்பொருளாய்
ஓதும் சடகோபனூர்

(3) சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ — தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கு
முளவோ பெருமானுக்கு

(4) வளந்தழைக்க வுண்டாமென் வாசமணத்தாலென்
தெளிந்த கலைகற்குமென் — சீ சீ — குளிர்ந்தபொழில்
தண்குருகூர் வாழிச்சடகோபனூர் எங்கள்
வண்குருகூர் என்னாத வாய்

---

(5) குறு முனிவன் முத்தமிழும் என்குறளும் நங்கை
சிறு முனிவன் வாய்மொழியின்சேய்.

http://acharya.org

சரண்யத்வம்

(1) என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மி னென்று கருணையாலே ஸர்வலோக பூதேப்ய; என்றவை கடலோசை யும் கழுத்துக்கு மேலுமாகாமல் உபாயத்வம் கல்வெட்டாக்குகிற சரண்யன் (2) அஜ்ஞாநாசக்தி யாதாத்ம்ய ஜ்ஞானங்களளவாலன் றிக்கே அங்குற்றேன் என்னுன் புணராயென்னும்படி மெய்யமர் பக்தி பூமபலமாவும் அநந்ய கதித்வமுடைய தமக்குப் (3) பாதமே சரணாக்க அவையே சேமங் கொண்டு ஏகசிந்தையராய், திர்யக்குகளையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து, விளம்பரோஷம் உபாயத்தாலேயழிய, (4) உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே ஸப்ர காரமாக ஸக்ருத்கரணீய மென்று—புராண பௌராணிகர் த்யாஜ் யாம்சமாக்கின (5) சிதசித் ப்ராப்ய ப்ராபகாபாஸங்களைக் கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும் ஆளீர் மேவீர் ஊதிர் என்று ததீய சேஷமாக்கியும், புறத்திட்டுக்காட்டியென்று, ப்ரஸங்கிக்கில் முடியும்படி விட்டு (6) தந்தைதாய் உண்ணுசோறு மாநிதி பூவை யாவையுமொன்றேயாக்கி (7) தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோவென்னுமார்த்தியோடே (8) திரிவிக்ரம னுகக் குறள் கோலப் பிரானுய் அடியை மூன்றையிரந்த வன்கள்வன் கண்முகப்பே அகல்கொள் திசைவையம் விண்ணும் தடவந்த தடந் தாமரைகளை (9) இணைத்தாமரைகள் காண இமையோரும் வரும் படி சென்று சேர்ந்த உலகத்திலதத்தே கண்டு அகலகில்லேனென்று பூர்வ வாக்யமநு ஸந்தித்தவர், (10) பிணக்கறத் தொடங்கி வேதப் புனித விறுதி சொன்ன ஸாத்யோபாய ச்ரவண ஸசோக ஸஜா தீயர்க்கு (11) தந்தனன் மற்ருேர்களைகணிகலம் புகுந்தேனென்று ஸ்வ ஸித்தோபாய நிஷ்டையை உக்த்யநுஷ்டானங்களாலே காட்டு கிருர் ஆரும்பத்தில்.

ஆசார்யஹ்ருதயம்

224-6

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. வித்வான் திருமலை அனந்தாண் பிள்ளை
க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி திருப்பதி

(1) இவர் ஸ்வக்ராமமான காஞ்சியிலிருந்து திருப்பதி சென்று அங்குப் பாடசாலையில் திவ்யப்ரபந்த மூலத்தை யதிகரித்துப் பின்பு அங்குள்ள கலாசாலையில் ந்யாயஶாஸ்த்ரம் பயின்று சிரோமணிப் பட்டம் பெற்று, அங்கேயே 25 ஆண்டுகாலம் ந்யாயோபாத்யாயராகப் பணியாற்றியவர். இப்போது விஶ்ராந்தி பெற்றவர்.

(2) ஸ்ரீ. உ. வே. வித்வான் புரிசை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யமும், ஸ்ரீ. உ. வே. வித்வான் கச்சிக்கிடாம்பி யாமுநாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் பகவத் விஷயரஹஸ்ய க்ரந்தங்களும் ஸேவித்தவர்.

(3) ஸ்ரீ. உ. வே. அக்காரக்கனி ஸம்பத்குமாராசார்யஸ்வாமி ஸந்நிதியில் காஞ்சியில் ப்ரக்ருதம் கீதாபாஷ்யம் ஸேவித்து வருகிறார்.

(4) ஸ்ரீ. உ. வே. வித்வான் காஞ்சி P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் ஸம்ப்ரதாயார்த்தங்கள் பல கேட்டு வருகிறார்.

(5) ஸ்ரீ. உ. வே. P. B. A. ஸ்வாமிக்கு இந்த ஸ்வாமி "மைத்துனன் குமாரர்" என்பது குறிப்பிடத்தக்கது.

(6) ஸ்ரீ. உ. வே. P. B. A. ஸ்வாமியுடைய தேஹ ஸம்பந்தமும் ஆத்ம ஸம்பந்தமும் பெற்றவர் இவர்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

திருவாய்மொழி ஆறும் பத்தின் ஸாரம்

ஸ்ரீ.உ.வே. T. A. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி-திருப்பதி

பத்துப் பதிகங்களின் பொருட்சுருக்கம்

கீழ் ஐந்தாம்பத்தில் நோற்றநோன்பு தொடங்கி நான்கு பதிகங்களால் ஆழ்வார் எம்பெருமானை நான்கு தடவைகள் சரணம் புகுந்தபோதிலும் தம்மிஷ்டம் நிறைவேறாமையால் வருந்தி ஒரு நாயகியின் நிலையை அடைந்து ஆற்றாமை கரைபுரண்டு, அதனை அண்மையிலுள்ள திருவண்வண்டூரெம்பெருமானிடம் விண்ணப்பித்து வரும்படி குருகு நாரை முதலிய பக்ஷிகளைத் தூதுவிடுகிறார் வைகல் பூங்கழிவாயில். பக்ஷிகளால் அறிவிக்கப்பட்ட எம்பெருமான் சிறிது தாமதித்து வர, பராங்குசநாயகி ப்ரணய ரோஷத்தால் போகு நம்பீ! உன்னுடனே கூடேனென்று ஊட, அவ்வூடலைத் தீர்த்து க்ருதக்ருத்யனான எம்பெருமானுடன் கூடுகிறாள் மின்னிடைமடவாரில். தம் ஊடலைத் தீர்த்துச் சேரவிட்டுக் கொண்டதைக் கண்டு ஆச்சர்யமடைந்த ஆழ்வார் விருத்தவிபூதிகத்வத்தைக் (ஓரிடத்தில் ஒரு காலத்தில் சேராத வறுமை செல்வம், சுவர்க்கம் நரகம் முதலிய பலவற்றைத் தன்னோடு சேர்த்து நியமித்து வரும் தன்மையைக்) காட்டக் கண்டு புகழ்ந்து, ஸம்ஸாரிகளுக்கு-அவன் திருவடிகளல்லது புகலில்லையென்று உபதேசிக்கிறார் நல்குரவில். பிறந்தவாற்றில் (5–10) 'உன் சிறந்த குணத்தால் உருகுந்தன்மையைப் போக்கி, தரித்து நின்று குணாநுபவம் செய்யும்படி அருளவேணும்' என்று செய்த ப்ரபத்திக்குப் பயனாக எம்பெருமான் ஸ்ரீப்ருந்தாவனசரிதங்களை அனுபவிப்பிக்க அனுபவித்து 'என்ன குறைவெனக்கு' என்று களித்துப் பேசுகிறார் குரவையாய்ச்சியரில். அவ்வனுபவம் தம்மை மோஹிக்கச் செய்ய, தமக்குப் பிறந்த துக்கத்தையும் தொலைவில்லிமங்கலத் தெம்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்த தம் தன்மையையும் தாய்மார்க்குத் தோழி கூறுவதாகப் பேசுகிறார் துவளில் மாமணிமாடத்தில். இப்படிப் பேசிய தோழிதானும் பராங்குச நாயகியைப் போல் மோஹிக்க' தரித்திருக்கிற தாய் தன் பெண்ணின் வளை முதலியவை தாமே விட்டு நீங்குகிற படியைக் கண்டு 'என்பெண் வளையிழந்தாள், மாமை நிறமிழந்தாள்' என்று இழந்தவற்றைத் தனித்தனியே சொல்லிக் கதறுகிறாள் மாலுக்குப் பதிகத்தில். இவ்வாறு புலம்பித் தாயும் மோஹிக்கவே முன்பு தாய் உச்சரித்த, மால் வையமளந்த மணாளன் முதலிய திருநாமங்களைக் கேட்டு உணர்ந்தெழுந்த பராங்குச நாயகி திருக்கோளூர்க்குச் செல்ல, பின்புணர்ந்த தாய் படுக்கையில் மகளைக் காணாமல் கலங்கி, திருக்கோளூரெம்பெருமானிடம் மிக்க ஈடுபட்டிருந்த தன் மகள் அவ்வூர்க்கே சென்றிருக்க வேண்டும் என்று அறுதியிடுகிறாள் உண்ணுஞ்சோற்றில். திருக்கோளூர்க்குப் புறப்பட்ட தலைவி போக முடியாமல் நன்னூரருகிலுள்ள தோட்டத்தில் தங்கியிருந்து மறுபடியும்

http://acharya.org

பக்ஷிகளைத் தூதுவிடுகிறாள் பொன்னுலகில். தூதுவிட்ட பக்ஷிகள் தமது அழுகுரலைக் கேட்டுப் போக முடியாமல் இரங்கவே, 'பகுத்தறிவற்ற பக்ஷிகளும் இரங்கும்படியிருக்கும் நம்மழுகுரலைக் கேட்டால் பரமசேதநனை பரமபதநாதன் இரங்காமலிரான்' என்று நினைத்துத் தம் கண்டத்வனியாலே ஸ்ரீவைகுண்டத்திலிருந்து அவனை அழைத்துக் கொள்ளக் கூப்பிடுகிறார் நீராய் நிலனாயில். இங்ஙனம் கூப்பிட்டும் எம்பெருமான் வந்து முகங்காட்டாமையினால் வருந்திய ஆழ்வார்—ஆச்ரிதர்க்கு முகங்காட்டுவதற்காகவே ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியதையும், பிற்பட்ட ஸம்ஸாரிகளும் தன்னையிழக்கவேண்டாதபடி நாச்சிமாருடன் திருவேங்கட மலையில் நின்றருளினபடியையும் எம்பெருமான் காட்டக் கண்டு, பிராட்டி புருஷகாரமாகத் திருவேங்கடமுடையான் திருவடிகளில், தமக்கு வேறுபுகலில்லாமையை விண்ணப்பித்துச் சரணம் புகுகிறார் உலகமுண்ட பெருவாயனில்.

எம்பெருமான் ஆழ்வாருக்குக் காட்டித்தந்த கல்யாண குணம்
ஶரண்யத்வம்

ஶரண்யத்வமாவது ஶரணவரணார்ஹத்வம். பக்தி முதலிய வேறு உபாயமும் வேறு ரக்ஷகரும் இல்லாத அடியவர்களால் தஞ்சமாகப் பற்றுதற்குத் தகுதியுடைமை என்றபடி. இக் குணம் எம்பெருமானிடம், ஐந்தாம் பத்தின் குணமான கருணையென்னும் குணங்காரணமாக வெளிப்படுவதாகும். "ஏறு சேவகனார்க்கு என்னையும் உளளென்மின்கள்" 6-1-10 (எங்கும் ப்ரஸித்தமான பௌருஷமுடைய இராமபிரானிடம், அவரால் காக்கப்படுவோர்திரளில் நானுமொருத்தி உளேனென்று சொல்லுங்கள்) என்று தம்மைப்பற்றவும், "திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன் சரணே" 6-3-7 என்று அளவற்ற அறிவாற்றல் படைத்தவர்களைப் பற்றவும், "வன்சரண் சுரர்க்காய்" 6-3-8 என்று தேவர்களைப் பற்றவும் எம்பெருமான் புகலாயிருக்கும் தன்மையைச் சொல்லி, "அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மினென்றென்று அருள்கொடுக்கும்....பெருமான்" 6-10-11 என்று திருவேங்கடமுடையான் தன்னடியாரெல்லாரையும் சரணமடையும்படி, தன் திருவடிகளைத் தன் திருக்கையால் காட்டிக் கொண்டே, கல்லில் (திருமலையில்) யாராலும் இல்லைசெய்ய முடியாமல் பேராது நின்று, தான் உபாயமாயிருக்குந் தன்மையைக் கல்வெட்டாகும்படி அருளிச் செய்கின்றமையைக் கூறியிருப்பதனால், இன்னார் இனையாரென்ற வாசி பாராமல் எல்லோராலும் சரணமாகப் பற்றப்படுந்தகுதியுடைமை (அநாலோசிதவிசேஷாசேஷாலோகசரண்யத்வம்) என்னும் எம்பெருமானுடைய கல்யாணகுணம் இப்பத்தின் ப்ரதானகுணமாகும் என்பது ஆசார்யஹ்ருதயகாரரின் திருவுள்ளக் கருத்து.

http://acharya.org

ஆழ்வார் அவனருளால் பெற்ற பேறு ப்ரேமபலோபாயத்தே புகுதல்

"கழிய மிக்கதோர் காதல்" என்னப்பட்ட மிக மிகவுயர்ந்த ப்ரேமத்தால் எம்பெருமானையனுபவிக்கத் தாமதம் பொறாமல் விரைந்து "அலர்மேல்மங்கை யுறை மார்பா உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" 6—10—10 என்று ஆழ்வார் எம்பெருமானை உபாயமாக வரித்தல் என்பது அவர் அவனருளால் பெற்ற பேருகும். தன்னிடமுள்ள ஶரண்யத்வத்தைக் காட்டித்தந்த எம்பெருமானை ஆழ்வார் அவனருளால் ஶரணம் பற்றினுரென்றபடி.

ஆழ்வார் ஸம்ஸாரிகளுக்குச் செய்யும் உபதேசம்

"திருவிண்ணகர்ச் சேர்ந்த் அப்பன் தந்தனன் தனதாள்நிழலே" (தன் பாத நிழலை எனக்குத் தந்து எனது ஊடற்கோபமென்னும் அழலைப் போக்கினுன்) 6-4-9 என்று தம்பேற்றைப் பேசி, "திருவிண்ணகர் மன்னுபிரான் கழல் களன்றி மற்ருேர் களைகணிலம் காண்மின்களே" 6—4—10 (திருவிண்ணகரில் நித்யவாஸம் செய்கிற உபகாரகனுடைய திருவடிகளைத் தவிர வேறு தஞ்ச மில்லை, இதை நீங்களும் காணுங்கள்) என்று தாம் தஞ்சமாக நினைத்திருக்கும் திருவடிகளையே தஞ்சமாக நினைக்கும்படி ஸம்ஸாரிகளுக்கு உபதேசித்துத் தமது உறுதியைக் காட்டுகிறுர்.

இப்பத்தில்—தோழி தாய் மகள் பாசுரங்கள்

தோழி பாசுரம் துவளில் மாமணி மாடப்பதிகம் ஒன்றே. தாய்ப்பாசுரம் மாலுக்கு உண்ணுஞ்சோறு என்னும் இரண்டுமாகும். வைகல் மின்னிடை பொன்னுலகு என்ற இம்மூன்றும் மகள் பாசுரம். மற்ற நல்குரவு குரவை நீராய் உலகுமுண்ட என்ற இவை நான்கும் ஆழ்வார் தாமான தன்மையிலருளிச் செய்தவை. ப்ரணவார்த்தமான ஶேஷஶேஷிபாவம் (அடியவனும் எஜமானனுமாகுந்தன்மை) என்னும் ஸம்பந்தஜ்ஞானம், நம: பதார்த்தமான ஸித்தோபாயத்தின்கண் துணிவு, ஶேஷியாய் ஶரண்யனை எம்பெருமானுக்குள்ள ஏற்றத்தை நாராயணுய என்ற பதத்தினுல் அறிந்தவனுக்கு உண்டாகும் ப்ராப்யத்வரை என்ற இம் மூன்றும் முறையே தோழி தாயார் மகள் என்ற பெயர்களைப் பெறும் என்று ஆசார்யஹ்ருதயம் கூறும்.

இப்பத்தில் மங்களாசாஸநம் பெற்ற திவ்யதேசங்களும் அங்கங்கு எம்பெருமான் ஆவிஷ்கரித்த கல்யாண குணங்களும்

வைகலில் திருவண்வண்டூர், நல்குரவில் திருவிண்ணகர், துவளில் மாமணிமாடத்தில் திருத்தொலைவில்லிமங்கலம், உண்ணுஞ்சோற்றில் திருக்கோளூர், உலகமுண்ட பெருவாயனில் திருவேங்கடம் என்ற இவ்வைந்தும் இப்பத்தில் ஆழ்வாரால் மங்களாஶாஸனம் செய்யப்பட்ட திவ்யதேசங்களாகும். இவற்றில் எம்பெருமான் வெளிப்படுத்திய கல்யாண குணங்களை ஆசார்யஹ்ருதயத்தைத் துணையாகக் கொண்டு காண்போம்.

http://acharya.org

1. திருவண்வண்டூர். இதில் எம்பெருமான் ஆவிஷ்கரித்த கல்யாண குணம் ரக்ஷணஸ்தைர்யம். அடியவரைக் காப்பதில் திண்ணியனாயிருக்கை என்றபடி. "வ்யவஸாயஜ்ஞர் ரக்ஷணஸ்தைர்யம் பம்போத்தரதேசஸ்தம்" என்பது ஆசார்ய ஹ்ருதயசூர்ணிகை. நோவுபட்டாரைக் காப்பதில் எம்பெருமானுக்குள்ள உறுதிப்பாட்டை அறிந்த ஸீதா பிராட்டியைப் போலே இருப்பவர்களுடைய ரக்ஷணத்தில் யாராலும் அசைக்கமுடியாதபடி இருக்கும் அவனுடைய திண்மையென்னும் குணம் பம்பையின் வடகரையான திருவண்வண்டூரில் நிலைபெற்று நிற்கும் என்பது அதன் கருத்து. "மாறில் போரரக்கன் மதிள்நீறெழச் செற்றுகந்த ஏறுசேவகனார்க்கு என்னையுமுளளென்மின்கள்" என்று (6-1-10) தேவர் முனிவர் விபீஷணன் முதலியோரிடம் தான் செய்த ப்ரதிஜ்ஞையின்படி இராவணனைக் கொன்று அவர்களை ரக்ஷித்த திண்மையையுடைய இராமபிரானைக் கூறியதனால் இது விளங்குகிறது.

2. திருவிண்ணகர். குணம் விருத்தகடநாஸாமர்த்த்யம். சேராதவற்றைச் சேர்க்கும் ஆற்றலென்றபடி. "விளம்ப விரோதமழிக்கும் விருத்தகடநாஸாமர்த்யம் நன்னகரிலே விஸ்தீர்ணம்" என்பது சூர்ணிகை. ஆழ்வார் தூதுவிட்டும் தாமதித்து வந்த எம்பெருமானை "போகுநம்பீ", "கழகமேறேல் நம்பீ" என்னும்படிப் பிறந்த விரோதத்தை "அழித்தாயுன் திருவடியால்" என்னும்படித் திருவடியால் அழித்து விரோதமுடைய ஆழ்வாரைத் தன்னோடு சேர்த்துக் கொண்ட ஆற்றல், நல்குரவு செல்வு முதலிய விருத்தங்களை விபூதியாகத் (தானிட்ட வழக்காகத்) தன்னோடு சேர்த்துக் கொண்டு நிற்கின்றமையை வெளிப்படுத்திய திருவிண்ணகராம் நன்னகரில் பரந்திருக்கும் என்பது அதன் பொருள்.

3. திருத்தொலைவில்லிமங்கலம். குணம்-கடிதகடகவிகடநாபாந்தவம், தன்னோடு சேர்க்கப்பட்ட தலைவிக்கும் சேர்த்த தாய்மார்க்கும் பிரிவை உண்டு பண்ணுவதான-எம்பெருமானிடமுள்ள தந்தை தாய் முதலிய உறவு முறையென்றபடி "கடித கடக விகடநா பாந்தவம் அவ்வூரிலே த்விகுணம்" என்பது சூர்ணிகை. "ஏழையை...தொலைவில்லிமங்கலம் கொண்டுபுக்கு...பிரானிருந்தமை காட்டினீர்" என்றபடி எம்பெருமானைக் காட்டி அவனுடன் தலைவியைச் சேர்த்த தாய்மார்க்கும் சேர்க்கப்பட்ட தலைவிக்கும், "தொலைவில்லிமங்கலம் தொழுமிவளை உமக்காசையில்லை விடுமினோ" என்று தோழி கூறியபடிப் பிரிவைப் பண்ணுமதான, "தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த சடகோபன்" என்கிறபடியே எம்பெருமானுக்குள்ள உறவு முறையானது— "அவ்வூர்" எனப்பட்ட திருத்தொலைவில்லிமங்கலம் இரட்டைத் திருப்பதியாகையால் அங்கு இரட்டித்திருக்குமென்பது அதன் கருத்து.

4. திருக்கோளூர் குணம் ஆபத்ஸகத்வம். "கைம்முதலிழந்தார் உண்ணும் நிதியின் ஆபத்ஸகத்வம் புகுமூரிலே ஸம்ருத்தம்" என்பது சூர்ணிகை. எம்பெருமானுடன் கலந்து வாழப்பெருமையால்நைந்து அதனால் உண்மையில் ப்ராபகமும் ப்ராயமுமாகாமல் அங்ஙனம் தோற்றுகிற சங்கு முதலியவை தாமே கழிகையாலே கைம்முதலிழந்தவர்கள் உண்ணுஞ்சோறு முதலிய எல்லாம்

http://acharya.org

தானேயாக அனுபவிக்கும் வைத்தமாநிதியெம்பெருமானுடைய ஆபத்ஸகத்வம்- ஆபத்துக்காகச் சேமித்து வைத்த நிதிபோன்ற எம்பெருமானுடைய ஆபத்தில் தோழனுயுதவுந்தன்மை-பேறுபெறுவார் புகுமூரான திருக்கோளூரில் ஸம்ருத்த மாயிருக்குமென்பது அதன் கருத்து.

5. திருவேங்கடம், குணம் வாத்ஸல்யம். தோஷத்தை போக்யமாகக் கொள்ளுந் தன்மையே அது. "மண்ணோர் விண்ணோர் வைப்பில் போகின்ற ஏழுலகுக்குயிர் பாசம்வைத்த நிகரில் வாத்ஸல்யம் உஜ்ஜவலம்" என்பது சூர்ணிகை. மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் நிதிபோலே அடையத் தகுந்த திருவேங்கடமலையில் எல்லார்க்கும் எல்லாவித பந்துவுமாய்க் கொண்டு, எல்லார்க்கும் ஆத்மாவாயிருக்கிற அந்தர்யாமியெம்பெருமானுடைய குண மான-"என் கண் பாசம் வைத்த" (தோஷம் நிறைந்த என்னிடம் ப்ரீதியை வைத்த) என்று பாசமாகவும் "நிகரில் புகழாய்" (ஒப்பற்ற புகழையுடையாய்) என்று ஒப்பற்ற புகழாகவும் சொல்லப்பட்ட வாத்ஸல்யம் திருவேங்கடமுடை யானுடைய திருமேனியிலே ப்ரகாசிக்குமென்பது அதன் கருத்து.

இனி ஒவ்வொரு பதிகத்திலுமுள்ள விசேஷார்த்தங்களில் சிலவற்றை அனுபவிப்போம்.

1. வைகல்

பக்ஷிகளைத் தூதுவிடும் இப்பதிகத்தால் ஆழ்வார் கடகஸமாச்ரயணம் பண்ணுகிறார் என்று ஆசார்யர்கள் அருளிச் செய்வர். கடகராவார்—எம்பெரு மானோடு நம்மைக் கொண்டு சேர்க்கும் ஆசார்யர் முதலியோர். இவர்களைப் பக்ஷிகளென்பது—ஆகாசத்தில் விரைந்து செல்லுதற்குத் தக்க பக்ஷங்கள்— சிறகுகள் இரண்டு பறவைகளுக்கு உள்ளது போல், பரமாகாசத்திலுள்ள எம்பெருமானிடம் விரைந்து சென்று சேர்வதற்குக் கருவியான ஞானம் அநுஷ் டானம் என்ற இரண்டும் இவர்களுக்குச் சிறகுகளாக அமைந்த படியினுல் என்பர். அப்படிப்பட்ட ஆசார்யர் முதலியோரை விளித்து, நீங்கள் என் நிலைமையை எம்பெருமானிடம் விண்ணப்பித்து அவனோடு என்னைச் சேர்க்க வேணும் என்று வேண்டுவதே இப்பதிகத்தின் ஆழ்ந்த கருத்தாகும்.

இரண்டாம் பதிகத்தில் எம்பெருமான் ஆழ்வாருடைய ஊடலைத் தீர்க்கப் போவதை, இப்பதிகத்தின் கடைசிப்பாட்டின் "மின்கொள்சேர் புரிநூல் குறளாய் அகல்ஞாலங்கொண்டவன் கள்வன்" என்ற பகுதியால் ஆழ்வார் குறித்திருப்பதாக வ்யாக்யாதாக்கள் அருளிச் செய்வர். மஹாபலியின் மமகாரத்தைப் போக்கி எம்பெருமான் எல்லாவுலகங்களையும் கைக்கொண்டது

http://acharya.org

போல், சேரோம் என்றிருந்த செருக்கைப் போக்கிப் பராங்குசநாயகியை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளப் போகிறானென்பது இங்கு வாமனசரிதத்தால் குறிக்கப்படுகிறது. 'மின்னிடை மடவார்க்குக் கிழக்கு வெளுக்கிறபடி'' என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தி மிகவும் ரஸிக்கத் தக்கதாம்.

2. மின்னிடை

இப்பதிகத்தின் இறுதிப்பாட்டிலுள்ள "ஆய்ச்சியாகிய அன்னையால் அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டழுகூத்தவப்பன்'' என்ற க்ருஷ்ணசரிதத்தினால் ஓர் சுவையுள்ள பொருள் குறிக்கப்படுகிறது. எம் பெருமான் பராங்குச நாயகியின் ஊடலைத் தீர்க்க வந்தபோது, ''நீ எங்கள் திரளில் புக வேண்டா' என்று அவள் கூற, அவ்விடம் விட்டு நீங்காமல் எளி வரவுபட்டு அவன் நின்ற நிலையானது-வெண்ணெய் களவு போயிற்றென்கிற வார்த்தை பிறந்தபோது 'இவனே களவு செய்தான்' என்று யசோதை வசவு கூற, வசவுண்டு அவ்விடம் விட்டு நீங்காமல் கண்ணுங் கண்ணீருமாய் நின்ற நிலை போலிருந்தது என்பதே அச்சுவைப் பொருள்.

3. நல்குரவும்

இப்பதிகம் விபூதியோகத்தைக் காட்டுவதென்று கொண்டால், அதையே கூறும் மாயாவாமனனே (7-8) பதிகத்திற்கும் இதற்கும் என்ன வாசியென்றால்- ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒன்று சேராத (மாறுபட்ட தன்மையைக் கொண்ட) வறுமை செல்வம் முதலியவற்றைத் தனக்கு விபூதியாக (தானிட்ட வழக்காக) உடைமையாகிய விருத்த விபூதியோகம் நல்குரவில் கூறப்படுகிறது, வெவ் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு, ஒன்றோடொன்று சேர்ந்துள்ள பஞ்சபூதம் முதலியவற்றைத் தனக்கு விபூதியாக உடைமையாகிற விசித்ரவிபூதியோகம் மாயாவாமனனேயில் கூறப்படுகிறதென்று வாசிகாணத்தக்கது.

4. குரவையாய்ச்சியர்

இப்பதிகத்திற்கு மின்னிடைமடவார் பதிகத்தோடுதான் ஸங்கதி— உன்னோடு கூடேன் என்று அகல நினைத்த ஆழ்வாரைக் கூடுவேனென்னும்படி பண்ணித் தன்னோடு சேர்த்துக் கொண்டபடியை நினைத்து, இங்ஙனம் செய்ய வல்லவன் குரவை முதலாம் கோலச் செய்கைகள் செய்த கண்ணனேயாவன் என்றெண்ணி இப்பதிகத்தை ஆழ்வார் பாடினாராகையால். நடுவில் விருத்த விபூதியோகத்தை அவன் காட்டியதும் இவர் பேசியதுமான நல்குரவுப்பதிகம் ப்ராஸங்கிகம் என்பர் அரும்பதவுரையாசிரியர்,

http://acharya.org

க்ருஷ்ணசரிதமே கூறும் இப்பதிகத்தின் நடுவில், "மாணியாய் நிலங்கொண்டமாயன்" என்று வாமநசரிதம் புகுந்தது-தன்னிஷ்டம் நிறைவேறினால் ஜீவிப்பது, இல்லையேல் முடிவது, இரப்பிலே தழும்பேறின திருமேனி, குறைவற்ற அழகு, இன்னாரினையாரென்ற வாசிபாராமல் எல்லோரையும் தீண்டுவது' ஆச்ரயித்தவர்களிடம் பக்ஷபாதம், அமாநுஷமான சேஷ்டிதங்கள் ஆகியவற்றால் வாமனாவதாரம் க்ருஷ்ணாவதாரத்தோடு ஒத்திருக்கையால் என்பர் வ்யாக்யாதா.

இப்பதிகத்தில் "நாயகன் முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகும் தன் வாயகம் புகவைத்துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம் கேசவன்" என்ற கடைசிப்பாட்டில் "நாயகன்……அல்லனுமாம்" என்று ஏழுலகுக்கும் நாயகனாந் தன்மை முதலிய ஸர்வேச்வரத்வம் கூறுவதனால் அப்பகுதி விருத்தவிபூதியோகத்தாலே ஸித்தமான நல்சூரவில் கூறிய ஸர்வேச்வரத்வத்தின் அநுவாதமென்றும், கேசியைக் கொன்ற க்ருஷ்ணனைக் கூறும் கேசவன் என்னும் சொல் க்ருஷ்ணனைக் கூறும் இச்சூரவைப் பதிகத்தின் அநுவாதமென்றும் சிலரது கொள்கை. "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்தி: அபி ச அப்யய:" என்ற மகாபாரத ஶ்லோகத்தின்படி உலகத்தின் படைத்தல் காத்தல் அழித்தல், முதலிய காரியங்களெல்லாம் க்ருஷ்ணனுடையனவாகக் கொள்ளுவதனால், "நாயகன்… ..கேசவன்" என்ற முழுதுமே க்ருஷ்ணசரிதம் சொல்லும் சூரவைப் பதிகத்தின் அநுவாதமேயென்று மற்றும் சிலருடைய கொள்கை.

"உருகாமல் வரித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே" என்று இப்பதிகத்தின் ப்ரமேயம் ஆசார்யஹ்ருதயத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. பகவத் குணங்களையும் சேஷ்டிதங்களையும் அநுபவிக்கத் தொடங்கினவாறே "ஊடு புக்கெனதாவியை உருக்கியுண்டிடுகின்ற" என்றபடியே அவை மனதையுருக்கியதனால் நன்றாக அனுபவிப்பதற்குறுப்பாக "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்" என்று பிறந்தவாற்றில் (5-10) ஆழ்வார் அவனை உபாயமாக வரித்தது- இப்பதிகத்தில் "நண்ணி நான் வணங்கப் பெற்றேன் எனக்கார் பிறர் நாயகரே" என்று அவனுடைய க்ருஷ்ணாவதார குணசேஷ்டிதங்களை எப்போதும் முறையாகக் கிட்டி தரித்து நின்று அனுபவித்து கர்விக்கும்படி பலித்ததென்று கருத்து.

சன்மம் பல பல (3-10) என்ற பதிகத்தில் "நானோர் குறைவிலனே" என்றும், வீற்றிருந்தேழுலகில் (4-5) "இனி யென்ன குறை" என்றும், இப்பதிகத்தில் "என்ன குறைவெனக்கே" என்றும் களித்துப் பேசுகின்றமை மூன்று திருவாய்மொழிகளிலும் ஒத்திருக்க இவை தம்முள் வேறுபடுமாறு என்னையெனில், சன்மம் பல பலவில்–சொன்னால் விரோதப் (3-9) பதிகத்தில் தாம் உபதேசித்தும் திருந்தாமல் சோறு கூறைக்காக மன்னாத மானிடரையே வாழ்த்திக் கெட்டுப்போகும் புன்புலவரைக் காட்டிலும் எம்பெருமானையே

http://acharya.org

பாடுவதாகிய தமக்குள்ள தனித் தன்மையை நினைத்துக் களித்தார் என்றும், மண்ணையிருந்து துழாவியில் (4-4) போலி கண்டு மயங்கிய மயக்கம் தீர எம்பெருமான் உபய விபூதியையும் காட்டிக் கொடுக்கக் கண்டு அநுபவித்து "போற்றியென்றே கைகளாரத்தொழுது" என்கிறபடியே பல்லாண்டு பாடிக் களித்தார் வீற்றிருந்தேழுலகில் என்றும், குரவையாய்ச்சியர் பதிகத்தில்-பரபத்தியின் பயனாக க்ருஷ்ண குணசேஷ்டிதங்களில் ஒன்று விடாமல் அநுபவித்துக் களிக்கிறார் என்றும் வாசி நோக்கத்தக்கது.

5. துவளில்மாமணிமாடம்

இப்பதிகம்—ஆழ்வாருக்கு "பொய்ந்நின்றஞானம்" (திருவிருத்தம்-1) தொடங்கி இதுவரையில் உண்டான ப்ராவண்யாதிஶயத்தைக் கூறும். ப்ராவண்யாதிஶயமாவது-எவ்விதத்தாலும் யாராலும் மீட்க முடியாதபடி ஆழ்வாருடைய கரணத்ரயமும் (மநோ வாக் காயங்கள்) எம்பெருமானிடத்திலேயே ஈடுபட்டிருக்கும் தன்மையேயாகும். "இத் திருவாய்மொழி ஆழ்வார் ப்ரக்ருதி (ஸ்வபாவம்-தனித்தன்மை) சொல்லுகிறதென்று நம்முதலிகள் (ஆசார்யர்கள்) எல்லாரும் போர (மிக) விரும்பியிருப்பர்கள்" என்றுள்ள ஈடு ஸேவிக்கத்தக்கது. இந்த ப்ராவண்யம் "தொலைவில்லிமங்கலம் தொழுமிவளை உமக்காசையில்லை விடுமினோ", சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த....சடகோபன்" என்றுள்ள சந்தைகளினால் அறியலாம்.

6. மாலுவுக்கு

ஏறாளுமிறையோனும் (4-8) என்னும் பதிகத்தால் ஆழ்வார் எம்பெருமான் ஆசைப்படாத தம்முடைமைகளும் தம்முயிரும் தமக்கு வேண்டா என்று அவற்றைத் தாமே உபேக்ஷித்தார். இம் மாலுக்கில்-அவை, வேண்டா என்று தாம் உபேக்ஷிக்கும்படி இராமல் அவை தாமாகவே தம்மை விட்டுப் போனமையை அருளிச் செய்கிறார் என்று இவ்விரண்டு பதிகங்கட்கும் உள்ள வாசி காணலாம்.

"கட்டெழில் சோலை நல்வேங்கடவாணனைக், கட்டெழில் தென்குருகூர்ச் சடகோபன் சொல், கட்டெழிலாயிரத்திப்பத்தும் வல்லவர், கட்டெழில் வானவர் போக முண்பாரே" என்ற இப்பதிகத்தின் இறுதிப்பாட்டில், வேங்கடவாணனை சடகோபன் சொல் ஆயிரத்து என்று அந்வயம் கொண்டு ஈட்டில் ஒரு விசேஷம் அருளிச் செய்யப்படுகிறது. ஆழ்வார் திருவேங்கடமுடையானைத் திருவாய்மொழியாலே துதித்தார்; "திருவேங்கடத்தென்னானையென்னப்பன் எம்பெருமான் உளனாக—என்நாவிலின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்" (3-9-1) என்றிருக்குமவரன்றோ—என்பதே அவ்வர்த்தம்.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருத்தொலைவில்லிமங்கலம் தேவர்பிரான் அரவிந்தலோசநன்

7. உண்ணுஞ்சோறு

இப்பதிகவ்யாக்யானத்தின் அவதாரிகையில் ஓர் ஐதிஹ்யம் அருளிச் செய்யப்பட்டுள்ளது. திருக்கோளூர்க்குத் தனியே சென்ற பராங்குசநாய கியைப் பற்றி அஞ்சவேண்டுமா, அல்லது "கள்வன் கொல்" (பெரியதிருமொழி 3-7) திருமொழியிலுள்ளபடி நெடுமால் துணையாப் போன பரகாலநாயகியைப் பற்றி அஞ்சவேண்டுமா? என்று காலக்ஷேபகோஷ்டியில் ஆளவந்தார் சிஷ்யர் களை வினவ, அவர்கள்—தனியே போனவளுக்கு அஞ்சவேண்டுமே தவிர ஒரு வரைத் துணையாக் கொண்டு போனவளுக்கு ஏன் அஞ்சவேண்டும்? என்று விடையளிக்க, அதன்மேல் ஆளவந்தார்—"அகலகில்லேன்" என்றும் "பித்தர் பனிமலர்மேல்பாவைக்கு" என்றும் சொல்லுகிறபடியே பித்தர்களான பிராட்டி யும் பெருமாளுமாகிய இருவரும் ஒருவர்க்கொருவர் ஆசைப்பட்டு மோஹித்துத் தம்மைக் கடித்ததையும் தம்மேலூர்ந்ததையும் அறியார்கள். ஆகையால் அங்கு இருவரைப் பற்றியும் அஞ்சவேண்டும். அங்குத் திருத்தாயார் "அணியாலி புகுவர் கொலோ" என்றதனை ஒரு தடவைக்கு ஒன்பது தடவைகளாகச் சொல்லி (கொல் என்னும் ஐயப்பொருள்படும் இடைச்சொல்லின் வாயிலாக) அணியாலி புகுவரோ அன்றிக்கேலங்காத்வாரத்தில் சென்று புகுவரோ என்று ஐயமுற்றுக் கவலைப்படுவதைக் காண்பதனால் இருவர்க்கும் அங்கு அஞ்சவேண்டுமென்பது உறுதிப்படுகிறது. இங்குப்பராங்குச நாயகியோவெனில்—திருக்கோளூர் சென்று புகுந்தாலன்றி தரியாதவளாகையால் சென்றே தீருவள். ஆதலால் இவளுக்கு அஞ்சவேண்டா—என்று அருளிச் செய்தாரென்பதே அந்த ஐதிஹ்யம்.

உண்மை இவ்வளவேயானாலும் எங்குப் போனாலும் இருவராயல்லது போகார்கள் அங்கு (கள்வன்கொல்லில்). இங்குத் தனியே போன பராங்குச நாயகி என்ன பாடு படுகிறாளோ என்று திருத்தாயார் வருந்திக் கூறுகிறார். வருந்துகிறவர்களெல்லாரும் தம்தம் வருத்தமே பெரிதென்று நினைப்பது உலகத் தில் இயல்பு தானே.

ஆசார்யஹ்ருதயத்தில்-துவளில் மாலுக்கு உண்ணுஞ்சோறு என்ற மூன்று பதிகங்களுக்கும் ப்ரமேயமாக "புராணபௌராணிகர் த்யாஜ்யாம்ச மாக்கிய சித சித்ப்ராப்ய ப்ராபகாபாஸங்களைக் கைவிந்து கைகழல எல்லாங் கிடக்க நினையாதகன்று, தந்தை தாயுண்ணுஞ்சோறு மாநிதி பூவை யாவையும் ஒன்றே யாக்கி" என்று அருளிச் செய்யப்பட்டுள்ளது. இதன் விவரணம் வருமாறு-"பிதரம் மாதரம் தாராந்........ரத்நாநி தநதாந்யாநி.......ஸர்வதர்மாந் ச ஸந்த்யஜ்ய சர்வகாமாந் ச ஸாக்ஷராந், லோகவிக்ராந்த சரணௌ சரணம் தேऽ வ்ரஜம் விபோ" என்ற பவிஷ்யத் புராணமும் அப்புராணத்தை

http://acharya.org

நன்கறிந்து அதன்படி கத்யத்தில் சரணாகதி செய்த ஸ்ரீபாஷ்யகாரரும் சரணாகதிக்கு அங்கமாகப் பரித்யஜித்த (விட்ட) தகப்பன் தாய் மனைவி முதலிய சித்துக்கள் (உயிருள்ள பொருள்கள்) ரத்நம் தநம் தான்யம் முதலிய அசித்துக்கள் (உயிரில்லாத பொருள்கள்) ஆகிய ப்ராப்ய ப்ராபகா பாஸங்களை (= உண்மையில் அடைப்படும் பயனும் அதனை அடைவிக்கும் உபாயமும் பகவானேயாகையால் மேலெழுந்தவாறு பார்க்கும் போது பயனும் உபாயமும் போல் நம்மால் ப்ரமிக்கப்படுமவற்றைக்) கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும் தந்தை தாய் உண்ணுஞ்சோறு மாநிதி பூவையாவையும் ஒன்றேயாக்கியும் போந்தார் ஆழ்வார். அன்னை மீர் அணிமாமயில் சிறுமானிவன் நம்மைக் கைவலிந்து' (6-5-7) என்று பராங்குச நாயகி தாய்மாரையும் தோழிமாரையும் கை கடந்து அவர்களை விட்டமையும், "இழந்தது சங்கே" (6-6-1) இத்யாதிகளின்படி சங்கு முதலியவை கழலக்கண்டமையும், "இதெல்லாம் கிடக்க இனிப்போய்" (6-7-9) என்று—எல்லாம் கண்ணனென்று சொல்வது தாமரை திருத்துழாய் முதலிய நற்பொருள்களைக் கண்டால் இவை எல்லாம் என் கண்ணனுக்கு என்பது தொடக்கமாக இங்கிருந்து அநுபவிக்கும் போகங்களையெல்லாம் விட்டுப் போனமையும், "எம்மை ஒன்றும் நினைத்திலளே" (6-7-9) "இன்றெனக்குதவாதகன்ற" (6-7-6) என்று-இவர்களையும் இவற்றையும் ஒரு பொருளாக நினையாமல் அகன்று போனமையும், "தேவபிரானையே தந்தை தாயென்றடைந்த" (6-5-11) "உண்ணுஞ்சோறு... ...எல்லாம் கண்ணன்" (6-7-1) "வைத்த மாநிதியாம் மதுசூதனையே அலற்றி" (6-7-11) "பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால்திருநாமங்களே" (6-7-3) என்றிவற்றால்-தந்தை தாய் முதலிய பந்துக்கள் சோறு நீர் வெற்றிலை முதலாகும் தாரக போஷக போக்யவஸ்துக்கள், ஆபத்தில் உதவும் நிதி இவையெல்லாம் எம்பெருமான் ஒருவனேயாகவும், பூவை முதலியவற்றால் பிறக்கும் மகிழ்ச்சி திருமால்திருநாமங்களைச் சொல்லவே உண்டாகுமென்றும் கூறியதனால் முன்னே விட்ட சிதசித்துககள் அனைத்தும் பகவத் விஷயமொன்றேயென நினைத்தமையும் கூறப்பட்டுள்ளமை காண்க.

8. பொன்னுலகாளீரோ

வைகல் பூங்கழிவாய் போலே இப்பதிகமும் பக்ஷிகளைத் தூதுவிடும் முகத்தால் ஆழ்வார் அநுஷ்டித்த கடகஸமாச்ரயணத்தையே காட்டும். இவ்விரண்டிற்கும் வாசியுமுண்டு. அது வருமாறு—கடகஸமாச்ரயணம் மட்டுமே வைகலில். இங்கு அதோடு கூட, "புள்ளினங்காள்! நீங்கள் எனது நிலைமையை எம்பெருமானுக்கு விண்ணப்பித்து வந்து, பரமபதத்தையும் இப்புவனி முழுவதையும் நான் தர நீங்கள் ஆள வேணும், கிளிகாள்! தோழிமார் முன்பு என்கையில் இருந்து நெய்யடிசிலையும் பாற்சோற்றையும் தினந்தோறும் நான் ஊட்ட நீங்கள் உண்ணவேணும், வண்டினங்காள்! என் குழலில்

http://acharya.org

வீற்றிருந்து அதிலுள்ள மலரின் தேனை நீங்கள் பருகவேணும்'' என்று கூறி வண்டுகளுக்கு போக்யமான நெய்யடிசில் முதலியவற்றைத் தமக்கு போக்யமான பரமபதத்தோடு ஸமானமாக அவர்களுக்கு ஸமர்ப்பித்தும் கூறப்பட்டிருப்பது அதனில் இதுக்குள்ள வாசி. ''திர்யக்குக்களையிட்டு ஸ்வாபிப்ராயத்தை நிவேதித்து'' என்று வைகலின் ப்ரமேயமும், ''ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீயசேஷமாக்கி'' என்று இப்பதிகத்தின் ப்ரமேயமும். ஆசார்யஹ்ருதயத்தில் அருளியுள்ளமை காணத்தகும்.

மேலும், வைகலில், விபவாவதாரமான இராமபிரானிடம்—திருவண்வண்டூரிலுள்ள சிறந்த செல்வம் அவனை மறப்பித்த ஆர்த்தரக்ஷணதீக்ஷிதத்வத்தை (நோவுபட்டாரைக் காப்பதில் விரதமுடைமையை) உணர்த்துதற்காகத் தூதுவிட்டார் ஆழ்வார், பொன்னுலகாளீரோவில்—தான் படைத்த உலகைக் காக்கும் பராக்கினால் அவன் மறந்த ஐச்வர்யத்தை (அடியார்களின் ஆனந்தத்தையே தனக்கு ஆனந்தமாகக் கொண்டுள்ளமையை) அறிவிப்பதற்காகப் பரமபதநாதனிடமும் அந்தர்யாமியிடமும் தூதுவிட்டார் என்று வாசி கூறலாம். ''தம்பிழையும்'' என்று தொடங்கும் ஆசார்யஹ்ருதயசூர்ணிகையின் வ்யாக்யானத்தில் இது விரிவாக ஸேவிக்கத்தக்கது.

9. நீராய் நிலனாய்

இப்பதிகத்தின் ஈட்டவதாரிகையில் அர்ஜுனனுக்கும் ஆழ்வாருக்கும் ஒப்புமை கூறப்பட்டுள்ளது. அது வருமாறு—''பச்யாமி தேவாந்தவ தேவ தேஹே'' (கீதை 11-15) இத்யாதிப்படியே அர்ஜுனன் எம்பெருமானுடைய விச்வரூபம் கண்டபிறகு அது தனக்கு ஆச்சரியத்தையும் அச்சத்தையும் விளைத்ததனால், அதை மறைத்துத் தனக்குப் பூர்வபரிசிதமான ஸௌம்யமான ரூபத்தையே காட்டவேணுமென்று ''கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தம்'' (கீதை 11-46) இத்யாதியால் ப்ரார்த்தித்தது போல, ஆழ்வாரும்—நல்குரவுப்பதிகத்திலும் இங்கு ''நீராய் நிலனாய்...சிவனாய் அயனாய்'' என்ற இரண்டடிகளிலும் ஜகதாகாரனாயிருக்கும் தனது இருப்பைக் காட்டிய எம்பெருமானைக் குறித்து, இது எனக்குக் கண்ணைக் கவர்வதாய் அநுபவிக்கத்தக்கதாக இல்லை அப்படியிருக்கிற—''கூராராழி வெண்சங்கேந்திய — உன்னுடையதேயான ஆகாரத்தோடு வாராய்—என்று ப்ரார்த்திப்பதனால் இவ்வொப்புமை காண்க.

இத்திருவாய் மொழியில் ''ஞாலத்தூடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும், சாலப்பலநாள் உகந்தோறு உயிர்கள் காப்பானே! கோலத்திருமாமகளோடு உன்னைக் கூடாதே, சாலப்பலநாள் அடியேனின்னும் தளர்வேனோ'' என்ற மூன்றாம் பாட்டு ப்ரணவத்தில் உள்ள அகாரத்தின் பொருளை விவரிக்கிறது என்பர் வ்யாக்யாதா:— அவ-ரக்ஷணே என்னும் தாது அடியாகப் பிறந்த அகாரம்-எம்பெருமானை ரக்ஷகன் என்று மட்டும் காட்டுமேயொழிய வேறொன்றும் காட்டாது. இப்பாட்டு—'காப்பான்' என்று அகாரார்த்தைக் காட்டுவதோடு நில்லாமல், ''ஞாலத்தூடே நடந்தும்....இருந்தும்' என்று

http://acharya.org

எல்லாவிதத்தாலும் ரக்ஷிப்பதையும், 'சாலப்பல நாள் உ(யு)கந்தோறு(ம்) என்று எல்லாக்காலத்திலும் ரக்ஷிப்பதையும், 'உயிர்கள்' என்றுள்ள பன்மையால் எல்லாவுயிர் களையும் ரக்ஷிப்பதையும், 'கோலத்திருமாமகளோடு காப்பானே' என்று அவன் செய்யும் ரக்ஷணம் பிராட்டியின் புருஷகாராதீநம் என்பதையும் விளக்கிக் கூறுவதனால் அகாரார்த்தவிவரணமாதல் பொருந்தும்.

மேலும் இது அர்த்த பஞ்சகத்தை அறிவிக்கும் திருமந்த்ரத்தின் பொருள்களையும் காட்டுமென்று அருளிச் செய்வர் வ்யாக்யாதா. 'கோலத்திருமாமகளோடு உன்னை' என்று ச்ரிய: பதியான பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபமும், 'அடியேன்' என்று திருமாலடியவனான ஜீவாத்மாவின் ஸ்வரூபமும், 'உயிர்கள் காப்பான்' என்று எம்பெருமானாகிய ஸித்தோபாயத்தின் ஸ்வரூபமும், 'உன்னைக் கூட' என்று பரப்ரஹ்மத்தையடைவதாகிய புருஷார்த்தத்தின் ஸ்வரூபமும், 'கூடாதே தளர்வேனோ' என்று அதனை அடைய முடியாமல் தடுக்கும்—(தளர்ச்சிக்குக் காரணமான) அழுக்குடம்பு முதலிய விரோதியின் ஸ்வரூபமும் கூறப்படுவதனால் இது திருமந்த்ரார்த்தப்ரதிபாதகமென்பதும் தகும்.

10. உலகமுண்ட பெருவாயா

இக் கடைசித் திருவாய்மொழியில் முதல் ஒன்பது பாட்டால் ஆழ்வார் தாம் தஞ்சமாகப் பற்றத் தகுதிபெற்ற எம்பெருமான்படிகளைப் பேசி, பத்தாம் பாட்டால் எம்பெருமானைச் சரணம் புகுகிறார். பிராட்டி புருஷகாரமாகச் சரணம் புகுதலை விளக்கும்—'அகலகில்லேன்' என்னும் அட்பாசுரம்.

இனி ப்ரபத்திக்கு விஷயநியமமும், பிராட்டியின் புருஷகாரம் இருந்தே தீர வேண்டிய நிர்ப்பந்தமும், முன்பு செய்த நான்கு ப்ரபத்திகளை விட இந்த ப்ரபத்திக்குள்ள வாசியும், அகலகில்லேன் பாசுரம் த்வயத்தின் பூர்வவாக்யார்த்தாநுஸந்தாநரூபமென்பதும் வ்யாக்யாநத்தை ஒட்டி விண்ணப்பிக்கப்படும்.

ப்ரபத்தியின் விஷயநியமம்

ப்ரபத்திக்கு விஷயநியமமாவது—எம்பெருமானுடைய ஐந்து நிலைகளில் ஐந்தாவதான அர்ச்சாவதார நிலையிலேயே ப்ரபத்தி அநுஷ்டிக்க வேண்டியதென்னும் நிர்ப்பந்தம். அது வருமாறு—பரமபதத்திலுள்ள எம்பெருமான், ஜீவாத்மாவுக்கு பகவானை ஆச்ரயிக்கவேணுமென்று ஆசை பிறந்தபோதே ஆச்ரயிக்க முடியாதபடி வெகுதூரத்திலுள்ளான். ப்ரஹ்மாதி தேவர்களால் மட்டும் ஆச்ரயிக்கலாம்படித் திருப்பாற்கடலில் உள்ள வ்யூஹ மூர்த்தியும் அப்படியே. ராமக்ருஷ்ணதிரூபம் கொண்டு அவதரித்த எம்பெருமானோ ஸமகாலத்தில் பிறந்த பாக்யவான்களுக்கேயன்றிப் பிற்பாடரான நமக்கு உதவாமல் காலத்தால் மிக முற்பட்டிருப்பான். அந்தர்யாமியெம்பெருமான் எல்லாவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லாருடைய ஹ்ருதயத்திலும் எழுந்தருளியிருந்தாலும் யோகிகளுக்கன்றி நம்கண்ணுக்குப் புலப்படான். இக்குறைகளில் ஏதுமின்றி எங்கும் எக்காலத்திலும் எல்லார்க்கும் ஆச்ரயிக்கலாம்படியான பெருமை

http://acharya.org

யோடு நம் கண்ணுக்குத் தென்பட்டு, நம் காரியத்தைச் செய்து முடித்தற்குத் தக்க ஜ்ஞான சக்திகள் நிறையப் பெற்று ஸதா ஸேவை ஸாதிக்கும் அர்ச்சாவதார எம்பெருமானே நம்மால் ப்ரபத்தி செய்யத்தக்கவன். அவர்களுள் நித்யஸூரிகள் ப்ரஹ்மாதி தேவர்கள் நித்யஸம்ஸாரிகளான மநுஷ்யர்கள் வானரம் யானை முதலிய விலங்குகள் ஆகிய எல்லார்க்கும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் திருவேங்கடமுடையானே மிக முக்கியமானவன். இதுதான் விஷயநியமம்.

பிராட்டி புருஷகாரத்தின் நிர்ப்பந்தம்

பகவானுக்கே அடிமைப்பட்டிருக்கும் ஜீவாத்மா நேரே அவனையே சரணுகப் பற்றுமல் பிராட்டியை முன்னிட்டுப் பற்றவேண்டிய நிர்ப்பந்தம் எதற்கு? என்று நஞ்சீயர் முதலிய சிஷ்யர்கள் கேட்க அதற்கு பட்டர் அருளிய ஸமாதாநம் வருமாறு— இராவணனுக்கும் காகாஸுரனுக்கும் இராமபிரானேடு—உண்மையில் அடியவன் எஜமானனென்னும் ஸம்பந்தமும், காகாஸுரன் மூவுலகும் சுற்றிக் காப்பாரற்று முன்னே வந்து விழுந்ததனுலும், வஜ்ராயுதம் முதலியவற்றுக்குச் சளைக்காத இராவணன் இராம பாணத்தால் அடியுண்டு மனங்கலங்கிக் கையிலுள்ள வில்லையும் வீசியெறிந்து நின்றதனுலும் செயலற்று நின்ற நிலையும் இருவர்க்கும் ஒக்கும். ஆகையால் இருவரையும் அவர் காப்பாற்றியிருக்க வேண்டும். பிராட்டியிடம் அபசாரத்தையே முக்கியமாகக் கொண்டால் இருவரையும் கொன்றிருக்க வேண்டும். இராவணன் வேதவதியின் சாபத்திற்கு அஞ்சிப் பிராட்டியைக் கிட்டாமலிருந்ததையும், காகாஸுரன் அங்ஙனல்லாமல் கிட்டித் திருமார்பைக் குத்திப் புண்படுத்தியதையும் நோக்கினுல் இராவணனை விட்டுவிட்டு, காகத்தையே வதைத்திருக்கவேண்டும். ஆனுல் இதற்கு நேர்மாருக, காகம் தலைதப்பிற்று, இராவணனே தலையறுப்புண்டு மாண்டான். இதற்குக் காரணம்— காகம் விழுந்தபோது பிராட்டி பெருமாளருகில் இருந்தமையும், இராவணன் செயலற்று நின்ற போது அவள் அவனருகில் இல்லாமையும்தான். ஆகையால் பிராட்டியை முன்னிட்டே பெருமாளைச் சரணம் புகவேண்டும். தகப்பனை விடத் தாய் மக்களிடம் அதிகப் ப்ரீதியுடையவளாகையால் அவர்கள் செய்த குற்றத்தைத் தகப்பனிடம் சொல்லாமல் மறைத்து விடுவாளொருத்தியன்ருே? தன் வார்த்தையைக் கேளாத இராவணனுக்கும் உபதேசம் செய்து அவனை நல்வழிப்படுத்த நினைத்தவள்—தன்னை மிகவும் வருத்திய ராக்ஷஸிகளைச் சித்ரவதை செய்ய எண்ணிய திருவடியிடம் மன்ருடி 'உலகில் தவறு செய்யாதவர்யார், நீ இவர்கள் திறத்தில் இரங்கவேணும்' என்று உபதேசித்து அவர்களைக் காப்பாற்றியவள்—தன் சொல்லைக் கேட்கும்படித் தன்னிடம் மிக்க அன்பு கொண்ட பெருமானிடம் நம்மைப்பற்றிப் புருஷகாரம் (சிபார்சு) செய்து நம்மை அவன் காக்கும்படிச் செய்வாள் என்பதைத் தனிப்படச் சொல்ல வேண்டுமா? இதனுலும் பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டிய நிர்பந்தம் அறியலாம்—என்பதே.

http://acharya.org

முன்பு செய்த ப்ரபத்திகளைக் காட்டிலும் இந்த ப்ரபத்திக்கு உள்ள வாசி

முன்பு நோற்ற நோன்பு தொடங்கி நான்கு தடவைகள் ப்ரபத்தி செய்திருக்க, இவ்வுலக முண்டபெருவாயனில் ப்ரபத்தி செய்கிறாரே, அவற்றை விட இதற்கு ஏதாவது விசேஷ முண்டோ என்றால்—அங்கெல்லாம் பிராட்டியைச் சொல்லும் ஸ்பஷ்டமான சப்தம் இல்லை, இங்கு அது உண்டென்பதே வாசி. பிராட்டியின் புருஷகாரம் அவசியமானதென்பது முன்னே கூறப்பட்டமையால் அப்படிப்பட்டவளை வெளிப்படையாகக் கூறிய இவ்விடத்தில் செய்யப்பட்ட ப்ரபத்தியே உயர்ந்ததென்னத் தடையில்லையன்றோ?

இவ்வாசியை ஒரு உவமையாலே விளக்கியருளுகிறார் வ்யாக்யாதா 'கீழில் ப்ரபத்திகள் திருமந்த்ரம் போலே; இது த்வயம் போலே' என்று. அதைச் சற்று விரிவாகக் கூறுகிறார்கள் அரும்பதவுரையாசிரியர்கள்:—திருமந்த்ரத்தில் ரக்ஷகனைச் சொல்லும் அகாரம், ரக்ஷணம் பிராட்டியின் அதீனமாகையால் அவன் மார்பை விட்டுப் பிரியாத பிராட்டியையும் சொல்லிற்றேயாகக் கொள்ளவேணும். அப்படிக் கொள்வது அர்த்தஸ்வபாவத்தினால்தான், சப்தத்தின் சக்தியினால் அன்று. த்வயத்திலோவென்றால்—"ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று பிராட்டியைச் சொல்லும் ஸ்ரீ என்கிற சொல்லே உள்ளது. அது போல—நான்கு தடவைகள் முன்பு ப்ரபத்தி செய்த நான்கிடங்களில், எம்பெருமானைச் சொன்னது அவனை விட்டு நீங்காத அவளையும் கூறினபடியாகவே கொள்ளவேணுமென்கிற ந்யாயத்தால் லக்ஷ்மீஸம்பந்தம் (புருஷகாரமாக லக்ஷ்மீஸம்பந்தம்) ஆழ்வாரால் அருளிச் செய்யப்பட்டது இங்கோவெனில் 'திருமாமகள் கேள்வா' 'அலர்மேல் மங்கையுறைமார்பா' என்று—புருஷகாரமாக லக்ஷ்மீஸம்பந்தம், அவளை ஸ்பஷ்டமாகக் கூறும் திருமாமகள், அலர்மேல்மங்கை என்ற சப்தத்தாலேயே அருளிச் செய்யப்பட்டுள்ளது என்று.

அகலகில்லேன் என்னும் பாசுரம்
த்வய பூர்வவாக்யார்த்தா நுஸந்தாநரூபம்

'ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே" என்கிற த்வயமந்த்ர பூர்வவாக்யத்தில் உள்ள ஸ்ரீசப்தார்த்தம், 'அலர்மேல் மங்கை' என்றும், மதுப் பின் பொருளான நித்யயோகம் (பெருமாளுடன் பிராட்டிக்குள்ள இடைவிடாதசேர்த்தி) 'அகலகில்லேன் ...... உறைமார்பா' என்றும், நாராயண சப்தார்த்தமான வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்ய குணங்கள் நான்கும் 'நிகரில் புகழாய்' தொடங்கி, திருவேங்கடத்தானே' என்று நான்கு விளிகளாலும்' சரணசப்தார்த்தம் 'உன்னடிக்கீழ்' என்றும், ப்ரபத்யே என்ற

http://acharya.org

தன் பொருள் 'அமர்ந்து புகுந்தேன்' என்றும், ப்ரபத்யே (பற்றுகிறேன்) என்பதற்கு எழுவாயாக வந்து புகுந்த அஹம் (நான்) என்பதன் பொருளை 'அடியேன்' என்றும், அந்த அதிகாரியின் ஸ்வரூபங்களாய், அங்குச் சொல்லப் படாத ஆகிஞ்சந்யம் (வேறு உபாய மின்மை), அநந்யகதித்வம் (வேறுகாப் பாரின்மை) என்ற இரண்டும் 'புகலொன்றில்லா' என்றும், இப்பாட்டில் அநுஸந்திக்கப்பட்டிருக்கிறபடியால் இது த்வய பூர்வவாக்யார்த்தாநுஸந்தான ரூபமென்று ஆசார்யர்கள் அருளிச் செய்வர். (புகல் என்ற தொழிற்பெயர் ஆகுபெயராய் (லாக்ஷணிகமாய்) நின்று, புகுதலுக்குக் கைம்முதலான உபாயத்தையும் புகுமிடமான ரக்ஷகனையும் காட்டும்.)

"அகலகில்லேன்" பாட்டின் பொருள்

இனிப்பாசுரத்தின் பொருளைச் சிறிது அனுபவிப்போம். அகலகில்லேன்......உறைமார்பா—எவ்வளவு அநுபவித்தாலும் புதிதாகவே தோன்றி மேன்மேலும் அநுபவிக்க வேண்டியதாகத் தோன்றும் எம்பெருமானுக்குள்ள போக்யதையின் மிகுதியாலே, பத்தர் முக்தர் நித்யர் என்ற த்ரிவித சேதனர்க்கும் ஸ்வாமிநியாய் எம்பெருமானுக்கும் நியாமிகையாய்த் தாமரைமலரின் பரிமளமே ஒரு வடிவு கொண்டாற்போலுள்ள பேரழகியான பெரிய பிராட்டியார்—க்ஷணகாலமும் உன்னை விட்டு அகல வல்லமையுடையேனல்லேன் என்று சொல்லிக் கொண்டே—நித்யவாஸம் செய்யும் திருமார்பையுடையவனே என்பது இதன் பொருள். இத்தால்—எம்பெருமானை விட்டுப் பிரியாத பெரிய பிராட்டியாரை—தாம் பேறு பெறுவதற்காகத் தாம் எம்பெருமானிடம் செய்யப் போகும் ப்ரபத்தி பலிக்குமாறு அவனிடம் புருஷகாரம் செய்யும்படி—ஆழ்வார் ஆச்ரயிக்கின்றமை கூறப்படுகிறது. ஓர் அபராதியை ரக்ஷிக்கவேணுமென்று பிராட்டி பெருமாளிடம் விண்ணப்பித்த போது, அபராதியைத் தண்டியாது விட்டால் சாஸ்த்ரவரம்பை மீறவேண்டுமேயென்று பெருமாள் சொல்ல, இவனை ரக்ஷியாது விட்டால் உம்முடைய தயை வீணாய்ப் போகுமேயென்று பிராட்டி கூற, சாஸ்த்ரவரம்பும் தயையும் நிறம் பெறும்படி நீ ஓர் உபாயம் சொல் என்று பெருமாள் சொல்ல, அபராதியாயிருந்து உம்மைச் சரணமாகப் பற்றினவனைக் காப்பாற்றினால் உம்முடைய தயை ஜீவிக்கும். அபராதியாய் உம்மிடம் வராமல் த்வேஷபுத்தியுடையவனைத் தண்டித்தால் சாஸ்திர வரம்பும் பிழைக்கும், ஆகையால் உம்மை ஆச்ரயித்த இவன் அபராதியாயிருந்தாலும் உம்மால் அவச்யம் காக்கத்தக்கவனேயாவான் என்று—பெருமாள் மறுக்க முடியாதபடி உபதேசித்து அவனது ஸ்வாதந்த்ர்யத்தைத் தலைசாயும்படி செய்வள் பிராட்டி. ஸ்வாதந்த்ர்யம் மடிந்தவாறே, இது வரையில் விஷயமகப் படாமல் உள்ளேயே அடங்கிக் கிடந்த—ப்ரபத்தி பலிக்குமென்று நாம் நம்புவதற்குக் காரணமான நான்கு குணங்கள் தலையெடுக்குமாறு சொல்லுகிறது மேல் நான்கு அடைமொழிகளால்: (1) நிகரில் புகழாய்—ஒப்பற்ற புகழை

http://acharya.org

உடையவனே! என்பது இதன் பொருள். புகழப்படுவது புகழ்—கல்யாணகுண மென்றபடி. அக்குணங்கள் பலவற்றில் ஒப்பற்ற குணமாவது வாத்ஸல்யம். ஆச்ரிதருடைய தோஷத்தை போக்யமாகக் கொள்ளுகையே வாத்ஸல்யம். எம்பெருமானார் கத்யத்திலே "அபாரகாருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய" இத்யாதியாலே மற்ற குணங்களுடன் சேர்த்து அருளிய வாத்ஸல்யத்தை "ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே" என்று தனிப்படவும் அருளிச் செய்கையாலே இக் குணம் நிகரில்லாததென்பதை அறியலாம். ஆழ்வார் இங்கு நிகரில் என்றதையே எம்பெருமானார் ஏக சப்தத்தால் மொழி பெயர்த்தருளினார். எம்பெருமானுக்குள்ள எல்லாக் குணங்களும் அளவிடமுடியாதவையாயினும், வாத்ஸல்யமென்னும் குணம் அளவிட முடியாமையில் ஒப்பற்றது என்னும் பொருள்—வாத்ஸல்யமேவ, ஏக :—அத்விதீய :, ஜலதி :—ஜலதிவத் அபரிச்சிந்ந: (குண:) யஸ்ய ஸ :—ஆச்ரித....ஜலதி : என்ற பஹுவ்ரீஹிஸமாஸத்தாற் பெறப்படும். தான் புருஷகாரம் செய்து சேர்த்த ஜீவன் விஷயமாக ஒருவேளை பிராட்டி குற்றம் சொன்னாலும், 'என்னடியார் குற்றம் செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்' என்று அவளோடு மன்றாடுவதற்கு உறுப்பாகும் இவ்வாத்ஸல்யகுணம். நிகரில்புகழாயென்ற விளியினால்—எம்பெருமான் நம் தோஷங்களைக் கண்டு நம்மை விலக்குகையன்றிக்கே, அதற்கு நேர்மாறாக அவற்றையே போக்யமான உபஹாரமாகக் கொண்டு நம்மை ரக்ஷிக்குமவன் என்று சொல்லப்பட்டதாயிற்று. (2) உலகம் மூன்றுடையாய்—மூவுலகுக்கும் ஸ்வாமியே! என்றபடி. முன் சொன்ன வாத்ஸல்யத்துக்குக் காரணமான ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தம் சொல்லுகிற இவ்விளியினால்—எம்பெருமான் உலகிற்கெல்லாம் ஸ்வாமியாகையாலே நம் தோஷங்களை போக்யமாகக் கொண்டு நம்மை ரக்ஷிப்பான் என்று கூறப்பட்டதாயிற்று. (3) என்னையாள்வானே! உன்னுடைய மிக்க இறைநிலையாகிய மேன்மையையும், மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து துளங்குகிற என் தாழ்மையையும் பாராமல் மயர்வற மதிநலமருளி, கர்மாத்யுபாயங்கள் ஸ்வரூபவிரோதி, பிராட்டி புருஷகாரமாகப் பற்றப்படும் உபாயமும் உபேயமும் தானே' என்னும் உறுதியை உண்டாக்கி என்னை ஆண்டு என்னோடு ஒரு நீராகக் கலந்தவனே! என்பது இதன் பொருள். மிகப் பெரியவன் மிகத் தாழ்ந்தவனோடு புரையறக் (குற்றமறக்) கலக்கையாகிற ஸௌசீல்யம் இதனால் சொல்லப்படுகிறது. இங்குக் குற்றமாவது—கலக்கும்போது, ஐயோ இவ்வளவு உயர்ந்த நாம் இத்தனைத் தாழ்ந்தவனோடு கலக்கவேண்டியதாயிற்றே என்னும் நினைவேயாகும். இவ்விளியால் எம்பெருமான்—முற்கூறிய ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தத்தை விடுக்காமல்—நம்மைக் கைக்கொண்டு நமக்கு உபகரித்துக் கலந்து பயனுள்ளதாகச் செய்யுமவன் என்று சொல்லப்பட்டதாயிற்று. (4) நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே! | இதனால் சொல்லப்படுவது—ஸௌலப்யம், அதாவது வேடர்கள் யானைகள் வாநரங்கள் அகப்படத் தன்னைக் கண்ணால் கண்டு பற்றும்படி எல்லார்க்கும் எம்பெருமான் வசப்பட்டிருக்கை என்றபடி. இது திருவேங்கடத்தான் என்ற

http://acharya.org

சொல்லால் கிடைக்கின்றது. பரமபதத்திலே கைங்கர்யத்திலே யூன்றின அமரர், குணானுபவத்திலே யூன்றின முனிவர் என்று இருதிறத்தாராய் உள்ள நித்யஸூரிகள்—அங்கு அநுபவிக்க முடியாத எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை அநுபவிப்பதற்காக விரும்பி வந்து படுகாடு கிடக்கும் இடம் திருமலை என்ற பொருளைத் தரும்—நிகரில்......விரும்பும் என்னும் திருவேங்கடத்தின் அடைமொழி. இந்த நித்யஸூரிகள் நிகரற்றவர்கள்-சரீர (அழுக்குடம்பின்) ஸம்பந்தம், அது இருந்து கழிதல், ஸ்ருஷ்டி முதலிய ஜகத்வ்யாபாரம் ஆகிய மூன்றும் இல்லாத இவர்கள், முறையே இவற்றில் ஒவ்வொன்றையுடைய ஸம்ஸாரிகள் முக்தர்கள் எம்பெருமான் இவர்களை ஒப்பாகவுடையவரல்லாமையால் இவர்களுடைய நிகரின்மை கூறப்படுகிறது. இங்ஙனம் மூன்றடிகளாலும்—பிராட்டியை முன்னிட்டு, அவளால் தலையெடுத்த நான்கு குணங்களையுடைய எம்பெருமானை விளித்து விட்டு, "புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்ற நான்காமடியால்—"வேறு உபாயமும் வேறு ரக்ஷகரும் இல்லாத—தேவரீருடைய அடியவனான நான் தேவரீருடைய திருவடிகளின் கீழே இடை வெளியில்லாதபடி சேர்ந்து (அத்திருவடிகளை) உபாயமாகவும் (நிரபேக்ஷரக்ஷகமாக) பற்றினேன்"—என்று தம்முடைய ஸ்வரூபத்தை விண்ணபித்து ஆழ்வார் திருவேங்கடமுடையான் திருவடிகளில் ப்ரபத்தியை அநுஷ்டிக்கிறார்.

ஆக ஆழ்வார்—இப்பதிகத்தில் எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றி ப்ரபத்தியை யநுஷ்டித்தும், கீழ் நல்குரவுப் (6-3) பதிகத்தில் 'தந்தனன் தனதாள் நிழல்', திருவண்ணகர் மன்னுபிரான் கழல்களன்றி மற்றோர் களைகணிலம் காண்மின்கள்' என்று ஸம்ஸாரிகளுக்கு உபதேசித்தும்—ஸித்தோபாயமான எம்பெருமானிடம் தமக்குள்ள உறுதியான நம்பிக்கையை இவ்வாறும் பத்தால் வெளிப்படுத்தினாராயிற்று.

பலச்ருதி

கடைசிப் பதிகத்தின் பலச்ருதி—திருவேங்கடத்துக்குச் சொன்ன இவை பத்தையும் அநுஸந்தித்தவர்களைப் பற்றியவர்கள் அல்லது அநுஸந்தித்தவர்களாலே அபிமானிப் பெற்றவர்கள் பரமபதத்தில் தம்முடைய சிறப்புத் தோற்ற இருக்கப்பெறுவர்—என்று கூறப்பட்டுள்ளது. அதாவது—திருவேங்கட முடையானைப் பற்றிய இப்பதிகத்தோடு நேராக ஸம்பந்தம் பெற்றவர்களோடு பரம்பரா ஸம்பந்தம் பெற்றவர்களோடு (தொட்டாரைத் தொட்டவர்களோடு) வாசியற எல்லார்க்கும் மோக்ஷப்ராப்தி கூறப்பட்டுள்ளதென்றவாறு.

இப்பதிகத்தோடு பரம்பராஸம்பந்தமுள்ளவர்களுக்கே பரமபதம் கிடைப்பது உறுதியானால், திருவேங்கடமுடையானோடு பரம்பராஸம்பந்தம் உள்ளவர்களுக்கு அது கிடைப்பது சொல்லாமலே விளங்கும். அதையும் கீழே

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

இரண்டாம்பத்தில்—'என்னமுதம் கார்முகில் போலும் வேங்கட நல்வெற்பன்' என்று திருவேங்கடமுடையானையே கூறும் கேசவன் தமரில் (2-7) நாராயணனாலே (= அந்தர்யாமியாய் வத்ஸலனான திருவேங்கட முடையானாலே) கீழ் மேலெமர் ஏழெழு பிறப்பும் கேசவன் தமர் ஆனார்கள் என்று தம்மோடு பரம்பராஸம்பந்தம் பெற்றவர்கள் அடிமைப்பட்டதையும், 'எந்தாய் தண்திருவேங்கடத்துள் நின்றாய்' 'தண்வேங்கடம் மேகின்றாய்' என்று திருவேங்கடமுடையானையே ப்ரஸ்தாவிக்கும் வைகுந்தாவில் (2-6) 'செடியார் நோய்களெல்லாம் துரந்து எமர் கீழ்மேல் எழுபிறப்பும் விடியா வெந்நகரத் தென்றும் சேர்தல் மாறினர்' என்று தம்மோடு பரம்பராஸம்பந்தம் பெற்றவர்கள் நரகத்தில் சேராமல் பரமபதம் பெறுவதையும் கூறி—குறிப்பித்தருளியே இருக்கிறார் ஆழ்வார்.

'இருந்தமிழ் நூற்புலவன்' (திருவாய்மொழிப் புலவன்) என்று தம் பெருமையைத் தாமே வெளியிட்டருளிய திருமங்கையாழ்வார் ஆறங்கம் கூறவே அவதரித்தவர்—"இண்டையாயின கொண்டு தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் வானிடைக் கொண்டு போயிடவும்—வேங்கடம் கோயில் கொண்டு......இருப்பார்க்கு அடிமைத் தொழில் பூண்டாயே" என்று (பெரிய திருமொழி 2-1-3) திருவேங்கடமுடையான் தொண்டர்களோடு ஸம்பந்தம் பெற்ற அவருறவினரும் மோக்ஷம் பெறும் பெருமையைக் கூறியருளியதையும், மாறனடி பணிந்துய்ந்து, அவர் தம் தமிழ் மறையை மொய்ம்பால் வளர்த்த ஸ்ரீஸ்வாமி யெம்பெருமானார்—ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகத்தில்—"விநத விவித பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே......ஸ்ரீநிவாஸே" என்று "பூதவ்ராத" சப்த மிட்டருளியதன் மூலம்—அலர்மேல்மங்கையுறை மார்பன் (திருவேங்கட முடையான்) தன்னையாச்ரயித்தவர்களோடு பரம்பராஸம்பந்தம் பெற்றவர்க்கும் பரமபதமளிப்பதில் விரதம் கொண்டுள்ளமையைக் கூறியருளியதையும் இதற்கு, ப்ரமாணமாக நினைக்கத் தக்கது.

திருவேங்கடமுடையான்-ஆழ்வார் எம்பெருமானார்-ஜீயர் திருவடிகளே சரணம்.

இப்பணியில் எளியனேகிய அடியேனை நியமித்த வளவோடு நில்லாமல் அடியேன் வேண்டுகோளுக்கிணங்கிப் பல தலைப்புகளைக் குறித்தெழுதியனுப்பிப் பேருபகாரம் புரிந்தருளிய ஸ்ரீமான். உ. வே. வித்வான்-வாகம்ருதவர்ஷி—வேளுக்குடி வரதாசார்யஸ்வாமி ஸந்நிதியில் க்ருதஜ்ஞதையோடு தண்டம் ஸமர்ப்பித்து விடை பெறுகிறேன். குற்றங்களைப் பெரியார் பொறுத்து அடியேனைத் திருத்திப் பணிகொள்வாராக.

---

http://acharya.org

சக்தத்வம்

(1) எண்ணிலாக் குணங்கள் பால துன்பவேறவன் மாயாப் பல்யோகு செய்தியென்னும் ஆச்சர்ய சக்தியோகத்தாலே (2) தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தையருளும் ப்ராபகத்வம் புற்பா வெறும்பு பகைவனுக்கும் ஆக்க வல்ல ஸர்வ சக்தி, பாதமகலகில்லாத தம்மை (3) அகற்றுமவற்றின் நடுவே யிருத்தக் கண்டு நலிவான் சுமடுந்தாய் ஓவென்று ஸாதநபலமான ஆக்ரோசத்தோடே பழியிட்டுக் (4) கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கித் (5) தேற்ற வொண்ணுதபடி தோற்று, ஒன்றி நிற்கப் பண்ணின பலாதாநம் மற்றும் கற்பாரிழவிலே சுவறிப் (6) பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்து, சூழவும் பகைமுகம் செய்ய, எடுப்பும் சாய்ப்புமான க்லேசம் நடக்க, உபாயாதிகாரதோஷ மொழிய மாயங்கள் செய்து வைத்த. வைசித்திரியைக் கேட்க, (7) ஐச்சமாக இருத்தி உறக் கொண்ட ஸ்வபர ப்ரயோஜநத்தை அருளிச் செய்ய, என்சொல்லி எந்நாள் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவும் என்கிற உபகார ஸ்ம்ருதியோடே (8) தன் சரிதை கேள்வியாகாமல் இன்பம் பயக்க விருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக காந கோஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர் (9) சரமோ பாயபரராணுர்க்கு நீணகரமது துணிந்தான் சரணன்றி மற்ரென்றிலம் உள்ளித்தொழுமின் என்று ப்ராப்ய ஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிருர் ஏழாம் பத்தில்

ஆசார்யஹ்ருதயம்

225-7

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. வித்வான், கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, புத்தூர்.

திருச்சி நகரத்தைச் சேர்ந்த புத்தூர் அக்ரஹாரத்தில் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மண குலத்தைச் சேர்ந்தவராய், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், மாலாகாரர் முதலானவர்களைப் போலே ஸ்ரீரங்கநாதனுக்கு தினந்தோறும் மாலைகட்டி ஸமர்ப்பித்து வந்த ஸ்ரீரங்கராஜய்யங்கார் ஸ்வாமி என்னும் ஸ்ரீவைஷ்ணவோத்தமர் 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்து வந்தார். அவரது திருவம்சத்தில் அவதரித்தவர் ஸ்வாமி. எம்பெருமானாருடைய ப்ரிய சிஷ்யரான எங்களாழ்வான் திருவம்சத்தோடு சரீரஸம்பந்தமும், ஜ்ஞான ஸம்பந்தமும் உடையவர். உலகம் நிறைந்த புகழாளராய், ஸ்ரீவைஷ்ணவத்துக்குத் தண்ணீர்ப் பந்தல் வைத்தது போலே லக்ஷக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள சொத்துக்களை சாச்வததர்மமாக எழுதி வைத்து, அதன் மூலம் ஸ்ரீரங்கம் திருவெள்ளறை முதலான திவ்ய தேசங்களில் பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்கள் நடைபெற ஏற்பாடு செய்து, பூர்வாசார்யக்ரந்தங்கள் எல்லாமே அச்சில் வெளிவரவும், அவற்றின் அர்த்தங்கள் எளிய நடையில் வெளிவரவும் 'ஸ்ரீநிவாஸம் அச்சகம்' என்னும் அச்சுக் கூடத்தையும் ஸ்தாபித்து 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' என்னும் தமிழ் மாதப் பத்திரிகையையும் தொடங்கிய மஹாநுபாவரான ஸ்ரீ உ. வே. K. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியே ஸ்வாமியின் தந்தையாராவர். "தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்னும் குறளின்படி நம் ஸ்வாமிக்கு லௌகிக வைதிகமான ஸகலவித்யைகளையும் அளித்து, தம்மைப்போலே வழக்கறிஞராக ஆக்கி, ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தைத் தமக்குப் பின் ஆசிரியராக இருந்து நடத்துவதற்குத் தகுதிகளையெல்லாம் உண்டாக்கி, ஸ்வாமியைப் பெரிய நிதி போலே ஸ்ரீவைஷ்ணவவுலகிற்கு வழங்கியவர் இப்பெருந்தகையாளர். "என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்னும் அருளிச் செயலையும் "மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்" என்னும் குறளையும் ஒட்டி, தந்தையார் தொடங்கிய ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனப் பத்திரிகையை உலகனைத்தும் புகழும் படி நடத்தியும், விஷ்ணுசித்தவிஜயம் முதலான கிரந்தங்களைத் தொடர்ந்தும், பூர்வாசார்யக்ரந்தங்களை அச்சிட்டும் உலகம் வியப்பப் பித்ருவாக்யபரிபாலனம் செய்து வருபவர் ஸ்வாமி.

திருச்சி செயிண்ட் ஜோஸப் கல்லூரியில் பயின்று M. A. பட்டமும், சென்னை, சட்டக் கல்லூரியில் பயின்று B. L. பட்டமும் பெற்றவராயினும், படிக்கும் காலத்திலேயே தந்தையாரிடம் பூர்வாசார்ய க்ரந்தங்களை அநுபவிக்கும் பேறு பெற்றவர் ஸ்வாமி. தந்தையார் காலத்துக்குப் பின் வழக்குரைஞர் தொழிலையும் விட்டு, ஸுதர்சனத்தின் மூலம் தரிசனத்திற்கே மாபெரும்

http://acharya.org

வழக்குரைஞராயிருப்பவர். ஸ்ரீ உ. வே. கோழியாலம் ரங்கநாதாசார்ய ஸ்வாமியிடம் ஸாமாந்ய சாஸ்த்ரங்களையும், தேசிகக்ரந்தங்களையும் பயின்று, காஞ்சி மண்டலத்தைச் சேர்ந்தவராய், பிற்காலத்தில் துரீயாச்ரமத்தை அலங்கரித்து, ஈச்சம்பாடி ஜீயர்ஸ்வாமி என்று பிரஸித்தி பெற்ற ஸ்ரீ உ. வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமியிடம் தென்னாசார்ய ஸம்ப்ரதாயக்ரந்தங்களையும், உபய வேதாந்தக்ரந்தங்களையும் காலக்ஷேபமாகக் கேட்டவர் ஸ்வாமி. ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான் ஸ்ரீ. உ.வே. ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் "திவ்யார்த்தரத்நநிதி" என்னும் விருதும், சென்னை ஆரோக்யாச்ரமத் தலைவரான அத்வைதி ஒருவரால் "வித்யா விசாரத" என்னும் விருதும் ஸ்வாமிக்கு வழங்கப் பெற்றன. ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் தலைவராகவும், கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபையின் உபதலைவராகவும் எழுந்தருளியிருப்பவர் ஸ்வாமி.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸர்வ சக்தனான செங்கோலுடைய
திருவரங்கச் செல்வன்

http://acharya.org

சக்தத்வம்

திருவாய்மொழி ஏழாம் பத்தின் ஸாரம்

ஸ்ரீ உ.வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, ஆசிரியர், 'ஸ்ரீவைஷ்ணவஸுதர்சநம்'

வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் நாலு வேதங்களின் ஸாரமாக நாலு பிரபந்தங்களை அருளிச் செய்தார். அவற்றில் திருவிருத்தம் ருக்வேத ஸாரமாகவும், திருவாசிரியம் யஜுர் வேத ஸாரமாகவும், திருவாய்மொழி ஸாமவேதஸாரமாகவும், பெரிய திருவந்தாதி அதர்வண வேத ஸாரமாகவும் கொண்டாடப்படுகின்றது. ஸாம வேதஸாரமாய், நாலாயிர திவ்யப்ரபந்தத்திலும் பிரதானமான திருவாய் மொழி ஆயிரமும் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு அடிப்படையாகத் திகழ்கின்றது. இதனாலேயே இந்த திவ்யக்ரந்தத்திற்கு வியாக்யாநங்களாக எம்பெருமானாரின் சிஷ்யரான தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஆறாயிரப்படியும், ஸ்ரீபராசர பட்டரின் சிஷ்யரான நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படியும், அவருடைய சிஷ்யரான நம்பிள்ளையின் பிரதான சிஷ்யரான பெரியவாச்சான்பிள்ளை இருபத்து நாலாயிரப்படியும், நம் பிள்ளையின் மற்றொரு சிஷ்யரான வடக்குத்திருவீதிப் பிள்ளை ஈடு முப்பத்தாறாயிரப் படியும், பெரியவாச்சான் பிள்ளைக்கும், அவர் குமாரரான நாயனாராச்சான் பிள்ளைக்கும் சிஷ்யரான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் பதவுரையாகப் பன்னீராயிரப்படியும் அருளிச் செய்துள்ளனர். இவ்வளவுக்கும் மேலாக திருவாய்மொழி முழுவதையும் பல வகையாக ஆராய்ந்து விளக்குவதற்காகவே ஏற்பட்ட 'ஆசார்ய ஹ்ருதயம்' என்னும் அற்புதமான கிரந்தமும் இத்திருவாய் மொழியின் பொருளையும், பெருமையையும் விளக்கும் கிரந்தங்களில் தலை சிறந்ததாய் அமைந்துள்ளது. ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களிலும், அருளிச் செயல்களிலும் உள்ள சந்தைகளைக் கொண்டே தொகுத்து 234 ஸூத்ரங்கள் கொண்டதாக அருளிச் செய்யப்பெற்ற இந்த திவ்யக்ரந்தத்தை அருளியவர் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் த்விதீயகுமாரரும், பிள்ளையுலகாசிரியரின் திருத்தம்பியாருமான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாராவர். இவ்வாசார்யஹ்ருதயத்தின் நாலாம் ப்ரகரணத்தில் முதல் பத்து சூர்ணைகள் முறையே பத்து பத்துக்களின் ஸாரத்தை அற்புதமாக விளக்குமவை. திருவாய்மொழிக்கு வக்த்ருவைலக்ஷண்யம், விஷயவைலக்ஷண்யம், ப்ரபந்தவைலக்ஷண்யம் ஆகிய முப்பெருமைகளும் பரிபூர்ணமாக உண்டு என விளக்கும் முதல் மூன்று ப்ரகரணங்களும் அப்பத்து சூர்ணைகளுக்கு முக வுரையாகவும் அமைந்துள்ளன. இப்பத்து சூர்ணைகளுக்கும் பூர்வபீடிகையாக மூன்றாவது ப்ரகரணத்தின் இறுதியில் அமைந்துள்ள இரு சூர்ணைகளையும் முதலில் விளக்குகிறேனிங்கு.

"பாட்டுக்கு க்ரியையும் பத்துக்குக் கருத்தும் போலே நூற்றுக்கு உபதேசப் பத்து" என்பது மூன்றாம் ப்ரகரணத்தில் 216—வது சூர்ணையாகும். இதன் கருத்து பின்வருமாறு:—ஒவ்வொரு பாசுரத்திலும் (வெளிப்படையாகவோ, மறைந்தோ கிற்

http://acharya.org

கும்) க்ரியாபதமான (வினைமுற்றான) பதம் முக்கியமாயிருக்கும்; வினைமுற்று இல்லாவிடில் வாக்யம் நிறைவடையாதன்றோ. அதுபோலே, ஒவ்வொரு பதிகத்திலும், அப்பதிகத்தின் கருத்தைத் தெளிவாகக் காட்டும் பாட்டு முக்கியமானதாயிருக்கும் உதாஹரணமாக முதற்பத்தில் நாலாவது பதிகமான 'அஞ்சிறைய மடநாரை'யின் கருத்தான அபராதஸஹத்வத்தை வெளிப்படையாகக் காட்டும் "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்னும் தொடரைக் கொண்ட ஏழாவது பாசுரம் முக்கியமாயிருக்கும். (ஒவ்வொரு பதிகத்தின் வியாக்கியானங்களில் அப்பதிகத்தின் கருத்தை விளக்கும் உயிர்ப்பாட்டு எது என்பது காட்டப்பட்டுள்ளது.) அதுபோலே நூறு பாசுரங் கொண்ட ஒவ்வொரு பத்துக்கும், ஆழ்வார் பரோபதேசம் செய்வதாயமைந்த ஒரு பதிகம் முக்கியமாயிருக்கும்—என்பது இச்சூர்ணையின் கருத்து.

முதற்பத்தில்	— வீடுமின்முற்றவும்	ஆறாம் பத்தில்	— நல்குரவுஞ்செல்வும்
இரண்டாம் பத்தில்	— கிளரொளியிளமை	ஏழாம் பத்தில்	— இன்பம் பயக்க
மூன்றாம் பத்தில்	— சொன்னால் விரோதம்	எட்டாம் பத்தில்	— எல்லியுங்காலையும்
நாலாம் பத்தில்	— ஒன்றுந்தேவு	ஒன்பதாம் பத்தில்	— மாலை நண்ணி
அஞ்சாம் பத்தில்	— பொலிக பொலிக	பத்தாம் பத்தில்	— கண்ணன் கழலிணை

ஆகிய பதிகங்கள் பிறர்க்கு உபதேசம் செய்பவை யாகையாலே, அந்தந்தப் பத்துக்களுக்கு அவை முக்கியமாயிருக்கும் என்றபடி. இனி, ஒவ்வொரு பத்திலும் எம்பெருமானுக்கு இன்ன இன்ன குணம் விளக்கப்படுகிறது என்பதையும், அந்த குணத்தோடு கூடிய எம்பெருமான் ஒவ்வொருபத்திலும் ஆழ்வாருக்கு இன்ன இன்ன பேற்றை உண்டாக்கினான் என்பதையும் விளக்குகின்றதாய், மூன்றாம் ப்ரகரணத்தின் இறுதி சூர்ணையாயிருப்பதான 218-வது சூர்ணை பின்வருமாறு :—

"பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ ஸத்ய காமத்வ ஆபத்ஸகத்வ ஆர்த்திஹரத்வ விசிஷ்டன் மயர்வை அறுக்க, தத்த்வவேதநமறப்பற்று, ஐஸ்வர்ய பல முக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து, மோக்ஷபல வ்ருத்தி செய்ய அர்த்தித்து, புருஷார்த்த பலாங்யருசி ஒழிந்து, விரக்தி பலராகம் கழியமிக்கு, ப்ரேம பலோபாயத்தே புகுந்து, ஸாதநபலோபகாரக் கைம்மாறின்றி, க்ருதஜ்ஞதாபல ப்ரதிக்ருதமானத்தை உணர்ந்து, ஆத்ம தர்சநபல ப்ராப்தி மரணாவதியாகப் பெற்று, காலாஸத்திபலகதிக்குத் துணை கூட்டின தம் பேற்றைப் பிறரறியப் பத்துத் தோறும் வெளியிடுகிறார்."

இச்சூர்ணையிலிருந்து—

முதற்பத்தில்	— பரத்வம்	ஆறாம் பத்தில்	— சரண்யத்வம்
இரண்டாம் பத்தில்	— காரணத்வம்	ஏழாம் பத்தில்	— சக்தத்வம்
மூன்றாம் பத்தில்	— வ்யாபகத்வம்	எட்டாம் பத்தில்	— ஸத்யகாமத்வம்
நாலாம் பத்தில்	— நியந்த்ருத்வம்	ஒன்பதாம் பத்தில்	— ஆபத்ஸகத்வம்
ஐந்தாம் பத்தில்	— காருணிகத்வம்	பத்தாம் பத்தில்	— ஆர்த்திஹரத்வம்

ஆகிய குணங்கள் விளக்கப்படுகின்றன என்று விளங்குகிறது.

http://acharya.org

மேலும் "கஶ்சிந் மாம் வேத்தி தத்த்வத:" [கீதை 7-3] [பல்லாயிரவரில் ஒருவனே என்னை உள்ளபடி அறிகிறான்] என்று கீதையில் சொல்லப்பட்ட தத்த்வவேதனமாகிற, தன்னைப் பற்றிய உண்மையறிவை—"மயர்வற மதிநல மருளி" [திருவாய். 1-1-1] என்கிற ரீதியில் எம்பெருமான் நிர்ஹேதுகமாக அருளியதும், "மறப்பனோ இனியான் என் மணியையே" [திருவாய் 1-10-10] என்கிறபடியே அவ்வறிவைத் தமக்கு மறப்பில்லாதபடி செய்ததுமாகிற பேற்றைத் தாம் பெற்றபடியை முதற்பத்தில் பேசுகிறார் என்றும் விளங்குகிறது.

முதற்பத்தில் ஆழ்வார் எம்பெருமானுடைய பரத்வமாகிற பெருங்குணத்தை அநுபவித்தார். எந்த வஸ்து ஜகத்காரணமாக இருக்கிறதோ அதற்கே பரத்வம் ஸித்திக்குமாகையாலே, பரத்வத்துக்கு உறுப்பாயிருக்கும் காரணத்வமாகிற குணநலனை இரண்டாம்பத்தில் அநுபவிக்கிறார். "ஜ்ஞப்தி பல முக்தி தலைசேர நிஷ்கர்ஷித்து" என்று இரண்டாம் பத்தில் ஆழ்வார் பெற்ற பேற்றை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அநுஸந்தித்தார். முதற்பத்தில் 'தத்த்வவேதந மறப்பற்ற' என்கிறபடியே எம்பெருமானைப் பற்றிய உண்மையறிவை மறப்பில்லாதபடி பெற்றார் ஆழ்வார். அந்த அறிவின் பலமாகக் கிடைப்பதே மோக்ஷம். அதாவது அந்த அறிவை உடையவனுக்கு எம்பெருமான் தன் நிர்ஹேதுக க்ருபையாலே பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையே அளித்து, அவனைப் பெற்று இன்புறுகிறான். அந்த மோக்ஷத்தை ஆழ்வாருக்கு அளிக்க வந்தான் எம்பெருமான்." அந்த மோக்ஷாநந்தத்தைப் பெறுவது தமக்கு உத்தேச்யமன்று. சேஷத்வஸித்தியும், எம்பெருமானுடைய முகமலர்த்தியுமே தமக்கு உத்தேச்யம்" என்று ப்ராப்யநிஷ்கர்ஷத்தை "செம்மா பாதபற்புத் தலை சேர்த்து" (திருவாய் 2-9-1] என்றும், "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே, எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே" [திருவாய் 2-9-4] என்றும் இரண்டாம்பத்தில் அருளிச் செய்கிறார் ஆழ்வார். 'மோக்ஷத்திலும் பரார்த்தாநுபவ கைங்கர்யங்களே உத்தேச்யம்' என்று ஆழ்வார் நிஷ்கர்ஷிக்க, எம்பெருமானும் அத்தகைய மோக்ஷத்தை ஆழ்வாருக்குத் தர இசைந்தான். இதுவே ஆழ்வார் இரண்டாம்பத்தில் பெற்ற பேறு என்று விளங்குகிறது.

இரண்டாம்பத்தில் எம்பெருமான் ஜகத்காரணன் என்றார் ஆழ்வார். இந்தக் காரணத்வமானது லோகவிலக்ஷணமானது. உலகிலுள்ள காரியப் பொருள்களுக்கு நிமித்த காரணம், உபாதாந காரணம் ஸஹகாரி காரணம் ஆகிய மூன்றும் வெவ்வேறாயிருக்கும். 'எம்பெருமான் உலகிற்குக் காரணமாகும் போதோ வெனில், மூவகைக் காரணமும் அவனே யாகிறான். குடத்துக்குக் குயவன் போலே நிமித்த காரணமாயிருப்பதோடன்றியில், குடத்துக்கு மண்போலே உபாதாநகாரணமாகவுமிருக்கிறான். காரியப்பொருள்கள் அனைத்திலும் வியாபித்து, அவற்றை ஶரீரமாகக் கொண்டிருக்கையாலே 'கார்யப் பொருள்கள் எல்லாம் இவனே' என்று சொல்லலாம்படி இருக்கையாலேயே இப்படி எம்பெருமான் உபாதாந காரணமாகவும் இருக்கிறான். இவ்வண்ணமாக ஜகத்காரணத்வத்திற்கு அவச்யாபேக்ஷிதமான வியாபகத்வத்தை ஆழ்வார் மூன்றாம் பத்தில் நிரூபிக்கிறார். இப்பத்தில் ஆழ்வார் பெற்ற பேறு 'மோக்ஷபல வ்ருத்தி செய்ய அர்த்தித்து' என்று ஆசார்யஹ்ருதயத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டது. இரண்டாம்பத்தில்

http://acharya.org

நிஷ்கர்ஷிக்கப்பட்ட மோக்ஷத்திற்குப் பலன் கைங்கர்யமாகையாலே அந்தக் கைங்கர்யத்தை 'ஒழிவில்காலம்' [திருவாய். 3-3] என்னும் திருவாய்மொழியிலே' வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்' என்று ப்ரார்த்திக்கைடாகிற பேறு மூன்றும் பத்தில் ஆழ்வாருக்குக் கிடைத்தது என்று விளங்குகிறது.

மூன்றும் பத்தில் எம்பெருமானுக்குக் காட்டப்பட்ட வியாப்தி ஆகாசத்தின் வியாப்திபோலல்லாமல், அந்தராத்மாவாய் உள் நுழைந்து நியமிக்கும் வியாப்தி என்பது தோற்ற இந்த நாலாம்பத்தில் ஸர்வநியந்த்ருத்வத்தை எம்பெருமானுக்கு நிரூபிக்கிறுர் ஆழ்வார். இப்பத்தில் ஆழ்வார் பெற்ற பேறு 'புருஷார்த்த பலாந்யருசி ஒழிந்து' என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டது. மூன்றும் பத்தில் ஆழ்வார் ப்ரார்த்தித்த கைங்கர்யமாகிற புருஷார்த்தத்துக்குப்பலன் அக்கைங்கர்யம் தவிர்ந்த மற்ற புருஷார்த்தங்களில் ஈடுபாடில்லாமலிருக்கையே யாகையாலே, புருஷார்த்தபலமான அந்யருசி ஒழிவாகிற இந்தப் பேற்றையே ஆழ்வார் இந்த நாலாம் பத்தில் பெற்றுர் என்பது 'கண்டு கேட்டுற்று மோந்து' [திருவாய் 4-9-10] என்கிற பாட்டில் 'ஐங்கருவி கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்....ஒழிந்தேன்' என்று தெரிவிக்கப்படுகிறது என விளங்குகிறது.

முதல் நாலு பத்துக்களில் நிரூபிக்கப்பட்ட பரத்வம், காரணத்வம், வியாபகத்வம், நியந்த்ருத்வம் என்னும் மேன்மைக் குணங்களைக் கண்டு அஞ்சவேண்டாதபடி எம்பெருமான் பரமகாருணிகனுயிருக்கிறுனைகயாலே அவனுடைய காருணிகத்வத்தை ஐந்தாம் பத்தில் நிரூபிக்கிறுர் ஆழ்வார். இப்பத்தில் ஆழ்வார் பெற்ற பேறு 'விரக்தி பல ராகம் கழியமிக்கு' என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டது. முந்திய தான நாலாம் பத்தில் பெற்ற பேறுன இதரவிஷய விரக்திக்குப் பலன் பகவத் விஷயத்தில் ராகம் (காதல்) மிகுதியடைவதேயாகையாலே 'கழியமிக்கதோர் காதலள் இவள்' [திருவாய் 5-5-10] என்று அருளியபடியே வைராக்யத்தின் பலனுன காதல் மிகுதியாகிற பேற்றினை ஆழ்வார் இப்பத்தில் பெற்றுர் என்று விளங்குகிறது.

இப்படி ஐந்து பத்துக்களிலும் நிரூபிக்கப்பட்டபடி மேன்மையுடையவனுகையாலே ஸமர்த்தனுய், காருணிகனுகவுமிருப்பவனே அனைவராலும் சரணமடையத் தக்கவன் ஆகையாலே, ஆறும்பத்தில் ஆழ்வார் சரண்யத்வமாகிற குணத்தை நிரூபிக்கிறுர். இப்பத்தில் ஆழ்வார் பெற்றபேறு 'ப்ரேமபலோபாயத்தே புகுந்து' என்று ஆசார்யஹ்ருதயத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டது. ப்ரேம பலமான உபாயம் புகுதலைச் செய்து என்றபடி, ஐந்தாம்பத்தில் பெற்ற எல்லையற்ற காதலுக்குப் பலன் எம்பெருமானை உபாயமாகப் பற்றுதலேயாகையாலே "அலர்மேல்மங்கையுறை மார்பா! உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" [திருவாய். 6-10-10] என்று அருளியபடியே உபாயவரணமாகிற பேற்றை ஆழ்வார் இவ்வாறும்பத்தில் பெற்றுர் என விளங்குகிறது.

ஸர்வசரண்யனுயிருப்பவன் சரணமடைந்தவர்களுடைய அநிஷ்டங்களைப்போக்கி, இஷ்டங்களை அளிப்பதற்குத்தக்க சக்தியுடையவனுயிருக்க வேண்டுமாகையாலே ப்ரக்ருதமான ஏழாம்பத்தில் ஆழ்வார் சக்தத்வமாகிற குணத்தை நிரூபிக்கிறுர். இப்பத்தில் ஆழ்வார் பெற்றபேறு "ஸாதநபலோபகாரக் கைம்மாறின்றி" என்று ஆசார்யஹ்ரு

http://acharya.org

தயத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டது. ஆறும்பத்தில் பண்ணின உபாயவரணத்தில் உபாய மான எம்பெருமானால் கிடைத்த பலனை உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரமாக 'உதவிக் கைம்மாறு என்னுயிர்' [திருவாய். 7-9-10] என்று ஆத்மஸமர்ப்பணம் பண்ணப் பாரித்து, அந்த ஆத்மவஸ்துவும் அவனுடையதே என்று அறிகையாலே "உற்று எண்ணில் அதுவும் மற்றாங்கு அவன் தன்னது—எதுவும் ஒன்றுமில்லை செய்வது இங்கு மங்கே" [7-9-10] என்று கைம்மாறு காணமல் தடுமாறுகையாகிற பேற்றை ஆழ்வார் ஏழாம்பத்தில் பெற்றார் என்று விளங்குகிறது.

இனி இந்த ஏழாம்பத்தின் ஸாரத்தை விளக்குவதாய், நாலாம் ப்ரகரணத்தில் ஏழாம் சூர்ணையாய் அமைந்ததான—

"எண்ணிலாக் குணங்கள் பால துன்பவேறவன் மாயாப் பல்யோகு செய்தி என்னும் ஆச்சர்ய சக்தியோகத்தாலே தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தையரு ளும் ப்ராபகத்வம் புறப்பாவெறும்பு பகைவனுக்கும் ஆக்கவல்ல ஸர்வசக்தி, பாதம் அகல இல்லாத தன்மை அகற்றுமவற்றின் நடுவேயிருத்தக் கண்டு நலிவான் சுமடுதந்தாய் ஓவென்று ஸாதநபலமான ஆக்ரோசத்தோடே பழியிட்டுக் கங்குலும் பகலும் அடை ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கித் தேற்றவொண்ணாத படி தோற்று ஒன்றி நிற்கப் பண்ணின பலாதிசெம் மற்றுங் கற்பாரிழவிலே சுவறிப் பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்து, சூழவும் பகைமுகஞ்செய்ய, எடுப்புஞ்சாய்ப்பு மான க்லேசம் நடக்க, உபாயாதிகாரதோஷ மொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க, ஐச்சமாக இருத்தி உறக் கொண்ட ஸ்வபர ப்ரயோஜனத்தை அருளிச்செய்ய, என் சொல்லி எந்நாள் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவும் என்கிற உபகாரஸ்ம்ருதியோடே தன்சரிதை கேள்வியாகாமல் இன்பம் பயக்க விருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக காந கோஷ்டியையும் தேவ பிரானறிய மறந்தவர், சரமோபாய பரரானார்க்கு நீணகரமது, துணிந்தான் சரணன்றி மற்றொன்றிலம் உள்ளித் தொழுமினென்று ப்ராப்ய ஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிறார் ஏழாம் பத்தில்.'

என்னும் சூர்ணையின் கருத்தை விளக்குவோம்.

(1. எண்ணிலாக் 2. குணங்கள் 3. பாலதுன்ப 4. வேறவன் 5. மாயாப் 6. பல்யோகு செய்தி யென்னும் ஆச்சர்ய சக்தி யோகத்தாலே 7. தெளிவுற்ற வர்க்கு 8. ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் ப்ராபகத்வம் 9. புறப்பா வெறும்பு 10. பகைவனுக்கு மாக்கவல்ல ஸர்வசக்தி.) இப்பகுதியால் ஆழ்வார் இப்பத்தில் எம்பெருமானுடைய ஸர்வ சக்தத்வ மாகிற குணத்தை நிரூபிக்கிறார் என்று இப்பத்திலுள்ள பத்து சந்தைகளைக் காட்டி விளக்குகிறார். அதாவது 1. 'எண்ணிலாப் பெருமாயனே' (7-1-1) என்று ஆச்சர்யமான சக்தி முதலான குணங்களையுடையவன் என்று காட்டுகிறார். 2. குணங்கள் கொண்ட மூர்த்தி யோர் மூவராய்ப் படைத்தளித்துக் கெடுக்கும்' (7-1-11) என்று முக்குணங்களைக் கொண்ட மும் மூர்த்திகளாயிருந்து உலகைப் படைத்தளித்தழிக்கும் ஸர்வசக்தி உடையவன் என்பதைக் காட்டினார். 3. 'பால துன்பங்கள் இன்பங்கள் படைத்

http://acharya.org

தாய்' (7-2-7) என்று இடமறிந்து அனைவர்க்கும் ஸுகதுக்கங்களைப் படைத்த சக்தியையுடையவன் என்று காட்டினார். 4. 'ஊழிதோறூழியுருவும் பேரும் செய்கையும் வேறவன் வையங்காக்கும்' (7-3-11) என்று ஒவ்வொரு கல்பத்திலும் நாமரூப சேஷ்டிதங்களை வெவ்வேறாக உடையவனாய்க் கொண்டு உலகை ரக்ஷிக்கும் சக்தியையுடையவன் என்று காட்டினார். 5. 'மாயாவாமனனே' (7-8-1) என்று ஆச்சர்யங்களை யுடையவனாகவும், ஆச்சர்யமான அவதாரங்களை எடுக்க வல்லவனாகவும் இருக்கும் ஸர்வசக்தன் என்று காட்டுகிறார். 6. 'உள்ளப் பல் யோகு செய்தி' (7-8-4) என்று திருவுள்ளத்திலே ஒவ்வொரு சேதனர்க்கும் ரக்ஷணோபாய சிந்தைகள் பலவும் பண்ணி நிற்கும் சக்தியுடையவன் என்று காட்டினார். இப்படிப் பலவிதமாகச் சொல்லப்பட்டதாய், இவனுடைய உபாயத்வத்துக்கு அவச்யம் வேண்டியதான ஆச்சர்ய சக்தி யோகத்தாலே. (இது மேலே 'ஆக்கவல்ல' என்பதோடு அந்வயிக்கிறது.) 7. 'தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக்கதி செய்யும்' (7-5-11) 8. 'ஏற்றரும் வைகுந்தத்தை அருளும்' (7-6-10) என்கிற படியே உபாயமும், உபேயமும் எம்பெருமானே என்று துணிந்து, குயுக்திகளைக் கண்டு பின்வாங்காமல் நின்றவர்களுக்கு ஸ்ரீ வைகுண்டத்தைத் தன்னருளாலே கொடுக்கிற தன் உபாயத்வத்தை; 9. 'புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே' (7-5-1) என்று சொல்கிற படியே அறிவு குறைந்த திர்யக் ஸ்தாவரங்களுக்கும். 10. 'சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன், திருவடி தாட்பாலடைந்த' (7-5-3) என்று சொல்லுகிற படியே எதிரிகளில் தலைவனாயிருந்த சிசுபாலனாகிற பகைவனுக்கும் ஆம்படி பண்ணவல்ல ஸர்வ சக்தியுடையவனான ஸர்வேச்வரன். ஆக இவ்வளவால் இந்தரபத்தில் எம்பெருமானுடைய ஸர்வ சக்தத்வம் நிரூபிக்கப்படுகிறது என்று காட்டப்பட்டது.

(பாதம் அகலகில்லாத தம்மை அகற்று மவற்றின் நடுவேயிருத்தக் கண்டு நலிவான் சுமடுதந்தாய் ஒவென்று ஸாதந பலமான ஆக்ரோசத்தோடே பழியிட்டு, இப்பகுதியால் 'உண்ணிலாவிய' என்று தொடங்கும் முதல் திருவாய்மொழியின் ப்ரமேயம் சொல்லப்படுகிறது. அதாவது 'அந்தோ அடியேன் உன்பாதம் அகலகில்லேன் இறையுமே' (6-10-9) என்று தன் திருவடிகளை ஒரு நொடிப் பொழுதும் விட்டுப் பிரிய மாட்டாதவராய். 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே. (6-10-10) என்று தன்னைச் சரணம் புகுந்த தம்மை, "அகற்ற நீ வைத்த மாயவல்லைம் புலன்களாமவை' (5-7-8) என்று தன் திருவடிகளைக் கிட்டாதபடி அகலச் செய்யுமவையான இந்திரியங்களின் நடுவே இவ்வுடம்பிலே இருக்கும்படி வைக்க, அதை (ஆழ்வார்) பார்த்து 'உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி என்னை உன்பாத பங்கயம், நண்ணிலா வகையே நலிவான் இன்னமெண்ணுகின்றாய்' (7-1-1) என்றும், 'என் பரஞ்சுடரே என்றுன்னை அலற்றி உன் இணைத் தாமரைகட்கு, அன்புருகி நிற்குமது நிற்கச் சுமடு தந்தாய்' (7-1-10) என்றும், 'விண்ணுளார் பெருமானே ஓ' (7-1-5) என்றும், 'முன் பரவை கடைந்து அமுதங் கொண்ட மூர்த்தி ஓ' (7-1-10) என்றும் ஓலமிட்டார். இப்படிக் கூக்குரலிட்டது

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



தென்திருப்பேரெயில் மகரநெடுங்குழைக்காதன்

http://acharya.org

ஸாதந பலங்களில் ஒன்று. அதாவது-தாமதத்திற்கு இடமில்லாத ஸித்தோபாய மாகிற எம்பெருமானைப் பற்றினால் அவன் பலம் தருமளவும் இப்படி ஓலமிடுவது தவிர செய்யலாவது வேறொன்று இல்லாமையாலே, இந்த ஆக்ரோசமாகிற கூக்குரல் தாம் பற்றின உபாயத்தின பலமாக வந்தது என்றபடி, இப்படி முதல் திருவாய் மொழியில் கூக்குரலிட்ட ஆழ்வார் என்ன செய்தாரெனில், அநாதி காலமாக இந்திரியங்களுக்கு வசப்பட்டு நின்ற தம்மால் வந்ததையும் அவனால் வந்ததாகப் பழியிட்டார். இப்படி ஆழ்வார் எம்பெருமானைப் பழியிடலாமோ? எனில், 'ப்ரஜை தெருவிலே இடறித்தாய் முதுகிலே குத்துமா போலே' என்று ஸ்ரீவசன பூஷணத்தில் சொன்ன ரீதியில் அவனுக்கும் தமக்குமுள்ள உறவாகிற உரிமை கொண்டு பழியிடத்தடையில்லை என்று கொள்வது.

(கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கி) இது 'கங்குலும் பகலும்' என்று தொடங்கும் இரண்டாம் திருவாய்மொழியின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. சென்ற திருவாய்மொழியில் மிகுந்த ஆர்த்தியுடன் கூக்குரலிட்டபின்பு, அப்படி கூப்பிடவும் முடியாதபடி தளர்ந்து, ஒரு பிராட்டி தசையையடைந்து 'கங்குலும் பகலும் கண் துயிலறியாள்' (7-2-1), 'இட்டகாலிட்ட கையளாயிருக்கும்' (7-2-4) 'சிந்திக்கும் திசைக்கும்' (7-2-5) முதலான பாசுரங்களின் படியே இராப் பகலாக அழுவது, தொழுவது, மயங்குவது, பிதற்றுவது, நெடுமூச்செறிவது இவையும் செய்ய மாட்டாமல் நிற்பது முதலான நிலைகளையடைந்து, ஆர்த்தி மிகுந்து செல்லுகையாலே ஓர் அடைவிலே பிடிக்க வொண்ணாதபடி நடக்கிற இந்த ஆர்த்தியை, பெரிய பெருமாள் கண் வளர்ந்தருளுகிற கோயில் திருவாசலில் 'இப் பெண் பிள்ளையைப் பொகட்டு, முறையோ, அரவணைமேல் பள்ளி கொண்ட முகில் வண்ணனே' (திருவிருத்தம். 62) என்கிற ரீதியில் திருத்தாயார் கூச்சமில்லாமல் தானே இவள் தசையை மணவாளப் பிள்ளையான பெரிய பெருமாளுக்குச் சொல்லி 'திருவரங்கத்தாய்! இவள் திறத்து என்செய்கின்றாயே?' (7-2-1) 'இவள் திறத்து என் செய்திட்டாயே' (7-2-3) 'இவள் திறத்து என் சிந்தித்தாயே' (7-2-4) 'என் செய்கேன் என் திருமகட்கே' (7-2-8) என்று அவர் தம்மையே கேட்கும்படி ஆழ்வாருக்குப் பெருத்த வருத்தம் உண்டாயிற்று.

(தேற்ற வொண்ணாதபடி தோற்று) இது 'வெள்ளைச் சுரிசங்கு' என்று தொடங்கும் மூன்றாம் திருவாய் மொழியின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. இப்படி தாயார் பெரிய பெருமாளுடைய ஆத்ம குணங்களையும், விக்ரஹ குணங்களையும் சொல்லிக் கேட்டதாலும், தாம் வாய் வெருவியதாலும், சென்ற திருவாய் மொழியில் பராங்குச நாயகிக்குப் பிறந்த மயக்கம் தெளிந்து, 'அவனைக் கிட்டியல்லது நில்லேன்' என்னும் ஆற்றாமை பிறந்து, தென் திருப்பேரையில் வீற்றிருக்கும் மகர நெடுங்குழைக்காதப் பெருமானிடத்திலே நெஞ்சு பறி கொடுத்தவளானாள். அப்போது 'சேர்வன் சென்று என்னுடைத் தோழீமீர்காள் அன்னையர்காள் என்னைத் தேற்ற வேண்டா' (7-3-9) என்றும், 'கனிந்த விளவுக்குக் கன்றெறிந்த கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்' (7-3-5) என்றும் சொல்லுகிறபடியே யாராலும் தேற்றி தரிக்கச்செய்ய முடியாதபடி தன் பாரதந்த்ரியத்தையும் இழந்தாள்.

http://acharya.org

(ஒன்றி நிற்கப் பண்ணின பலாதானம் மற்றும் கற்பாரிழவிலே சுவறி) இது 'ஆழியெழ' என்று தொடங்கும் நாலாம் திருவாய் மொழி, 'கற்பார்' என்று தொடங்கும் ஐந்தாம் திருவாய் மொழி ஆகிய இரண்டின் ப்ரமேயங்களையும் சொல்லுகிறது. கீழ்த் திருவாய்மொழியான வெள்ளைச் சுரிசங்கிலே தேற்ற வொண்ணாதபடி தோற்றுத் தளர்ந்த ஆழ்வாரை தரிக்கச் செய்வதற்காக 'ஆழியெழ' என்று தொடங்கும் நாலாம் திருவாய் மொழியிலே எம்பெருமான் தன்னுடைய வெற்றிச் செயல்களையெல்லாம் ஆழ்வாருக்குக் காட்டிக் கொடுத் தான். ஆழ்வாரும் அவற்றைக் கண்டு உள்ளம் பூரித்து, 'குன்றமெடுத்த பிரான் அடியாரொடும், ஒன்றி நின்ற சடகோபன்' (7-4-11) என்னும்படி எம்பெரு மானுடைய வெற்றிச் செயல்களிளே ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடே பொருந்தி நிற்கும்படி வலிமையூட்டப் பெற்றார். இது 'ஆழியெழ' என்னும் நாலாம் திருவாய் மொழியின் ப்ரமேயம். இப்படி ஆனந்தத்தின் எல்லை நிலத் திலே நின்ற ஆழ்வார் வருத்தத்தின் எல்லையை அடைந்ததைச் சொல்லுகிறது அடுத்ததான 'கற்பார் இராம பிரானை' என்று தொடங்கும் திருவாய் மொழி. இத் திருவாய் மொழியில், முந்திய திருவாய் மொழியில் அநுபவிக்கப் பெற்ற கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம் பற்றும் விபவ குணப் பண்புகளை உற்றுணர்ந்த ஆழ்வார் "அந்தோ! அனைவர்க்கும் எளியவனாய், நிர்ஹேதுக க்ருபையை உடையவனை எம்பெருமானிடம் ஈடுபடாமல் மற்ற விஷயங்களில் ஈடுபட்டு, ஸம்ஸாரிகள் நசித்துப் போகிறார்களே" என்று பத்த ஜீவர்களின் இழவை அநுஸந்தித்ததாலே சென்ற திருவாய் மொழியில் எம்பெருமான் செய்த பலாதானம் (வலிமையூட்டினது) 'கற்பாரி ராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ' என்கிற இத் திருவாய் மொழியிலே சுவறிப் போயிற்று. (இல்லை என்றே சொல்லும்படி ஆயிற்று.)

(பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்து) இது 'பாமருமூவுலகும்' என்று தொடங்கும் ஆறும் திருவாய் மொழியின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. முற் கூறியபடி ஐந்தாம் திருவாய் மொழியிலே ஆழ்வார் வருத்தத்தின் உச்சநிலையை அடைந்தமையாலே பழைய கூப்பீடே தலையெடுக்கத் தொடங்கிற்று. அதாவது 'உண்ணிலாவிய' என்னும் முதல் திருவாய் மொழியில் ஆழ்வார் எப்படி ஓலமிட்டாரோ அவ்வண்ணமாகவே இத் திருவாய் மொழியிலும் 'பற்பநாபா ஓ' 'பற்பபாதா ஓ' 'தாமரைக்கண்ணா ஓ' 'தாமரைக் கையா ஓ' என்று ஓலமிட்டார். 'தனியேன் தனியாளா ஓ' என்றும் கூக்குரலிடுகையாலே இதுவும் 'உண்ணிலா விய' வில் கூக்குரல் போலே தனிமைக் கூப்பீடு ஆயிற்று.

(சூழவும் பகை முகஞ்செய்ய) இது 'ஏழையராவி' என்று தொடங்கும் ஏழாந்திருவாய் மொழியின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. சென்ற திருவாய் மொழியில் 'அடியுந்தி கைமார்வு கண்வாய் செஞ்சுடர்ச் சோதி' என்று அவன் வடிவழகை அநுஸந்தித்தார். அவ்வடிவழகு தானே நெஞ்சிலே ஊன்றி நிற்கையாலே பாவநாப்ரகர்ஷம் என்னும் நினைவின் முதிர்ச்சியாலே ப்ரத்யக்ஷம் போலே அவனுடைய ஒவ்வொரு அவயவங்களும் இவருக்குக் காட்சியளித்தன. ப்ரத்யக்ஷம் என்றே நினைத்து அணைப்பதற்காகக் கையை நீட்டினால், அணைப் பினால் வரும் ஆனந்தத்தைப் பெருமையாலே ஆற்றாமை பிறந்து, எம்பெரு

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

மாளேடு கலந்து, பிரிந்து, உருவ வெளிப்பாட்டாலே வருந்தும் ஒரு பிராட்டி பாசுரத்தாலே இத் திருவாய்மொழியை அருளிச் செய்கிருர் ஆழ்வார். இதில் 'இணைக் கூற்றங்கொலோ அறியேன்' என்றும், 'கண்ணன் கோளிழை வாண் முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றதே' (7-7-8) என்றும், 'சூழவும் தாமரை நாண் மலர் போல் வந்து தோன்றும் கண்டீர் ……… என் செய்கேன்' (7-7-1) என்றும் முன்பு அனுபவிக்கப் பெற்ற முகாவயவ சோபையானது தெளிவாக நினைவுக்கு வந்து, கண்ட கண்ட இடமெங்கும் தோன்றி நின்று, பகைவர்கள் போலே முன்னின்று நலியத் தொடங்கிற்று. இப்படி திருமுக மண்டலத்திலுள்ள அவயங்களான திருக்கண், திருமூக்கு, திருவாய், திருப்புருவம், திருக்காது, திரு நெற்றி முதலியவை பகைவர்போலே சுற்றிலும் தோன்றி, சூழவும் பகை முகஞ் செய்தபடியைச் சொல்லுகிறது இத்திருவாய்மொழி.

(எடுப்பும் சாய்ப்புமான க்லேசம் நடக்க) இது முற்கூறிய ஏழு திருவாய்மொழிகளிலும் ஆழ்வாருக்கு நடந்த நிலைகளை ஸங்க்ரஹிக்கிறது. அதாவது— முதல் மூன்று திருவாய்மொழிகளில் க்லேசம் தலையெடுத்தும், 'ஆழியெழ' என்னும் திருவாய்மொழியில் எம்பெருமான் தன் விஜயங்களைக் காட்டினபோது தலைசாய்ந்தும், மீண்டும் மேல்த் திருவாய் மொழிகளிலே கூப்பிடும் படியும், சூழவும் பகை முகஞ் செய்யும்படியும், தலையெடுத்தும் சென்றதைச் சொல்லுகிறது.

(உபாயாதிகார தோஷ மொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்திரியைக் கேட்க) இது 'மாயாவாமனனே' என்று தொடங்கும் எட்டாந் திருவாய்மொழியின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. 'அகலகில்லேன்' என்னும் பாசுரத்தில் நிறைவாளனை உன்னை உபாயமாகப் பற்றின நான் இன்னமும் உன்னை அடையாமல் இப்படி எடுப்பும் சாய்ப்புமான க்லேசத்தை அநுபவிக்க காரணமென்ன? ஸித்தோபாயமான உன்னிடத்தில் அஜ்ஞானம், அசக்தி முதலிய எந்த தோஷமும் இல்லை. ஆகிஞ்சன்யமும், அநந்யகதித்வமும், ஆர்த்தியும் நிறைந்திருக்கப் பெற்ற சரணாகதனை என்னிடத்தில் அதிகார தோஷமும் ஒன்றுமில்லை. அதாவது தகுதிக்கு எக்குறையுமில்லை. இப்படி இருவரிடமும் தோஷமில்லாமலிருக்கும் போது என்னிடமுள்ள பாசங்களை நீக்கி, என்னை உனக்கு அநந்யார்ஹசேஷமாகக் கொண்ட பின்பு இன்னமும் என்னை இந்த ஸம்ஸாரத்தில் வைத்த ஆச்சர்யத்திற்குக் காரணமென்ன? நீயே அருளிச்செய்யவேணும்'' என்று ஆழ்வார் "பாசங்கள் நீக்கி என்னை உனக்கே அறக் கொண்டிட்டு நீ ……. மாயங்கள் செய்து வைத்தி இவை என்ன மயக்குக்களே'' (7-8-5) 'இவை என்ன விசித்திரமே' (7-8-2) முதலான பாசுரங்களில் எம்பெருமானை மடிபிடித்துக் கேட்டார் இத் திருவாய்மொழியில்.

(ஐச்சமாக இருத்தி உறக்கொண்ட ஸ்வபர ப்ரயோஜனத்தை அருளிச் செய்ய, என் சொல்லி எங்கான் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவுமென்கிற உபகாரஸ்ம்ருதியோடே) இது 'என்றைக்குமென்னை' என்று தொடங்கும் ஒன்பதாம் திருவாய்மொழியின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. சென்ற திருவாய்மொழியில் 'என்னை நீ இங்கு வைத்ததற்குக் காரணமென்ன? என்று ஆழ்வார் கேட்ட கேள்விக்கு "உம்மைத் திருவாய்மொழி பாடவைத்துஎன் ஆனந்தமாகிற ஸ்வப்ரயோஜனத்தையும், என் அடியார்களுக்கு

http://acharya.org

ஆனந்தமாகிற பரப்யோஜனத்தையும் பெறுவதற்காக என் இச்சையாலே உம்மை இவ்வுலகிலே இருத்தி வைத்தோம் காணும்" என்று எம்பெருமான் பதில் அருளிச் செய்தான். 'மறப்பிலா என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை, உறப்பல இன்கவி சொன்ன உதவிக்கே, (7-9-9) முதலான பாசுரங்களில் எம்பெருமான் இப்படி பதிலுரைத்தது அறியக்கிடக்கிறது. இப்படி எம்பெருமான் பதில் சொன்னதைச் செவியுற்ற ஆழ்வார் "வியாஸர், பராசரர், வால்மீகி முதலான ரிஷிகளும், முதலாழ்வார்களும் இருக்கும்போது, என்னைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்வதே, இந்த உபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?" என்று தடுமாறினர். 'என் சொல்லி நிற்பனோ' 'எந்நாள் சிந்தித்து ஆர்வனோ' 'பார் விண்ணீர் முற்றும் கலந்து பருகிலும் ஆர்வனோ' (உபயவிபூதியிலுள்ளாருடைய சக்தியையும், ஸ்வபாவத்தையும் உடையவனாய்க் கொண்டு அநுபவித்தாலும் திருப்தியடைவேனோ) இறப்பெதிர்காலம் பருகிலும் ஆர்வனோ' என்று சொல்லியும், 'உதவிக்கைம்மாறு என்னுயிர் என்னவுற்றெண்ணில், அதுவும் மற்றாங்கவன் தன்னது ....அப்பனுக்கு எதுவு மொன்றுமில்லை செய்வதிங்கு மங்கே' (7-9-10) என்று "இவ்வுதவிக்குக் கைம்மாறாக என் ஆத்மாவையே கொடுக்கலாம் என்று பார்த்தால், அவ்வாத்மாவும் அவனுடையதாகவே யிருக்கையாலே, உபய விபூதியிலும் இவ்வுதவிக்குச் செய்யக்கூடிய கைம்மாறு யாதொன்றுமில்லை" என்று சொல்லியும், உபகாரஸ்ம்ருதியோடு (செய்ந்நன்றியோடு) கூடியவரானார் ஆழ்வார். இது இப்பத்தில் ஆழ்வார் பெற்றபேறு.

(தன் சரிதை கேள்வியாகாமல் ....ப்ராப்யஸாதநாவதியை ப்ரீதியாலே ப்ரகாசிப்பிக்கிறார் ஏழாம்பத்தில்.) இது 'இன்பம் பயக்க' என்று தொடங்குவதாய், இப்பத்துக்கு உபதேசப் பதிகமான பத்தாந்திருவாய்மொழியின் ப்ரமேயத்தைச் சொல்லுகிறது. சென்ற திருவாய்மொழியில் ஏற்பட்ட உபகாரஸ்ம்ருதியினாலே, திருவாறன்விளையில் எழுந்தருளியிருக்கும் பெருமானைத் திருவாய் மொழி கேட்கச் செய்து, அடிமை செய்வோம் என்று ஆழ்வார் குதூஹலம் கொண்டார். "மிதிலைச் செல்வி உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள் செம்பவளத் திரள்வாய்த் தன் சரிதை கேட்டான்" (பெருமாள் திரு. 10-8) என்கிறபடியே, த்ரேதா யுகத்தில் குசலவர்கள் மூலமாகத் தன் சரிதையான ஸ்ரீ ராமாயணத்தைப் பெரிய சபை கூட்டிக் கேட்டுகந்த அவனுக்கு இப்போது திருவாய் மொழி கேட்பதில் ஆசை மிகுந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? ஆனால் அப்படித்தன் சரிதை கேட்டதைக் காட்டிலும் பரமவிலக்ஷணமாகத் திருவாய் மொழி கேட்பிக்க வேண்டுமென்று ஆழ்வார் பாரித்தார். ஸ்ரீ ராமாயணம் கேட்டது போல் பிராட்டியைப் பிரிந்து, தனியிருப்பிலே யாகாமல், பிராட்டியோடு கூடியிருக்குமிருப்பிலே ஆகவேணும் என்று திருவுள்ளம் பற்றி "இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் தானும் இவ்வேழுலகை, இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து" என்கிற படியே பிராட்டியும் தானுமாய் உலகெல்லாம் வாழும்படி எழுந்தருளிருக்குமிடமாய், 'நிலத்தேவர் குழு வணங்கும் சிந்தை மகிழ் திருவாறன்விளை' என்கிறபடியே நிலத் தேவரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரண்டு வாழுமிடமான திருவாறன்விளை என்னும் மலைநாட்டுத் திருப்பதியிலே, ஸ்ரீ வைஷ்ணவப் பெருங்குழுவிலே திருவாய் மொழி கேட்பித்து அடிமை செய்யப் பாரித்தார் ஆழ்வார். அப்போது எம்பெருமான் ஆழ்வாருடைய திருவுள்ளத்தைப் பரீக்ஷிக்க விரும்பினான். 'திருவாய் மொழி கேட்பிப்பதிலேயே இவர் ஊன்றியிருக்கிறாரா, அல்லது பரமபதம் செல்வதிலும் ஆசை வைத்திருக்கிறாரோ பார்ப்போம்' என்று நினைத்து 'ஆழ்வீர்! பரமபதம் கொடுப்பதாக விருக்கிறோம்' என்று கூற, "திருவாறன்

http://acharya.org

விளையுறை நிர்த்தனுக்கு அற்றபின் - சிந்தை மற்றொன்றின் திறத்த தல்லாத் தன்மை தேவபிரானறியும்'' (7-10-10) என்று பரமபதத்தின் பேர் சொல்லுகையும் தமக்கு அஸஹ்யமாய், 'மற்றொன்று' என்றே சொல்ல வேண்டும்படி ஸாமகான கோஷ்டியான பரம பதத்தையும் தேவபிரானை பரமபத நாதன் அறிய உபேக்ஷித்தார் ஆழ்வார். 'இப்படிப்பட்ட ஆழ்வார் உபதேசப் பதிகமான இத் திருவாய் மொழியில் எவருக்கு எந்த விஷயத்தை உபதேசிக்கிறார்?' எனில், சென்ற பத்திலே 'அகலகில்லேன்' என்கிற பாசுரத்திலே காட்டிய ஸித்தோபாயத்திலே ஊன்றியிருக்கும் அதிகாரிகளுக்கு ப்ராப்யத்தினுடைய எல்லையையும், ப்ராபகத்தினுடைய எல்லையையும் வெளியிட்டருளுகிறார். 'அதாவது-எம்பெருமானைக் காட்டிலும் அவனோடு ஸம்பந்தம் பெற்ற ததீயவிஷயமே ப்ராப்யத்தினுடைய எல்லை என்பதை, 'நீணகரமதுவே மலர்ச்சோலைகள் சூழ் திருவாறன்விளை' [7—10—7] என்று காட்டினார். அர்ச்சாவதாரம் எடுத்து எளியனாய் நிற்கும் எம்பெருமானே ப்ராபகம் எனப்படும் ஸாதனத்தினுடைய எல்லை என்பதை 'திருவாறன் விளை நீணகரத்துறைகின்ற பிரான்....வாணனை ஆயிரம் தோள் துணித்தான் சரணன்றி மற்றொன்றிலமே'' என்று அருளிச்செய்தனர். 'உள்ளித்தொழுமின் தொண்டீர்' [7—10—6] என்று முன்னிலைப்படுத்தி அருளிச் செய்கையாலே ஏழாம் பத்துக்கு உபதேசபரமான திருவாய்மொழி இதுவே என்று விளங்குகிறது. இவ்வளவால் ஆசார்யஹ்ருதய சூர்ணிகளைத்தழுவி ஏழாம்பத்தின் ஸாரம் விவரிக்கப்பட்டதாயிற்று.

ஷஷ்ட்யப்தபூர்த்தி என்னும் ஒரு வியாஜத்தையிட்டு, திருவாய்மொழி பத்து பத்துக்களின் ஸாரார்த்தங்களையும், ஸ்ரீபாஷ்யத்தின் 16 பாதங்களின் ஸாரார்த்தங்களையும் வித்வத்வரிஷ்டர்களைக் கொண்டு வெளியிடச் செய்தும், மற்றும் உலகிற்குப் பல உபகாரங்களைச் செய்தும் மஹோபகாரகராய் உலகம் நிறைந்த புகழாளராய் விளங்கும் வாகம்ருதவர்ஷீ ஸ்ரீ.உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி ஶதாபிஷேகம் முதலான பல வைபவங்களையும் கண்டருளி, உலகிற்கு மற்றும் பல பேருபகாரங்களைச் செய்து 'வையம் மன்னி வீற்றிருக்கவேணும்' என்று அணியார் பொழில் சூழ் அரங்கநகரப்பனை இறைஞ்சுவோமாக.

பூமன்னுமாது பொருந்தியமார்பன் புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன்* பல்கலையோர்
தாம்மன்னவந்த இராமாநுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னிவாழ* நெஞ்சே! சொல்லுவோமவன் நாமங்களே.

http://acharya.org

சடகோபராமாநுஜன்

1. எய்தற்கரியமறைகளை, ஆயிரமின்தமிழால்
செய்தற்கு உலகில்வரும்சடகோபனை, சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர்சீரை உயிர்களெல்லாம்
உய்தற்குதவும், இராமாநுசன் எம் உறுதுணையே.

2. உறுபெருஞ்செல்வமும் தந்தையும் தாயும், உயர்குருவும்
வெறிதருபூமகள்நாதனும், மாறன்விளங்கியசீர்
நெறிதரும் செந்தமிழாரணமேயென்று இந் நீணிலத்தோர்
அறிதரநின்ற, இராமாநுசன் எனக்காரமுதே.

3. ஆரப்பொழில்தென் குருகைப்பிரான், அமுதத்திருவாய்
ஈரத் தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு, இனியவர் தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள்நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும், இராமாநுசன் என்தன் மாநிதியே.

4. கூறும்சமயங்களாறுங்குலைய குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை, மதியிலியேன்
தேறும்படி யென்மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறும்குணனை, இராமாநுசனை யிறைஞ்சினமே.

5. நாட்டியநீசச்சமயங்கள் மாண்டன, நாரணனைக்
காட்டியவேதம்களிப்புற்றது, தென்குருகைவள்ளல்
வாட்டமிலா வண்தமிழ் மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து, இராமாநுசன் தன் இயல்வுகண்டே.

6. உணர்ந்தமெய்ஞானியர்யோகந்தொறும், திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசை மன்னுமிடந்தொறும், மாமலராள்
புணர்ந்தபொன்மார்பன்பொருந்தும் பதிதொறும் புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல், இராமாநுசனெம்குலக்கொழுந்தே.

7. பண்டருமாறன்பசுந்தமிழ், ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிட எங்களிராமாநுசமுனிவேழம், மெய்ம்மை
கொண்டநல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது, வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே.

8. தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும், தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும், நான்மறையும்
நிற்கக்குறும்புசெய்நீசரும் மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம், எம்மிராமாநுசமுனி போந்தபின்னே.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருவாறன்விளை – திருக்குறளப்பன்

http://acharya.org

ஸத்யகாமத்வம்

(1) தேவிமார் பணியா நேர்பட்ட நல்ல கோட்பாடென்றும்படி சக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீபரிஜநாதிகளையுடைய ஸத்ய காமன் கொண்ட வாக் வ்ருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் சங்கையும் அச்சமும் தீரத் (2) தலைச் சிறப்பத் தந்தவதில் க்ருதஜ்ஞதா பல ப்ரத்யுபகாரமாக வேந்தர் தலைவன் கன்யகா தானம் போலே ஆரத்தழுவி அறவிலை செய்த ஆத்ம லாபத்தாலே அதீவ விளங்கிப் பணைத்து (3) ஜன்மபாசம் விட்டு ஆத்வாரம் ஆளுமாளாரென்று பரிந்து அநுரூபனோடே அமர்ந்து பிரிவில் கிருபண தசையாகத் துவரும் ஸீதா குணங்களாலே ப்ரீதி வர்த்தித்துத் (4) தித்திக்க உள்ளே உறைந்து கண்டு கொண்டிருந்து அமானுஷ போக மாக்கின வன் (5) மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலி டாமல் சிறியேனென்றதின் பெருமையைக் காட்ட, (6) தேஹாதி களில் பரமாய், நின்று நினைக்கில் லக்ஷ்மீ துல்யமாய் அவர்க்கே குடி களாம் பரதந்த்ரஸ்வரூபத்தை யநுஸந்தித்தவர் (7) ஸ்வஸாதந ஸாத்யஸ்தர் இருகரையராகாமல் மண்ணவரும் வானவரும் நண்ணு மத்தையே குறிக் கொண்மின் உள்ளத்தென்று ப்ராப்யைக பர ராக்குகிறூர் எட்டாம்பத்தில்.

ஆசார்யஹ்ருதயம்
226-8

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ.உ.வே. வித்வான். யதீந்த்ரப்ரவண ப்ரபாவம் பிள்ளை லோகம் பாஷ்ய கார் ஸ்வாமி.

பிறப்பு

துன்மதி ஸூ ஆவணி மீ 11உ (26-8-1921) வெள்ளிக்கிழமை க்ருத்திகா நக்ஷத்திரத்தில் ஜனனம். மாதா மஹன் திருமலை விஞ்சிமூர் நரஸிம் ஹாசாரியார் ஊரான கன்னிகைப் பேரில் (கன்னிபுத்தூரில்) ஜனனம். பிறந்த குடும்பம் 74 ஸிம்ஹாஸ நாதிபதிகளில் நடுவிலாழ்வானும் அஷ்டதிக்கஜங்களில் பரவஸ்து பட்டர் பிரான் ஜீயருமாகி வந்த யதீந்தரப்ரவண ப்ரபாவ கர்த்தாவுமான பிள்ளை லோகம் ஜீயர் ஸந்ததியில் வழியாகப் பிறப்பு. பல ஸ்ரீ வைஷ்ணவ சிஷ்ய ஸம்பத் உடையவரும் திருக் கடல்மல்லை ஸ்ரீ ஸ்தல சயனப் பெருமாள் பூதத்தாழ்வார் - திவ்யதேசத்தில் தீர்த்த மரியாதை பிருதுகள் பெற்றகுலம். பெருமாள் கோயில் திரு வெஃகா திவ்ய தேசஸமீபத்தில் பெரியோர்கள் எழுந் தருளியிருந்த இடம். திருத்தகப்பனர் ஸ்ரீ உ. வே. யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம் பிள்ளை லோகம் திரு வேங்கடாசார்ய ஸ்வாமி.

படிப்பு

பிறந்த உடன் திருக்கடன் மல்லையில் வாசம் 8 ஆண்டுகள் வரை பள்ளிக் கூடப் படிப்பு. எட்டாம் வயதில் உப நயனம். உபநயனமானபின் ஸ்ரீபெரும் பூதூர் உபயவேதாந்த வர்த்திநீ ஸம்ஸ்க்ருதக்கல்லூரியில் கீழ் வகுப்புக்களில் 8 ஆண்டு ஸம்ஸ்க்ருத பாடம் படித்தல். 18 ஆம் வயதில் (கல்யாணம்) க்ருஹ ஸ்தாச்ரமம் (1940) 19 ஆம் வயது முடிய சோளஸிம்ஹபுரம் ஸமஸ்க்ருதகல்லூரி யில் மேல்படிப்பு சிரோமணி முதல் இரண்டு ஆண்டு முடிய. (41 - 42 - 42 - 43) இரண்டு ஆண்டுகள் ஸ்ரீபெரும்பூதூரில் கல்லூரியில் ஸ்ரீ உ. வே. ஆஸூரி பெரியராமானுஜ ஆச்சாரியார் ஸ்வாமியிடமும மற்றும் வித்வான்களிடமும் ந்யாயசிரோமணி மேல் பைனல் படித்துத் தேறியது.

1944 முதல் 1950 முடிய சென்னையில் ஸ்ரீ பாஷ்யம், முதலிய வேதாந்த க்ரந்தங்களும் பகவத் விஷயம், ரஹஸ்யக்ரந்தங்கள் முதலியனவும் கீர்த்தி மூர்த்திபான ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசாரியர் ஸ்வாமியிடம் ஸ்ரீ. உ. வே. வாக்ம் ருதவர்ஷி K. வரதாசாரியர் ஸ்வாமி, திருமலை அனந்தாண் பிள்ளை சதாபிஷேகம் கோவிந்த நரசிம்மாசாரியர் ஸ்வாமி, தேசிவரதா சாரியார் ஸ்வாமி குமாரர் ரங்கராஜ ஐய்யங்கார் ஸ்வாமி இவர்களுடன் காலக்ஷேபம் செய்தது. சுமார் 30 வருஷகாலமாய் ஆங்காங்கு உபன் யாஸம் செய்தல்.

1954 ஆண்டு அதாவது 33 ஆம் வயது முதல் 25 ஆண்டுகள் 58 வயது முடிய 1979 முடிய மயிலை பெ. சு. சுப்ரமணியம் உயர்நிலைப்பள்ளியில் தமிழா சிரியராக இருந்து ஆகஸ்டு 1979 ஒய்வு பெற்றது. அதற்காக தமிழ் வித்துவான் பட்டமும் பெற்று S.S.L.C. பிரிவு பாஸ் செய்து இப்பொழுது 60 ஆம் வயதில் இருப்பவர்.

பெருமாள் கோயில் இருக்த பொது திவ்யப்ரபந்தம், ஆசாரிய ஸ்தோத்ர, ரஹஸ்ய க்ரந்தங்களின் மூலம் P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி பாடசாலையில் அதிகரித்தது.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருக்குளந்தை மாயக்கூத்தன்

http://acharya.org

ஸ்ரீமதே சடகோபாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

"ஸத்யகாமத்வம்"

திருவாய்மொழி—எட்டாம் பத்தின் ஸாரம்

ஸ்ரீ உ. வே. பிள்ளை லோகம் பாஷ்யகாராசார்யஸ்வாமி.

ச்ரிய: பதியான ஸர்வேச்ரனாலே மயர்வறமதி நலமருளப் பெற்றவர்களான நம் ஆழ்வார்களில், அவயவியென்றும் வேதம் தமிழ் செய்த மாறனென்றும் கொண்டாடப்படும் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில் எட்டாம் பத்தின் ஸாரார்த்தத்தை ஆசார்யாநுக்ரஹத்தால் யதாமதி யதாசக்தி விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

நம்மாழ்வார் 10 பத்திலும், எம்பெருமான் பிறப்பித்த பத்து தசா விசேஷங்களை ப்ரகாசப்படுத்தினார். ஆசார்யஹ்ருதய-ஸூத்ரம் (218) பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ காருணிகத்வ சரண்யத்வ சக்தத்வ ஸத்ய காமத்வ ஆபத்ஸகத்வ ஆர்த்திஹரத்வ விசிஷ்டன் இத்யாதி காண்க. இந்த எட்டாம் பத்தில் ஸர்வேஸ்வரனுடைய ஸத்யகாமத்வத்தை வெளியிடுகிறார்.

கீழ்ச்சொன்ன ஸர்வ ஶக்தி யோகத்தாலே நித்யமாகக் கல்பித்தமான போக்ய போகோபகரண போகஸ்தானங்களையுடையனாகையாலே ஸத்யகாமன் ஸர்வேச்வரன் என்பது விளக்கப்படுகிறது.

1. தேவிமாராவார்

ச்ரிய: பதியான எம்பெருமான் ஆதாரசக்திக்ரமத்தில் திருவநந்தாழ்வான் மேலே மஹிஷீ பூஷண ஆயுத பரிஜந பரிச்சதாதிவிசிஷ்டனாய், நித்ய முக்தாநுபாவ்யனாய் எழுந்தருளியிருக்கும் ப்ரகாரமே பர்யங்கவித்யையில் கூறப்பட்டதாகும். அந்த பிரகாரத்தில் திருவாறன்விளை என்னும் திவ்ய தேசத்தில் ஆழ்வார் பாடின திருவாய்மொழியைக் கேட்கைக்காக எழுந்தருளியிருந்தான். அங்கே போய் திருவாய்மொழி கேட்பித்து அநுகூலவ்ருத்திகளைப் பண்ணி அநுபவிப்போம் என்று (7-10-) கீழே பாரித்தார். ஆனால் அது மநோரதமாத்ரமேயாய் நினைத்தபடி தலைக்கட்டப் பெற்றதில்லை. இத்திருவாய் மொழியில் 1-1-1 'தேவிமார் ஆவார்' என்று தொடங்கி 'மின்னுருவம்' என்னுமளவும்—பிராட்டிமார் அருகே எழுந்தருளியிருக்க, நித்யஸூரிகள் உண்டாயிருக்க, நினைத்தபடி கார்யம் செய்து தலைக்கட்டுகைக்கு ஈடான ஐஶ்வர்யம் குறைவற்றிருக்க, ஆஸ்ரிதர் உகந்தவற்றைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டு உதவும் ஸ்வபாவனாயிருக்க, தனக்கும் ருசி குறைவற்றிருக்க நினைத்தபடி பரிமாற்றம் கிடைக்கவில்லையே என்று வெறுத்தார்.

http://acharya.org

1. தேவிமாராவார் ப்ராபகப்ரதாநம்

2. நங்கள் வரிவளை—ப்ராப்யப்ராதாநம் (1) அவன் குணங்களிலும் ஸ்வரூபத்திலும் அதிசங்கை பண்ணித்தெளிந்து (1-8) 'வணங்குமாறறியேன்', என்று தந்தலையில் ஸாதநயோக்யதையைத் தவிர்த்து (1-9) யானும் நீ தானே யாவதோ மெய்யே" என்று அவனிடத்தில் ந்யஸ்தபரதையைச் சொல்லி, இப்படி ப்ராஸங்கிகமாக அவனே ப்ராபகன் என்று நிஷ்கர்த்தார் ஆகையால் கீழில் திருவாய்மொழி ப்ராபகப்ரதாநம்.

3. அங்குமிங்கும்—ஆழ்வாருடைய திருப்பல்லாண்டு, பீதராவதும் ஸமாஹிதராவதும்.

4. வார்கடாவருவி—ஸௌர்ய வீர்யாதி குணங்களையும் சக்தியையும் காட்டிக்கொடுக்க வடிவழகில் நெஞ்சை செலுத்தி இனியராகிறார்.

5. மாயக் கூத்தா—பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அது பெருமையால், அவன் வந்து முகக் காட்டாமல் க்லேசத்தோடே முடிந்து போமித்தனை யாகாதே என்று இழவோடே தலைக் கட்டுகிறது.

6. எல்லியும் காலையும்—ஊர்த்த்வம் மாஸாந் நஜீவிஷ்யே-என்ற அவளிற் காட்டில் "நஜீவேயம் க்ஷணமபி" என்றவனுகையாலே "ஹ்ரீரேஷாஹிமமாதுலா" என்று லஜ்ஜித்து தம்முடன் கலக்கைக்காக திருக்கடித்தானத்தில் எழுந்தருளியிருந்து தம் பக்கல் பண்ணுகிற வ்யாமோஹத்தை அநுஸந்தித்து இனியராகிறார்.

7. இருந்தும் வியந்து—விபீடணன் தறைப்பட்டாற்போலவும் ஸ்ரீஜனக ராஜன் திருமகள் ராம நாம ஸங்கீர்த்தனம் கேட்டுத் தெளிந்து ஹ்ருஷ்டையானுப் போலவும் இவ்வாழ்வாரும் தெளிந்து ப்ரீதராய் 'நமக்கு அத்வேஷத்தைப் பிறப்பித்து ஆபிமுக்யத்தை உண்டாக்கித் தன்னுலல்லது செல்லாமையைப் பிறப்பித்துத் தன் மேன்மை பாராதே இப்படித் தாழ நின்று வந்து கலந்து பரிமாறுவதே! இதென்ன ஆஸ்ரித்பாரதந்த்ர்யம், இதென்ன நீர்மை என்று அவன் படிகளை அநுஸந்தித்து ஹ்ருஷ்டராகிறார்.

8. கண்கள் சிவந்து—மாயக் கூத்தனில் ஆழ்வார்க்கு ஓடினவிடாயெல்லாம் ஆறும்படி எம்பெருமான் ஸம்ஸ்லேஷித்தான். ஈச்வரன் விடாயும் தீர்ந்தது. ஸம்ஸ்லேஷம்சிதிலமாக ஒண்ணுது, வளவேழுலகில் தம் அயோக்யதையை அநுஸந்தித்து அகலப்பார்த்தார். அவ்வாறு அகலாமல் இருக்க ஈஸ்வான் இவ்வாத்மவஸ்துவினுடைய வைலக்ஷண்யத்தை இவர் நெஞ்சில் படுத்த வேணும் என்று பார்த்து 'நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய், நமக்கு அத்யந்த சேஷமாய்க்காணும் இருப்பது, நீர் கிட்டுவது நமக்கு அவத்யமல்ல, கௌஸ்துபம்

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மதுரகவிகள்—திருக்கோளூர்

http://acharya.org

பிராட்டிமாரோபாதி நமக்கு நிறமாகும். என்று ஸ்வரூபவைலக்ஷண்யத்தை இவர் நெஞ்சில் படுத்தினன். தம்முடைய வடிவழகை முற்பட அநுபவிப்பித்து, தனக்கு நூபுராதிகளைப் போன்று அத்யந்த போக்யமுமாய் அத்யந்த சேஷமுமாயிருக்கும் ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுக்க அத்தை அநுபவித்து இனியராகிறார்.

கருமாணிக்கமலைமேல்—கீழ்த்திருவாய் மொழியில் முதல் இரண்டரைப் பாட்டால் அவனுடைய ஸௌந்தர்ய சீலாதிகளை அநுஸந்தித்து, அவற்றோபார்தி விலக்ஷணமுமாய் அநந்யார்ஹமாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தைக் குறைப்பாட்டால் அநுஸந்தித்து இனியரானார். அந்த சேஷத்வரஸத்தால் ப்ரீதராய், ப்ரீதி பாரவஶ்யத்தாலே தாமானதன்மையழிந்து ஒரு பிராட்டி தசையை அடைந்து அதனை அந்யாபதேசத்தாலே பேசி இனியராகிறார்.

நெடுமாற்கடிமை—8, 9 திருவாய்மொழிகளில் ஆத்மாவினுடைய அநந்யார்ஹசேஷத்வத்தை அருளிச் செய்தார். அதாவது பிறர்க்கும் உரித்தல்ல, தனக்கும் உரித்தல்ல என்பதாகும். ப்ரணவத்தில் மத்யமபதமான உகாரத்தாலும், நமஸ்ஸாலும் விளக்கப்பட்ட அர்த்தமிது. அநந்யார்ஹசேஷத்வத்துக்கு எல்லை ததீயசேஷத்வபர்யந்தமிறே. ஈஶ்வரஶேஷம் என்று அறிந்தவன்று ப்ரமித்து மீளலாம், ததீய ஶேஷத்வ பர்யந்த முணர்ந்தால் மீளவேண்டா.

ஐச்வர்யமும் புருஷார்த்தம் ஆத்மலாபம் புருஷார்த்தம் பகவத்ஶேஷத்வமும் புருஷார்த்தம், ஈச்ரனுய் ஆநந்தமய: என்றிருக்கும் இருப்பு புருஷார்த்தம் என்று நினைத்திருப்பவர் பலர். இவை தனித்தனியாகவும் திரளவும் நான் பற்றின பாகவதசேஷத்வமாகிற புருஷார்த்தத்திற்கு ஒவ்வாது. இதுவே காலதத்வமுள்ளதனையும் எனக்கும் என்னோடு ஸம்பந்தமுடையார்க்கும் வாய்க்க வேணும் என்று ப்ரார்த்தித்து தலைக் கட்டுகிறார் நம்மாழ்வார்.

பாகவதசேஷத்தவம்

8-10-

நெடுமாற்கடிமை

பயிலும் சுடரொளியில்-(இவ்வாத்மாவுக்கு நாதர் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்றது) (இதில் நிரதிசயபுருஷார்த்தபூதர்-போக்யபூதர்-அவர்கள் என்றது) பாகவத போக்யதைக்கு ஹேது பகவத்ஸம்பந்தமாகையாலே அந்த எம்பெருமானுடைய—ஆச்ரிதவ்யாமோஹம், உதாரரூபத்வம், அசேஷஜந ஸம்ச்லேஷம், ஆபத்ஸகத்வம், ஆஶ்சர்யஸ்வபாவம், ஆச்ரித விரோதி நிரஸநம், அகிலகாரணத்வம், அர்ணவசாயித்வம், ஆயுதபூர்த்தி. அநுபாவ்யாகாரயோகம்- இவற்றை முறையே பத்துப்பாட்டுக்களில் அநுபவித்தார் ஆழ்வார்.

எம்பெருமானுக்கு அபிமதர்கள் பாகவதர்-ஆகவே அத்யந்த சேஷத்வ காஷ்டாவிசேஷமே அதிசயிதபோக்யம். ஐச்வர்யகைவல்ய பகவத்ப்ராப்த்யாதிகளும் அதுக்கு ஸத்ருசமாகமாட்டா. சேஷித்வத்தை முதல் நான்கு பாட்டுக்களிலும், ஶரண்யத்வத்தை 5, 6, 7 பாட்டுக்களிலும் ப்ராப்யத்வத்தை 8, 9, 10 பாட்டுக்களிலும் பாகவத விஷயத்தில் ப்ரதிபாதித்தருளுகிறார்.

http://acharya.org

9. **கோதிலவடியார்**—[ப்ரயோஜநாந்தரஸம்ஸர்கமாகிற கோது இல்லாத அடியார்-சத்ருக்நாழ்வான் போல்வார். ராமபக்தியாகிற கோதில்லையவர்க்கு

10. **நீக்கமில்லவடியார்**—[பிரிவு இல்லாதபடி அநுபவிக்கிற அடியார்-நீக்கமில்லா இளைய பெருமாள் போல்வார்.

2. சயமே அடிமை தலை நின்றார்-பரதாழ்வான் போல்வார். ஸ்வயம் ப்ரயோஜனமாகை.

3. இந்தப்பத்தில்-100 பாசுரங்களில்-3 திருவாய்மொழிகளில் மூன்று அர்ச்சா ஸ்தல எம்பெருமானுடைய அநுபவம்.

(1) 8-4 வார்கடாவருவி—திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு

(2) 8-6 எல்லியும் காலையும்—திருக்கடித்தானம்

(3) 8-9 கருமாணிக்கமலைமேல்—குட்டநாட்டுத்திருப்புலியூர்

8-9- கருமாணிக்கமலைமேல்-தோழிப்பேச்சு, 8-2 நங்கள் வரிவளை-தலைவிப் பேச்சு.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஈயாடுவதோ கருடற்கெதிரே, இரவிக்கெதிர் மின்மினியாடுவதோ
நாயாடுவதோ வுறுமிப் புலிமுன், நரிகேசரி முன் நடையாடுவதோ
பேயாடுவதோ வழகூர் வசிமுன், பெருமான் வகுளாபரணன் அருள்கூர்ந்து
ஓவாதுரை யாயிரமாமறையின் ஒரு சொற் பொருமோ உலகிற்கவியே.

http://acharya.org

ஆபத்ஸகத்வம்

(1) எண் டிசையு மகல் ஞாலம் எங்குமளிக்கின்ற ஆலின்மே லென்னும்படி நித்யபோகபாதலீலோபகரணத்தின் லயாதிகளைப் போக்கும் ஆபத்ஸகன் (2) ஆருயிரென்னப்படுத்தின ஆத்ம தர்சந பலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடுகவிட்டு (3) ஏகமெண்ணிக் காணக் கருதி எழ நண்ணி நினைதொரு முருகி யலற்றிக் கவையில் மனமின்றிப் பதினாலாண்டு பத்து மாஸ மொரு பகல் பொறுத்தவர்கள் ஒரு மாஸதின ஸந்த்யையில் படுமது க்ஷணத்திலே யாக விரங்குகிற த்வரைக்கீடாக (4) இனிப்பத்தி லொன்று தசமதசையிலே பேறென்று நாட்கடலாகத் தம்பிக்கிட்ட தாகாமல் நாளை வதுவை போலே நாளிடப் பெற்றவர், (5) இம்மட வுலகர் கண்டதோடுபட்ட அபாந்தவாரக்ஷகாபோக்யாஸுகா நுபாய ப்ரதி ஸம்பந்தியைக் காட்டி (6) மற்றொன்று கண்ணனல் லாலென்கிற வைகல் வாழ்தலான ஸித்தோபாயம். (7) அதில் துர்ப்பல புத்திகளுக்கு மாலை நண்ணி காலைமாலை விண்டு தேனை வாடாமலரிட்டு அன்பராம் ஸாங்கபக்தி, அதில் அசக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி, (8) அதில் அசக்தர்க்கு உச்சாரண மாத்ரம், ஸர்வோபாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் தென்டனென்று கீதாசார்யனைப்போலே அதிகாராநுகுணம் நெறியெல்லாமுரைக் கிறார் ஒன்பதாம் பத்தில்.

ஆசார்யஹ்ருதயம்
227-9

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. வித்வான் திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி.

(1) இவர் திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் ப்ரதிவாதி பயங்கரம் திருமாளிகையில் ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யஸ்வாமிக்கும் செண்பகவல்லி அம்மங்காருக்கும் மூன்றாவது குமாரனைப் பிறந்தார். நாங்கூர் ஆரம்பப் பள்ளியில் படித்தார். பிறகு சென்னை காகுமானி சாரிடி ஸம்ஸ்க்ருத பாட சாலையில் என்ட்ரென்ஸ் பரீக்ஷை தேறினர். பிறகு

(2) ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத கலா சாலையில் ந்யாய வ்யாகரண சிரோமணி பட்டம் பெற்றார். திருத்தகப்பனாரிடத்தில் பகவத் விஷய ரஹஸ்யக்ரந்த காலக்ஷேபமும், ஸ்ரீ. உ. வே. ஆஸூரி பெரியராமாநுஜாசார்யஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபமும் செய்தவர். ஸ்ரீமத்பரமஹம் ஸேத்யாதி. ஸ்ரீமந்நாராயண ஜீயர்ஸ்வாமி ஸ்த்தாபித்த உபய வேதாந்த ஆசார்ய பீடம் மூலமாக "ஸ்ரீமதுபய வேதாந்தாசார்ய" என்றும் பிருதமும் தங்கப்பட்டமும் பெற்றார்.

(3) சென்னை காகுமானி சாரிடி ஸம்ஸ்க்ருத பாடசாலையில் 13 ஆண்டுகள் ந்யாய அத்யாபகராகவும் இருந்தார்.

(4) தமிழ் வித்வான் பட்டம் பெற்று, தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவக் கல்லூரியில் மருத்துவச் சரித்திர ஆராய்ச்சிப் பகுதியில் 12 ஆண்டுகள் தமிழ் பண்டிட்டாக இருந்தார்.

(5) ஸ்ரீரங்கம் குவளகுடி சிங்கமய்யங்கார் பாடசாலையில் 6 ஆண்டுகள் ஸம்ஸ்க்ருத உபாத்யாயராகவும் ஸ்ரீரங்கம் நெகமம் சாரிடி சார்பில் 6 ஆண்டுகள் உபந்யாஸகராகவும் இருந்தார்.

(6) 1956 ஜுலை 9ம் தேதி ஏற்பட்ட ஸ்ரீராமாநுஜமிஷனுக்கு பொதுச் செயலாளராக இருந்து கொண்டு எம்பெருமானர் தர்சநப்ரசார கைங்கர்யம் செய்து வருகிறார்.

(7) ஷை மிஷன் மூலமாக ஆழ்வார் திருநகரியில் "மாறன் செந்தமிழ் மாநாடும்" திருவாலி திருநகரியில் "பரகாலன் பைந்தமிழ் மாநாடும்" திரு நாராயணபுரத்தில் எம்பெருமானர் தர்ஶந மாநாடும் நடத்தப் பட்டது. ஷை மிஷன் மூலமாக தாரா கஞ்ச் ப்ரயாகையிலுள்ள ஸ்ரீவைஷ்ணவ ஸம்மேளநத்துடன் அகில பாரத ஸ்ரீவைஷ்ணவ மாநாடு நடத்தப்பட்டது.

(8) ஷை மிஷன் மூலமாக 21 முறை திவ்ய தேச யாத்ரை நடத்தப் பட்டன. 12 சிறு வெளியீடுகளும் வெளிவந்தன.

(9) ஷை மிஷன் 1981 ஜுலை மாதம் 9—10—11 தேதிகளில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீராமாநுஜமிஷன் (இந்தியா) வெள்ளிவிழா கொண்டாட்டம் அமையப் போகிறது.

ஷை மிஷனுக்கு அகில இந்திய பொதுச் செயலாளர் நம் ஸ்வாமியே.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சௌரிராஜப்பெருமாள்—திருக்கண்ணபுரம்

http://acharya.org

"ஆபத்ஸகத்வம்"

ஸ்ரீ உ.வே. வித்வான், திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீநிவாஸாசாரியார்ஸ்வாமி

திருவாய்மொழி ஒன்பதாம் பத்தில் "ச்ரிய: பதி ஆபத்ஸகன்" என்ற விஷயம் நிரூபிக்கப்படுகிறது. அதை இக்கட்டுரை மூலமாகச் சிறிது முடிந்த வளவு அநுபவிப்போமாக.

திருவாய்மொழி, நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய நாலு திவ்யப்ரபந்தங்களில் நாலாவதாகும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் நாலாவது ஆயிரமாகும். நம்மாழ்வார், தம் பேரருளால் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு நாலாயிரத்தையும் உபதேசம் செய்தருளினர். நாதமுனிகள் காலத்தில் "ஆராவமுதே" என்று தொடங்கும் (திருவாய்மொழி 5ம் பத்து 8ம் திருவாய்மொழி) பதினொரு பாசுரங்களும், நம்மாழ்வார் விஷயமாக மதுரகவிகள் திருவாய் மலர்ந்தருளிய "கண்ணிநுண் சிறுத்தாம்பினால்" என்று தொடங்கும் திவ்ய ப்ரபந்தம் பதினொரு பாசுரங்களுமே பிரசாரத்தில் இருந்தன. மற்றவையெல்லாம் பிரசாரத்திலில்லாமல் மறைந்து போயிருந்தன. நாதமுனிகள் நம்மாழ்வார் திருமுன்பே ஒரே கருத்தாக "கண்ணிநுண் சிறுத்தாம்பு" திவ்யப்ரபந்தத்தை 12 ஆயிரம் உரு ஜபித்தார். நம்மாழ்வார் நாதமுனிகளுடைய யோகத்தில் ஸாக்ஷாத்காரமானர். நாதமுனிகளின் வேண்டுகோளின்படி திருவாய்மொழி ஆயிரத்தையும் தமது மற்ற மூன்று திவ்யப்ரபந்தங்களையும் மற்ற ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களையும் பொருளோடு கூட நம்மாழ்வார் நாதமுனிகளுக்குத் தமது நிர்ஹேதுக க்ருபையாலே உபதேசித்தருளினர்.

சாஸ்த்ர ஸாரமான திருமந்த்ரம், அதன் விவரணமான த்வயம், அதன் விவரணமான சரம ச்லோகம் இவற்றின் பொருளை நாலாயிர திவ்யப்ரபந்தம் விவரிக்கிறது என்று நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு உபதேசம் செய்தருளினர். அந்த உபதேசமடியாக நாதமுனிகளும், ப்ரணவார்த்த விவரணமான திருப்பல்லாண்டை முதலிலும், நம: பதார்த்த விவரணமான கண்ணிநுண் சிறுத்தாம்பை முதலாயிரத்தின் முடிவிலும் அடுத்தபடி நாராயண பதார்த்த விவரணமான பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் இவற்றை 2வது ஆயிரமாகவும் சரம ச்லோகார்த்த விவரணமான இயற்பாவை 3வது ஆயிரமாகவும் த்வயார்த்த விவரணமான திருவாய்மொழியை நாலாவதாயிரமாக வரிசைப்படுத்தி அமைத்தருளினர். சாஸ்த்ர ஸாரார்த்த விவரணமான நாலாயிர திவ்யப்ரபந்தம் "த்ராவிட வேதாந்தம்" என ப்ரஸித்தி பெற்றது. இது பகவானின் ஸ்வரூப ரூப குண விபூதிகளைத் தெளிவாகவும் உறுதியாகவும் பிரகாசப் படுத்துகிறது.

http://acharya.org

சாஸ்த்ரமான ஸம்ஸ்க்ருத வேதம், பகவானின் ஆராதன ரூபமான யாகாதி கர்மாக்களைக் கூறிக் கர்மகாண்டமென்ற பூர்வபாகம் என்றும், ஆராத்யனான பகவானின் ஸ்வரூபத்தைக் கூறி ப்ரஹ்மகாண்டமென்ற உத்தரபாகமென்றும் இரு பிரிவானது. உத்தர பாகத்துக்கு 'வேதாந்த'மென்று ப்ரஸித்தி. அந்த வேதாந்தம் பகவானின்-பரப்ரஹ்மத்தின் ஸ்வரூப ரூப குண விபூதிகளை "இது இப்படி" என்று தெளிவாகக் கூறுது. பலபடியாகப் பொருள் கொள்ளலாம்படியான வாக்யங்களை உடையது. வேதாந்த வாக்யார்த்த நிர்ணயம் செய்வதற்கான விசார சாஸ்த்ரத்தை வ்யாஸர் செய்தார். அதுவும் பலபடி வ்யாக்யானம் செய்யலாம்படியான சப்த ஸமூஹமாய் அமைந்தது. வ்யாஸ ரிஷியின் கருத்தறிந்த போதாயன ரிஷி, வ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு ப்ரமாண நியாய யுக்திகளைக் கொண்டு உள்ளபடியான பொருளைத் தனது விருத்தி க்ரந்தத்தில் தெளிவாகக் கூறினார். அதுவும் நாளடைவில் பிரசாரமின்றியொழிந்தது. அதன் பொருளையெல்லாம் எம்பெருமானது நிர்ஹேதுக க்ருபையால் தெளிவாக அறிந்த நம்மாழ்வார், "உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன், சுடர்மிகு சுருதியுளிவையுண்ட சரனே" (திருவாய்மொழி 1-1-7) என்று தெளிவாக அருளிச் செய்தருளினார். நாதமுனிகளுக்கு உபய வேதாந்தத்தின் ஐகரஸ்யத்தையும்-ஒற்றுமையையும்-உபதேசித்தருளினார். இப்போது உலகில் பிரசாரமாயுள்ள விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய அர்த்தங்கள் எல்லாம் ஆழ்வார்களின் சரித்ர வைபவங்கள் உள்பட நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் உபதேசித்தருள, நாதமுனிகள் மூலமாக உலகில் பிரசாரமாயிற்று. நாதமுனிகள் பேரனான யாமுனமுனி-ஆளவந்தார் மூலமாக வளர்ந்து, யதீந்த்ரரான ஸ்ரீராமானுஜரால்—எம்பெருமானாரால் நன்கு ரக்ஷிக்கப்பட்டது. ஆகவே இந்த ஸம்ப்ரதாயத்துக்கு "எம்பெருமானார் தரிசனம்" என்று நம்பெருமான் பேரிட்டு காட்டி வைத்தார். "பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்க விடுவர்" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி உபய வேதாந்த ஐககண்ட்யத்தைக் குறிப்பிடும்.

சாஸ்த்ர ஸாரமான திருமந்த்ரார்த்தம் "எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்குரியனன்றிக்கேயொழிய வேணும்; ஸர்வ சேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்" என்பது. மந்த்ர ரத்னம் என்னும் த்வயம், இரண்டு வாக்யமாய் அமைந்தது. முதல் வாக்யத்தால் பிராட்டியை முன்னிட்டு ச்ரிய: பதியான எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது. பின் வாக்யத்தால் அச்சேர்த்தியிலே அடிமையை இரக்கிறது—பிரார்த்திக்கிறது. "த்வயார்த்தம் தீர்க்க சரணாகதியென்றது ஸாரஸங்க்ரஹத்திலே" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்திப்படி திருவாய்மொழி த்வயார்த்த விவரணம் என்பது நிரூபிக்கப்படுகிறது. த்வயத்தின் ஒன்பதாவது பொருளான—உத்தர வாக்யத்தில் உள்ள நாராயணாய என்றதில் சதுர்த்யர்த்தமான "நித்ய கைங்கர்யம்" திருவாய்மொழியின் ஒன்பதாம் பத்தின் பொருள். ஸார ஸங்க்ரஹ ஸ்ரீஸூக்தி வருமாறு:—" ஒன்பதாம் பத்தால்

http://acharya.org

'பண்டை நாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டுநின் கோயில் சீய்த்து'' என்றும் ''நின் தீர்த்தவடிமைக் குற்றேவல்'' என்றும் ''தொடர்ந்து குற்றேவல் செய்து'' என்றும் ''கொடுவினையேனும் பிடிக்க'' என்றும் ''உறுவதிதுவென்றுனக்காட்பட்டு'' என்றும் ''ஆட்கொள்வானொத்து'' என்றும் ''நானும் மீளாவடிமைப் பணி செய்யப் புகுந்தேன்'' என்றும் நித்ய கைங்கர்யம் ப்ரதிபாதிதமாய்த்து'' என்று. ஆசார்யர்களுக்கு ஆபத்தனமாயிருந்துள்ள ச்ரிய:பதியான ஸர்வேச்வரனே உபாயோபேயம் என்ற பொருளை அறிவிக்கும் த்வயமும் திருவாய்மொழியும் பகவத் சரணார்த்திகளாய் அநந்யோபாயராய் இருக்கும் பரம ஸாத்விகர்களான முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு சரீராவஸான கால பர்யந்தம் எப்போதும் காலக்ஷேபத்துக்காகவும் பகவன் முகோல்லாஸத்துக்காகவும் அநுஸந்தானம் செய்யப்பட வேண்டியவையாகும்.

ஒரு க்ரந்தம்—நூல் என்றால் அதன் பொருள் ஒன்றேயாயிருக்க வேணும். அந்த ஒரு பொருளை நிலை நிறுத்த மற்ற பொருள்கள் கூறப்பட வேண்டும். திருவாய்மொழிக்கு முக்கியமான ஒரு கருத்துப்பொருள் ''ஜ்ஞான ப்ரதனான எம்பெருமான் அருளால் முமுக்ஷுவுக்கு மோக்ஷ லாபம்'' என்பது. ''அவித்யா நிவர்த்தக ஜ்ஞான பூர்த்திப்ரத பகவத் ப்ரஸாதாத் மோக்ஷ லாபமென்கை மயர்வற வீடு பெற்ற என்ற ப்ரந்தைகார்த்தம்'' என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி இதைக் குறிப்பிடுகிறது. இங்கு விசதவாக் சிகாமணியான மணவாள மாமுனிகளின் வ்யாக்யான ஸ்ரீஸூக்தி ''இத்தால் ஜ்ஞாநப்ரதனான பகவத் ப்ரஸாதமே மோக்ஷப்ரதமும் என்னுமிது இப்ரபந்தத்துக்காக தாத்பர்யமாயிருப்பதோரர்த்தம் என்றதாய்த்து'' என்று. மேலும் அர்த்த பஞ்சகம் திருவாய்மொழியின் பொருள் என்றும், அதிலும் உபாயோபேயங்களிரண்டுமே பொருள் என்றும், உபேயமொன்றுமே பொருள் என்றும், ஆசார்யர்கள் அருளியுள்ளனர். ஸ்ரீ வேதாந்த தேசிகர் த்ரவிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் ஸ்ரீமானான தேவன் தன்னைப் பெறுவதற்கு ஸாதனமாகிறான் என்பது திருவாய்மொழியின் முக்கியமான ஒரு பொருள் என்று அருளிச் செய்தார். இந்த ஒரு பொருளை நிலைநிறுத்தப் பத்து பத்திலும் முறையே எம்பெருமான் ஸேவ்யன், அதிபோக்யன், முதலான பத்துப் பொருள் கூறப்பட்டது என்றும், ஒவ்வொரு திருவாய்மொழியிலும் முறையே பரத்வம் முதலான ஒவ்வொரு குணம் எம்பெருமானுக்கு மொத்தம் 100 குணம் கூறப்பட்டது என்றும், ஒவ்வொரு பாசுரங்களிலும் முறையே எல்லை கடந்து உயர்ந்த கல்யாண குணமுடையவன் ஸ்ரீமானான தேவன் என்று மொத்தம் 1,000 குணம் கூறப்பட்டது என்றும் தாத்பர்ய ரத்னவளியில் ஸ்ரீவேதாந்த தேசிகர் நிரூபித்துக் காட்டியருளியிருக்கிறார்.

''பரத்வ, காரணத்வ, வ்யாபகத்வ, நியந்த்ருத்வ, காருணிகத்வ, சரண்யத்வ, சக்தத்வ, ஸத்ய காமத்வ, ஆபத்ஸகத்வ, ஆர்த்திஹரத்வ விசிஷ்டன் மயர்வையறுக்க..................தம் பேற்றைப் பிறர் அறியப் பத்துத் தோறும்

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

வெளியிடுகிருர்" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி, திருவாய்மொழி முதல் பத்தில் எம்பெருமானுடைய பரத்வ குணம் பிரகாசமாகிறது என்று முறையே பத்துப்பத்தின் 10 குணங்களைக் குறிப்பிடுகிறது. அதில் திருவாய்மொழி ஒன்பதாம் பத்தில் ச்ரிய:பதியான எம்பெருமானுடைய 'ஆபத்ஸகத்வம்' என்ற குணம் பிரகாசப்படுத்தப்படுகிறது.

ஆழ்வார் எம்பெருமானை முற்றூட்டாக அநுபவித்து "இவ்வநுபவத்தை ஸம்ஸாரி சேதனர்கள் அனைவரும் பெற்று இன்புற வேணும்" என்னும் தம் பரமக்ருபையாலே திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் திவ்யப்ரபந்தங்களிலே தம் அநுபவத்தை வெளியிட்டு பிறரைக் குறித்து "நீங்களும் இவ்வநுபவத்தைப் பெறப்பாருங்கோள்" என்று உபதேசம் செய்தருளுகிருர். பரோபதேச ஸமயத்திலும் தம் அநுபவம் குறையாதவர் ஆழ்வார். அநுபவ ஸமயத்திலும் பரோபதேசத்தில் திருவுள்ளமாய் தம்மனுபவத்தை வெளியிடுவார். ஆக எப்போதும் ஆழ்வாருக்குப் பரோபதேசத்திலேயே முக்கிய நோக்கு. இதைத்தான் அநுபவகர்ப்ப பரோபதேசம் என்றும், பரோபதேசகர்ப்பாநுபவம் என்றும் ஆசார்யர்கள் குறிப்பிடுகின்றனர். ஒரு பாட்டுக்கு க்ரியை—வினைமுற்று எப்படி முக்கியமோ ஒரு திருவாய்மொழிக்கு அதன் முக்கியப் பொருளைக் குறிப்பிடும் பாட்டு எப்படி முக்கியமோ அதேபோல் ஒரு பத்துக்கு—10 திருவாய்மொழி கொண்ட பகுதிக்குப் பரோபதேசத்தில் நோக்கான திருவாய்மொழி முக்கியம் என்று "பாட்டுக்கு க்ரியையும் பத்துக்குக் கருத்தும் போலே நூற்றுக்கு உபதேசப் பத்து" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி விளக்குகிறது. இப்படி பரோபதேசத்தில் நோக்கான திருவாய்மொழி முக்கியம் என்று தேறினபோது முதல் திருவாய்மொழியும் பத்தாம் திருவாய்மொழியும் பரோபதேச ரூபமாய் ஒன்பதாம் பத்து மிகவும் முக்கியமாகிறது. தமக்கு மோக்ஷம் விரைவில் கிடைக்கப்போகிறது என்பதை உணர்ந்த ஆழ்வார், ஒருவரும் இப்பேற்றை இழக்கக் கூடாது என்ற தம் பரமக்ருபையால் அவரவர் தகுதிக்கு ஏற்றாற்போலே அவரவர் விரும்பி கைக்கொள்ளத் தக்க உபாயங்களை எல்லாம் பரக்க உபதேசித்தருளுகிருர், ஒன்பதாம் பத்தில். இப்படி நிர்ஹேதுகமாக எல்லாரிடமும் க்ருபையாலே அனைவரும் உஜ்ஜீவிக்க உபதேசம் செய்யுமிந்த ஆழ்வாரின் ஸ்வபாவம் பிராட்டிக்கும், ப்ரஹ்லாதனுக்கும், விபீஷணனுக்கும், ஆழ்வார் அடி பணிந்த இராமானுஜருக்குமே இருப்பதொன்று. "தாய்க்கும், மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது" என்பது ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி. "மாலை நண்ணி" (திரு. 9-10) திருவாய்மொழிப் ப்ரவேசத்தில் ஈட்டில் "மோஹித்துக் கிடந்தாராகில் கிடக்குமித்தனை போக்கி உணர்ந்தாராகில் பிறர்க்கு ஹிதம் சொல்லியல்லது நிற்கமாட்டார்" என்று ஆழ்வாரின் ஸ்வபாவம் விளக்கப்பட்டது. ஈட்டின் அவதாரிகை இரண்டாம் ச்ரிய:பதியில் "நம்மாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தாலே த்வய விவரணம் பண்ணுகிருர். இதில் முதலிட்டு மூன்று பத்தாலே உத்தரார்த்தத்தைத் விவரிக்கிருர்.

http://acharya.org

மேலிட்டு மூன்று பத்தாலே பூர்வார்த்தத்தை விவரிக்கிறார். மேலிட்டு மூன்று பத்தாலே உபாயோபயோகியான குணங்களையும், ஆத்மாத்மீயங்களில் தமக்கு நசையற்றபடியையும், 'அவனோடு தமக்குண்டான நிருபாதிக ஸம்பந்தத்தையும்' அருளிச் செய்தார் மேலிற்பத்தாலே தாம் ப்ரார்த்தித்தபடியே பெற்றபடியைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்' என்று த்வய விவரணம் திருவாய்மொழி என்பதையும், ஒன்பதாம் பத்து எம்பெருமானுடைய நிருபாதிக ஸம்பந்தத்தை நிரூபிக்கிறது என்பதையும் நாம் அறியலாம். மாதா பிதா பார்யா புத்ர ப்ராதா மாதுலாதி ஸகலவித பந்துவும் ஸ்ரிய:பதியான எம்பெருமானே. லௌகிகர்களான மற்ற பந்துக்கள் அர்த்த காமாதி நிபந்தனமாக வந்தேறியான ஸம்பந்தமுடையவர்களே. ஆபத்து வந்தவாறே கைவிட்டு விடுவார்கள். எப்போதும் நம்மோடு கூட இருந்து தோன்றியும் தோன்றாதும் உதவி புரிந்து கைகொடுப்பான் ஸ்ரீமந் நாராயணனே. அவனே ஸகா—ஸுஹ்ருத்-உயிர்த்தோழன். "என்னையாள்வானே" என்று குறிப்பிடப்படும் மிகப் பெரியவன், அறத்தாழ்ந்தவனோடு புரையறக் கலக்கும் அளவிறந்த சீல குணமும் உடையவன் என்பதை ஒன்பதாம் பத்து குறிப்பிடுகிறது. ஈடு 2ம் ச்ரிய:பதியில் "ஒன்பதாம் பத்தால், நீரென்றிய அதிசங்கை பண்ணிப் படுகிறீர் இப்படி என்று தன்னுடைய நிருபாதிக பந்தத்தையும் காட்டி "நான் நாராயணன் ஸர்வசக்தியுக்தன், உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் செய்து தலைக்கட்டுகிறோம்" என்றருளிச் செய்ய "சீலமெல்லையிலான்" (திருவாய்மொழி 9-3-11) என்று அவனுடைய சீல குணங்களிலே ஆழங்கால்பட்டார்" என்று. "நிருபாதிக பந்துவானவனே ஆபத்ஸகன்" அவனே நிருபாதிக ஸுஹ்ருத்து, அல்லாதார் பக்கல் தோற்றுகின்ற ஸௌஹார்த்தம் ஸோபாதிகம்" (ஈடு 9.1. ப்ரவேசம், முதற்பாட்டவதாரிகை) என்று.

(1) "எண்டிசையுமகல் ஞாலம் எங்குமளிக்கின்ற ஆலின் மேலென்னுபடி நித்ய போக பாத லீலோபகரணத்தின் லயாதிகளைப் போக்கும் ஆபத்ஸகன், (2) ஆருயிரென்னப்படுத்தின ஆத்ம தர்சன பலாநுபவ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடுகவிட்டு (3) ஏகமெண்ணிக் காணக்கருதி எழு நண்ணி நினை தொறுமுருகியலற்றிக் கவையில் மனமின்றிப் பதினாலாண்டு பத்துமாஸமொரு பகல் பொறுத்தவர்கள் ஒரு மாஸதிந ஸங்க்யையில் படுமது க்ஷணத்திலேயாகவிரங்குகிற த்வரைக்கிடாக (4) இரபத்திலொன்று தசமதசையிலே பேறென்று நாட்கடலாகத் தம்பிக் கிட்டதாகாமல் நாளை வதுவைபோலே நாளிடப்பெற்றவர் (5) இம்மடவுலகர் கண்டதோடுபட்ட அபாந்தவாரக்ஷகாபோக்யா ஸுகாநுபாய ப்ரதிஸம்பந்தியைக் காட்டி (6) மற்றொன்று கண்ணலல்லாலென்கிற வைகல் வாழ்தலான ஸித்தோபாயம், (7) அதில் துர்ப்பல புத்திகளுக்கு மாலை நண்ணி காலை மாலை விண்டு தேனை வாடா மலரிட்டு அன்பராம் ஸாங்க பக்தி, அதில் அசக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி, (8) அதில் அசக்தர்க்கு உச்சாரணமாத்ரம் ஸர்வோபாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் தெண்டனென்று கீதாசார்யனைப்போலே அதிகாராநுகுணம் நெறியெல்லாமுரைக்கிறார் ஒன்பதாம்

http://acharya.org

பத்தில்'' (ஆசார்ய ஹ்ருதயம் 4ம் ப்ரகரணம் ஸூத்ரம் 9) என்று ஒன்பதாம் பத்தில் ப்ரகாசப்படுத்தப்படும் பொருள்களை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்தார்.

பரமகாருணிகனான கீதாசார்யன் கண்ணன், உலகோர்கள் உஜ்ஜீவிக்கும்படி எவரெவர் எதையெதை விரும்புகிறார்களோ அதைப்பற்றி உஜ்ஜீவிக்கட்டும் என்ற திருவுள்ளமடியாக கர்ம யோகம், ஜ்ஞாந யோகம், பக்தி யோகம், ப்ரபத்தி, அவதார ரஹஸ்ய ஜ்ஞாநம், புருஷோத்தம ப்ரஹ்ம வித்யை என்று பலபல மோக்ஷோபாயங்களை ஸ்ரீகீதையில் அருளிச் செய்தான். அதே போல் ஆழ்வாரும் ஒன்பதாம் பத்தில் அவரவர் ருசிக்கேற்ப அவரவர் பற்றலாம் படியான மோக்ஷ நெறிகளை உபதேசித்தார், மோக்ஷோபாயமொன்றிலும் அந்வயமில்லாத நாம் ஆழ்வார் அருளிச் செய்த "மாலை நண்ணி" (திருவாய் மொழி 9. 10) என்னும் திருவாய்மொழியைப் பாடி ப்ரீதராய் ஆடி ஸுலபனான சௌரிராஜன் அடி பணிந்தால் போதும். நம் வினை கிட்ட அண்டாது. இத்தேஹாவஸானத்தில் மோக்ஷம் நிச்சயம் உண்டு. ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக ஸர்வாபீஷ்டப்ரதன் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே ஸித்தோபாயம். அவன் ஸ்வபாவத்தையும் நம் ஸ்வபாவத்தையும் நினைத்தால் நாம் ஒரு ப்ரவ்ருத்தியும் செய்ய வேண்டியதில்லை. நாம் செய்வதெல்லாம் அவனுடைய கைங்கர்யமேயாகும். ஆசார்ய ஸமாச்ரயணத்தால் இவ்வித ஸித்தோபாய நிஷ்டர்களான நாம் பேற்றில் கவலையற்று மார்பில் கைவத்து உறங்கலாம். மரணமடைந்ததும் மோக்ஷம் நிச்சயமுண்டு. இது 9ம் பத்து 10ம் திருவாய் மொழியின் ஸாரமான பொருள். 9ம் பத்து முதல் திருவாய்மொழியின் ஸாரமான பொருள், ஸம்ஸாரத்தின் தண்மையும்-அல்பாஸ்திரதையும் ஸர்வேச்ரவனுடைய ப்ராப்ய ப்ராபகபாவமும். "அவனுக்கு நாம் செய்ய வேண்டுவது அவன் தானே மேல் விழா நின்றால் விமுகராகாதொழியுமத்தனையிறே வேண்டுவது. இவனுடைய உத்யோகத்திலே (முயற்சியிலேயே) அவனுக்கு வயிறு நிறையும்''. இது 9.1.5ம் பாட்டின் ஈட்டின் வாக்யம்.

ஒன்பதாம் பத்து 2ம் திருவாய்மொழியின் ஸாரமான பொருள் கைங்கர்யம் செய்வதில் மநோரதம்-பாரிப்பு: "ப்ராப்தியை அநுபவித்தார் கீழ்த்திருவாய் மொழியில்; ப்ராப்தி பலத்தை ஆசைப்பட்டு அபேக்ஷிக்கிறாரிதில்" (9.2 ஈடு ப்ரவேசம்) எம்பெருமான் நமக்குச் செய்துள்ள உபகார பரம்பரைக்குக் க்ருதஜ்ஞனாயிருக்க வேணும் நாம். அவன் நமக்குச் செய்ய வேண்டுமம்சத்துக்கு நாம் ப்ரார்த்திக்கவும் வேணும். ப்ரார்த்தனை உபாயமன்று. அதிகாரி ஸ்வரூபமே". "செய்த அம்சத்துக்கு க்ருதஜ்ஞனாகவும், செய்ய வேண்டும் அம்சத்துக்கு ப்ரார்த்திக்கவும் வேணுமிறே அதிகாரிக்கு" (9.2.1. ஈடு) என்று.

9ம் பத்து 3ம் திருவாய்மொழியின் ஸாரமான பொருள் எம்பெருமானுடைய சீலகுண ப்ராசுர்யமே. எம்பெருமான், அடியார் ஒன்று செய்கையும் மிகையாக

http://acharya.org

எண்ணுமவன். அடியாரும் எம்பெருமான் சில குணத்திலே ஈடுபட்டுத் துவக்குண்டு ஒன்றும் செய்யமுடியாத வராயிருப்பர். ஆக இத்திருவாய்மொழி எம்பெருமானின் சில குணத்தின் மிகுதியைச் சொல்லித் தலைக் கட்டுகிறது. 9.3. ஈடு ப்ரவேசத்தில் இவ்வர்த்தம் கூறப்படுகிறது.

9ம் பத்து 4ம் திருவாய்மொழியின் ஸாரமான் பொருள்: ஆழ்வாருடையவும் அவர் இந்திரியங்களினுடையவும் பகவத் குணாநுபவத்திலுள்ள சாபல்யம் பெரு விடாய். ஆழ்வாருக்கு இந்த விடாய் எப்போதுமுள்ளதாய் எல்லாத் திருவாய் மொழிகளிலும் ஊடுருவியிருப்பதொன்று. எம்பெருமானும் ஆழ்வாரின் பெரு விடாயை யறிந்து ஆழ்வாருக்கு முகம் காட்ட, ஆழ்வார் "நான் க்ருதக்ருத்யனேன், அடிமை செய்யப் பெற்றேன், வாழ்ந்தேன் (தொண்டர்க்கமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்னேன்' (திருவாய்மொழி 9.4.9) என்றபடி), ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் நான் உபகாரகனும் படியானேன்; இதொருவன் பெறும் பேறிருந்தபடியே" என்று தமக்குப் பிறந்த லாபத்தை அநுஸந்தித்து அத்தைப் பேசித் தலைக்கட்டுகிறார்" (9.4. ஈடு பிரவேசம்) என்று.

9ம் பத்து 5ம் திருவாய்மொழியின் ஸாரமான பொருள்: "கண்ணனைக் கண்டுகொண்டேனே" என்னும்படி மாநஸாநுபவத்தில் ஜ்ஞாந வைசத்யம்— தெளிவு ஏற்பட்டதும் உடனே பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அது உடனே கிட்டாமையாலே வருந்தி ஆண் பெண்ணாய் அவனை நினைப்பூட்டும் போலியான குயில் மயில் கிளி போன்ற பொருளைக் கண்டு தளர்வுற்ற ஆழ்வாரின் தன்மை.

9ம் பத்து 6ம் திருவாய்மொழியின் ஸாரமான பொருள்: "இருத்தும் வியந்தில்" (திருவாய்மொழி 8.7) அநுபவம் ஆழ்வாருக்கு இங்கு ஸ்ம்ருதி விஷயமாய்—நினைவுக்கு வந்து எம்பெருமானுடைய தம்மோடு கலந்த பரிமாற்றத்தின் சில குணத்தில் ஈடுபட்டுப் பேசுவது. இங்கே ஈட்டில், நம்பிள்ளை "கடலைத் தரை காண்பாரைப்போலே இருத்தும் வியந்தில் அநுபவத்தை இதிலே கொண்டுவந்து சேர்ப்பதே நம் முதலிகள்" என்று ஈடுபட்டு அருளிச் செய்வார் என்னும் ஐதிஹ்யம் வந்துள்ளதைக் குறிக் கொள்ள வேணும். நம் பூர்வாசார்யர்கள் எப்போதும் திருவாய்மொழியின் பொருளை அநுஸந்திப்பதையே யாத்திரையாய்ப் போருவர்கள்.

9ம் பத்து 7ம் திருவாய் மொழியின் ஸாரமான பொருள், எம்பெருமானின் வடிவழகிலும் குணத்திலும் ஈடுபட்டு அவனைப் பெற்றுப் பிழைத்தல், பெரு விடில் முடியும்படியான தன் தசையை பிராட்டி பாவத்தில் ஆழ்வார் அருளிச் செய்தது.

9ம் பத்து 8ம் திருவாய்மொழியின் ஸாரமான பொருள்: திருவடி பெருமாளின் செய்தியைச் சொல்லிச் சென்ற பிறகு பெருமாளைக் கிட்டுவதற்கு முன்பு பிராட்டிக்கு பிறந்த மநோரதம் போலே ஆழ்வாருடைய மநோரதம், என்று இங்கே ஈடு வாக்யம் "உபாயோபேயங்களிரண்டும் ஈச்வரனே என்று அத்யு

http://acharya.org

வஸித்தார்க்கு ப்ராப்ய ருசி கண்ணழிவற்றால் விளம்பஹேது இல்லாமையாலே ப்ராப்ய ஸித்தியளவும் மநோரதம் செல்லா நிற்குமிறே", (9.8 ஈடு ப்ரவேசம்) என்று பெரிய முதலியார்-(ஆளவந்தார்) ப்ராப்ய ஸித்தியில் த்வரையாலே எப்போதும் இத்திருவாய்மொழியை அநுஸந்தியா நிற்பர்; ஆகையாலே இத்தை "பெரிய முதலியார் திருவாய்மொழி" என்றுப்த்துச் சொல்வது (ஈடு ப்ரவேசம் 9.8) என்று.

9ம் பத்து 9ம் திருவாய்மொழியின் ஸாரமான பொருள்: பெருமாளைக் காட்டிலே ஏகாந்தமாக அநுபவிக்கலாமென்று புறப்பட்டு வந்த பிராட்டியை "விலலாப ஸீதா" என்கிறபடியே கூப்பிடப் பண்ணினாப்போலே திருநாவாயில் ஏகாந்தமாக அநுபவிக்கலாமென்று மநோரதித்த ஆழ்வார் அது கிட்டப்பெறாமல் அவனை நினைப்பூட்டும் குழலோசை முதலான மாலைப் போதில் உண்டானவையெல்லாம் ஆழ்வாருக்கு பாதகமாய் ஆழ்வாரை வருத்த, அவ்வருத்த மேலீட்டால் கூப்பிடப் பண்ணிற்று என்பது. "செல்லின்றவாற்றமை பேசி அலமந்த மாறன்" என்று மாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் இத் திருவாய் மொழியின் ஸாரப் பொருளைக் குறிப்பிட்டருளினர்.

(1) ப்ரளயாத்பாபத்துக்களிலே ஜகத்தை நோக்கி ரக்ஷிக்கும் எம்பெருமான் (2) ஆழ்வாருக்கு ப்ராப்ய ருசியை அதிகமாக்கி (3) அந்த ப்ராப்ய ருசி மூலமான ப்ராப்ய த்வரைக்கீடாக (4) "மரணமானால் வைகுந்தம்" என்று ப்ராப்ய லாப நாளைக் குறிப்பிட்டான். அத்தால் தெளிந்த ஆழ்வார் (5) இம் மடவுலகர்களும் தம்மைப்போல் பேற்றைப்பெற்று புஜிக்க வேணுமென்ற க்ருபையாலே அவர்களுடைய அஜ்ஞான அந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாநங்களை நீக்கி நேரான ஜ்ஞாநமான "எம்பெருமானே ஸர்வவித பந்து ரக்ஷகன் இனியன்" என்பதை உபதேசித்தார். அப்படி உபதேசிக்கும் போது அவரவர்களுக்குத் தக்கபடி (6) எம்பெருமானாகிற ஸித்தோபாயம் (7) அதில் விச்வாஸமில்லாதார்க்கு பக்தி, பக்தியில் பரிகரம்—ஸஹகாரி இல்லாதார்க்கு தாளடையும் ப்ரபத்தி-சரணாகதி (8) அது செய்யமாட்டாதவர்களுக்கு எம்பெருமானையும் அவன் உகந்தருளின திவ்யதேசத் திருநாமங்களையும் சொல்லுவதே போதும். அதுவும் முடியாதவர்களுக்கு இப்பத்துப் பாட்டையும் பாடி ஆடி எம்பெருமான் திருவடியைப் பணிவதே போதுமானது என்று உஜ்ஜீவனோபாயங்களையெல்லாம் எடுத்துரைத்தார். இது 9ம் பத்தின் பொருளைக் குறிக்கும் ஆசார்ய ஹ்ருதயம் 4ம் ப்ரகரணம் 9ம் ஸூத்ரத்தின் பொழிப்புரையாகும்.

ஒன்பதாம் பத்தில் 8 திவ்ய தேசங்கள் மங்களாசாஸனம் செய்யப் பட்டுள்ளன.

1. திருப்புளிங்குடி
2. திருவரகுணமங்கை
3. திருவைகுந்தம்
4. திருவேங்கடம்
5. திருக்காட்கரை
6. திருமூழிக்களம்
7. திருநாவாய்
8. திருக்கண்ணபுரம்

http://acharya.org

4. திருவேங்கடம் 3ம் திருவாய்மொழி 8ம் பாட்டில் "நின்ற வேங்கடம் நீணிலத்துள்ளது" என்று குறிக்கப்பட்டுள்ளது. திருவேங்கடத்தில் நிகரில் புகழாய் என்று கூறப்பட்ட எம்பெருமானுடைய வாத்ஸல்ய குணம் உஜ்வலமாய் விளங்குகிறது.

9- 2ம் திருவாய்மொழியில் 1. திருப்புளிங்குடி 2. திருவரகுணமங்கை 3. திருவைகுந்தம் மூன்று திவ்யதேசங்கள் "புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை யிருந்து வைகுந்தத்துள் நின்று" (திருவாய்மொழி 9.2.4) குறிக்கப்பட்டது. இத்திவ்யதேசங்களில் தனக்கு போக்ய பூதரான ஆழ்வாருக்கு பரமபக்தியாகிற பரிபாகம் பிறக்குமளவும் எம்பெருமானுக்கு ஆழ்வாரை புஜிப்பதில் உண்டான த்வரை விளங்குகிறது. பசியிருந்தவன் அன்னம் பக்குவமாவதற்கு முன்னே பதற்றத்தோடே மடைப்பள்ளிக்கு அணித்தாக வந்து கிடப்பது இருப்பது நிற்பதாய் அவஸரப்படுவான். அதுபோல் எம்பெருமான், ஆழ்வார் எழுந்தருளியிருக்கும் திருக்குருகூர்க்கு கூவுதல் வருதல் செய்யும்படி வெகு சமீபமாயுள்ள திருப்புளிங்குடி, திருவரகுணமங்கை, திருவைகுந்தம் திவ்ய தேசங்களிலே கிடப்பது இருப்பது நிற்பதாகா நின்றான். "போக்ய பாகத்வரை தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்" (ஆசார்ய ஹ்ருதயம் 3ம் ப்ரகரணம்) என்று.

5. திருக்காட்கரை 9-6ம் திருவாய்மொழியில் மங்களாசாஸனம் செய்யப் பெற்றது. அதில் எம்பெருமானுடைய சீல குணம் பிரகாசிக்கும். ஸம்ச்லேஷ தசையில் எம்பெருமான் ஆழ்வாரை முறை மாறுடிப் பரிமாறும் சீல குண முடையவன். இதுவே திருக்காட்கரை மருவிய மாயன்தன் மாயமாகும்.

"போகத்தில் தட்டுமாறும் சீலம் காட்கரையிலே கரையழிக்கும்" (ஆசார்ய ஹ்ருதயம் 3ம் ப்ரகரணம்)

6. திருமூழிக்களம் 9-7ம் திருவாய்மொழியில் மங்களாசாஸனம் செய்யப் பெற்றது. அதில் எம்பெருமானுடைய தன் உயிரான மஹாத்மாக்களின் விரஹத்தை ஸஹியாத மார்த்தவ குணம் ப்ரகாசிக்கும். "ஒரு தடவையாவது எம்பெருமானுடைய திருமேனியை ஸேவிக்க வேண்டுமென்ற அவாவினால் மற்ற புருஷார்த்தங்களைப் புல்லுக்கு ஸமமாக எண்ணியிருக்கும் மஹாத்மாக்களின் விரஹம் எமபெருமானுக்கு மிகவும் பொறுக்கவரிது" என்று ஆளவந்தார் அருளிச் செய்தார். ஆகவேதான் திருமூழிக்களத்தில் தமரோடங்குறைவான் எம்பெருமான். "மஹாத்மாக்கள் விரஹம் ஸஹியாத மார்த்தவம் வளத்தின் களத்தேடு கூடு பூரிக்கும்" (ஆசார்ய ஹ்ருதயம் 3ம் ப்ரகரணம்).

7. திருநாவாய் 9-8ம் திருவாய்மொழியில் மங்களாசாஸனம் செய்யப் பெற்றது. அதில் எம்பெருமானுடைய ஆச்ரித விஷயத்திலுண்டான க்ருபை பிரகாசிக்கிறது. எம்பெருமான் ஸம்ஸாரக் கடலில் மூழ்குகிறவர்களுக்கு

http://acharya.org

அதைத்தாண்டுவிக்கும் நாவாய்–படகு போன்றவன். அவன் நித்யவாஸம் செய்யுமவ்வூரும் அக்காரணத்தால் "நாவாய்" எனப் பேர் பெற்றது. "துன்பக் கடல் கடத்தும் விஷ்ணு போதாங்ருசம்ஸ்யம் நாவாயிலே நிழலெழும்" (ஆசார்ய ஹ்ருதயம் 3ம் ப்ரகரணம்)

8. திருக்கண்ணபுரம் 9-10ம் திருவாய்மொழியில் மங்களாசாஸனம் செய்யப்பெற்றது. அதில் எம்பெருமானுடைய சரண்யத்வம் முகுந்தத்வம் இவை பிரகாசிக்கின்றன. முகுந்தன்-மோக்ஷ பூமிப்ரதன். சரண்யன்-எல்லார்க்கும் சரணவரணார்ஹன்.

"சரண்ய முகுந்தத்வம் உத்பலாவதகத்திலே பிரஸித்தம்" (ஆசார்ய ஹ்ருதயம் 3ம் ப்ரகரணம்)

தேஹத்தில் உபேக்ஷை பண்ணி உலர்ந்த வடிவினரான முமுக்ஷுக்களை ரக்ஷிக்கிற எம்பெருமான் உகந்து வர்த்திக்கிற இடமாகையால் அவ்விமானம் "உத்பலாவதகம்" என்ற பெயர் பெற்றது.

ஒன்பதாம் பத்து ஈடு முப்பத்தாறாயிர வ்யாக்யானத்தில் 29 ஐதிஹ்யங்கள் நிர்வாஹங்கள் வந்துள்ளன. அவற்றில் மொத்தம் 24 பூர்வாசார்யர்களின் திருநாமங்கள் வந்துள்ளன.

24 ஆசார்யர்களின் திருநாமங்கள்

1. ஆப்பான் திருவழுந்தூரரையர்
2. ஆழ்வான் (கூரத்தாழ்வான்)
3. பிள்ளை திருநறையூர் அரையர்
4. பட்டர்
5. திருக்கண்ணமங்கை ஆண்டான்
6. பிள்ளை தேவப்பெருமாளரையர்
7. ஆழ்வார் (கூரத்தாழ்வார்-ஆழ்வானின் திருத்தகப்பனார் ஆளவந்தாராழ்வாராகவுமாம்)
8. பிள்ளை அழகியமணவாளரையர்
9. வங்கிபுரத்து நம்பி
10. ஆண்டான் (முதலியாண்டான்)
11. நடுவில் திருவீதிப்பிள்ளை
12. கோயிலாத்தான்
13. மணக்கால் நம்பி
14. நம்பிள்ளை

http://acharya.org

15. ஆளவந்தார்
16. எம்பெருமானுர்
17. பிள்ளை அகளங்கப்ரஹ்மராயர்
18. இருகைமதவாரணம்
19. பிள்ளான் (திருக்குருகைப் பிள்ளான்)
20. எம்பார்
21. நஞ்சீயர்
22. சிற்ருள் கொண்டான்
23. பெற்றி
24. நம்பி திருவரங்க நாராயண தாஸர்.

குருபரம்பராப்ரபாவம் முதலான இடங்களில் இவ்வைதிஹ்யங்களில் வந்துள்ள சரித்திர பாகங்கள் வந்திருக்காது. இவற்றையும் சேர்த்து பெரியதொரு குருபரம்பராப்ரபாவம் அமைக்க அமையும். இவ்வாறு திருவாய்மொழி 9ம் பத்தில் விஷயத்தை ஈடு, ஆசார்ய ஹ்ருதயம் முதலான நூல்களைக் கொண்டு ஒருவாறு முடிந்தவளவு அநுபவித்தோமாஞேம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

---

http://acharya.org



திருப்பதி கோவிந்தராஜர்—ஆண்டாள் சேர்த்தி

http://acharya.org

ஆர்த்திஹரத்வம்

(1) சுரிகுழல் அஞ்சனப் புனல் மைந்நின்ற பொல்லாப் புனக்காயா வென்றும் ஆபத்திற்கொள்ளும் காமரூப கந்த ரூபத்தாலே ப்ரபந்நார்த்தி ஹரனானவன், (2) அருள்பெறும் போதணுக விட்டதுக்குப் பலமான வானேறுங் கதிக்கு அண்ட மூவுலகும் முன்னோடிக் கால் விழுந்திடத்தே நிழல் தடங்களாக்கி அமுதமளித்த தயரதன் பெற்ற கோவலனானையாலே, வேடன் வேடுவச்சி பக்ஷி குரங்கு சராசரம், இடைச்சி இடையர் தயிர்த்தாழி கூனி மாலாகாரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர், அவன் மகன் அவன் தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்ற மைந்தனாகிற பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்தும் ஆத்தனை வழித்துணையாக்கி, (3) அறியச்சொன்ன ஸுப்ரபாதத்தே துணைபிரியாமல் போக்கொழித்து, மீள்கின்றதில்லையென்று நிச்சித்திருந்தவர், ஸஞ்சிதம் காட்டும் தசையானவாறே (4) முந்துற்ற நெஞ்சுக்குப்பணி மறவாது மருளொழி நகு கைவிடேல் என்று க்ருத்யாக்ருத்யங்களை விதித்து நெஞ்சு போல்வாரைத்தொண்டீர் என்றழைத்து (5) வலம் செய்து எண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுதுமென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ச்ரோதவ்யம் த்ரஷ்டவ்யம் கந்தவ்யம் வஸ்தவ்யம் எல்லாம் வெளியிட்டுப் (6) பிணக்கறவை சார்வாக நிகமித்து (7) எண்பெருக்கில் எண்ணும் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி மாதவனென்று த்வயமாக்கி, கரணத்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக்கையோலை செய்து கொடுத்து செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவழிகாவலிட்டு (8) மனம்திருத்தி வீடுதிருத்தப் போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணுலகம் தர விரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்ட வாக்கையிலே புக்குத்தான நகர்களை அதிலே வகுத்துக்குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு தேஹ தோஷமறிவித்து (9) மாயையை மடித்து வானே தரக்கருதிக் கருத்தின் கண் பெரியனானவனை இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாத்யகாதரஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க; (10) இந்த்ரிய கிங்கரராய்க் குழிதூர்த்துச் சுவைத்தகன்றீர் என்னில், அவை யாவையும் அகற்ற நீ வைத்தவை யென்பர்; அது தேஹயோகத்தாலேயென்னில், அந்நாள் நீ தந்த சுமடு என்பர்;

http://acharya.org

முன்செய்த முழவினையாலேயென்னில், அது துயரமே உற்ற விருவினை உன் கோவமும் அருளுமென்பர்; (11) ஈவிலாத மதியிலேனென்றும்மதன்றோ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களென்னில் ஆங்காரமாய்ப்புக்குச் செய்கைப் பயன் உண்பேனும் கருமமும் கருமபலனுமாகிய நீ கர்த்தா போக்தாவென்பர்; (12) யானே எஞ்ஞான்றுமென்றத்தாலேயென்னில், அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழிலென்பர்; ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் விரத ஹேது, அசுமேனியில் அழுக்கறுக்கை அபிமாநிக்ருத்யம். (13) தான் நல்கும் பந்தம் நிருபாதிகம், ஸௌஹார்தம் எஞ்ஞான்றும் நிற்கும், பிணக்கிப் பேதியாத ஜ்ஞாநாதி வைகல்யமில்லை, ஏகமூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித்வங்கள் நம்மது, (14) நாம் தனி நின்ற ஸ்வதந்த்ரர் என்று அவனே யறிந்தனமே யென்றும் ஸர்வஜ்ஞரிவர்; (15) நெறிகாட்டி அருகும் சுவடும் போலே இதுவும் நிருத்தரம் என்று கவிழ்ந்து நிற்க; (16) அமந்தரஜ்ஞ உத்ஸவ கோஷம் போலே ஏறப்பெறுகிற வெழுச்சியை ஸூசிப்பிக்கிற மேக ஸமுத்ர பேரீ கீத காஹளசங்காசீஸ் ஸ்துதி கோலாஹலம் செவிப் பட்டவாறே ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்குத் (17) தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திருவாணையிட்டுக் கூசம் செய்யாத செய்திப்பிழை, (18) பற்றுக்கொம்பற்ற கதிகேடு, போரவிட்ட பெரும்பழி, (19) புறம் போனால் வருமிழவு, (20) உண்டிட்ட முற்றீம்பு, அன்பு வளர்ந்த அடியுரம், உயிருறவு, (21) முதலளவு துரக்கைகளாலே பெரு வாணையல்லவாக்கின பேரவா குளப்படியாம்படி கடல் போன்ற ஆதரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்வரவரமுநயே நம:

ஸ்ரீ. உ. வே. வித்வான் T. A. S. கோவிந்த நரஸிம்மாசார்யஸ்வாமி. ஸ்ரீரங்கம்.

ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் தி. அ. ச. கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, திருமலை அநந்தாண் பிள்ளை திருவம்ஶத்தவர். மேலக்கோட்டை திருநாராயணபுரத்து ஸ்தலாசார்யபுருஷர். அத்திவ்ய தேஶத்தில் இவர் பிறந்த குடும்பத்தவர்களுக்கு "பிள்ளை லோகாசார்யர்" என்றே ப்ரஸித்தி. இதற்குக் காரணம் ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸாபாஷ்யம் ஸாதித்தருளிய திருமலை அநந்தாண் பிள்ளை வம்ஶத்தியவரான "குன்னத்தூர் ஐயன்" என்பவருக்கு "அபரபிள்ளைலோகாசார்யர்" என ஓர் பட்டப்பெயருண்டு. இவர்கள் அவர் திருவம்ஶமானபடியாலே இவர்களுக்கும், "திருமலை அநந்தாண்பிள்ளை திரு நாராயணபுரம் பிள்ளை லோகாசாரியர்" என்றே அத்திவ்யதேஶத்தில் ப்ரஸித்தி.

இந்த ஸ்வாமி தமக்குப் பெரிய தகப்பனாரும் ஆசார்யருமான திருமலை அநந்தாண்பிள்ளை திரு நாராயணபுரம் பிள்ளை லோகாசாரியர் ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் கோவிந்தப்பங்கார் ஸ்வாமி ஸந்நிதியில் பஞ்சஸம்ஸ்காரங் களைப் பெற்று தம் பெரிய தமையனாரான ஸ்ரீ. உ. வே. வித்வான் ஆழ்வார் திரு நகரி இளையவில்லி சடகோபாசாரிய ஸ்வாமி நியமநத்தால் ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் ஸாமாந்ய ஶாஸ்த்ரங்கற்று வ்யாகரண சிரோமணி பிருதம் பெற்றார்.

பிறகு தம் ஆசார்யஸ்வாமியுடைய விசேஷ நியமநத்தால் ஸ்வாமி திருமாளிகை சிஷ்யராய் ஸ்ரீ. உ. வே. தி. அ. கோவிந்தப்பங்கார் ஸ்வாமி ஸந்நிதியில் திருவிலச்சினை பெற்ற ஸ்ரீமதுபயவேதாந்த ந்யாயவித்வான் காரப் பங்காடு வேங்கடாசாரிய ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீ. உ. வே. K. வரதாசார்ய ஸ்வாமியுடன் உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபம் பண்ணி ஸத்தை பெற்றவர். பிறகு கோயிலில் நியதமாக வஸிக்கப் பெற்று கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபையின் சார்பில் உடையவர் ஸந்நிதியில் பல வருஷங்கள் வரி யடைவே பகவத் விஷய ரஹஸ்யாதி க்ரந்தங்களை காலக்ஷேபம் ஸாதித்து வந்தவர். இவ்விஶேஷங்களால் ஸ்ரீமதித்யாதிப்படி எழுந்தருளியிருக்கும் மஹா வித்வான் பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியால் விஶேஷமாக அபிமானிக்கப் பெற்றவர்.

இந்த ஸ்வாமி தம்மைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொள்வது— "ஸ்வாமி எம்பெருமானாரைப் போல் தாமும் பஞ்சாசார்ய பராயணர்" என்பதாம்.

http://acharya.org

அதாவது—' தம் ஆசார்யரான ஸ்ரீ. உ. வே. தி. அ. கோவிந்தப்பங்கார் ஸ்வாமியுடையவும், திருத்தமையனுர் ஸ்ரீ உ. வே. இளையவில்லி சடகோபாசாரிய ஸ்வாமியுடையவும், ஸ்ரீபெரும்பூதூர் பாடசாலையின் அத்யக்ஷராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ. உ. வே. ஆஸூரி பெரிய ராமாநுஜாசாரியஸ்வாமியுடையவும் ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியுடையவும், ஸ்ரீ உ. வே. பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியுடையவும் "ஆமுதல்வன்" என்கிற கடாக்ஷத்தை முறையே பெற்று ஸத்தை பெற்றவன் அடியேன்' என்பதே அது. இந்த ஸ்வாமியின் சொல்வன்மையை அநுபவித்த புத்தூர் அட்வகேட் ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஶநத்தின் ஆசிரியர் ஸ்ரீ. உ. வே. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி இவருக்கு "ஸாரார்த்தச் சொல்லழகர்" என ஓர் பட்டமளித்துள்ளார்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்
எம்பெருமானார் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி பத்தாம் பத்தின் ஸங்க்ரஹம்

"ஆர்த்திஹரத்வம்"

ஸ்ரீ. உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி (ஸ்ரீரங்கம்)

ச்ரிய: பதியான எம்பெருமானால் மயர்வற மதிநலமருளப் பெற்றவர் நம்மாழ்வார். அவர் ஸாம வேத ஸாரமாய் "திருவாய் மொழி" என்னும் 1102 பாட்டுக்கள் கொண்ட திவ்யப்ரபந்தத்தை அருளிச் செய்திருக்கிறார். அதில் பதினொரு பாட்டுக்கள் கொண்ட பகுதிக்கு "ஒரு திருவாய்மொழி" என்றும் பத்துத் திருவாய்மொழி கொண்ட பகுதிக்கு "ஓர் பத்து" எனவும் பெயர் வழங்கி வருகிறது.

ஆழ்வார் ஒவ்வொரு பத்திலும் காரணத்வம் தொடங்கி ஓரோர் கல்யாண குணத்தை வெளியிடுகிறார். அவ்விதத்தில் பத்தாம் பத்தில் "ஆர்த்திஹரத்வம்" என்கிற குணத்தை வெளியிடுகிறார்.

ஆர்த்தியாவது—ப்ரபந்நர்களுக்கு ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்பாலும் எம்பெருமான் திருவடிகளை கிட்டாமையாலும் உண்டாகும் வருத்தம். அதனை எம்பெருமான், அடியார்களின் இடரை நீக்க அவதாரங்களில் கொள்ளும் திருமேனிகளுக்கு காரணமான ஸௌந்தர்யம் மிக்க திருமேனியாலே பரிஹரிக்கிறான் என்பது 10-ம் பத்தில் உபபாதிக்கப்படுகிறது. இதனை "சுரிகுழல் கமலக்கண்கனிவாய் காளமேகம்" "காமரூபங் கொண்டெழுந்தளிப்பான்" "அஞ்சனமேனி" "புனல்மை நின்றவரை போலும் திருவுருவம்" "பொல்லாக் கனிவாய் தாமரைக்கண் கருமாணிக்கம்" "புனக்காயா நிறத்த புண்டரீகக்கட் செங்கனிவாய்" என்றும் பாசுரங்களால் அறியலாம்.

ஆழ்வாருடைய ஆர்த்தி இப்பத்தில் 10ஆம் திருவாய் மொழியான "முனியே நான்முகனில்" நன்கு விளங்குகிறது. அத்திருவாய்மொழி தம் தாபத்தை வெளியிடும்படி அமைந்ததற்கு காரணம் அதற்கு முன் திருவாய் மொழிகளில் அநுபவங்களேயாகும். இதனை நன்கறிய திருவாய் மொழியின் பத்தாம் பத்தின் முதல் திருவாய்மொழி தொடங்கி சுருக்கமாக ஒவ்வொரு திருவாய் மொழியின் ப்ரமேயமும் காட்டப்படுகிறது.

http://acharya.org

பத்தாம் பத்தில் முதல் திருவாய்மொழி "தாளதாமரை" என்பது. இது திருமோகூர் எம்பெருமானை ப்ரதிபாதிப்பது. இத்திவ்யதேசத்தில் எம்பெருமான் ஆழ்வாருக்குக் காட்டிக்கொடுத்த குணம் "மார்க்கபந்து சைத்யம்" என்பது. அதாவது வழிக்குத் துணையாகும் பந்துவிடம் பார்க்கப்படும் குணங்களில் முக்யமான குணம் குளிர்த்தியேயாகையாலே அது இத்திவ்யதேசத்தில் நன்கு புலனாகிறதென்கிறார். "தாளதாமரை" என்கிற முதல் பாட்டில் "காளமேகத்தையன்றி மற்றொன்றிலம் கதியே" என்பதனால் இது அறியலாகிறது.

ஆழ்வார், கீழ் ஒன்பதாம் பத்தில் "நாளேலறியேன் என்று 'எம்பெருமானைப் பரமபதத்தில் அடையும் நாள் ஏதோ தெரியவில்லையே' என்று கலங்க, திருக்கண்ணபுரத்து எம்பெருமான் இந்த சரீரத்தின் முடிவில் வைகுந்தம் கொடுப்பதாக நாளிட்டுக் கொடுக்கிறான். இதனை "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்றருளிச் செய்தார்.

வைகுந்தம் போம்போது அர்ச்சிராதி கதியில் போகவேண்டும், அவ்வழியோ பழக்கமில்லாதது. அதில் போம்போது ஓர் ஆப்தனை வழித்துணையாகக் கொள்ள வேணும். தானும் பந்துக்களும் இத்தனை காலம் தனக்குத் தீங்கிழைத்தவர்களே தவிர தன்னையும் அவர்களையும் ஆப்தர்களாகவெண்ணி வழிக்குத் துணையாகக் கொள்ள முடியாது. 'யார் ஆப்தராய் வழித்துணை யாவார்' என்று ஆழ்வார் திகைக்க திருமோகூரில் எம்பெருமான் தன் ஆப்ததையைக் காட்டிக் கொடுக்கிறான். ஆழ்வாரும் "திருமோகூர் ஆத்தன் தாமரை அடியன்றி மற்றிலம் அரணே" என்று அவனை வழித்துணையாகப் பற்றுகிறார். ஆப்தனாய் வழித்துணையாமவனுக்கு வேண்டிய குணங்கள் இத்திருவாய்மொழியில் பெருக்க ப்ரதிபாதிக்கப்படுகின்றன. அக்குணங்கள் :—

1. ஸர்வேச்வரத்வம் .. இது கார்யம் செய்யும் எனத்துணிகைக்கு வேணும்.
2. ஸர்வஜ்ஞத்வம் .. இது கொண்டு செல்ல உபாயமறிகைக்கும் விரோதியை அறிகைக்கும் வேணும்.
3. ஸர்வ சக்தித்வம் .. இது விரோதிகளைப் போக்குகைக்குவேணும்.
4. ப்ராப்தத்வம் .. இது கார்யம் செய்கைக்கு வேணும்.
5. ஆப்தத்வம் .. இது நாம் நம்புவதற்கு வேணும்.
6. தயை .. இது நம்மிடத்தில் அவன் இரங்குவதற்கு வேணும்.
7. வடிவழகு .. இது வழிச்செல்பவனுக்கு ச்ரமமாற்றுகைக்கு வேணும்
8. மதிப்புடமை .. இது விரோதிகள் மேலிடாமைக்காக வேணும்.

இக்குணங்கள் இப்பதிகத்தின் பாட்டுக்களில் காணலாகிறது. விரிவுக்கஞ்சி இங்கு காட்டப்படவில்லை.

http://acharya.org

இப்பதிகத்தில் "அண்ட மூவுலகளந்தவன்" என்றும் "அவனடி நிழல் தடம்" என்றும் திரிவிக்கிரமனும், "தயரதன் பெற்ற மரதகமணித்தடம்" என்று சக்ரவர்த்தித் திருமகனும் "கூத்தன் கோவலன்" எனக் கண்ணபிரானும் குறிப்பிடப்படுவதையிட்டு அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தம் ஆசார்ய ஹ்ருதயத்தில் ஓர் நிரூபணம் பண்ணி அருளுகிறார். அது மிகவும் அநுபவிக்கத் தக்கதாகையாலே மிகமிகச் சுருக்கமாய் இங்கு காட்டப் படுகிறது.

அதாவது-எம்பெருமான் த்ரிவிக்கிரமனாய் மேலுலகங்களையெல்லாம் அளந்தது, தன்னை வழித்துணையாகக் கொண்டு செல்வார்க்கு வழியில் நிழல் தடங்களை ஏற்படுத்தவும்; தான் கடல் கடைந்து அமுதமளித்தது, தன்னை வழித் துணையாகக் கொள்பவருக்கு 'வழிக்கு தாரகத்தை கொடுப்பவன்' என்பதை அறிவிக்கவும்தானும்; தேவர்களுக்கு தாரமாக அம்ருதம் கொடுத்தவன், தன்னைப் பற்றிச் செல்வார்க்கு வழியில் தாரகமாக "பாதேயம் புண்டரீகாக்ஷ நாம ஸங்கீர்த்தநாம்ருதம்" என்று தன் நாமங்களையும் திருமேனியையும் பாதேயமாகக் கொடுத்து அழைத்துச் செல்வனும். இப்படி அவன் சிலரை அழைத்துச் சென்றதுண்டோ? என வினைஎழ, ராமாவதாரத்தில் 6 பேரையும், க்ருஷ்ணாவதாரத்தில் 10 பேரையும் நரஸிம்ஹாவதாரத்தில் ஒருவரையும் கஜேந்த்ரனையும் ஆக 18 பேர்களை வழி நடத்தப்பட்டவர்களாக அறிவிக்கிறார்.

1. வேடன்—குஹப்பெருமாள் 2. வேடுவிச்சி—சபரீ 3. பக்ஷி—ஜடாயு மஹாராஜர் 4. குரங்கு—ஸுக்ரீவ மஹாராஜர் முதலான எழுநூறு வெள்ளம் வானரர்கள் 5. சராசரம்—திருவயோத்தியிலுள்ள சராசர வஸ்துக்கள் 6. இடைச்சி—சிந்தயந்தி 7. இடையன்—ததிபாண்டன் 8. தயிர்த்தாழி—ததிபாண்டனின் தயிர்ச்சட்டி 9. கூனி—கண்ணனுக்குச் சந்தனமிட்ட கூனி 10 மாலாகாரர்—கண்ணனுக்குப் பூச்சூட்டினவர் 11. பிண விருந்திட்டவன்—கண்டாகர்ணன் 12. வேண்டடிசிலிட்டவர்—பத்தவிலோசனத்தில் ரிஷி பத்நிகள் 13. அவன் மகன்—ப்ரஹ்லாதன் 14. அவன் தம்பி—விபீஷ்ணாழ்வான். 15. ஆனை—கஜேந்த்ராழ்வான் 16. அரவம்—ஸுமுகன் 17. மறையாளன்—கோவிந்தஸ்வாமி 18 பெற்றமைந்தன்—மார்க்கண்டேயன் ஆக 18 பெயர்களை எம்பெருமான் ஆப்தனாய் வழி நடத்தினபடியாலே அவனையே ஆழ்வார் தமக்கு வழித்துணையாகப் பற்றுகிறார் "தாளதாமரை" என்னும் முதல் திருவாய் மொழியில்; என்பது ஆசார்ய ஹ்ருதய நிரூபணம். இதனை மாமுனிகள் "தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம் காளமேகத்தைக் கதியாக்கி—மீளுதலாம் ஏதமிலா விண்ணுலகில் ஏகவெண்ணும் மாறன் எனக்கேத முள்ளதெல்லாம் கெடும்" என்றருளிச் செய்தார். அடுத்து 10ஆம் பத்தில் "கெடுமிடர்" என்னும் இரண்டாம் திருவாய்மொழி: கீழ் திருமோகூரில் தன்னை ஆப்தனாகப் பற்றின ஆழ்வாருக்கு, திருவநந்தபுரத்தில் எம்பெருமான், பரமபதத்தில் போய்ச் செய்யும் அநுபவ கைங்கர்யங்களைத் தன் திறத்தில்

http://acharya.org

செய்யலாமென ப்ராப்யதையைக் காட்டிக் கொடுத்தான். அதனை நெஞ்சு போல்வாரை 'தொண்டீர்' என்றழைத்து "நாம் பரமபதம் சென்று செய்யும் அடிமைகள் எல்லாவற்றையும் இத்திவ்யதேசத்திலேயே செய்யலாம், என் உறவு பெற நினைப்பவர்கள் இப்போதே நடமினோ" என்று பிறருக்கு உப தேசிக்கிறார்.

இத்திவ்ய தேசத்தில் ப்ரகாசிக்கும் குணத்தை ஆசார்ய ஹ்ருதயத்தில் "ஸஸைந்ய புத்ர சிஷ்ய-ஸாத்யஸித்தபூஸுரார்ச்சனத்துக்கு முக நாபி பாதங் களை த்வாரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்தசயநத்திலே வ்யக்தம்" எனக்காட்டியருளுகிறார்--அதாவது—" அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்ககப் பணி செய்வர் விண்ணோர்" என்று ஸேனைஸஹிதரான ஸேனை முதலியாராகிற ஸாத்யரும், "அமரராய்த் திரிகின்றார்கட்காதி" என்று எம்பெருமானின் புத்ரர் களான ப்ரஹ்மாதிகளாகிற ஸித்தரும், "படமுடையரவில் பள்ளிபயின்றவன் பாதம் காண நடமினோ நமர்களுள்ளீர்" என்று ஆழ்வார் உபதேசங்கேட்டு சிஷ்யர்களாய் பூஸுரர்களான நாமும், தன்னை அர்ச்சிக்கைக்கு—திருமுகம் கண்டு அநுபவிப்பவர்களான நித்யர்களுக்குத் திருமுக மண்டலத்தையும், திரு நாபியில் தோன்றியவர்களாகையாலே ப்ரஹ்மாதிகளுக்குத் திருநாபியையும், திருவடியைப்பற்றி உஜ்ஜீவிக்க வேண்டியர்களாகையாலே ஆழ்வார் சிஷ்யர் களாய், பூஸுரர்களான நமக்குத் திருவடிகளையும் மூன்று திருவாசல்களாலே காட்டியருளும் திருவநந்தபுரத்தில் நித்யஸூரிகள் ஸம்ஸாரிகள் என்று வாசி வையாத ஸாம்ய குணம் வ்யக்தமாயிருக்கும் என்கிறார்.

இது அர்ச்சா ஸ்தலமாகையாலே பரமபதத்தில் காட்டில் மேம்பாடோ, ஸாம்யமோ பெற்றதாக எங்ஙனமாகும்? என்கிற வினவுக்கு, இது 'வாசமே கமழுஞ் சோலையாகையாலே பரம போக்யம். எம்பெருமான் உகந்து வர்த்திக் கையாலும் நித்யமுக்தரும் வந்தடிமை செய்கையாலும் பரமபதத்துக்குச் சமம். "கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன நாளும் கொடுவினை செய்யும் கூற் றின் தமர்களும் குறுககில்லார்" என்றும் "எழுமையும் ஏதம் சாரா' என்றும் பகவதநுபவத்துக்கு இடையூற்றைப் போக்கும் சிறப்புடையதாகையாலே ருசி பிறந்த போதே இவ்வுடம்போடே இடரற்று எல்லாவடிமைகளையும் செய்யும் இடமாகையாலே பரமபதத்தில் மேம்பாடுடையது. இன்னம், பரம புருஷார்த் தம் "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்று நித்ய ஸூரிகளுடன் கூடப்பெறுகையால் நித்யர்களும் இங்கே வருகிறபடியாலே இத்திவ்யதேசத்தில் அவர்களுடனும் கூடலாம்; சரீரம் உள்ளதனையும் இங்கு கைங்கர்யம் செய்துவிட்டு சரீரம் கழிந்ததும் அவர்களுடன் பரமபதம் செல்ல லாம். ஆகவே இதுவே ப்ராப்யம் என்கிறார்.

பரமபதத்தைக் காட்டிலும் உகந்தருளின நிலங்களுக்குப் பெருமையுண்டு. உகந்தருளின நிலங்கள் சேதனர்க்கு ஆசையை உண்டாக்கும். ஆசையுண்டா னால் உபாயமாகும். உபாயமாகக் கொண்டால் ப்ராப்யமாயிருக்கும், ஆகவே பரமபதத்தில் சிறந்த திருவநந்தபுரமே பரம ப்ராப்யம் என்கிறார்.

http://acharya.org

முக்யமாக திருவநந்தபுரவாஸிகளுக்கு யமவச்யதை இல்லையென்பது ஸாரம்.

"கடுவினை களையலாகும். நடமினோ நமர்களுள்ளீர்" என்கிற 8ஆம் பாட்டில் ஓர் ஐதிஹ்யம் காண்கிறது. அதாவது—கோயிலில் மார்கழித் திருநாள் இராப்பத்து நடைபெறும்போது கோஷ்டியில் சிஷ்யர்களுடன் ஆளவந்தார் எழுந்தருளியிருந்தாராம்; அப்போது அரையர் ஸ்வாமி இத்திருவாய்மொழியை கையில் தாளத்துடன் தேவகாநத்தில் ஸேவித்து வந்தவர் இப்பாசுரத்தைப் ஸேவிக்கும்போது ஆளவந்தாரை நோக்கி "படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கறியச் சொன்னோம்" என்று இவரை நியமிக்கிறப்போல ஸேவித்தாராம். உடனே ஆளவந்தாரும் இது ஆழ்வார் நியமனமென உகந்து திருநாள் பூர்த்தியான மறுநாளே சிஷ்யர்களுடன் திருவநந்தபுரம் எழுந்தருளினாராம்.

இத்திருவாய்மொழி பரோபதேசபரமாகையாலே இதில் ஆழ்வார் உபதேசிக்கும் அர்த்தங்களை ஆசார்ய ஹ்ருதயக்காரர் "நெஞ்சு போல்வாரைத் தொண்டரென்றழைத்து 1. வலஞ்செய்து 2. எண்ணுமின் 3. பேசுமின் 4. கேண்மின் 5. காண்மின் 6. நடமின் 7. புகுதும் என்று 1. கர்த்தவ்யம் 2. ஸ்மர்த்தவ்யம் 3. வக்தவ்யம் 4. ச்ரோதவ்யம் 5. த்ரஷ்ட்வ்யம் 6. கந்தவ்யம் 7. வஸ்தவ்யம் எல்லாம் வெளியிட்டு" என்று ஸங்க்ரஹிக்கிறார். இதனை மாமுனிகள் "கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினாற் போல தடமுடையனந்தபுரந்தன்னில்—படவரவில் கண்டுயில் மாற்காட்செய்யக் காதலித்தான் மாறன் உயர் விண்டனிலுள்ளோர் வியப்பவே" என்றருளிச் செய்தார்.

அடுத்தது 10ஆம் பத்தில் "வேய்மருதோளிணை" என்கிற மூன்றாம் திருவாய்மொழி. இது ஓர் தனித்தன்மை பெற்றது. கீழ் திருவநந்தபுரத்தில் அநுபவம் மானஸிகமாய் பாஹ்யமாக அநுபவாபேக்ஷை பிறந்து அது கிடையாமையாலே ஆழ்வாருக்கு ஓர் கலக்கமுண்டாகிறது. அதாவது எம்பெருமானை அநுபவித்துக் கொண்டிருக்கும்போதே எம்பெருமானைப் பிரிந்து அநுபவமிழந்து கிடப்பதாக ஓர் கலக்கம் உண்டாகிறது. இதற்கு ஹேது இத்தேஹத்தை மறக்கும்படி எம்பெருமானைப் பெருததேயாம். தேஹத்தை மறக்கும்படி பகவதநுபவம் ஏற்படுவது பரமபதத்திலேயாம். எம்பெருமான், தன்னை இன்னம் இப்பூமியிலேயே வைத்துவிடுவனோ என்கிற சங்கை உண்டாயிற்று ஆழ்வாருக்கு.

இத்தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். அதாவது அவனை அநுபவிக்கும்போதே, "எம்பெருமானே, நீ என்னைப் பிரியாதிருக்க வேணும் அநுபவிக்கப் பண்ணவேணும் என்று வளைக்கை". இதற்கு அந்யாபதேசமாவது—கண்ணனுடன் ஒரு படுக்கையில் படுத்திருக்கும் ஓர் கோபிகை, அவனால் நன்கு அணைக்கப்பட்டிருக்கச் செய்தேயும், அவன் இவளை விட்டகல வேணும் என்கிற நினைவின்றிக்கே இருக்கச் செய்தேயும், பொழுது விடிவதற்கு உண்டான அடை

http://acharya.org

 Released by Maran's Dog ,Toronto, Canada

யளங்களை அறிந்து, பொழுது விடிந்தால் கண்ணன் பசு மேய்க்கப் போய் விடுவான் என உறுதிகொண்டு, அவனைப் பிரிந்தாளாகவே கொண்டு அவன் முன்னிலையிலேயே "கண்ணு நீ பசு மேய்க்கப் போகாதே கொள்; நீ பிரிந்திருத்த லால் நான் பாதக பதார்த்தங்களால் படும் நலிவைப் பார்" எனக் கண்ண னுக்கு அறிவித்து அவனைப் பசு மேய்க்கப் போகாமல் தடுக்கிருள். அவன் பிரிந்து போயிருந்து இவள் பட்டால் வந்து ஸமாதானம் செய்யலாம். போகப் புறப்பட்டிருந்தால், தவிர்ந்து ஸமாதானம் செய்யலாம் அவனுக்கோ இப்போது போகும் உத்தேசமே இல்லை. இவளையே கெட்டியாக அணைத்துக் கிடக்கிருன். ஆகவே போகாதவனைப் போனுகைக் கொண்டு இவள் படும் அலமாப்பை அவன் ஸர்வஜ்ஞனுலும் ஸர்வசக்தனுலும் எங்ஙனம் தவிர்ப்பது? ஆக எம் பெருமானுக்கே பரிஹரிக்க முடியாததொரு தசை கோபிகைக்குப் பிறந்ததாம்.

இத்தால் பகவதநுபவத்தை இடரறச் செய்துவரும் ஆழ்வார் ஸம்ஸாரத் திலிருப்பால் பகவதநுபவம் தடைபடுவதாக ஓர் நினைவு கொண்டு அருளிச் செய்யும் திருவாய் மொழியிது.

அந்யாபதேசத்தில் விடிவுக்குண்டான அடையாளங்கள்போல இங்கு ஆழ்வாருக்கு ஸம்ஸாரத்தில் தேஹத்தோடிருப்பு. அங்கும் விடிவுக்குண்டான அடையாளங்களால் விடிந்தாலும் க்ருஷ்ண விச்லேஷமில்லை. இங்கும் ஆழ் வாருக்கு இஸ்ஸம்ஸாரத்திலிருப்பும் தேஹ ஸம்பந்தமும் பகவதநுபவ விரோதி யன்று. அங்கு கோபிகை படுகிருள். இங்கு ஆழ்வார் படுகிருர். இத் திருவாய்மொழிக்குப் பலம் காட்டும்போது "இவையும் பத்து அவற்றின் சார்வே" என்பதற்கு "அவற்றினருகே இதுவுமொரு திருவாய்மொழியே" என நஞ்ஜீயர் அருளிச் செய்வராம். மற்றைத் திருவாய்மொழிகளில் இதற்கு வாசி—இது விலக்ஷணம் என்றபடி.

இத்திருவாய்மொழி புருஷார்த்த நிர்ணயத்தில் முக்யமானது. எங்ஙனே வென்னில் அர்த்த பஞ்சகத்தில் புருஷார்த்த ஸ்வரூபத்துக்கு "எம்மாவீடு" "ஒழிவில்காலம்" "நெடுமாற்கடிமை" "வேய்மருதோளிணை" என்கிற இது, ஆக நான்கு திருவாய்மொழிகள் ப்ரதிபாதகங்கள். "எம்மாவீட்டில்", புரு ஷார்த்தத்தை "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பு" என்று எம்பெருமானுக்கே விநியோகப்படுமது புருஷார்த்த மென அருளிச்செய்தார். தனக்கேயாகக் கொள்வது எவ்விதமென்பது இத் திருவாய்மொழியில் "உகக்கு நல்லவரொடும்" என்கிற பாட்டால் காட்டப் படுகிறது.—அதாவது—படுக்கையில் அணைந்து கிடக்கும் பெண்கண்ணனைப் "பசு மேய்க்கப் போகாதே கொள்" என்ருள். அவன் இவள் நெஞ்சறிவதற் காக, "நான் பசு மேய்க்கையை வியாஜமாகக் கொண்டு என்னை அங்கு எதிர் நோக்கியிருக்கும் சில பெண்களை அணைவதற்காகத்தான் போகிறேன், நீ போகாமல் தடுத்தால் அவர்கள் என்படுவர்களோ, என்னுலும் அவர்களைப் பிரித்திருக்க வொண்ணுது, ஆகவே பசுமேய்க்கப்போகை தவிராது" என்ருனும்

http://acharya.org

அவனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள் கோபிகைகள், "உகக்கு நல்லவரொடும் உழிதந்து உன் தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும் எம்பெண்மையாற்றோம் எம்பெருமான் பசு மேய்க்கப் போகேல்" என்று. அதாவது—' உன்னால் உகக்கப்பட்டவர்களோடு நீ எங்கள் கண்வட்டத்தில் நன்கு கலக்கலாம். அதனால் உன் திருவுள்ளத்துக்குண்டான குறை நீங்க நீங்க நாங்கள், நீ எங்களுடன் கலப்பதால் நாங்கள் பெறும் இன்பத்தைக் காட்டிலும், அவர்களோடு கலப்பதால், நீ பெறும் இன்பத்தைக் காட்டிலும் நாங்கள் அதிக வின்பம் பெறுவோம். உன் மகிழ்வுக்கு இடையூறான எங்கள் பெண்மையை வேண்டோம். அதற்காக நீ பசு மேய்க்க என்று போகவேண்டாம். அவர்களை இங்கேயே அழைத்து அவர்களுடன் கலப்பாயாக, நாங்கள் அச்சேர்த்தியில் எல்லாவடிமைகளையும் செய்யப் பெறுவோம்' எனக் கண்ணனை வேண்டுகிறாகள். இதுவே பாரதந்தர்யத்தின் கார்யமான புருஷார்த்தத்தின் எல்லையாம்.

இங்கு ஆசார்யஹ்ருதயகாரர் ஆழ்வாருக்கு ஏற்பட்டிருக்கும் பகவதநுபவத்தை அக்ரூரர் பெற்றதற்கும் மதுரா நகரத்துப் பெண்கள் பெற்றதற்கும் ஸமமாகக் காட்டி அப்படியிருந்தும் அநுபவம் பெறாதவராகத் துடிக்கிறார் ஆழ்வார் என்கிறார்.

இதனை மாமுனிகள் நூற்றந்தாதியில் இப்பதிகத்துக்கான பாட்டில்

"வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்ற தேசத்தை
தான்மருவாத்தன்மையினால் தன்னையின்னம்—பூமியிலே
வைக்குமெனச்சங்கித்து மாலதெளிவிக்கத்தெளிந்த
தக்கபுகழ்மாறனெங்கள்சார்வு" என அருளிச் செய்கிறார்.

அடுத்த திருவாய்மொழி "சார்வேதவ நெறிக்கு" என்னும் நான்காவது. ஒரு சாஸ்த்ரத்தில் ஓரர்த்தம் முதலில் காட்டப்பட்டதேயானால் அதை அந்த சாஸ்த்திரத்தின் முடிவில் பலத்தோடே சேர்ந்ததாகக் காட்டி முடிக்கவேணும். இதற்கு "நிகமநம்" எனப்பெயர்.

ஆழ்வார் "உயர்வற உயர்நலம்" என்னும் முதல் திருவாய்மொழியில் நலமுடையவன் என்று ப்ராப்யமான பரஸ்வரூபத்தையும் "தொழுது எழு என் மனனே" என கைங்கர்யமாகிற புருஷார்த்த ஸ்வரூபத்தையும் காட்டியருளினார். இந்த முதல் திருவாய்மொழியின் அர்த்தத்தை "கெடுமிடராயவெல்லாம் என்றும் 10ஆம் பத்தில் இரண்டாம் திருவாய்மொழியால் "படமுடை அரவில்பள்ளி பயின்றவன் பாதம் காண நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக்கறியச் சொன்னோம்" என்று பரஸ்வரூபமே ப்ராப்யமென்றும் "கடைத்தலை சீயக்கப் பெற்றால் கடுவினைகளையலாமே" என்று கைங்கர்யமே புருஷார்த்தமென்றும் நிகமித்து, அடுத்த மூன்றாம் திருவாய்மொழியான "வேய்மருதோளிணையில்" "உன் தன் திருவுள்ளம் இடர் கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்" என்று த்வயத்தில் உத்தரகண்டத்தில் நம: சப்தார்த்தமான கைங்கர்யத்தில் களையறுத்தலை உபபாதித்தார்.

http://acharya.org

ஆக முதல் திருவாய்மொழியின் உயர்வற உயர்நலத்துக்கு நிகமநங்கள் "கெடுமிடர்" "வேய்மருதோளிணை" இரண்டு திருவாய்மொழிகள். நான்காவதாக சர்வே தவநெறியால் வீடுமின் முத்தத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ப்ரபத்தியை நிகமிக்கிறார், "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" என்று. 5 ஆவதான "கண்ணன் கழலிணையால் பத்துடையடிவரில் "வணக்குடைத் தவ நெறி வழிநின்று" என்பதனுல் ப்ரதிபாதிக்கப்பட்ட பக்தியை நிகமிக்கிறார். விரிவுக்கஞ்சி உள்புகாமல் விட்டிட்டோம்.

"வீடுமின் முற்றவும்" என்கிற திருவாய்மொழி பக்தி பரமேயென்பது எம்பெருமானுர் நிர்வாஹம்; அப்படியானுலும் இந்த "சார்வேத தவநெறி" பக்திக்கு நிகமநமாகக் கொள்வது. இதனை மாமுனிகள்

"சார்வாகவேயடியில் தானுரைத்த பத்திதான்
சீரார் பலத்துடனே சேர்த்ததனை—சோராமல்
கண்டுரைத்தமாறன் கழலிணையே நாடோறும்
கண்டுகக்கு மென்னுடையகண்" எனவருளிச் செய்கிறார்.

அடுத்த 5ஆம் திருவாய்மொழி "கண்ணன் கழலிணை" என்பது:

எம்பெருமான் தம்மைப் பரமபதம் கொண்டுசெல்ல த்வரிக்குப்படியைக் கண்ட ஆழ்வார், உலகத்தாருக்கு பக்திமான்களின் பரிமாற்றத்தையும் உபதேசிக்கிறார் "கண்ணன் கழலிணையில்".

இவர் மிக்க க்ருபையுடையராகையாலே இதுவொன்றும் இவர்களுக்குக் குறையக் கூடாதென்று கேட்கிறவர்கள் நெஞ்சில் படவும், எம்பெருமான் தம்மைக் கொண்டுபோக த்வரிக்கிறபடியால் அவகாசமின்மையாலும் சிறிய சிறிய பாட்டுக்களால் பக்திமான்களுடைய பரிமாற்றத்தை வெளியிடுகிறார்.

இதில் இவர் உபதேசிக்கும் கிரமமாவது—பக்திக்கு ஆலம்பந மந்த்ரத்தை "நாரணமே" என்றும், அதிலர்த்தாநுஸந்தானமே மோக்ஷ ஸாதனமென்பதை "நாரணனெம்மான்" என்கிற பாட்டாலும் "தானே உலகெல்லாம்" என்கிற பாட்டாலும் காட்டுகிறார். அவ்வழியாலே பக்தியைப் பண்ணுங்கோள் என்று, தாள்வாய் மலரிட்டு நாள் வாய் நாடீரே" என்றும், கரணத்ரயத்தாலே அவனை ஆச்ரயிக்க வேணுமென்பதை "நாடீர் நாடோறும்" என்கிற பாட்டாலும், "ஆச்ரயிப்பார்க்கு அவன் ஸுலபன் என்பதை "மேயான் வேங்கடம்" என்கிற பாட்டாலும், ச்ரிய:பதியாகையாலே ஸ்வாராதன் என்பதை "மாதவனென்றென்று" என்கிற பாட்டாலும், ஆச்ரயிக்குமிடத்தில் அதிகார ஸம்பத்தி வேண்டா, ருசியுடையார் எல்லாரும் இதற்கதிகாரிகள்' என்பதை "பேரார் ஓதுவார்" என்றும், "மனமுடையீர்" என்றும், புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு ஆச்ரயிக்க வேணும் என்பதை "சுனை நன்மலரிட்டு" என்றும், விரோதி நிவ்ருத்தியை "அமரா வினைகளே" "வினைவல்லிருளென்றும் முனைகள்

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமாலிருஞ்சோலைமலை அழகர்

http://acharya.org

வெறுவிப்போம்" என்றும் அர்த்த விசேஷங்களை உபதேசித்துத் தாம் பரோபதேசத்தைத் தலைக்கட்டுகிறார். ஆக திருவாய்மொழியில் கடைசி உபதேச பதிகம் இத்திருவாய் மொழியேயாகும். இங்கு ஆசார்ய ஹ்ருதயம்: "எண் பெருக்கில் என்னும் திருநாமத்தைச் சுருக்கி மாதவனென்று த்வயமாக்கி கரணத்ரய ப்ரயோகவ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து" என்பது. இதனை மாமுனிகள்.

கண்ணனடியிணையில் காதலுறுவார் செயலை
திண்ணமுறவே சுருங்கச் செப்பியே—மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான் மாறன்
ஆனபுகழ்சேர் தன்னருள்" என்றருளிச் செய்தார்.

அடுத்தது "அருள் பெறுவார்" என்கிற ஆறும் திருவாய்மொழியாகும்:

இங்கு ஈட்டின் அவதாரிகையில் "பொய்நின்ற ஞானந்தொடங்கி இவ்வளவும்வர ஈச்வரனை ஆழ்வார் பின் தொடர்ந்தபடி சொல்லிற்று; இது தொடங்கி ஆழ்வாரை ஸர்வேச்வரன் பின் தொடருகிறபடி சொல்லுகிறது என்று, இது முதல் எம்பெருமானின் அவா உபபாதிக்கப் படுகிறது என்கிறார்.

இது "திருவாட்டாறு" என்னும் திவ்யதேசப் பதிகம். அத்திவ்யதேசத்தில் ப்ரகாசிக்கும் குணம் ஆசார்ய ஹ்ருதயத்தில் "மோக்ஷதாநத்தில் ப்ரணத பாரதந்த்ர்யம் வளம்மிக்க நதியிலே கரைபுரளும்" என்று ஆச்ரித பாரதந்த்ர்யமாகக் காட்டப்படுகிறது. அதாவது—"ஆழியான் அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதி வகையே" என்று 'இப்படி ஸர்வ ஸமமானவன் ஆச்ரிதற்கு மோக்ஷங் கொடுக்குமளவில் அவர்கள் விதித்தபடியே செய்வானாய் நிற்கிறான்' என்று ஆச்ரித பாரதந்த்ர்யம் வளம் மிக்க வாட்டாற்றிலே எல்லையில்லாமல் பெருகுகிறது என்பதாம். ஆழ்வாரைப் பெற எம்பெருமான், ஆழ்வார் தன்பால் அவா கொள்வதற்கு முன்பாகவே அவாகொண்டு திருவாட்டாற்றிலே தங்கு வேட்டையாக வந்து தங்கியிருக்கிறானாம். ஆழ்வார் பரமபதம் வர இசைந்த உடனேயே அவர் நினைவின்படி ஆழ்வாரைப் பரமபதம் கொண்டு செல்ல அவர் நியமனத்தை எதிர்பார்த்து த்வரையுடன் நிற்கிறானாம். இதுவே அவனின் ப்ரணத பாரதந்த்ர்யமாவது. இதனை ஆழ்வார் "ஆழியான் அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதி வகையே" என்றருளிச் செய்கிறார். அதாவது ஆழ்வாரின் திருமேனியை மிகவும் விரும்பி இருக்கும் எம்பெருமான் ஆழ்வாரை அவர் திருமேனியுடன் கொண்டு செல்ல ஆழ்வாரின் நியமனத்தை எதிர்பார்த்து நிற்கிறானாம். இனி இத்திருவாய்மொழியில் காட்டப்படும் அர்த்தங்கள் சுருங்கக் காட்டப்படுகின்றன.

எம்பெருமானின் ப்ரணதபாரதந்த்ர்யத்தைப் பிறருடன் உசாவித் தரிக்க வேண்டும் நிலையேற்பட்டது ஆழ்வாருக்கு. ஸம்ஸாரிகள் சப்தாதி விஷயங்களிலே மண்டினவர்களாகையாலே அவர்களை விட்டார். ஸர்வேச்வரன் தம்மிடத்தில் அபிநிவேசாதிசயத்தை உடையவனாய் முன்னடி தோற்றுதேயிருந்தான்; அவனையும் விட்டார். இனி தமக்கு உடன்பட்ட தம் நெஞ்சைப் பார்த்து, எம்பெருமான்படிகளையும் நெஞ்சு செய்ய வேண்டியதையும் அருளிச் செய்கிறார்.

http://acharya.org

இங்கு ஆசார்ய ஹ்ருதயம் "மூந்துற்ற நெஞ்சுக்குப் பணிமறவாது மருளொழி நகு கைவிடேல் என்று க்ருத்யா க்ருத்யங்களை விதித்து" என்பது. அதாவது "தொழுது எழு என் மனனே" என்று ப்ரதமத்திலே உபதேசிக்கும் "மூந்துற்ற நெஞ்சு" என்னும்படியே தம்மிலும் பகவத்விஷயத்தில் முற்பட்டிருக்கிற தம் திருவுள்ளத்துக்கு "பணி நெஞ்சே நாளும் பரமபரம்பரனை" "வாழியென்னெஞ்சே மறவாது வாழ்கண்டாய்" "மருளொழி நீ மடநெஞ்சே" "நரகத்தை நகு நெஞ்சே" "வாழிமனமே கைவிடேல்" என்று நம் ப்ரதிபந்தகங்களையெல்லாம் போக்கித் தானேயடிமை கொள்ளும் ஸர்வஸ்மாத்பரனை அநுபவிக்கப் பார்; உனக்கு இஸ்ஸம்ருத்தி மாருதே சென்றிடுக; பகவத்விஷயம் கைபுகுந்து விட்டதென்று, இதர விஷயங்கள் கைபுகுந்தால் அவைகளை விடுமாபோலே விடாதே கொள். உனக்கு திவ்யதேசங்களில் மண்டி "பரமபதம் வேண்டேன்" என்பதும் ஓர் நினைவுண்டு, அந்த ப்ரமத்தை தவிரப்பார்; நான் பரமபதத்தேறப் போகா நின்றேன், நெடுநாள் நம்மைக் குடிமக்களாக்கி அவமானப்படுத்தின ஸம்ஸாரத்தைப் புரிந்து பார்த்து சிரித்துப் போகவேணும். நமக்கு இந்த ஐச்வர்யமெல்லாம் திருமாலிருஞ்சோலை மலையாலே வந்தது. அத்திருமலையைக் கைவிடாதே கொள் என்று செய்யவேண்டியதையும் தவிரவேண்டியதையும் விதிக்கிருர் ஆழ்வார்.

இதற்கு முன்பெல்லாம் ஸர்வேச்வரனுகிருன் ஸர்வ நியந்தாவாய் ஸ்வதந்ரனுய் இருப்பானொருவன் என்றிருந்தார். இப்போது அங்ஙனல்ல. ஆச்ரித பாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபம் என்கிருர். முன்பெல்லாம் தம்மாலே பாரதந்த்ர்யத்தை இழந்தார். இப்போது அவனுலே பாரதந்த்ரயத்தை யிழக்கிருர். ஆக தம் நியமனப்படி எம்பெருமான் நடக்க நிற்பதை உபபாதிக்கிறது இத்திருவாய்மொழி.

இங்கு மாமுனிகள்

அருளாலடியிலெடுத்த மாலன்பால்
இருளார்ந்த தம்முடம்பை பரிச்சித்து – இருவிசும்பில்
இத்துடன் கொண்டேக இசைவுபார்த்தேயிருந்த
சத்தி சொல்லும் மாறன்செஞ்சொல் என்று அருளிச் செய்கிருர்.

இங்கு சத்தியாவது ஆச்ரித பாரதந்த்ர்யம்.

அடுத்த திருவாய்மொழி ஏழாவதான "செஞ்சொற் கவிகாள்" என்பது.

இது திருமாலிருஞ்சோலைக்கான பதிகம். இதில் ஆழ்வார் திருமேனியில் எம்பெருமான் கொண்டிருக்கும் வ்யாமோஹம் பேசப்படுகிறது. ஆசார்ய ஹ்ருதயத்தில் திருமாலிருஞ்சோலை மலையில் ப்ரகாசிக்கும் குணத்தைக் காட்டும்போது "த்யாஜ்ய தேஹ வ்யாமோஹம் மருள்கள்கடியும் மயல்மிகு பொழிலிலே தழைக்கும்" என்கிருர். அதாவது-முமுக்ஷுக்களுக்கு விடத்தக்கதான அவர்கள் தேஹத்தில், இதுவே அவர்களுக்குக் கடைசி தேஹமாகையாலே மனைவியின் எச்சிலை விரும்பும் ராஜபுத்ரனைப்போலே வஞ்சக் கள்வனுய் ஆழ்

http://acharya.org

வாரின் "நெஞ்சமுயிரும் உள் கலந்து" "மாயவாக்கையதனுள் புக்கு" என்று இதின் தோஷம் பாராதே உட்புக்கு "திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே என் தலையே திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே எனதுடலே" இத்யாதிப்படியே உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை ஆழ்வார் திருமேனியின் ஏகதேசத்திலே பண்ணினன். ஆழ்வார் பரமபதம் போனாலும் எனக்கு சரீர ஸம்பந்தம் போகாது போலிருக்கிறதே என்று, எம்பெருமானை "இச்சரீரத்தைக் கழித்துக் கொண்டுபோக வேணும் என்றார். அவன் எனக்கு இதில் ஆதரமிக்கிருக்கிறபடியால் விடமாட்டேன் என்றான். இச்சரீரத்தின் தோஷம் அறிவித்தால் விடுவனென்று '24 தத்வமான ப்ரக்ருதி ப்ராக்ருதத்தால் ஆனது இது, இத்தை விடவேணும்' என்றார்; அவன் விட இசையாத போது சரணாகதி பண்ணி விடுவிக்கப் பிரார்த்திக்கிறார். அவன் கீழ் "அது நமது விதிவகையே" என்று இவர் சொல்படி செய்வானாய் தன்னை அமைத்துக் கொடுத்திருக்கையாலே, ஆழ்வாரின் பிரார்த்தனைக்கு இசைந்தான்.

ஆழ்வாரும், 'ஸர்வேச்வரனாய் இருந்து வைத்து என்சொல் கேட்கிறானே, இது வென்ன சீலகுணம்' என்று எம்பெருமானின் சீல குணத்தில் ஈடுபட்டு சிதிலராகி அப்படி மற்றையார் ஆகாமலிருக்க கவிபாடுவாரெல்லாரையும் அழைத்து 'நீங்கள் கவி பாடும்போது சீல குணத்தில் இழியாதீர்கள்; அது உங்களை அழித்து விடும்', என்கிறார். இவ்விடத்தில் எம்பெருமானார் நிர்வாஹம்—எம்பெருமானின் உயிர் காத்தாட் செய்யுங்கோள்; அவன் தன் சீலகுணத்தால் மேல் விழ வருவான் அப்போது உங்கள் தாழ்வை நினைத்து இறாய்த்துப் பின்வாங்கி அவனுக்கும் முடிவைத் தேடாதீர்கள்' என்பதாம். ஆக இத்திருவாய்மொழியில் எம்பெருமானின் த்யாஜ்ய தேஹ வ்யாமோஹம் பிரகாசிக்கிறது.

இங்கு ஆசார்ய ஹ்ருதயத்தில் ஓர் நிரூபணம் காணப்படுகிறது. அதாவது—எம்பெருமான் ஆழ்வாருக்கு மயர்வறமதிநலமருளி, 'வளவேழுல'கில் நைச்சியம் தலையெடுத்துக் கூடேனென்ற ஆழ்வாரைத் தன்பால் மனம் வைக்கத்திருத்தி, ஆழ்வாரைக்கொண்டுசெல்லுமிடமான பரமபதத்தை, ஆழ்வார் வரவுக்குத் தகுந்ததாம்படி அலங்கரிக்கத் திருநாட்டுக்கெழுந்தருளினானும். அவன் திருநாட்டை அலங்கரித்துத் திரும்புவதற்குள்ளாக இங்கு ஆழ்வார், தம் பாசுரங்களாலே ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் எம்பெருமானுடைய பெயரையும் அவன் ஒப்பனையழகையும் பேசும்படி திருத்திவிட்டாராம். "ஆழ்வாரைக் கொண்டு நாடு திருந்தப்பாசுரமிடுவிக்க வேணும்" என்கிற எம்பெருமானின் நினைவும் நிறைவேறிற்றாம். பிறகு ஆழ்வாரைத் தனியிடத்தில் அநுபவிக்க ஆசைகொண்டு ஆழ்வாருக்கு விண்ணுலகம் தர விரைந்தானும் எம்பெருமான். அப்படி விரைவுற்ற எம்பெருமான். அத்தை மறந்து ஆழ்வார் திருமேனியில் மிகவும் ஈடுபாடு கொண்டானும். எப்படி என்னில்—இடைப் பெண்களுடன் குரவைக் கூத்தாடும் போது பஞ்ச லக்ஷம் குடியில் பெண்களையும் பஞ்சலக்ஷம் திருமேனிகொண்டு அநுபவித்தாற்போலவும், த்வாரகையில் நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினாறுமாயிரவர் தேவிமார்களையும் ஒரே முஹூர்த்தத்தில் அத்தனை வடிவுகொண்டு கைப்பிடித்து அநு

http://acharya.org

பவித்தாற்போலவும், "திருமாலிருஞ்சோலை மலையே "என்கிற பாட்டின்படி உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை ஆழ்வாரின் சரீரத்தின் ஒவ்வோரவயவங்களிலும் பண்ணி அநுபவிக்க ஆரம்பித்தானும். இப்படி தம்முடம்பில் சபலனானவனுக்கு இத்தைக்கழித்துத் தன்னைப் பரமபதம் கொண்டு செல்லும்படிக்கு அவன் மிக விருப்பத்தைச் செய்யும் தம் மேனியின் தோஷத்தை "பொங்கைம்புலனும் பொறி ஐந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதிமானாங்கார மனங்களே" என்று தம் தேஹம் ப்ருக்ருதிப்ராக்ருதங்களான 24 தத்வத்தாலானது என்று அறிவித்து, அத்தைத் தவிர்க்கசொல்லியும் காமினியின் அழுக்குகக்கும் காமுகனைப்போலே எம் பெருமான் தோஷங்கண்டு மிக்க ஆதரத்தைப் பண்ணினான். ஆழ்வார் சரணம்புக்கு விடுவித்துக் கொள்கிறார். எம்பெருமானும் தனக்கு அநபித மானாலும் இவர் சொற்படி நடப்பவனாகையாலே இவர் தேஹத்தைக்கழித்துக் கொண்டு செல்ல இசைகிறான்" என்பது ஆசார்ய ஹ்ருதயத்தில் உபபாதநம்.

இதனை மாமுனிகள் "செஞ்சொற்பரன் தனது சீராரும் மேனிதனில், வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனின்—விஞ்சுதலைக் கண்டவனைக் காற்கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட, திண்டிறல்மாறன் நம் திரு" எனக்காட்டியருளுகிறார்.

அடுத்த திருவாய்மொழி "திருமாலிருஞ் சோலைமலை" என்றும் எட்டாவது:

இத்திருவாய்மொழியில் எம்பெருமான் கிருபை நிர்ஹேதுகம் என்பதை நிரூபிக்கிறார். இப்பதிகம் திருப்பேர்நகர் விஷயமானது. இத்திவ்யதேசத்தில் பிரகாசிக்கும் குணம் "அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வம் பெருநகரிலே பேர் பெற்றது" என்னும் ஆசார்ய ஹ்ருதய ஸூக்தியடியாக "ஸ்வாமித்வம்" என்பதாகத் தெரிகிறது. ஸ்வாமித்வ குணத்துக்கு ப்ரயோஜனம் ஒருவனைத் தனக்காக அங்கீகரிப்பதேயாம். ஆக எம்பெருமான் தான் ஸர்வஸ்வாமியாகையாலே சேதனனை ஏதாவதொன்றை வ்யாஜமாக்கி அங்கீகரிக்க அவகாசம் பார்த்திருப்பானும். ஆழ்வாரையும் "திருமாலிருஞ்சோலை" என்று சொன்ன மாத்திரத்தைக் கொண்டு அங்கீகரித்தானும், இதனையே இப்பதிகத்தில் ஆழ்வார் காட்டுகிறார்.

இன்னம் இத்திருவாய்மொழியில் ஆழ்வார் காட்டுமர்த்தங்களாவன: எம்பெருமான் பெரிய திருவடிமேல் வந்து ஆழ்வாரைப் பரமபதம் கொண்டு செல்லப் பதறத் தொடங்கினமையையும், இப்படி தம்பால் அவன் இப்போது பண்ணும் விருப்பத்தை இத்தனை நாள் பண்ணாமலிருக்கக் காரணத்தையும் இப்போது பண்ணக் காரணத்தையும் விசாரிக்கிறார்.

தம்மிடமுள்ளது "திருமாலிருஞ்சோலை மலை" என்று சொன்ன சொல் ஒன்றுமேதான். அதுவும் அம்மலைக்குண்டான ஏற்றமறிந்து சொன்னதன்று; மலைகளைச் சொல்லி வரும்போது அம்மலையின் பெயரைச் சொன்னத்தனையே பரம்; எம்பெருமான் எனக்கருள் செய்வானாய் நிற்கிறவன். இச்சொல்லை

http://acharya.org

வியாஜமாகக் கொண்டு அருள் செய்தானத்தனே. ஆனால் இப்படி நான் சொல்லும் படியாக என்னைப் படைத்து மேல் கார்யம் செய்தவனுமவனே. ஆகவே க்ருபை நிர்ஹேதுகம் எனத்தீர்மானித்தார். அப்போது ஆழ்வாருக்கு ஓர் சங்கை உண்டாயிற்று. இன்று இப்படி ஏதோவொன்றை வியாஜமாக்கி என்னையாதரிப்பவன் கீழ்க்கழிந்த பல ஜன்மங்களில் என்னை அநாதரித்ததற்கு ஹேதுவென்? என்று ஆராய்ந்தார்; தமக்கொன்றும் புலப்படவில்லை; அவனையே கேட்போம் என்று "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்; அன்றென்னைப் புறம்போகப் புணர்த்தது என் செய்வான்" என்று கேட்டார். எம்பெருமானும் ஆழ்வாருக்கு ஸமாதானம் சொல்லப் பலபடியாக யோசிக்கிறான். அவைகள் ஆசார்ய ஹ்ருதயத்தில் அழகாகக் காட்டப்படுகின்றன. அவைகளை இங்கு சுருங்கப் பார்க்கலாம். அதாவது "மாயையை மடித்து வானேதரக் கருதி கருத்தின் கண் பெரியனானவனை 'இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாத்ய நாதரஹேது சொல்' என்று மடியைப் பிடிக்க" என்பது அவ்விடத்தில் வாக்யம் அதாவது-எம்பெருமான் ஆழ்வாருக்குச் சரீரத்தை விடுவிப்பதாக அநுமதி பண்ணி, ஆழ்வாரும் உகந்து "மடித்தேன் மனை வாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை" என்று "ஸம்ஸாரத்தில் நிற்கைக்கடியான மாயையுண்டு-மூல ப்ரகருதி. அத்தை, கடிக்கவரும் ஸர்ப்பத்தைத் திருப்பி ஓட்டுமாபோலே திரிய விடுத்தேன்" என்று சுருக்கிப் பேசி "வானேதருவான் எனக்காய் என்னோடொட்டி" என்று தமக்குப் பரமபதத்தைக் தருவானாக ஒருப்பட்டு "கருத்தின் கண் பெரியன்" என்று உபயவிபூதி யோகத்தாலே தனக்கு வரும் கவனப் பிசகையும் தவிர்த்துக்கொண்டு ஆழ்வாரைப் பரமபதம் கொண்டுபோகையிலும், அர்ச்சிராதி வழியில் கொண்டு செல்ல ஆதிவாஹிகரை நியமிப்பதிலும், தான் முற்பாடனாய்க் கொண்டுபோகையிலும், பெருக்கப் பாரியா நிற்கிறவனை "இன்றிப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரித்த நீ அநாதிகாலம் என்னை உபேக்ஷித்ததற்கு ஹேது அருளிச்செய்ய வேணுமென்று மடியைப்பிடித்துக் கேட்க; எம்பெருமான் இதற்கு என்ன பதில் சொல்லலாம் என்று தனியே நின்று ஆலோசித்து அதில் தேறியவைகளை உத்தரமாகச் சொல்லமுடியாது, ஆழ்வார் கேள்வி, பதிலற்றது என்று கவிழ்தலையிட்டு நின்றானாம். அவன் சொல்ல நினைத்தவைகள்:

1. 'இந்திரியங்களுக்கு நீர் வசப்பட்டுத் திரிந்தீர்' என்று சொன்னால், எம்பெருமானே இந்திரியங்களை, நீ கொடுத்தது; உனக்கு வேண்டாதாரை உன்னை விட்டு அகற்றவேயாம்' என்பர்.

2. 'நீர் பெற்றிருக்கும் தேஹ ஸம்பந்தத்தாலே உமக்கு இந்திரியங்களுக்கு வசப்படுகை உண்டாயிற்று' என்று சொன்னால் 'அத்தேஹத்தைக் கொடுத்தவன் நீ தானே' என்பர்.

3. 'அந்த தேஹத்துக்கு அடி அநாதிகாலமாய் நீர் பண்ணிவைத்த புண்யாபுண்ய ரூபமான கர்மங்கள் தான்' என்றால் 'அந்தக் கர்மமும் நீயிட்ட வழக்கு' என்பர்.

http://acharya.org

4. கர்மத்தைச் செய்கையில் கர்த்ருத்வமும் பலமனுபவிக்கையில் போக்த்ருத்வமும் உம்மதன்றோ' என்னில் 'கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் நீயிட்ட வழக்காகையாலே நீயே கர்த்தா போக்தா' என்பர்.

5. 'உம்முடைய அஜ்ஞாநாந்யதாஜ்ஞாநாதிகளாலே உமக்குக்கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் வந்தன' என்றால் அந்த அஜ்ஞாநாதிகளும் நீயிட்ட வழக்கு; ஆகையாலே உனக்கு வேண்டாதாருக்கு அஜ்ஞாநாதிகளை விளைக்கை உன் தொழில்' என்பர்.

6. ஜீவனிடமுள்ள சைதன்யம் என்கிற அறிவு ஏதாவதொன்றையிட்டு நம்மைவிட்டு நீங்கும் வ்ரதத்துக்கு ஹேதுவாகிறது.

7. என் அந்தரங்க சரீரமான ஜீவனின் தோஷத்தைப் போக்குகை சரீரியான என்னுடைய கார்யம்.

8. நாம் ஸ்நேஹத்தோடு சேதனனை ரக்ஷிக்கைக்கடியான, நாராயணனாகையால் உண்டான அயாக ஸம்பந்தம் நிர்ஹேதுகம்.

9. அயாக ஸம்பந்தமடியாக எல்லாருக்கும் நன்மையை விரும்பும் ஸௌஹார்த்த குணத்தில் நமக்குக் குறை சொல்லமுடியாது

10. உலகையெல்லாம் அழித்தும் மறுபடியும் படைக்கும்போது ஒருவர் கர்மம் மற்றொருவருக்குத் தட்டாதபடி பிரித்து ஸ்ருஷ்டிக்கைக்கும், நமக்கு விகாரமின்றியிலேயிருக்கைக்கும் உறுப்பான ஜ்ஞாந சக்திகளுக்குக் குறையில்லை.

11. இவ்வாழ்வாரைப் பெற யத்நம் பண்ணுகையும் பெற்றால் உகக்கும் பலித்வம் நமக்கே உள்ளதொன்றாயிருந்தது.

12. 'நாம் வேண்டிற்றைச் செய்யும்படி நிரங்குச ஸ்வதந்த்ரன்' என்றும் 'ஸகல கார்யங்களிலும் ஸஹகாரிநிரபேக்ஷனாயிருப்பன்' என்று ஆழ்வார் நன்கறிவார்.

ஆகவே, இவர் பெரிய திருவந்தாதியில் "நெறி காட்டி" என்கிற பாட்டில் 'என்னை இதரோபாயங்களைக் காட்டி உன்னைவிட்டு அகற்றப்போகிறாயா' அல்லது உன்னுடைய விலக்ஷணமான திருமேனியை நீயே காட்டி உகப்பிக்கப்போகிறாயா? இத்தை அருளிச்செய்ய வேணும்" என்று கேட்ட கேள்விக்கும், அதே பெரிய திருவந்தாதியில் "அருகும் சுவடும்" என்கிற பாட்டில் உம்முடைய அருகு வந்தாலும் உம்முடைய சுவடறிதல் செய்யாதிருக்க, உம்மளவிலே ஸ்நேஹமானது அற மிக்கு வாரா நின்றது அதற்கடி அருளிச்செய்ய வேணும் என்றும் கேட்ட கேள்விக்கும் நம்மால் பதிலில்லாமையாலே இதுவரை பதில் சொல்லப்படவில்லை. அதைப்போன்றதே இக்கேள்வியும் என்று "என்னை அநாதி காலம் உபேக்ஷித்ததற்குக் காரணமென்ன? என்று ஆழ்வார் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லமுடியாதானாய் எம்பெருமான் தலை கவிழ்ந்து கால் நகத்தால் தரையைக் கீறிக்கொண்டு நின்றானும்.

http://acharya.org

ஆக திருமாலிருஞ்சோலைப் பதிகம் எம்பெருமானின் நிர்ஹேதுக க்ருபையையும் அதனடியாகச் சேதனர்களை அங்கீகரிக்க அவகாசம் பார்க்கும் ஸ்வாமித்வத்தையும் வெளியிடுகிறது.

இதனை மாமுனிகள் "திருமால் தன்பால் விருப்பம் செய்கின்ற நேர்கண்டு, அருமாயத்தன் அகல்விப்பானென் — பெருமால் நீ இன்றென்பால் செய்வானென் னென்ன இடருற்று நின்றான், துன்னுபுகழ் மாறனைத்தான் சூழ்ந்து" என்றருளிச் செய்தார்.

அடுத்து 9ஆம் திருவாய்மொழி "சூழ்விசும் பணிமுகில்"

பகவதநுபவத்துக்குத் தகுதியை விளைவிப்பன பரபக்தி, பரஜ்ஞாந, பரமபக்திகள் பரபக்தியாவது—'எம்பெருமானுடன் கூடுதலே ஸுகம், எமபெருமானைப் பிரிகையே துக்கம்' என்னும் தசை. பரஜ்ஞாநமாவது: எம்பெருமானையும் அவன் திருமேனியை யும் அவன் குணங்களையும் அவன் விபூதியையும் மிகத்தெளிவாகக் காணும் தசை. பரம பக்தியாவது: அப்படித் தெளியக்கண்ட எம்பெருமானை அப்போதே கிட்டி அநுபவிக்கப் பெறுவிடில் முடியும்படியான தசை.

இத்தசைகள் மூன்றில் இத்திருவாய் மொழிக்குக் கீழெல்லாம் ஆழ்வாருக்கு பரபக்தி தசையாம். இத்திருவாய்மொழியில் பரஜ்ஞான தசையாம். அடுத்த "முனியே நான்முகனில்" பரமபக்தி தசையாம்.

பரமயோகிகளுக்கு யோகபலத்தால் பிறக்கும் பரமபக்தி இவருக்கு எம்பெரு மானின் நிர்ஹேதுக க்ருபையாலே பிறந்தது. அதை இத்திருவாயமொழி அளவும்வர உபபாதித்தார். இனி இங்கிருந்து அநுபவிப்பதொன்றில்லாமையாலே பரமபதத் தேறப் போகவேணுமென்று மனோரதிக்கிற ஆழ்வாரை, ஆழ்வாரைக்காட்டிலும் சடக்கெனக்கொண்டு போகவேணும் என த்வரிக்கிற ஸர்வேச்வரன் பரமபதத்தில் அநுபவத்துக்குத் தகுதிபெற, இவர்க்கு மிகவும் விடாய் பிறக்கைக்காக, தன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை கண்ணால் கண்டாற்போலே விசததமமாக ப்ரகாசிக்கும்படி பண்ணியருளினான்; அதாவது—உபநிஷத்துக்களில் பிரஸித்தமான அர்ச்சிராதி மார்க்கத் தையும் சரீரத்தைவிட்டுப் பிரியும்போது உண்டாகும் கஷ்டங்கள் ஆறும்படி, தான் வந்து முகம்காட்டும் படியையும் "தொழுதனர் உலகர்கள்" "எதிரெதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர்" "மாதவன் தமரென்று வாசலில் வானவர் போதுமின் எமதிடம் புகுதுக வென்றனர்" என்கிற பாட்டுக்களில் காட்டியபடி வழியிலுள்ளவர்கள் பண்ணும் ஸத்காரங்களையும் "வடிவுடை வானவர் வைகுந்தம் புகவே" என்று அவ் வழியாலே போய்ச்சேரும் பரமபதத்தையும், "முடியுடை வானவர் முறைமுறை எதிர் கொள்ள" என்று நித்யஸூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், "வந்தவர் எதிர்கொள்ள" என்று பிராட்டியும் வைகுந்தநாதனும் எதிரே வந்து ஆதரிக்கும்படியையும், "மாமணி மண்டபத்து அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை" என்று பரமப்ராப்யரான நித்ய ஸூரிகள் நடுவேதாம் ஆனந்தத்தால் பூர்ணராயிருக்கிறபடியையும், காட்டியருளக்கண்டு

http://acharya.org

ப்ரீதியுடையராய் அத்தை அந்யாபதேசத்தாலே அநுபவிக்கிறார். இங்கு அந்யாபதேசமாவது-தமக்கவன் பண்ணிக்கொடுத்த பேற்றை ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லாரும் பெற்றாராகப் பேசுதலேயாம். இப்படி ஆழ்வார் காட்டினதற்கு ப்ரயோஜனம் இங்குள்ளார் நமக்கும் ஆழ்வார் பெற்றபேறு தப்பாது என்றிருக்கைக்காக'. ஆக இத்திருவாய்மொழி அர்ச்சிராதி மார்க்கத்தையும் அதில் ஸத்காரத்தையும் சொல்லுகிறது. இங்கு ஆசார்ய ஹ்ருதயம் "அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம்போலே ஏறப்பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிற மேகஸமுத்ர பேரீகீத காஹள சங்காசீஸ்ஸ்துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே" என்பது. இதுக்குக் கருத்தாவது: கீழ்த் திருவாய்மொழியில் ஆழ்வார் எம்பெருமானைக் கேட்ட கேள்விக்கு எம்பெருமான் பதில் சொல்லமுடியாதானாய், கவிழ் தலையிட்டுக் கால்கட்டை விரலால் தரையைக்கீறி நின்று என்செய்யலாம் என யோசித்தானும். உடனே ஒன்று நினைவுக்கு வந்ததாம். விவாஹம் செய்விக்கும் உபாத்யாயருக்கு மந்த்ரம் மறந்தால் மேளம் கொட்டச்செய்து அதைக்காட்டாமல் மறைக்குமாபோலே எம்பெருமானும் ஆழ்வாரைக் கொண்டு செல்லும் வழியான அர்ச்சிராதி கதி ப்ரயாணத்துக்கு, ராஜபுத்ரனையழைத்துச் செல்லும்போது வாத்ய கோஷம் முதலானமையை உண்டாக்குமாபோலே ஸமுத்ரம், மேகம் முதலானவையை முழங்கச் செய்தானும்; அவைகளே சூழ்விசும் பணிமுகில் திருவாய்மொழியால் பேசப்படுகிறது என்றருளிச் செய்கிறார். அவன் காட்டியவை மேக த்வநி ஸமுத்ர த்வநி பேரீ வாத்யத்வநி காஹளத் வநி சங்கத் த்வநி ஆசீர்வாதத் த்வநி முதலிய கோலாஹலங்கள். ஆழ்வாரும் எம்பெருமான் உத்தரம் சொல்லமாட்டாமல் திகைக்கிறான் என்றறிந்ததும் அவற்றை விட்டிட்டு அவன் காட்டக் கண்டவைகளுக்குப் பாசுரமிட்டாரரம். இவ்வர்த்தத்தை மாமுனிகள் :

"சூழ்ந்துநின்ற மால்விசும்பில் தொல்லைவழிகாட்ட
ஆழ்ந்தநனை முற்றுமநுபவித்து—வாழ்ந்தங்
கடியருடனே யிருந்தவாற்றை யுரை செய்தான்
முடி மகிழ்சேர் ஞானமுனி" என்றருளிச் செய்தார்.

அடுத்த திருவாய்மொழி "முனியே நான்முகனே" என்கிற பத்தாவது: இது ஆழ்வாரின் பரமபக்தி தசையிலுண்டான ஆர்த்தியைக் காட்டுகிறது.

கீழில் திருவாய்மொழியில் ஆழ்வாரின் அநுபவம் "அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை" என்று பரமபதத்தில் நித்யமுக்தர்களின் திரளிலிருந்து பகவதநுபவம் பெற்ற நிலையது. ஆனால் அவ்வநுபவமும் மனதிலுண்டான அநுபவமே தவிர நேரிலுண்டானதன்று. அவ்வநுபவத்தை நேரில் பெருததாலும், இஸ்ஸம்ஸாரத்தில் தேஹத்தோடிருத்தலைக் கண்டும், மேருமலையின் சிகரத்தில் துயரமற்றவனாய் இன்பமே பெற்றிருந்தவன் துயரமே நிறைந்ததாய் கரையேற முடியாத மிகவும் ஆழமான பாதாளத்தில் விழுந்தால் படுமாப்போலே மிகவும் துயருடையராய். அந்தமில் பேரின்பத்தைப் பெறுகைக்காகக் கீழ்த் திருவாய்மொழியில் மானஸிகமாகத் தம் தலைமேல் பெற்ற எம்பெருமானின் திருவடிகளைக் கட்டிக்கொண்டு போகாமல் தடுத்து "திருவாணை நின்னாணை கண்டாய்" என்று அவனுக்கும் மறுக்கவொண்ணாதபடி ஆணையிட்டார். ஆழ்வார் இப்படி ஆணையிட்டவாறே ஆழ்வாரின் நெஞ்சைச் சோதிக்கைக்காகவும் ஆழ்வாரின் ஆர்த்தி மிக்க சொல் கேட்கையிலுள்ள குதூஹலத்தாலும் எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி "நீர் நமக்கு அத்யந்த பரதந்த்ரர்; அயோத்யையில் பரதாழ்வானைப்

http://acharya.org

போலே அசோகவனத்தில் சீதா பிராட்டியைப்போலே, வைத்தவிடத்திலிருக்க வேண்டாமா? நம்மைப் பெருதபோதும் வருந்தியாகிலும் பாடாற்ற வேண்டாமா? நீர் இடும் ஆணை பெறுமாணையல்ல. பெருவாணை காணும், அதாவது நீர் ஸ்வாதந்த்ர்யம் கொண்டு விட்டீர் என நான் வெறுத்து உம்மைக் கைவிட நீர் நம்மைப் பெருமல் பண்ணும் ஆணை என்முன்.

ஆழ்வார் இது பர்யந்தம் தம்மோடு எம்பெருமான் மேல்வீழ்ந்து கலந்து தமக் குண்டாக்கின ஆற்ருமையைப் பலபடியாக உபபாதித்து தாம் இட்ட ஆணை ஆற்ருமை யின் கனத்தால் வந்ததாகையாலே பெறுமாணையே. பரதாழ்வானும் பிராட்டியையும் பிரிவில் பாடாற்றினும், இளையபெருமாள் "நில் என்ன முடிவன்" என்ருற்போன்றது. தம்மிலே. அந்த பரதாழ்வானும் 14 வருஷம் நாளிட்டுக்கொடுத்தபடியால் பாடாற்றினரே தவிர இனி என்றும அயோத்யை திரும்போம் என்று சொல்லியிருந்தால் பாடாற்றி யிருப்பாரோ. பிராட்டியும் "ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா லக்ஷ்மணஸ்யச தமத: நாத்யர்த்தம் க்ஷுப்யதே தேவீ கங்கேவ ஜலதாகமே" என்று பெருமாளின் ஆச்ரித ரக்ஷண ஸ்த்தைர்யத்தையும் இளையபெருமாளின் புருஷகார பலத்தையும் நம்பி அசோகவனத்தில் அவ்வளவுபட வில்லையாகையாலே பாடாற்றினள். அடியேனும் இதுவரை ஓர் விதத்தில பாடாற்றியே வந்திருக்கிறேன். கீழ் என்னுல் "இனி தரிக்கமாட்டேன் இனி தரிக்க மாட்டேன்" என்று 19 "இனி" சொல்லப்பட்டது. இப்போதும் "இனி நான் போக லொட்டேன் ஒன்றும் மாயம் செய்யேல் என்னை" என்று ஓர் "இனி" சொல்கிறேன். இதை மற்றை இனிகளைப்போலே தள்ளி ஏதாவதொரு குணத்தைக் காட்டி என்னைத் தரிக்கப் பண்ணின முன்புற்றை மாயத்தைச் செய்யாதே கொள்', எனத் தம்மார்த்தியை தெரிவிக்கிருர்.

பெருவாணை அல்லவாக்கினபடியை "கூசம் செய்யாது கொண்டாய்" என்று தொடங்கி "முதல் தனி வித்தேயோ" என்கிற பர்யந்தம் உபபாதிக்கிருர். இதனை ஆசார்ய ஹ்ருதயத்தில் 1. கூசம் செய்யாத செய்திப்பிழை 2. பற்றுக்கொம்பறறகதி கேடு 3. போரவிட்ட பெரும்பழி 4. புறம்போனல் வருமிழவு 5. உண்டிட்ட முற்றீம்பு 6. அன்பு வளர்த்த அடியுரம் 7. உயிருறவு, முதலளவு துரக்கைகளாலே பெருவாணையல்லவாக்கின பேரவா" எனககாட்டியருளுகிருர். அதாவது—என் தாழ் வைப்பாராமல் என்னைஎன்ஏற்றுக் கொண்டாய். அதனுல் உன்னதன்மற செய்திப் பிழை, 2. கொடி, கொள்பொம்மையொழிய தரிக்கமாட்டாதாற்போலே என் ஆத்மாவுககு ஜீவநஹேதுவாயிருப்பதொன்று உன்னையொழிய வேறு காண்கிறிலேன், ஆகையால் நான் அகப்பகதி. 3. என் காரியம் நீ செய்வதாக ஏறிட்டுக்கொண்டு உன் பக்கலில் நின்றும் பிரித்து உன் குணங்கள் நடையாடாத ஸம்ஸாரத்திலே தள்ளி உபேக்ஷித்தாய் இது உனக்குப் பரிஹரிக்கமுடியாத பெரும்பழி 4. அநந்யகதியான என்னை உன் பக்கலி னின்றும் பிரித்து உபேக்ஷித்து என்னை என்கையில் காட்டித்தந்தால் நான் இழவை யன்றோ தேடிக்கொள்வேன் 5. என்னையும் என் சரீரத்தையும் மனதையும் விடாமல் இது பர்யந்தம் அநுபவித்தாயன்றோ, இனி குறையையும் அநுபவிக்கப்பார். இப்படி முன்பு உண்டது நீ முன்பு செய்த தீம்பன்றோ. 6. நீ பெரியபிராட்டியார் பக்கல

http://acharya.org

கொண்ட வன்பாலே அவள் பரிகரமான என் பக்கல் மிக்க அன்பு கொண்டவனல்லையோ நீ. அந்த:புர பரிகரம் என்று தானே என்னிடம் உன் அன்பு வளர்ந்தது. ஆக என்னிடத்தில் உனக்குண்டான அன்புக்கு அடியுரமுண்டே. 7. உயிரைவிட்டு உடல் தரிக்கவற்ருே. எனக்கும் உனக்குமுண்டான ஸம்பந்தம் சரீராத்மபாவமல்லவோ?

ஆக இக்காரணங்களால் நானிட்டது பெருவாணை அன்றுகிடாய் என்று தம் மாணையை பெறமாணையாகக் காட்டினர், தாம் எம்பெருமானிடம் கொண்ட அவாவை யிட்டு.

இந்த அவாவுக்கு "சூழ்ந்தகன்ருழ்ந்து" என்று சித்து, அசித்து, ஈச்வரன் என்கிற தத்வங்கள் மூன்றைக்காட்டிலும் பெரியது என்று அளவைக் காட்டினர்.

இப்படி எம்பெருமானிடம் தாம்கொண்டிருக்கும் அவாவைக் காட்டின ஆழ்வாருக்கு எம்பெருமான் தான் ஆழ்வாரிடம் கொண்டிருக்கும் அவாவைக் காட்டினன். அது இவரவாவை விழுங்கிவிட்டதாம். 'எம்பெருமானே' நான்தான் உன்னிடம் மிக்க அவா கொண்டிருந்ததாக நினைத்திருந்தேன்; நீ என்னிடம் கொண்டிருக்கும் அவா அதனிலும் பெரிது, அவ்வவா தீரும்படியாக, 14 வருஷம் பிரிந்திருந்த பரதாழ்வானை மடியிலிட்டு உகந்தாற்போலே, என்னோடு கலந்தாயே; இதென்ன குணம் என்று கொண்டாடி, தம்மை எம்பெருமான் தனக்காக்கிக் கொண்டமையை "அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்" என்று பேசி முடிக்கிருர்.

இதனை ஆசார்ய ஹ்ருதயத்தில் "பேரவா குளப்படியாம்படி கடல்போன்ற ஆதரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிருர் பத்தாம் பத்தில்" என்று காட்டியருளுகிருர். அதாவது ஆழ்வார் அவா—குளப்படி—எம்பெருமான் அவா கடல். இப்பத்தில் ப்ரதிபாதிக்கப்படும் "ஆர்த்திஹரத்வம்". அக்குணமுடைய எம்பெருமான் ஆழ்வாரின் ஆர்த்தியைப் பரிஹரித்தான். இதுதான் பத்தாம் பத்தின் கருத்து என்பது ஆசார்ய ஹ்ருதயத்தில் வ்யக்தம். இதுதனை மாமுனிகள்:

"முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கித்
தனியாகி நின்று தளர்ந்து—தனியாம்
பரமபத்தியால் நைந்து பங்கயத்தாள்கோனை
ஒருமையுற்றுச் சேர்ந்தா ருயர்ந்து" என்று அருளிச் செய்கிருர்.

பத்தாம் பத்தின் ஸங்கரஹம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம். எம்பெருமானர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

http://acharya.org

ஆசார்யஹ்ருதயம்

முடிவுரை

உருமையோடே உற்றேனுக்கா தொழிந்தது
காடுதிருந்த நச்சுப் பொய்கை யாகாமைக்கு
ப்ரபந்தம் தலைக் கட்ட வேர்ச் சூடுவார் மண்பற்றுப்போலே
யென்றுமவற்றிலும் இனி இனியென்று இருபதின் கால்
கூப்பிடும் ஆர்த்த்யதிகார பூர்த்திக்கென்றுமது முக்யம்.

கமலக் கண்ணனென்று தொடங்கிக் கண்ணுள் நின்றிறுதி
கண்டேன் என்ற பத்தும் உட்கண்ணாலேயாய் காண்பானவா
வுதல் அதிலிரட்டியாகையாலே கண்டு களிப்பளவும்
பரஜ்ஞாந கர்ப்ப பரபக்தி.

இருந்தமையென்றது பூர்ண பரஜ்ஞாநம்.

முடிந்த வவா வென்றது பரமபக்தி.

இவை ஜ்ஞாந தர்சந ப்ராப்த்யவஸ்த்தைகள்.

அவித்யா நிவர்த்தக ஜ்ஞாந பூர்த்தி ப்ரத பகவத்
ப்ரஸாதாத் மோக்ஷலாபமென்கை மயர்வற
வீடுபெற்ற என்ற ப்ரபந்தைகார்த்த்யம்.

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவரங்கம் பெரியகோயில் திவ்ய தம்பதிகள்

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வாரும் எம்பெருமானாரும்

திருவரங்கத்தமுதனார் நம்மிராமாநுசனைப் புகழும் இராமாநுச நூற்றந்தாதியின் ஆரம்பத்தில் "மாறனடி பணிந்துய்ந்தவன்" என்று புகழ்கிறார். யதிராஜ விம்சதி ஆரம்பத்தில் மணவாளமாமுனிகளும் இராமாநுசனை "பராங்குச பாதபக்தம்" என்று ஏத்துகிறார். ஆழ்வார் திருநகரியில் ஆழ்வார் பாதுகைக்கு "இராமாநுசன்" என்றே வ்யவஹார முள்ளது. ஆழ்வார் பாசுரங்களை வளர்த்த இதத்தாய் இராமாநுசன் என்றநுபவிக்கிறார் ஸ்ரீபராசரபட்டர்.

ப்ரமேய பூதனை கண்ணனுக்கும் ப்ரமாண பூதமான திருவாய்மொழிக்கும் பலவாறாக ஸாம்யத்தை நிர்வஹித்துள்ளனர் நம் பெரியோர். எங்ஙனே யென்னில் இங்ஙனேயாகும்:—

கண்ணனுக்குத் தாய்மார் இருவர். தேவகியும் யசோதையுமாவர். அவ்விருவர்—"ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர" என்றிறே ஆண்டாள் அருளிச் செய்தாள்.

திருவாய்மொழிக்கும் தாய்மார் இருவராவர். "ஈன்ற முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்றிறே பட்டர் அருளிச் செய்தார். கண்ணன் சுலபனாயும் துர்லபனாயுமுளன். "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர்களுக்கரிய வித்தகன்" என்றிறே ஆழ்வார் அருளிச் செய்தார். திருவாய்மொழியும் அப்படியே. ஸாதுபரித்ராணத்துக்கும் துஷ்ட நிரசத்துக்குமிறே கண்ணனுடைய திருவவதாரம். திருவாய் மொழியும் "நண்ணாவசுரர்நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த" விறே அவதரித்தது. இப்படிப்பலபடிகளால் ப்ரமேய பூதனை கண்ணனோடு ஸாம்யம் பெற்றுள்ள திருவாய் மொழியான ப்ரமாணத்துக்கு வளர்த்த இதத்தாய் இராமாநுசன். தம்முபதேசத்தாலும் தம்முடைய நிர்வாகங்களாலும் தம்முடைய சிஷ்யர்கள் மூலமாக இட்டருளிய வ்யாக்கியானங்களாலும் திருவாய்மொழியை வளர்த்த இதத்தாய் இராமாநுசனிறே. ஆளவந்தாருடைய ஸாக்ஷாத் சிஷ்யரான திருமாலையாண்டானிடத்து அடிபணிந்து திருவாய் மொழியின் அர்த்தங்களை கேட்டார் இராமாநுசர். ஆளவந்தார் அருளிச் செய்ததாக திருவாய்மொழிக்கு திருமாலையாண்டான் அருளிச்செய்த நிர்வாகங்களை செவி மடுத்த நம்மிராமாநுஜன் அந்த நிர்வாகங்களுக்கு மேலான அர்த்த நிர்வாகங்களை அனுக்ரஹித்திருப்பது நாட்டில் பிரசித்தமிறே அவற்றை ஈண்டு நாம் அனுபவிப்போம்.

1 துயரறு சுடரடி :—நம். (1. 1. 1)

துயரறுக்குமென்று முன்புள்ள முதலிகள் அருளிச்செய்யும்படி ஸமஸ்த துக்காபநோதன ஸ்வபாவமானதிருவடிகள். ஸமஸ்தாத்மாக்களுடையவும் துக்கத்தை போக்குகையே ஸ்வபாவமான திருவடிகள்,

ஓள 1

http://acharya.org

 Released by Maran's Dog ,Toronto, Canada

" துயராறு சுடரடி" என்று எம்பெருமானார் அருளிச்செய்யும்படி. வ்யஸநேஷு மனுஷ்யாணும் ப்ருசம் பவதி துக்கித: என்ருல் துக்க நிவ்ருத்தியும் அவனதாய் இருக்குமிறே. இவர் துயரறத் தான் துயர் தீர்ந்தாருய் இருக்கை. இத்தால் இவர் மயர்வற அவன் துயரற்றபடி.

2. வீடுமின்ப்ரவேசம்:—

இத்திருவாய் மொழி தன்னை ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் ப்ரபத்தி விஷயமாக்கி நிர்வஹித்துக் கொண்டு எம்பெருமாருைம் அப்படியே அருளிச்செய்துகொண்டு போந்து பாஷ்யம் தலைக்கட்டின பின்பு பக்தி விஷயமாக அருளிச் செய்து கொண்டு போருவர். பின்பு எம்பாரும் அப்படியே யருளிச் செய்தார்.

3. கள்வர்க்கு: நம். 1. 4. 3

அப்படிப்பட்ட வஞ்சகர்க்கு என்பர் ஆளவந்தார், அன்று அச்செயல் செய்ததும் அக்குண சேஷ்டிதங்களாலே என் நெஞ்சையபஹரித்து ஈடுபடுத்துகைக்காகவிறே என்பர் எம்பெருமானார் (24000 படி).

ஈட்டில்:—வஞ்சகர்க்கு என்று திருமாலையாண்டான் நிர்வஹிக்கும்படி. எம்பெருமானுர்—ஒன்றை நினைத்து ஒன்றைச் செய்தவர்க்கு என்று அருளிச் செய்வர். மாவலியை வஞ்சித்ததும் என்னை வசிகரிக்கைகாக. கீழ் தான், "பெருநிலம் கடந்த நல்லடிப்போது" என்றிறே ஆசைப்பட்டதும். "உலகம் கொண்ட அடியன் அறிவருமேனி மாயத்தனுகிலும் கொடியவென் நெஞ்சம் அவனென்றே கிடக்கும்" என்றும் "அன்றொருகால் வையமளந்தபிரான் வாரான் என்று ஒருகால் சொல்லாதுலகு" என்றுமிறே இவர் கிடப்பது. திருமங்கையாழ்வாரும் "முன்னம் குறளுருவாய் மூவடி மண்கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன் பயந்தேன்" என்று. இவர்களெல்லாரும் ஈடுபடுவது இச்செயலுக்கிறே.

4. தோற்றேம்—நம். 2. 1. 7.

கீழும் மேலும் போருகிறபடி யொழிய சப்தஸ்வாரஸ்யத்தைப் பற்ற எம்பெருமானுர் அருளிச் செய்து போருவது ஒன்று உண்டு. அம்மங்கியம்மாளும் அத்தையே நிர்பந்தித்து போரும். அதாகிறது—தான் பிரிவாற்ருதார் அனேகர் கூடக் கட்டிக்கொண்டு கூப்பிடா நிற்க, இருள் வந்து முகத்தை மறைக்க, அத்தைப் பார்த்து "ஆற்ருமைக்குப் போக்குவிட்டு தரிக்கவொட்டாதே நீ வந்து நலியக்கடவையோ" என்கிருர்.

5. இனிவந்து கூடுவனே:—நம். 3. 2. 1.

இனி வந்து கிட்டுகை என்று ஒரு பொருளுண்டோ என்று நிராசராகிருர் என்று முன்புள்ள முதலிகள். எம்பெருமானுர்—நிராசராருல் பின்னை முடிவாரொருவர். ஒன்பதாம் பாட்டில் நிராசராக, பத்தாம் பாட்டில் அவன் வந்து ஸமாதானம் பண்ணிஞுகை அமையும் என்றருளிச் செய்வர்.

http://acharya.org

6. ஆவிசேர் இத்யாதி :—நம். 3. 4. 10.

ஆவியுண்டு ப்ராணாச்ரயமான சரீரம், அத்தோடு சேர்ந்திருந்துள்ள உயிருண்டு. ஆத்மா, அதின் பக்கல் அந்த சரீரகதமான பால்ய யௌவநாதிகள் ஒன்றாலும் ஒரு ஸம்பந்தமும் இல்லையாம்படியாக அநுஸந்திக்கிற அநுஸந்தாநமானது அந்த ஆத்மாவுக்குக் கூடா நின்ற பின்பு அப்பொருள் அவனையும் கூடத்தட்டில்லை. இங்ஙனன்றிக்கே இதுக்கு வேறேயும் இரண்டு பொருள் சொல்லுவர்கள் என்று அருளிச் செய்வர். இவன் பக்கலிலே பக்தியுண்டாகில் அவனைக் கிட்டலாமென்றும், புறம்புண்டான உபாயாந்தரங்களிலுண்டான பற்று அடையவிட்டு அவனையே பற்றில் அவனைக் கிட்டலாமென்றும், அன்றியே அந்திம ப்ரத்யயம் உண்டாமாகில் அவனைக் கூடலாம் என்றுமாம். இத்தை எம்பெருமானார் கேட்டருளி கீழ் இவ்வியாப்தியைச் சொல்லி நின்ற பின்பு இனி வியாப்ய வஸ்துகதமான தோஷங்கள் வ்யாபகனானவனுக்குத் தட்டாதென்றுமிடம் அவச்யம் சொல்லவேணும். ஆன பின்பு இத்தையே சொல்லிற்றாக வமையுமென்று அருளிச் செய்வர்.

7. " அடிக்கீழ் புகநின்ற செங்கண் மால்" :—நம். 3. 6. 6.

ஹிரண்யன் பக்கல் சீற்றம் செல்லா நிற்க, ப்ரஹ்லாதாழ்வானுக்கு கிட்டலாயிருந்தபடி எங்ஙனே என்று எம்பெருமானாரைச் சிலர் கேட்க, ஸிம்ஹம் ஆனை மேலே சீறினாலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படியிருக்குமிறே, என்றும், ஆச்ரித வாத்ஸல்யத்தாலே அவர்கள் விரோதிகள் மேலே சீறின சீற்றமானால் பின்னை அவர்களுக்கு அணைய வொண்ணாதபடி இருக்குமோ என்றும் அருளிச் செய்தார்.

8. தத்பக்தைர் வாஸமாகம : (நம். 3. 7. ப்ரவேசம்) என்கிறவிடத்தில் 'வா" என்றத்தை அவதாரணத்திலேயாக்கி உத்தேச்யம் தானே இங்கே ஸித்திக்குங் காண். என்று எம்பெருமானார் அருளிச்செய்த வார்த்தை. ப்ராப்யத்தில் ப்ரதமாவதி பகவச்சேஷத்வத்தளவிலே நிற்கை—சரமாவதி பாகவதசேஷத்தளவிலே வருகை (கச்சதா) இதுக்கு எம்பெருமானார் " பயிலும் சுடர் ஒளியிலும்" "நெடுமாற்கடிமையிலு" அர்த்தத்தை ஸ்ரீ சத்ருக்னாழ்வான் அனுஷ்டித்துக் காட்டினான் என்று அருளிச் செய்வர். இவ்வர்த்தத்துக்கு அடி திருமந்த்ரமாயிற்றிறே. அது மூலமாக அனுஷ்டிக்கவே இதில் சொன்னதை செய்ததாமிறே.

9. சென்று இத்யாதி :—நம். 5. 2. 6.

சென்று அவர்களைத் தொழுது உஜ்ஜீவியுங்கோள் என்று பணிக்கும் திருமாலையாண்டான். அவர்களோடே சென்று ஸர்வேச்வரனைத் தொழுது உஜ்ஜீவியுங்கோள் என்று அருளிச் செய்வர் எம்பெருமானார்.

http://acharya.org

10. வலையுள்ளகப்பட்டேன் :—நம். 5.3.6.

அப்பொதுவானதிலன்றிக்கே அவன் என்னைக்குறித்து நோக்கின நோக்கிலும் ஸ்மிதத்திலுமன்றோ நான் அகப்பட்டது. ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் வலையாக அபிநயித்துப் பாடாநிற்க, திருக்கண்களைக் காட்டியருளினார் எம்பெருமானார். "கமலக் கண்ணனென்றும் நெடுங்கயிறு" என்றக் கடவதிறே. அநுகூலம் போலேயிருந்து தப்பாதபடி அகப்படுத்திக் கொள்ளும் நோக்கிலே அகப்பட்டேன்.

11. நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் :—நம். 5. 10. 6.

என்று ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் பாடாநிற்க "இவையெல்லாம் தொட்டிலிலே" என்றருளிச் செய்தார் எம்பெருமானார். தொட்டிற் பழுவைப் பிடித்துக் கொண்டு நிற்கும்படியும் தரித்து நிற்கமாட்டாமை விழுந்திருக்கும்படியும் அது தான் பொறுக்கமாட்டாமை சாய்ந்து கிடக்கும்படியைச் சொல்லுகிறது.

12. புகுமூர் :—நம் 6. 7.1.

எம்பெருமானார் தெற்கே எழுந்தருளா நிற்க எதிரே வருகிறாள் ஒரு பெண் பிள்ளையைக் கண்டு "எங்கு நின்று" மென்ன "திருக்கோளூரில் நின்றும்" என்ன, அவ்வூரில் புக்க பெண்களும் போகக்கடவரா யிருப்பார்களோ என்று அருளிச் செய்தார்.

13. மூவுலகு இத்யாதி :—நம். 7. 2. 10.

"மூவுலகாளியே கடிகமழ்க் கொன்றைச் சடையனே நான்முகக்கடவுளே என்றும் வடிவுடைவானோர்க்குத் தலைவனே என்றும்" என்று திருமாலையாண்டான் வையதிகரண்யமாக்கி நிர்வஹிக்கும். என்றும்-என்னுமது என்று மவனைப். எம்பெருமானார் கேட்டருளி ஸாமாநாதிகரண்யத்தாலே அருளிச் செய்தருளினார். த்ரைலோக்யத்திற்கும் கடவனான இந்திரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவ்வனுடைய அதிகாரத்தை நிர்வஹிக்கிறவனே என்றும். பரிமளத்தையுடைத்தான கொன்றையைச் சடையிலே யுடைய ருத்திரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுடைய பதத்தை நிர்வஹிக்கிறவனே என்றும். அவர்களோடு இவ்வருகுள்ளாரோடு வாசியற எல்லாருக்கும் நிர்வாஹனாயிருக்கிற சதுர்முகனாகிற தேவதைக்கு அந்தர்யாமியானவனே என்றும்.

14. இதுவல்லால் :—நம் 8. 7. 3.

இதுக்குத் திருமாலையாண்டான் பணிக்கும் படி :—நாட்டார் ஐச்வர்யங்களில் தலையாகச் சொல்லுவது த்ரைலோக்யைச்வர்யத்தையிறே. அதுவும் எனக்கு ஒரு சரக்கல்ல என்கிறார் என்று. எம்பெருமானார் அருளிச்செய்யும்படி. என்னுடைய இருதயத்திலே புகுந்து எழுந்தருளி இருக்கிற யிருப்பொழிய வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல இருக்கு மிருப்பையும் தனக்கு ஐச்வர்யமாக நினைத்திருக்குமோ என்று பார்த்தால் அதுவும் ஒரு சரக்காக நினைந்திருக்கிறிலன் என்று. இதுவே ப்ரகரணத்திற்கு சேருவது.

http://acharya.org

15. அடியேனுள்ளான் :—8. 8. 2.

எம்பெருமானார் நியமனத்தாலே திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ஆறு மாஸம் ஆழ்வான் ஸேவித்து நின்று, போரப்புக்கவாறே, ஆழ்வான்! ஆழ்வார் "அடியேனுள்ளான்" "என்றபடி கண்டாயே என்ன, க்ருதார்த்தனானேன் என்று போந்தானும்".

16. புகழும் பொருபடை நம். 8. 9. 3.

"ஹேதிபி: சேதநாவத்பி: உதீரிதஜயஸ்வநம்" என்று திவ்யாயுதங்கள் அவனைப் புகழும்படியாதல், சத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்கிறபடியே கையுமாயுதமுமாய்ப் பொருத்த மிருந்தபடி யென் என்று சத்ருக்கள் புகழும் படியைச் சொல்லுகிறது என்று எம்பெருமானார் அருளிச் செய்யும்படி.

17. ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது :—நம். 9. 6. 9.

நான் பட்ட பாட்டை நித்ய ஸூரிகளே தான் பட்டார் உண்டோ. பகவத் குணங்களுக்கு அபூமியாயிருக்கிற ஸம்ஸாரத்திலே நான் பட்ட பாட்டை நித்ய விபூதியிலே உள்ளவர்கள் தான் பட்டார்களோ என்கிறார். இங்கு எனதுயிர் பட்டது அங்கு ஆருயிர் பட்டது. என்று எம்பெருமானார்.

18 தெளிவிசும்பு :—நம். 9. 7. 5.

பரமபதம் தேசமாயிருக்க அத்தைக் காற்கடைக் கொண்டு என் நெஞ்சிலே நித்ய வாஸம் பண்ணுகிறவன் என்று சிற்றுட்கொண்டான் பணிக்கும். பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை என் நெஞ்சிலே பண்ணி வர்த்தியா நின்றான் என்று எம்பெருமானார்.

19. குறுக்கும் வகை உண்டு கொலோ :—நம். 9. 8. 1.

குறுக்குமென்று அத்தேசபாஷை. எம்பெருமானார் திருவடி தொழ எழுந்தருளா நிற்க, திருநாவாய் எத்தனையிடம் போரும் என்று எதிரே வருகிறார் சிலரைக் கேட்டார். "குறுக்கும்" என்றார்களாய், அத்தைக் கேட்டு, இப்பாஷையாலே யருளிச் செய்வதே ஆழ்வார் என்று போர வித்தராயருளினார்.

20. அது நமது விதிவகையே:—நம். 10. 6. 1.

அது நமது பாக்யாநு குணமாகவிறே என்று இதுக்குப் பூர்வர்கள் நிர்வகிக்கும்படி. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, இத்திருவாய் மொழியில் மேலோடுகிற ரஸத்தோடு சேராது. நாம் விதித்தபடியே செய்வானாயிருந்தான். என்கிறார் என்றருளிச் செய்வர்.

http://acharya.org

21. மடித்தேன் :—10. 8. 3.

எம்பெருமானுர் உலாவியருளுகிறவர் முடியப்போகாதே நடுவே மீண்டருள எம்பார் கதவை யொருச்சரித்து திருமாலிருஞ்சோலை யாகாதே திருவுள்ளத்தில் ஓடுகிறது என்ன, 'ஆம் அப்படியே' என்றருளிச் செய்தார்.

"எங்கள் கதியே இராமாநுச முனியே
சங்கை கெடுத்தாண்ட தவராசா! பொங்குபுகழ்
மங்கையர் கோனீந்த மறையாயிர மனைத்தும்
தங்கு மனம் நீ எனக்குத்தா" என்றும்,
"ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமாநுசமுனிதன்
வாய்ந்த மலர்ப் பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும்
பேராத உள்ளம் பெற" என்றும்

அடியார்கள் எம்பெருமானுரைப் பிரார்த்திக்கிருர்கள். எம்பெருமானு ரருளாலே அருளிச் செயல் அவகாஹனம் அமையுமென்றபடி.

வான் திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல்
ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்—ஈன்ற
முதல் தாய் சடகோபன்—மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமாநுசன்.

எம்பெருமானுர் திருவடிகளே சரணம்

---

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ. உ. வே. வித்வான் வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீ ராமதேசிகாசார்யஸ்வாமி
ஒப்பிலியப்பன் ஸந்நிதி

ஸ்ரீஸ்வாமி திவ்ய சரித்ரம்

(1) திருவையாறு கல்லூரியில் ந்யாயசிரோமணி

(2) மதுரை தமிழ்ச் சங்கம் மஹா வித்வான் ஸ்ரீ. உ. வே. திருநாரண அய்யங்கார் உபகாரத்தால் தமிழ் வித்வான் பரீக்ஷையில் I Rank

(3) திருத்தகப்பனுரிடத்தில் அருளிச் செயல் அத்யயநம்.

(4) திருத்தகப்பனுர் ஜகத்ப்ரஸித்தரான "நவநீதம் ஸ்வாமி" என்னும் வங்கீபுரம் நவநீதம் க்ருஷ்ணமாசார்யஸ்வாமி.

(5) திருத்தகப்பனுரிடத்திலேயே பஞ்ச ஸம்ஸ்காரம். க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம். பரந்யாஸம்.

(6) மதுரையில் 20 ஆண்டுகள் ஹைஸ்கூலில் ஸம்ஸ்க்ருத பண்டிதனுகவும், தஞ்சை ஜில்லாவில் 8 வருடங்கள் முதன்மைத் தமிழாசிரியனுகவும் ஸர்வீஸ்.

(7) ப்ராஹ்மண அப்ராஹ்மண விபாகமற பல்லாயிரவர் இவர் சிஷ்யர்கள்.

(8) ஸ்ரீதேசிகப்ரபந்தம் மூலம் 3 தடவை வெளியிட்டவர். ஸ்ரீதேசிக ப்ரபந்தம் வ்யாக்யானம் இயற்றி 2 தடவை வெளியிட்டவர். ஹம்ஸஸந்தேசம் உரையிட்டு வெளியிட்டவர். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் critical Edition 2 vols. ஸ்ரீ தேசிகஸ்தோத்ரங்கள் 28க்கு தமிழில் வ்யாக்யாநம் எழுதி 2 முறை வெளியிட்டவர். தேசிகன் சில்லரை ரஹஸ்யம் 17ம் முதற்பாகம் பிறகு 2ம் பாகம் வெளியிட்டவர். ஸ்ரீகுணசீலம் ஸுப்ரபாதம் முதலியன இயற்றி வெளியிட்டவர். நித்யாநுஸந்தாநம் (Lifco) வெளியீடு. ஸ்ரீதேசிகஸ்தோத்ரங்கள் மூலம் மட்டும் வெளியிட்டவர். ஸ்ரீமுஷ்ண மாஹாத்ம்யம் வெளியிட்டவர்.

(9) திருவிண்ணகரப்பன் ஸந்நிதியில் Hony அத்யாபககைங்கர்யம் செய்து வருபவர்.

(10) எல்லா வித்வத்ஸதஸ்ஸுகளிலும் அந்வயிக்குமவர்.

ஸ்ரீ ஸ்வாமியுடைய பிருதங்கள்

(1) **வித்யாவிசாரத:**—சுமார் 35 வருடங்களுக்கு முன் ஸ்ரீதேசிக ப்ரபந்தத்துக்கு விரிவான வ்யாக்யாநம் எழுதி வெளியிடும் உத்ஸவத்தில் தஞ்சை மாமணிக் கோயிலில் ஒரு பெரிய உத்ஸவமாக நடத்தி V. V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் முயற்சியால் விசேஷ மரியாதைகளுடன் Sir T. Vijayaraghavacharyar தலைமையில் (Udaipur Dewan). 2000 பேருக்கு மேல் கூடி ஸம்மானித்து இந்த பிருதத்தையளித்தார்கள்.

http://acharya.org

(2) ந்யாயவேதாந்த ப்ரவீண :—திருச்சியில் ஸம்ஸ்க்ருத ஸாஹித்யபரிஷத்தில் 4 ஆண்டுகளுக்கு முன் வார்ஷிக ஸபையில் தலைமை வஹித்த போது ஷஷ்டி ஸமிதி கொடுத்த பிருது.

(3) தேசிகதர்சநதுரந்தர :—பல்லாண்டுகளுக்கு முன் ஸ்ரீ V. V. ஸ்வாமி கூட்டிய பெரிய ஸபையில் காஞ்சியில் கொடுத்த பிருது.

(4) ந்யாயத்தில் "சிரோமணி" பட்டமும் தமிழில் வித்வான் பட்டமும் University கொடுத்தது.

(5) 1975ம் வருடம் August 15ம் உ சுதந்திரத்தில் President Award கொடுத்து டில்லிக்கு ப்ளேனில் வரவழைத்துப் பொன்னுடை போர்த்தி ஸனது கொடுத்து ஆயுஷ்காலம் வரை ஆண்டு தோறும் ரூ. 5000/—ஸம்மாநமும் கொடுத்து வருகிறது பாரத அரசு.

(6) இவையெல்லாவற்றுக்கும் மேலாக எம்பெருமானுர் தர்சநத்தில் பிறந்தமையைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறுர் இந்த ஸ்வாமி.

http://acharya.org

ஸ்ரீ

ஆழ்வாரும் தேசிகனும்

ஸ்ரீ.உ.வே. வங்கீபுரம்-நவநீதம்- ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதி

1 முன்னுரை

எல்லாவற்றுக்கும் முதன்மையான ப்ரமாணம் வேதம். இது கடல் போன்றது. கடலில் அமுதம் பிறந்தது. பிராட்டியும் தோன்றினாள். முதலைகள் மீன்கள் முதலியனவும் வாழ்கின்றன. அவ்வாறே வேதத்தில் ஜீவவர்க்கத்துக்கு வேண்டியனவும் வேண்டாதனவுமான பல அம்சங்கள் பொதிந்துள்ளன. அதன் முடியாகிய வேதாந்தத் தொகுதி வேதம்போலன்றி ஆன்மாக்கள் உய்வதற்கு உரிய வழிகளைக் காட்டுவதுடன் எம்பெருமானுடைய ஸ்வரூபம்-திருமேனி, குணங்கள் முதலியவற்றை விளக்கி, அவனை அநுபவிப்பதற்கும் வழி செய்கின்றது. பற்பல உலகியற் பலன்களையும் பொதுவறிவையும் பெற விரும்பும் மனிதர் வேதத்தை ஆராய்ந்து அதில் தங்களுக்கு வேண்டிய அம்சங்களை எடுத்துக் கொண்டு பலன் பெற முயல்கின்றனர். ஆனால் வேதாந்தம் ஸாதாரண பலன்களையும் அதற்கு வேண்டிய வழிகளையும் காட்டுவதில் முக்கிய நோக்கின்றி மோக்ஷம் பெறும் வரை உள்ள சிறந்த வாழ்வுக்கு வழிவகுப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்த வேதாந்தத்தின் உட்கருத்துக்களை உள்ளவாறு உணர்ந்து பயன்படுத்திக் கொள்வது கடினம். பிறமதத்தினர் தாம் ஒரு கொள்கையைப் பற்றி வேதாந்த வாக்கியங்களுக்கு அதற்கு ஏற்றவாறு பொருள் கொண்டு தங்கள் மதத்தைப் பிரசாரம் செய்து பிறரை மயக்குகின்றனர். ஆஸ்திகத் தன்மையுடையவர் தங்கள் நல்வாழ்வுக்கு வழி தேடுவதற்கு அவசியமான தத்துவ உணர்ச்சியையும், செய்ய வேண்டிய உபாயத்தையும், அடைய வேண்டிய பலனையும் எளிதில் நன்கு உணர்ந்து கொள்ளக் கடினமான வேதவேதாந்தக் கடல் இடம் தரவில்லை. ஓரளவுக்கே அறிவு படைத்த ஜீவராசிகளால் வேதக்கடலுள் புகுந்து துருவிப் பார்த்து அவசியமான அம்சங்களைக் காண முடிகின்றதா? எல்லோரும் எளிதில் உணர்ந்து தமக்கு நல்வழி வகுத்துக் கொள்வதற்கு ஏற்ற ஒரு திவ்ய ஸூக்தியை உலகுக்குக் காட்டுவது கருணைக் கடலான எம்பெருமானது கடமையாயிற்று. ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள நித்ய ஸூரிகளை இந்நிலவுலகில் ஆழ்வார்களாக அவதரிப்பித்து அவர்கள் திருவாக்கினின்று இனிய தமிழில் நாலாயிரம் பாசுரங்கள் கொண்ட அருளிச் செயலைத் தோற்றுவித்து உலகுக்கு அளித்துக் கவலை தீர்த்தான் எம்பெருமான்.

2. நம்மாழ்வார் பெருமை

இந்த அருளிச் செயலே தமிழ் மறையென வழங்குகின்றது. இது வடமொழி மறை போலவே தென்மொழி மறையென வழங்கப் பெற்று அடியார்களை வாழ்விக்கும் உயரிய ஸாதநமாக விளங்குகின்றது. இவ்வருளிச் செயல் பதின்மூவர் திருவாக்கினி

http://acharya.org

னின்று அவதரித்த ஸ்ரீ ஸூக்தியாயினும் நம்மாழ்வார் ஸ்ரீமந் நாதமுனிகளுக்காகவே பரமபதத்தினின்று மறுபடியும் இந்நிலவுலகுக்கு எழுந்தருளி அவருக்கு அருளிச் செயல் முழுவதையுமே தம் திருவாக்கினாலேயே உபதேசித்தருளிய பெருமையை நினைந்து நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தியாகவே பெரியோர்கள் கொண்டனர். ஆழ்வார் என்ற தனிச் சொல் நம்மாழ்வாரையே குறிப்பிடுவதாகப் பூர்வாசார்யர்கள் காலத்திலிருந்தே தொடர்ந்து வரும் கொள்கை. அதனாலேயே ஆசார்யன் வாயிலாக அருளிச்செயலின் எந்தப் பகுதியை அத்யயநம் செய்தாலும் தொடக்கத்திலும் பதிகமுடிவிலும் அந்தந்த ஆழ்வார்களின் திருநாமத்தைக் கூறாமல் 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்றே அநுஸந்திப்பது தொன்று தொட்டு வரும் முறையாகி விட்டது. நம்மாழ்வாரை அவயவியாகவும் மற்ற ஆழ்வார்களை அவருக்குத் திருவவயவங்களாகவும் பெரியோர்கள் கண்ட முடிவினின்றும் நம்மாழ் வாருக்கு உள்ள தனிப் பெருஞ்சிறப்பை நன்கு உணரலாம். இவ்வம்சம் நம்மாழ்வாரின் பெருமை, வெள்ளத்துக்கு ஒரு கால்வாயாகும்.

3 தேசிகன் தமிழ் மறையோன்

எம்பெருமானுடைய ஐந்து உருவங்களில் பரரூபத்தின் பெருமை விளக்கத்துக்கு வேதாந்தங்களையும், வ்யூஹ ரூபத்துக்கு ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளையும், ராமகிருஷ்ணாதிவிபவரூபத்துக்கு இதிஹாஸ புராணங்களையும், அந்தர்யாமி ரூபத்துக்கு ஸ்ம்ருதிகளையும் ப்ரமாணமாகக் கொண்டு அந்தந்த ரூபங்களைப் பற்றி விரிவாய் உணர்வதுபோல் அர்ச்சைத் திருமேனிகளின் பெருமையை அறிந்து அநுபவம் பெறுதற்குத் தமிழ் மறையே பேருதவி புரிவதால் இதை அர்ச்சாவதார வேதமெனக் கொண்டனர் பெரியோர். இந்தத் தமிழ் மறையை ஸ்ரீ தேசிகன் தமது உடைமையாக்கிக் கொண்டு பேசுவது மிகவும் அழகு. நமக்கு உபயவேதாந்தமும் இரு கண்கள். பெரிய பெருமாளால் 'உபயவேதாந்தாசார்யன்' என்ற விருதை அருளப் பெற்றிருந்தும் உலகில் உள்ளோர் தம்மை இன்ன கோத்ரத்தைச் சார்ந்தவர் என்று சொல்லிக்கொள்வது போல் ஸ்ரீதேசிகன் தம்மைத் 'தமிழ் மறையோன்' என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்ளுகிறார். மேலும் ஸ்ரீதேசிகன் ஆழ்வாரின் அருளிச் செயலை உலகில் உள்ள சிறந்த வாக்குக்களின் ஸாரமெல்லாம் ஒன்று திரண்ட அமுதமொழியென்றும், அமைதியென்னும் சாந்திரஸத்துக்கு எல்லை நிலமாய் நிற்பதுடன் அநுபவிப்பவர்க்கும் அமைதியை அளிக்கவல்லதென்றும், ஸம்ஸார மண்டலத்தில் எழும் துன்பங்களினின்று விடுபடுதற்கு முதற்சாதனமென்றும், பெருமாளும் பிராட்டியுமாகிய திவ்யதம்பதிகளைக் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்துவதென்றும் வாயாரப் புகழ்ந்து மகிழ்கின்றார்.

4 செவிக்கினிய தமிழ்மறை

'தமிழ்மறை' என்ற சொல்லே அருளிச் செயலின் இனிமையைச் சேர்த்துக் காட்டும். தமிழ் நிகண்டுக்கள் தமிழ் எனும் சொல்லுக்கு இனிமையைப் பொருளாய்க் காட்டுகின்றன. திருவடி பிராட்டியிடம் இராமபிரானது செய்தியைச் சிறையில் விண்ணப்பம் செய்ய முற்படும்போது வடமொழியில் பேசினால் இராவணன் பேச்சு

http://acharya.org

தாய்க் கருதிப் பிராட்டி அஞ்சக் கூடுமென்று நினைத்து இனிமை மொழியில் பேசியதாய் வால்மீகி கூறியதற்குத் திருவடி தமிழில் பேசியதாகவே கருத்தென்பர் ஆராய்ச்சி வல்லுநர். இனிமையே உருக்கொண்டது அருளிச்செயல். அதற்கு ஏற்ற நல்ல வாய்ப்பு. ஆழ்வார் அவதரித்த திருக்குருகூரில் எங்கும் குளிர்ந்த சோலைகள். ஆழ்வார் திருவாய் அமுதச் சொற்களைப் பொழியும் தன்மையது. அவை ஈரம் நிறைந்த தமிழ்ச் சொற்கள். அந்தத் தமிழின் இனிய இசை அமுத வெள்ளமாய் பெருக்கு எடுத்து ஓடுகின்றதாம் அவ்விசையின்பத்தை அநுபவித்தவர்களைப் போற்றுமவர்களைப் புகழ் பவராம் ஆழ்வாரின் சீடரான நாதமுனிகள். இவ்வாறு பேசுகின்றார் அமுதனார். வேடன் ஆண்பறவையைக் கொன்றதும் வால்மீகி முனிவனுக்குப் பிறந்த சோகமே ஸ்ரீமத் ராமாயணமாக வடிவுகொண்டது போல், எம்பெருமானை நெஞ்சார அனுபவித்ததால் ஆழ்வாருக்குப் பிறந்த இன்பவுணர்ச்சி வெள்ளமே அருளிச் செயலாக உருக்கொண்டதால் செவிக்கினிய மறையாயிற்று என்கிறார் ஸ்ரீதேசிகன்.

5 அருளிச்செயலில் பொதிந்த ஸாராம்சங்கள்

அருளிச் செயலை ஸகல வேதங்களினுடையவும் ஸகல சாஸ்த்ரங்களுடையவும் ஸாரமென்பர் பெரியோர். சேதநர்கள் தங்கள் நல்வாழ்வுக்கு முக்கியமாய் அறிய வேண்டியவை எவை? சரீரத்திலும் வேறுபட்ட ஜீவாத்மா. அவற்றுக்கு நாயகனை பரமாத்மா, அவனை மகிழ்விக்கும் உபாயம்—அவனே மோக்ஷம்தருதல்—அவனிடம் அபசாரம் செய்வதால் வரும் துன்பங்கள்—பாகவதர்களின் பெருமை—அவர்களை வழி படுவதால் வரும் மனவமைதி முதலியன தாமே. இத்துணை ஸாராம்சங்களையும் ஆழ்வார் தம் ஸூக்தியில் தெளிவித்திருப்பதை ஸ்ரீதேசிகன் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

6 அருளிச்செயலுள் எம்பெருமான் குணங்கள் அடங்குதல்

வடமொழி வேதாந்தம்—தமிழ்மறைமுடி ஆகிய இரண்டுக்குமே எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களைப் போற்றிப் புகழ்வதில் தான் முக்கிய நோக்கு என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அவ்விரண்டனுள் அருளிச் செயலுக்கு அவன் குணங்களைத் தெளிவிப்பதில் உள்ள பெருஞ்சிறப்பைக் காட்டுகின்றார் தேசிகன். தாயின் கர்ப்பத்தில் குழந்தை அடங்கிக் கிடப்பது போல் அருளிச்செயலினுள் எம் பெருமானுடைய குணங்களெல்லாம் அடங்கிக் கிடக்கின்றமையைக் காண்கின்றார் தேசிகன். வேதங்களோ உபநிடதங்களோ மற்ற நூல்களோ அருளிச் செயலைப் போல் எம்பெருமான் குணங்களைக் கையில் கனியாகப் பிடித்துத் தரவல்லனவாகா என்ற கருத்து தேசிகன் திருவுள்ளத்தில் ஊன்றிவிட்டது. முன்னோர்களின் ஐதிஹ்யம் ஒன்று உண்டு. ஒருகால் அறிஞர்கள் பலர் ஒன்று கூடிய சபையில் எம்பெருமான் குணங்களை முழுவதும் காட்டவல்ல நூல் ஒன்றும் தோன்றவில்லையே என்று கவலை கொண்டார்களாம். அருளிச்செயல் அவதரித்தபின் அதை அவர்கள் நன்கு அநுபவித்து விட்டு அதனுள் அவன் குணங்கள் அனைத்தும் அடங்கிக் கண்முன் தெரிவதைக் கண்டு மறுபடியும் அவர்கள் ஒன்றுகூடி அதனுள் அடக்கக் குணங்கள் இல்லையே என்று பின்னும்

http://acharya.org

கவலையை வெளியிட்டார்களாம். இந்த ஐதிஹ்யத்தின் உட்கருத்து என்ன? அருளிச் செயல் அவனுடைய திருக்குணங்களை மிகத் தெளிவாய் விளக்கும் திறனுடையது என்பதும், அந்த ஆற்றல் மற்ற ப்ரமாணங்களுக்கு இல்லையென்பதும் தாமே! இதைத் தான் தேசிகன் ஆழ்வார் பாசுரங்கள் எம்பெருமானுடைய குணக்குழுவைத் தம் கர்ப்பத்தில் கொண்டன என்று அருளிச் செய்கின்றார். ஆழ்வார் தாமே பெரிய திருவந்தாதித் தொடக்கத்தில் அவனுடைய திருக்குணங்களைத் தம் பாசுரங்களில் பொதிந்து விடுவதற்குத் தம்முடன் ஒத்துழைக்குமாறு தம் நெஞ்சையே அழைக்கின்றார்.

7 அவனை அநுபவிக்க அருளிச்செயலே ஸாதநம்

ஜீவனுடைய ஸ்வரூபம்—எம்பெருமான் திருமேனி—திருக்குணங்கள் முதலியவற்றில் தெளிவான அறிவு ஏற்பட வேண்டுமானால் தமிழ் மாலைகளின் வடிவமான அருளிச்செயலை ஆசார்யனிடம் பக்திசிரத்தைகளுடன் அத்யயனம் செய்ய வேண்டும். அங்ஙனம் தாம் கற்றதால் வேதங்களைக் கொண்டு அறிய முடியாத ஸூக்ஷ்ம ரஹஸ்யங்களையெல்லாம் தெளிந்து கொண்ட பெருமையை அருளிச் செயலால் பெற்றதாகத் தேசிகன் கூறிக்கொள்கின்றார். வேதங்கள் எடுத்துக் காட்டாத வேதபுருஷனுக்கும் புலனாகாத ரஹஸ்யங்களைக் கூட அருளிச் செயலால் தாம் தெளிந்து கொண்டதைத் தேசிகன் பேசுவதாகச் சுவைபடக் கூறுவர் சில அறிஞர்கள். அளவற்ற ஓர் அமுதக் கடல். அதைப் பருக ஒருவனுக்கு வேட்கை. அப்படியே வாரிப் பருக முடியுமா? அதற்காக ஓர் அல்லித்தண்டை எடுத்து அதன் துவாரத்தாலே உறிஞ்சியுறிஞ்சி இயன்ற வளவுக்குப் பருகிச் சுவை காண்கின்றான். அவ்வாறே எம்பெருமான் ஓர் ஆராவமுதக் கடல். அவனை அப்படியே வாரிக் கொண்டு விழுங்க ஆசைதான். இயலுமா? அதற்காகத் தமிழ்மொழியில் உள்ள அருளிச் செயலை அவனை அநுபவிக்கச் சாதனமாகக் கொள்கிறான் ரஸிகன். எப்படி? அவன் திருமேனி—குணம்—லீலைகள் முதலியவற்றை அருளிச் செயலைக் கொண்டு கண்ணாரக் கண்டு அநுபவித்துப் பேரின்பம் காண்கின்றான். எத்தகைய அழகிய உவமானம்! இவ்வுவமையைக் காட்டியவர் தேசிகன்.

8 நம்மாழ்வாரே ப்ரபந்ந ஸந்தாந கூடஸ்த்தர்

மோக்ஷத்தை அடைவதற்குப் பக்தி–ப்ரபத்தி என்னும் இரண்டே உபாயங்கள் உள்ளனவென்று உபநிடதமும் மற்ற சாஸ்த்ரங்களும் முறையிடுகின்றன. பக்தியோகம் செய்தற்கு எத்தனையோ வரையறைகள். விரைவில் பலன் பெறுவது இயலாது. அதற்குத் தகுதிகளைச் சிந்திக்கும் போது அஞ்ச வேண்டிவரும். ப்ரபத்தி எல்லோரும் செய்தற்கு ஏற்ற எளிய உபாயம். இரண்டும் மறை கண்ட உபாயங்களே. நம்மாழ்வாருக்கு முன்பும் பலர் ப்ரபத்தியை அநுஷ்டித்துப் பலன் பெற்றுள்ளனர். ஆனால் நம்மாழ்வார் காலத்துக்குப் பின்பே ப்ரபத்திக்குப் பெருஞ்செல்வாக்கு ஏற்பட்டுப் பெரும்பாலோர் ப்ரபத்தியையே உபாயமாகக் கொண்டுள்ளனர். ஆழ்வார்தாம் தம் ஸ்ரீ ஸூக்திகளின் வாயிலாகவும் தமது அநுஷ்டானத்தின் மூலமாகவும் ப்ரபத்திக்கு மிக்க செல்வாக்கை உண்டாக்கிப் புத்துயிரளித்தார். பிற்காலத்தினரும் இந்த எளிதான

http://acharya.org

வழியையே கைக்கொள்ளும்படி செய்தருளினார். இப்படி ப்ரபந்நர்களின் ஸந்ததிக்கு இவரே முக்கிய மூல புருஷராயிருப்பது பற்றி ப்ரபந்ந ஸந்தாந கூடஸ்த்தரென வழங்கப் பெற்றார். இந்த வழக்கு யாரால் வந்தது? எம்பெருமானாலேயே. ஆழ்வார் தாமே கூறுகின்றார்–தம்மை ப்ரபந்நஸந்தாந கூடஸ்த்தராக்குவதற்கு ஸங்கல்பித்து விட்டானும் எம்பெருமான். தன்னைப் பற்றிய தெளிந்த அறிவைத் தந்தானும். பிரமன் கலைமகளை வால்மீகி முனிவன் வாயில் புகச்செய்து இராமாயணத்தைத் தோற்றுவித்தது போலன்றி எம்பெருமான் தானே தம் நாவில் புகுந்து அவனே பாடுவித்தது திருவாய்மொழி என்கிறார் ஆழ்வார். அதன் வாயிலாகப் ப்ரபத்தி நெறியைத் தம் வாயினால் அவனே பேசுவித்து ப்ரபந்நஸந்தாந கூடஸ்தராக்கி விட்டான் என்று பேசுகின்றார் ஆழ்வார்.

9 ஆழ்வார் அவதரித்த குலத்தின் பாக்கியம்

ஆழ்வாரிடம் ஸ்ரீதேசிகனுக்கு உள்ள ஈடுபாட்டின் மிகுதி அவர் அவதரித்த குலச்சிறப்பையும் போற்றத்தூண்டுகிறது. ஆழ்வார் தாம் அவதரிப்பதற்கு ப்ராஹ்மண-க்ஷத்திரிய-வைச்யர் ஆகிய முக்குலத்தையும் விட்டு வேளாளர் குலத்தில் அவதரிப்பானேன்? அது மட்டும் அன்றோ! அந்தக் குலத்தில் அவதரித்த ஆழ்வார் ஆசார்ய சிரேஷ்டராய் விளங்கும் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கும் பரமாசார்யராய் பூலோகத்தில் அவதரித்துள்ள ஆசார்யர்களுக்குள் முதல்வராய் விளங்கும் ஆச்சர்யத்தைச் சிந்திக்கின்றார் தேசிகன். அதற்குக் காரணமும் காட்டியருள்கின்றார். எம்பெருமானுடைய திருவவயவங்களில் திருவடிதானே சரணமடைதற்கு இடமாய் விளங்குவது! திருவடியைப் பிடித்தால் தானே அவன் அன்பும் கருணையும் சுரக்கும்! அவன் திருவடியினின்று தோன்றியது வேளாளர் குலம் ஒன்றே. மற்ற அவயவங்களினின்று தோன்றிய மற்ற குலங்களுக்கு இப்பெருமை கிட்டவில்லையே! அந்தக் குலம் அவன் திருவடியினின்று பிறந்ததை வேதமும் ஓதுகின்றதே! அக்குலத்துப் பிறந்தாலும் பகவத் பக்தியுடையனாகில் அவனை மற்றவர்கள் மிக மதித்துப் பாராட்ட வேண்டுமென்பதை உலகுக்கு உணர்த்தவே ஆழ்வார் வேளாளர் குலத்தில் அவதரித்தார். எம்பெருமான் திருவடியினின்று தோன்றிய சிறப்புடன் ஆழ்வார் அவதரித்த பெருமையும் சேர்ந்து அக்குலமும் எல்லோரும் கொண்டாட உரியதாயிற்று. இதுவே தேசிகன் கண்டு வெளியிட்ட உண்மை.

10 அருளிச்செயல் கற்றே வைஷ்ணவனாக வேண்டுதல்

ஆழ்வார்களின் அருளிச்செயல், தமிழ் மறையென்றும், தமிழ் மறைமுடியென்றும் வழங்கும், வடமொழியில் வேதத்தினும் சிறந்தது வேதாந்தமெனப்படும் உபநிடதம். வேதத்தை அத்யயனம் செய்தே அந்தணத் தன்மையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுவது போல் 'அருளிச் செயலை ஆசார்யன் வாயிலாக ஓதிக் கற்றே வைணவத் தன்மையைப் பெற்றாக வேண்டும். அருளிச் செயலிலும் வேதம் வேதாந்தம் என்ற பாகுபாட்டைக் கண்டனர் பெரியோர். மற்ற ஆழ்வார்களின் பாசுரப் பகுதியை வேதமெனவும் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியை வேதாந்தமெனவும் கொண்டனர்

http://acharya.org

பெரியோர். மற்ற ஆழ்வார்களின் பாசுரப் பகுதியை வேதமெனவும் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியை வேதாந்தமெனவும் கொண்டனர் பழங்காலத்துப் பெரியோர். வடமொழி வேதத்தை முழுதும் அத்யயநம் செய்ய வாய்ப்புப் பெறுதவர் உபநிஷத்தையோ புருஷஸூக்தத்தையோ அத்யயநம் செய்தால் தான் தம்மை அந்தணரென்று சொல்லிக் கொள்ள உரிமை உண்டு அவ்வாறே மற்ற மூவாயிரம் பாசுரங்களைப் பயில இயலாதார் திருவாய்மொழியை மட்டுமாவது அத்யயநம் செய்தால் தான் அவர்களிடம் வைணவத்தன்மை நிலை நிற்கும். எம்பெருமானது திருவுள்ளத்தை உகப்பிக்கத் திருவாய்மொழியினும் சிறந்த ஸாதநம் இல்லையென்பது உறுதி.

11 அருளிச்செயலைக் கல்லாதவரும் உய்ய வழி

ஸ்ரீதேசிகன் கண்ட உண்மை என்ன? அருளிச் செயலைக் கல்லாதவரிடத்து எம்பெருமான் திருவுள்ளம் உகப்பதில்லையாம். எல்லோருக்கும் அதனைக் கற்கும் பாக்கியம் கிட்டுகின்றதா? வடமறையில் உள்ள ஊற்றத்தால் தமிழ்மொழியில் உள்ள அருளிச் செயலைக் கற்கும் பேறு பெறுதவர் பலர். எம்பெருமான் திருவுள்ளத்தை ஈர்த்து வசப்படுத்த வல்ல இனிய ஓசை பெற்ற அருளிச் செயலின் பெருமையை உணராததால் அதனைக் கற்காது கைவிட்டுப் பொழுது போக்குமவர் பலர். இத்தகைய தௌர்ப்பாக்கிய முடையாரிடம் எம்பெருமான் திருவுள்ளத்தில் அன்பு எந்நாளும் ஏற்படாதாம். இந்த ஜீவராசிகளிடமும் ஆழ்வாருக்குக் கருணை சுரக்கின்றது. வைணவராய்ப் பிறந்ததாலாவது நற்கதி பெறட்டுமே என்ற குளிர்ந்த எண்ணம் ஆழ்வாருக்கு அவர்களையும் உய்விக்க ஒரு வழி கண்டார் ஆழ்வார். தாமே ஸ்ரீசடாரியுருக்கொண்டு அதனுள்ளே புகுந்தும் நின்றார். அவர்கள் அர்ச்சைத் திருமேனியை வந்து ஸேவிக்கும்போது அவர்கள் முடியில் ஸ்ரீசடாரி அமருவதால் இந்த பாக்கியத்தையாவது பெற்றார்களே யென்று அவர்களிடம் திவ்ய தம்பதிகளுக்குக் கருணை சுரக்குமாம். ஜீவராசிகளிடம் இத்தகைய கருணை கொண்டு வாழ்விக்கும் பெருமையை நினைந்து எல்லாரும் ஆழ்வாரைப் பக்தியுடன் தொழுகின்றார்களாம். தேசிகனது எத்தகைய அழகிய உண்மை விளக்கம் !! இதைத் திருவுள்ளத்துக் கொண்டுதான் எம்பெருமான் திருவடியில் முடியை வைப்பதற்கு ஆழ்வார் திருவருள் வேண்டுமென்று தேசிகன் முடிவு கூறுகின்றார். ஸ்ரீசடாரிதான் ஆழ்வார், ஆழ்வார் தாமே ஸ்ரீசடாரி!

12 வானுலகிலும் அருளிச் செயல் கோஷ்டி

இந்த அருளிச் செயலின் அநுஸந்தாநம் இவ்வுலகில் மட்டுமோ? தேவலோகத்திலும் ஸ்ரீவைகுண்டத்திலும் கூடச் சிறப்பாய் நடப்பதாய் ஆசார்யர்கள் கண்டனர். ஒரு விசேஷம் பார்ப்போம்-திருமாலிருஞ்சோலைமலை. அம்மலையின் திருநாமத்தைக் கூறினலே திருமால் நேரில் ஓடிவந்து நெஞ்சு நிறையப் புகுவதாய்க் காண்கின்றார் ஆழ்வார். அங்கே சிலம்பாறு பெருகியோடுகின்றது. எம்பெருமானுருக்கு ஞானபுத்திரராய் பரமாத்தரங்கரரான ஆழ்வான் தாம் கண்ணுலே கண்டதை நமக்குக் காட்டுகின்றார்.

http://acharya.org

தேவலோகத்தினின்று கின்னரப் பெண்கள் அழகரை ஸேவிக்க ஆசைப்பட்டுத் திருமாலிருஞ்சோலை மலையின் தாழ்வரைக்கு வந்து சேருகின்றனராம். அந்த வகுப்பினர்க்கே இயற்கையாக எம்பெருமான் அருளியுள்ள குரலின் இனிமையோடும் பொருட்சுவையுணர்ச்சியோடும் கருத்தில் தெளிவுடனும் அப்பெண்கள் மகிழ் மணம் வீசும் திருவாய்மொழியைப் பாடுகின்றனராம். அதைக் கேட்டு அந்த மலையின் கற்பாறைகள் உருகிச் சிலம்பாறுப் பெருகுவதாய்க் கண்டு வியப்புற்று அருளிச் செய்கின்றார். சிலம்பாற்றின் அவதார ரஹஸ்யத்தைக் கண்டு விட்ட பெருமிதம் ஆழ்வானுக்கு, ஆழ்வானிடம் பக்தி மிகுந்த ஸ்ரீதேசிகனே பின்னும் மேலே ஒரு படி சென்று பேசியருள்கின்றார்—பரமபதம் சேர்ந்த சேதநன் அங்கே நித்யஸூரிகளுடனும் முக்திபெற்றவர்களுடனும் சேர்ந்து ஒரு கோஷ்டியாக அமர்ந்து ஸாமகாநம் செய்வதுடன் பல்லாண்டென்று தொடங்கும் அருளிச்செயலையும் ஸங்கீதலோகத்திலேயே இதுவரை அமையாத அற்புத தெய்விக கானத்துடன் பாடி பகவத் குணங்களை அநுபவிப்பதாயும் தாமும் அதில் கலந்துகொண்டு இன்புறுவதாயும் தம் பிரபந்தத்தில் அருளிச் செய்கின்றார். அடியார்களுக்கு இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் அதிலும் ஸ்ரீவைகுண்டத்திலும் அருளிச்செயலின் அநுஸந்தாநம் சாச்வதமாய் நடைபெறுவதைக் காண்கின்றார் தேசிகன்.

13 தமிழ் மறையும் நித்யமானது

அருளிச் செயலும் வேதம்போல் நித்யமானதென்பதும் ஒவ்வொரு கல்பத்திலும் அவதரிப்பதென்பதும் ஆசார்யர்கள் கண்ட உண்மை. சப்தமென்பது தோன்றி அழிவதால் அநித்யமென்று தீர்ந்திருக்க, சொற்றொடர்களாலான வேதம் எப்படி நித்யமாகும்? என்ற கேள்விக்கு ஸ்ரீபாஷ்யகாரர் தாமே விரிவாக விடை அருளிச்செய்துள்ளார். ஸர்வேச்வரன் கற்பந்தோறும் வேதத்தை முந்திய சொற்றொடரின் வரிசை சிறிதும் மாறாது கண்டு பிரமனைப் படைத்து அவனுக்கு வேதத்தை உபதேசித்து அவனைக் கொண்டு வஸிஷ்டர் முதலியவர்கள் வழியாக வேதத்தின் அமைப்பில் சிறிதும் மாறுபாடின்றி உலகில் பரவச் செய்ய, அங்ஙனம் நிற்பதுவே வேதத்தின் நித்யத் தன்மையாகும் என்பது ஸ்ரீபாஷ்யத்தில் அருளிய முடிவு. அங்ஙனமே கற்பந்தோறும் ஆழ்வார்களின் அவதாரமும் அவர்களின் திருவாயினின்று அருளிச் செயல் தோன்றுவதும் பாசுரங்களின் உருவத்தில் சிறிதும் மாறுபாடின்றி அநுஸந்தான முறை வருவதும் நடைபெறுவதால் வடமொழி மறைபோல் தமிழ் மறையும் நித்யமென்று ஆசார்யர்கள் ஒரு முகமாய்க் கண்டு பேசினர். ஸ்ரீதேசிகனும் அருளிச் செயல் ஆழ்வாரிடமிருந்து கற்பந்தோறும் அவதரித்துக் கொண்டேயிருப்பதைத் திருவுள்ளத்துக் கொண்டு ஆழ்வாரைப் பற்றிப் பேச நேரும் பல இடங்களிலும் அருளியச் செயலை இயற்றியவர் என்று கூறாது கண்டவரென்றே வழங்கியிருப்பதும் இதனை வலியுறுத்தும் ஸ்ரீதேசிகன் போற்றும் ஸ்ரீபட்டரும் அருளிச் செயலை ஆழ்வார் ஸாக்ஷாத்கரித்ததாகவே அருளிச் செய்துள்ளார். அருளிச் செயலின் சாசுவதத் தன்மைக்கு இன்னும் வேறு என்ன சான்று வேண்டும்?

http://acharya.org

14 நம்மாழ்வார் ஆழ்வாரும் ஆசார்யனு மாதல்

இந்நிலவுலகில் முதன் முதலாக அவதரித்த ஆசார்யன் யார்? நம்மாழ்வாரே. அவருக்கு ஆசார்யனாய் விளங்கும் ஸேனை முதலியாரோ ஸ்ரீவைகுண்டத்தினின்று பரமபதநாதன் நியமனப்படி இந்நிலவுலகில் வந்து ஆழ்வாருக்குத் திருவாழி திருச்சங்கு பொறித்து உபதேசமும் செய்து விட்டு மீண்டும் ஸ்ரீவைகுண்டத்துக்கே சென்று விட்டார். ஆகவே நம்மாழ்வாருக்கே முன்போ அவர் காலத்திலோ பூவுலகில் அவதரித்து வாழ்ந்த ஆசார்யன் யாராவது உண்டாவென்று சிந்தித்துப் பாருங்கள். ஆழ்வார்களின் கோஷ்டியிலும் மற்ற ஆழ்வார்களைத் தமக்கு அவயவங்களாகக் கொண்டு தாம் அவயவியாக நின்று முதன்மை பெற்று விளங்குமவர் நம்மாழ்வார் ஒருவரே. இந்தத் தனிப்பெருமை, திருமந்திரம் ஒன்றே ரஹஸ்ய வகுப்பிலும் வியாபக மந்திர வகுப்பிலும் சேர்ந்து தனிப்பெருமையுடன் விளங்குவது போன்றதாகும்.

15 அருளிச் செயல் வேதமும் உபப்ரும்ஹணமு மாதல்

தமிழ்மறை சுதந்திரமான முறையில் வேதமாகவும் உபநிடதமாகவும் விளங்குவதோடு வேதத்தின் நுண்ணிய கருத்தை விளக்கும் உபப்ரும்ஹண வகுப்பிலும் சேர்ந்து பிரகாசிக்கின்றது. இந்த அம்சத்தை இன்னும் சற்று ஆராய்ந்தால் வேதங்களின் பொருளைத் தெளிவாய் அறிவதற்கு இதிஹாஸமும் புராணமும் உதவி செய்வதற்கு மேலும் மிகப் பெரியதோர் அளவுக்கு அருளிச் செயல் சிறிதும் ஐயம் எழாதவாறு வேதங்களின் ரஹஸ்யங்களை விளக்கிக் காட்டுவதால் உபப்ரும்ஹணங்களுள்ளும் தலை சிறந்து விளங்குவதாக ஸ்ரீதேசிகன் புகழ்ந்தருள்கின்றார். அருளிச் செயலை மறையாகவே கொண்டு சிந்திக்கும்போது பழமையான உபநிஷத்துக்களுள் முதன்மை பெற்று விளங்குவதாகவும் காண்கின்றார் தேசிகன். அதனால் தான் அர்ச்சைத் திருமேனி திருவீதியில் எழுந்தருளும்போது வடமறைகோஷ்டியை எம்பெருமான் நாடித் தொடர்வதும் தொன்று தொட்டு வரும் ஸம்ப்ரதாயமாகிவிட்டது.

16 ஆளவந்தாரின் ஈடுபாடு-தேசிகன் விளக்கம்

ஆளவந்தார் ஸ்ரீஸூக்திகளுள் ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம் தனிச் சிறப்புப் பெற்றது. புராணங்களுள் மிகச் சிறந்ததால் ஸ்ரீ விஷ்ணுபுராணம் புராணரத்நம் என்றும், மந்த்ரங்களுள் ஒப்பற்ற த்வயம் மந்த்ரரத்நம் என்றும் வழங்குவது அனைவரும் அறிந்ததே. அவ்வாறே ஸ்தோத்ரங்களுள் முதலவதாரம் பெற்று ஆளவந்தாருக்குப் பின்னிட்ட எம்பெருமானார் உள்ளிட்ட எல்லா ஆசார்யர்களின் அநுஸந்தானத்துக்கும் ஏற்றதாயுள்ளமை பற்றி இது ஸ்தோத்ரரத்நமென வழங்குகின்றது இதில் ஐந்தாவது ச்லோகம் 'மாதாபிதா யுவதய:' என்று தொடங்குவது அருளிச் செயலின் அநுஸந்தானத்தின் போதெல்லாம் முன்பு அனைவரும் அநுஸந்திக்க வேண்டிய ச்லோகமாதலின் இதை அறியாத வைணவர் இலர். ஸ்ரீஸ்தோத்ரரத்நத்துக்கு விரிவான உரையிட்

http://acharya.org

டருளிய தேசிகன் இச்சுலோகத்துக்கு அருளிய உரை ஓர் அற்புதப் படைப்பும் ஆளவந்தாருக்கு ஆழ்வாரைப் பற்றிப் பொங்கியெழுந்த பக்தி வெள்ளத்துடன் தம் முடைய பக்திப் பெருக்கையும் சேரவிட்டு இந்தச் சுலோகத்துக்கு விரிவுரையருளி இருவர் பக்திவெள்ளத்துக்கும் வடிகால் விடுகின்றார் தேசிகன்.

17 ஸ்ரீதேசிகன் இடும் அவதாரிகை

இச்சுலோகத்துக்குத் தேசிகன் இடும் அவதாரிகையே விலக்ஷணமானது. ஆளவந்தார் மேற் சுலோகத்தால் பராசரமஹர்ஷியை வணங்கிவிட்டார். உடன் ஆழ்வார் திருவடிகளைத் தொழுகின்றார். குறிப்பிட்டுப் பராசரரைத் தொடக்கத்தில் துதிக்கக் காரணம் யாதெனில் வேதாந்தார்த்தங்களை நிர்ணயித்து விளக்கும் ஸ்ரீவிஷ்ணுபுராணம் என்னும் அற்புதக் கிரந்தத்தை அவர் அருளியதேயாகும். அடுத்து ஆழ்வார் திருவடிகளை இலக்கு. ஏன்? கீழ்க்கூறிய ஸ்ரீவிஷ்ணு புராணத்தைக் காட்டிலும் ஆழ்வாரின் அருளிச் செயல் வேதாந்தங்களின் ரஹஸ்யார்த்தங்களை மிகத் தெளிவாய் விளக்குவதே காரணமாகும். அருளிச் செயலைக் கேட்பவர்க்கு உடனேயே எம்பெருமானிடம் ஈடுபட்டு உள்ளம் மகிழ வாய்ப்பு ஏற்படுமாம். மேலும் அதன் அநுஸந்தானத்தைச் செவி சாய்த்ததுமே அவன் திருவுள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கச் செய்கின்றதாம் அருளிச் செயல். எல்லாச் சாதியாரும் அநுஸந்தித்து நல்வாழ்வு பெறுதற்கு வழிகாட்டியாயுள்ளது. மேலும் ஆளவந்தாருக்குப் பாட்டனாரான ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஆழ்வார் நேர் ஆசார்யனாய் விளங்குகின்றார். எப்படி? இருவர்க்கும் மிகுந்த இடையீடு உள்ளதாயிற்றே என்று கேட்கலாம். நாதமுனிகள் பல காலம் கொடுந்தவம் புரிந்து ஆழ்வாரைப் பரமபதத்தினின்று இந்நிலவுக்கு மறுபடியும் எழுந்தருளச் செய்தார். பரமபுருஷனது ஸங்கல்பமும் இதற்கு முதற் காரணமாய் நின்றது. ஆழ்வார் நேரில் எழுந்தருளி அதுவரையில் மறைந்திருந்த—ஸகல உபநிஷத்துக்களின் ஸாரமான அருளிச் செயல் முழுவதையுமே ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு உபதேசித்தருளி முதல் ஆசார்யரானார். உபநிடதம் எம்பெருமானையே தாய்-தந்தை-ஸஹோதரன் முதலிய எல்லா உறவினனுமாக ஓதுகின்றது. அதைத் தழுவி இப்பொழுது ஆளவந்தார் ஆசார்யனான ஆழ்வாரையே, அவர் திருவடிகளையே எம்பெருமானுக்கு உள்ள எல்லா உறவுமுறையும் உடையனவாகக் கொண்டு ஐந்தாவது சுலோகமிட்டு வணங்குகின்றார்.

18 ஸ்ரீதேசிகன் தரும் பொருள் விளக்கம்

அவர் திருவடிகளில் ஈடுபட்டுப் பேசும்போது ஆழ்வாரையே மறந்து விடுகின்றார் ஆளவந்தார். சாஸ்த்ரங்களெல்லாம் தாயின் பெருமையைக் கூறும்போது அவள் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து வளர்த்துப் புதல்வனின் நலத்தைப் பேணுதலைக் கருதித் தந்தையினும் மிகச் சிறந்தவளாகப் புகழ்கின்றனர். அத்தகைய தாய் தமக்கு ஆழ்வார் திருவடிகளே என்கின்றார் ஆளவந்தார். அடுத்துத் தந்தையின் நினைவு வருகின்றது. தந்தை புத்திரனை

http://acharya.org

நல்வழிப் படுத்திச் சிறந்த நிலைக்குக் கொண்டு வருமவனாதலின் மிக்க மதிப்புக்கு உரியன். அடுத்து நிற்பவள் மனைவி. தம்பதிகள் ஒற்றுமையுடன் வாழ்க்கை நடத்தினால் அறம்-பொருள்-இன்பம் ஆகியவை எளிதில் கிட்டுமென்று கூறுகின்றது சாஸ்த்ரம். இந்தத் தந்தை-மனைவி என்ற உறவினர் முறையிலும் நின்று தம்மைக் காப்பன ஆழ்வார் திருவடிகளேயென்கின்றார். பின் புத்திரர்களைப் பார்ப்போம். குடும்பத்தில் அவர்களுக்கு முக்கிய ஸ்தானம் உண்டு. புத்திரர்களைக் கண்டாலே பெற்றோர்களுக்குப் பெருமகிழ்ச்சி. முதுமையில் பெற்றோர்களைக் காப்பவர் புத்திரர்களே. மேலும் ப்ரபந்நர்களல்லாத பெற்றோர்களைப் புத் என்னும் நரகத்தில் விழாமல் காப்பதால் புத்திரர் என்று பெயர் வந்ததாகவும் கூறுவர். முன்னோர்கள் நம் குலத்தில் புத்திரன் பிறப்பானா என்று ஏங்கியதும் உண்டு. புத்திரன் பிறந்து அதிலும் வைணவச் சிறப்பைப் பெறுவானாயின் பித்ருக்களும் பிதாமஹர்களும் தோள்களைத் தட்டி மகிழ்ச்சியால் கூத்தாடுவதும் உண்டு என்று ப்ரமாணங்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்புப் பெற்ற புத்திரர்கள் போல் தம் அன்புக்கு உரியனவாய்த் தமக்கு உதவி புரிவனவாயுள்ளன ஆழ்வாரின் இரண்டு திருவடிகளே என்கிறார். அது மட்டுமன்று. ஒவ்வொரு குடும்பத்துக்கும் சில உடைமைகள் உண்டே! அவையாவன-பணியாளர்-அடியார்கள்-வீடு-நிலம்-செல்வம் முதலியன. இவை ஒருவருடைய வாழ்க்கையை வளம் பெறச் செய்வன. மற்றும் இம்மைப் பயன் மறுமைப் பயன் முதலியவற்றுக்குச் சாதனமாயுள்ள அனைத்துமே தமக்கு ஆழ்வார் திருவடிகள் தாம் என்கிறார் ஆளவந்தார். மேலும் தமக்கு இவ்வுலகில் மட்டும் அல்ல. மோக்ஷம் பெற்ற பின்பும் தமக்கு ஆழ்வார் திருவடிகளே தஞ்சமென்கிறார். எம்பெருமான் திருவடிகளைப் பெறுதற்குக் கூட அவனைக் காட்டிலும் ஆழ்வார் திருவடிகளையே கதியாய்ப் பற்ற வேண்டுமாம்.

19 ஆசார்யன் கருணை எம்பெருமானதினும் விஞ்சியது

எம்பெருமானது கருணை சேதநர்களிடம் அநாதியாக இருப்பினும் அது ஆசார்யனது அருளை எதிர்பார்த்தே பலன் கொடுக்க வல்லதாம். மேலும் அவன் கருணை சேதநனது கருமத்துக்குத் தகுந்தபடி தீய பலனையும் கொடுத்தே தீரவேண்டியதாதலின் லீலாரஸம் கலந்தே இருக்கும். ஆசார்யனது கருணையோ எம்பெருமானது சீற்றத்தைப் போக்கித் தீய பலன் வாராமல் காக்கின்றது. எம்பெருமானுக்குச் சிலரைக் கர்மத்துக்கு ஏற்றவாறு கீழே தள்ளும் கருத்தும் மறுபடி பாபத்தைச் செய்யத் தூண்டும் செயலும் உண்டு. ஆசார்யனுக்கோ சிஷ்யனை நற்செயல் புரியுமாறு செய்வதிலேயே ஆர்வமும் அவனுக்கு நல்வாழ்வளிப்பதிலே நோக்கமும் இயற்கையில் அமைந்தன. மேலும் எம்பெருமான் அசுரத்தன்மையருக்குச் சாஸ்த்ரங்களுக்கு விபரீதமான உபதேசங்களைச் செய்து தீய செயலிலேயே மண்டியிருக்கச்செய்து அதன்

http://acharya.org

பயனை அநுபவிக்கச் செய்யும் தன்மை உண்டு. ஆசார்யனோ சாஸ்த்ரத்தைத் தழுவிய நல்லுபதேசத்தையே செய்து நல்வழிப்படுத்தி இன்பமுறையே செய்வான். இங்ஙனமே இன்னும் பல வேற்றுமைகள் எம்பெருமானுக்கும் ஆசார்யனுக்கும் இருப்பதைக் கொண்டு அவனினும் ஆசார்யனுக்கு உள்ள சிறப்பு மிகுதியால் ஆசார்யன் எப்பொழுதும் போற்றுதற்கு உரியன் என்று விளக்கி ஆசார்ய ஸார்வபௌமருக்கு எம்பெருமானினும் மிக்க சிறப்பை வலியுறுத்திப் பேசுகின்றார்.

20 ஆழ்வார் திருவடிகளே இருஸந்ததிக்கும் சரண்

இத்தகைய பரமாசார்யரான நம்மாழ்வார் திருவடிகளே பிறப்பினால் எமக்கு முன்னோர்களான தந்தை பாட்டனர் முதலியவர்களுக்கும், பின்னிட்டுத் தோன்றுமவர்களான புத்திரர் பேரர் முதலிய பின் ஸந்ததியினர்க்கும் கீழ் கூறிய எல்லா உறவினரும் எல்லாச் செல்வமுமாய் நிற்பன. மேலும் நமக்கு ஜ்ஞாநஸந்ததியார் என்று சொல்லப்படும் முன்னோர்களான ஆசார்யன்—ப்ராசார்யன் முதலிய ஆசார்ய பரம்பரைக்கும் பின்வரும் சிஷ்யன் அவனுக்குச் சிஷ்யன் என்று தொடர்ந்து செல்லப்போகும் சிஷ்ய ஸந்ததிக்கும் இப்படி எதாவது வழியில் நம்மைச் சேர்ந்த அனைவருக்குமே எல்லாமாய் நிற்பன ஆழ்வார் திருவடிகளே.

21 ஆழ்வாரே முதல் ஸ்ரீ வைஷ்ணவகுலபதி

நாதமுனிகள் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த அனைவருக்கும் முதல்வரான குலபதியாய் விளங்குமவர் நம்மாழ்வாரே. நம் முன்னோர்களான பெரியோர்களுக்கும் ஜ்ஞாநம்-வைராக்யம் முதலிய நற்குணங்கள் ஆழ்வார் திருவருளாலேயே வந்தன. ஆழ்வாரை முதற் குலபதியாகக் கூறத் தடை என்ன? ஒவ்வொருவரும் தங்கள் கோத்ரத்துக்குக் கூடஸ்த்தராக ஒரு முனிவரைக் கூறிக் கொள்வது போல் ஸ்ரீ வைஷ்ணவ குலத்துக்குக் கூடஸ்த்தராகக் கூறிக்கொள்ள ஆழ்வாரே உரியர். எல்லோருக்கும் முதல் ஆசார்யனை எம்பெருமானே பொதுவான கூடஸ்த்தனாயிருப்பினும் ஸ்ரீவைஷ்ணவர்களான அனைவருக்கும் சிறப்பு முறையில் கூடஸ்த்தராய் விளங்குமவர் ஆழ்வாரே. ஸ்ரீவைஷ்ணவ குலத்தைக் காத்தருள்பவரும் அதன் தலைவரும் ஆழ்வாரே.

22 ஆழ்வார் திருவடிகளின் சிறப்பு

ஆழ்வாருடைய இரண்டு திருவடிகளும் இயற்கையாக மிக்க அழகுடையனவாய் ஸகலமங்களங்களையும் அளிப்பனவாய் விளங்குவன. அக்காலத்தில் உள்ள ஸாத்விகப் பெரியோர்கள் ஆழ்வாரின் இரண்டு திருவடிகளிலும் மகிழம்பூமாலையை அணிவித்து அம்மலர்களால் அருச்சித்தனர், அந்த மாலைகள் அத்திருவடிகளி

http://acharya.org

அழகை மேலும் வளர்க்கின்றன. அந்த மகிழ மணத்தை நாம் முகரும்போது ஆழ்வார் அருளிச் செயலிலும் அந்த மணம் நிலையாய் நின்று வீசுவதைக் குறிப்பிடுவது போன்ற உணர்ச்சி உண்டாகின்றது. ஆழ்வார் திருவாக்கினின்று அவதரித்த அருளிச் செயலே பரதேவதை இன்னாரென்று நிர்ணயித்துத் தரவல்லது ஆதலின் அதிலும் ஆழ்வாருக்கே உரிய மகிழமலர் மணம் வீசுவதாய்க் காண்பது மிகப் பொருத்தமே. ஆழ்வார் திருவடிகளில் உள்ள அழகிய சின்னங்களை ஸேவிக்கும் போது ஆழ்வார் ஸ்ரீவைஷ்ணவப் பேரரசுக்கு முடிசூடிய மன்னரெனத் தெளிவாய்ப் புலனாகின்றது. தம்மை அடைந்தவருக்கு வைணவச் செல்வத்தை அளிப்பன அத் திருவடிகள். அவற்றின் பெருமிடுக்கைக் காணும் போது எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தற்காக வெளியே புறப்பட முற்படுவனபோல் தோன்றுகின்றது. அந்தத் திருவடிகள் இரண்டும் ஒன்றுக் கொன்று ஒத்திருப்பதற்கு வேறு உவமை கூறமுடியாது. அந்த இரண்டுக் குள்ளேயே ஒன்றை மற்றொன்றுக்கு உவமையாய்க் கூறிக்கொள்ள வேண்டும். இரண்டு தேவதைகளையுடைய யாகங்களில் ஹோமத்தில் இருவரையுமே இலக்காக்கிக் கொள்ள வேண்டுவது போல் இரண்டு திருவடிகளும் பிரிக்க முடியாமல் சேர்ந்தே நாம் வழிபடுதற்கு உரியன. இப்படி அநுபவிப்பதற்கு ஏற்ற எல்லையற்ற இனிமையுடையனவாய் நம்மைக் கைவிடாது ரக்ஷிப்பனவான ஆழ்வார் திருவடிகளை வாக்கினால் போற்றுவதும் மனத்தால் தியானிப்பதும் மட்டு மின்றி மிக்க பக்தியுடன் தலையினாலும் எப்பொழுதும் தொடர்ந்து வணங்கிக் கொண்டேயிருந்து முக்கருவிகளையும் பயன் படுத்திக் கொண்டேயிருப்பேன், என்று கூறிமுடிக்கின்றார் ஆளவந்தார்.

23 ஸ்ரீ தேசிகன் தீர்ப்பு—முடிவுரை

இங்ஙனம் ஆழ்வார் திருவடிகளைப் பற்றி ஆளவந்தார் அருளிச் செய்த சுலோகத்துக்கு அவர் திருவுள்ளத்தில் பொதிந்துள்ள கருத்தினை நம் தேசிகன் நம் கண்முன் காட்டி விளக்கியருளினார். பின் ஆழ்வார் விஷயத்தில் அறியாதார் எழுப்பும் சங்கைக்கு விடை கூறி அவர்கள் வாயை மூடுகின்றார் நம் தேசிகன். சிலர் ஆழ்வார் தோன்றிய ஜாதி முதலியவற்றைக் கூறிக் கொண்டு அறியாமையால் சில கேள்விகளைக் கேட்கின்றனராம். தமிழ் மறையைக் கண்டருளிய ஆழ்வார் பெருமை அதியற்புத மானது. தத்துவத்தை நன்கு கேட்டு உணர்ந்தவர்களுக்கு இங்குக் குழப்பம் எதுவும் ஏற்படாது. எம்பெருமான் பிராட்டியை நோக்கி 'தேவி! தேவரஹஸ்யங்களென்று சில உண்டு. அவற்றைப் பற்றியும் அவை போன்ற மற்ற அம்சங்களிலும் வீண் ஆக்ஷேபம் செய்வதில் பயன் இல்லை. செவிடனும் குருடனும்போல் மௌன மாயிருப்பதே அறிஞர் கடமை' என்று அருளிச் செய்ததை உள்ளத்துக் கொண்டு ஆழ்வார் விஷயமும் ஒரு தேவரஹஸ்ய மெனக் கண்டு அறிஞர்கள் திருப்தியடைய வேண்டும். இதுவே இந்தச் சுலோகவுரையில் கடைசியில் ஸ்ரீதேசிகன் வெளியிட்ட தீர்ப்பு.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஆழ்வாரும் மணவாள மாமுநியும்

ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரன் "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" என்னும்படி ஆழ்வாருக்கு* மயர்வற மதிநலமருள, இப்படி நிர்ஹேதுககடாக்ஷ பாத்ரபூதரானவாழ்வாரும் "அருள் கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினன்" என்னும்படி திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை*பண்ணார் பாடலாம்படி பாடியருளி, அநந்தரம் தம்முடைய நிரவதிகக்ருபையாலே மதுரகவி ப்ரப்ருதி ஸஜ்ஜநங்களுக்கு "அந்தாதிமேலிட்டறிவித்தேனாழ் பொருளைச் சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து" என்னும்படி யுபதேசித்து, அவ்வளவுமன்றிக்கே * ஊரும்நாடுமுலகமும் தம்மைப்போலேயாம்படி*செயல் நன்றாகத் திருத்திப் பணிகொண்டருளி நடத்திப் போந்த வநந்தரம் நெடுங்காலம் சென்றவாறே இத்திவ்ய ப்ரபந்தங்கள் ஸங்குசிதமாய்ப் போனபடியைத் திருவுள்ளம்பற்றி, "இதுக்காவாரார்" என்றுபார்த்து, நாதமுனிகளை "அருள்பெற்ற நாதமுனி" என்னும்படி தம்முடைய கடாக்ஷ விசேஷத்தாலே கடாக்ஷித்தருளி, இவர்க்கு திவ்யஜ்ஞாநத்தையுமுண்டாக்கி, அந்ததிவ்யசக்ஷுஸ்ஸுர் மூலமாகவே ஶரணாகதி புரஸ்ஸரமாக தீர்க்க ஶரணாகதியான திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களையும் ப்ரகாஶிப்பித்தருளினார்.

இப்படி ஆழ்வாருடைய திவ்யகடாக்ஷத்துக்கு விஷயபூதரான நாதமுனிகளும் இத்தமிழ் மறைகளை இயலிசையாக்கி நடத்தியும், அதுக்கு மேலே குருகைகாவலப்பன், உய்யக்கொண்டார் துடக்கமான ஆஸ்திகரைக் குறித்து, ப்ரபத்த்யர்த்த ஸஹிதமாக வித்தைப்ரஸாதிக்க, அவர்களுமப்படியே அவர் திருப்பேரனார்க்கு மணக்கால் நம்பி முகேந ப்ரஸாதிப்பிக்க, பின்பு அவரும் அத்தை வர்த்திப்பிக்க, அவர் கடாக்ஷ லக்ஷ்ய பூதராய்*மாறனடிபணிந்துய்ந்த எம்பெருமானாரும், "வளர்த்த விதத்தாய்" என்னும்படி வர்த்திப்பித்துக்கொண்டு பின்பு, *ராமாநுஜபதாம்போஜ ஸமாஶ்ரயண ஶாலிகளான கோவிந்த கூராதிப பட்டார்ய நிகமாந்தமுநி பர்யந்தமாய் உபதேஶபரம்பரயா ஸங்குசிதவ்யாக்யாநமாக நடந்து சென்ற விது நம்மாழ்வாரவதாரமாய் நம்பிள்ளையென்று பேர்பெற்ற லோகாசார்யராலே லோகமெங்கும் வெள்ளமிடும்படி *ஈர்த்தும்ஸாயிரமான திருவாய்மொழி விஶதவ்யாக்க்யாந ரூபமாய் ப்ரவஹிக்க அது மேலோரளவும் விஸ்த்ருதமாயிற்று.

இப்படி பரம்பரயா நந்த திருடந்துவவாய்மொழியினீட்டின் ஸம்ப்ரதாய க்ரமந்தான் ஜீயரிடத்திலே "மணவாளமாமுனியான வேரிதேங்கி" என்னும்படி தேங்கிற்று.

அத்தைப்பற்றவிறே "தமிழ்வேதமாகிய வோதவெள்ளங் கரை கண்டகோயில் மணவாளமாமுனி" என்றுஞ்சொன்னார்கள்.

இப்படி முப்பத்தாறுயிரப்பெருக்கராகையாலே "மதிளரங்கர் வண்புகழ் மேலான்ற தமிழ்மறைகள்" என்னும்படி தம்விஷயமான திருவாய்மொழியினர்த்தத்தை இவரிடத்திலே கேட்கவேணுமென்று, பெருமாள் தாமுந் திருவுள்ளமாய் "ஶ்ருத்வா கூடம் ஶடரிபுகிராமர்த்ததத்வம் த்வதுக்தம்" என்னும்படி யாழங்காற்பட்டுக் கேட்டருளினாரிறே.

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

அதின் பின்பு ஸ்ரீபட்டநாதமுனி வாகமஹாத்ரியோகி துடக்கமான வாசார்யர்களாகிற கால்களாலே புறப்பட்டுக் காடுங்கரம்பு மெங்குமேறிப் பாய்ந்து பலித்தது. இப்படி ஈஶேஶிதவ்யவிபாக மற ஸ்வஸூக்தியாலே வஶீகரிக்கவல்ல வைபவமானது "மணவாளமாமுனி தோற்றியபின்னல்லவோ தமிழ் வேதந்துலங்கியது" என்றும், "மணவாளமாமுனி வந்திலனேலாற்றிற்கரைத்த புளியல்லவோ தமிழாரணமே" என்றும் அந்வய வ்யதிரேகங்களிரண்டாலும் சொல்லப்பட்டது.

ஏவம்வித மாஹாத்ம்ய யுக்தரான விவர் தம்முடையவநுபவத்துக்குப்போக்குவீடாகவும், திருவாய்மொழியினுடைய துர்க்க்ரஹமான வர்த்தங்களை யெல்லாருமறியும்படி ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும், "சொல்லும்பொருளுந் தொகுத்துரைத்தான்" என்னும்படி ஸங்கதியாக விப்ப்ரபந்தத்திலே யருளிச்செய்கிறார். ஈட்டில் ஸங்கதியேயாயிற்று இவர்தாமிப்படி ஸங்க்ரஹித்தருளிச் செய்கிறது.

இப்ப்ரபந்தங்களுக்கு அநேகநிர்பந்தங்களுண்டாயிறே யிருப்பது; அதெங்ஙனேயென்னில்; "வெண்பா" என்கிறசந்தஸ்ஸாகையும், இப்படியான விப்பாட்டில் முற்பாதியிலே ஓரோர் திருவாய்மொழியின் தாத்பர்யமும், தத்ஸங்கதிகளடைகையும், பாட்டுக்கள்தோறும் ஆழ்வார் திருநாமங்கள் வருகையும், அதில் தாத்பர்யங்களைத் தத்பர்யந்தமாகப் பேசுகையும், அந்தாதியாய் நடக்கையுமாகிற வைந்து நிர்ப்பந்தமுண்டாயிருக்குமாயிற்று. இதுதான் *பாலோடமுதன்னவாயிரமான திருவாய்மொழியின் ஸாரமாகையாலே "திருவாய்மொழி நூற்றந்தாதியாந்தேனை" என்னும்படி ஸரஸமான நிரூபகமாய், ஆயிரத்தின் ஸங்க்ரஹமாகையாலே ஓரோ திருவாய்மொழியினர்த்தத்தையோரோர்பாட்டா யருளிச்செய்கையாலே அதுதான் நூறுபாட்டாய்,* அல்லும்பகலுமநுபவிப்பார்க்கு நிரதிஶயபோக்யமாய், அவ்வளவு மன்றிக்கே உடையவர் நூற்றந்தாதியோபாதி ஆழ்வார் நூற்றந்தாதியு முத்தேஶ்யமாகையாலே ஆழ்வார் திருவடிகளிலே ப்ரேமமுடையார்க்கு அநவரதாநுஸந்தேயமுமாயிருப்பதொன்றாயிற்று.

இதில் சரமபர்வமான வாழ்வார் திருவடிகளையிறே ப்ராப்ய ப்ராபகங்களாக நிஷ்கர்ஷிக்கிறது; அது தான்* பராங்குஶபாத பக்தராய் *சடகோபர் தே மலர்த்தாட்கேய்ந்தினிய பாதுகமாமெந்தையிராமானுசனளவும் வந்திருக்குமிறே.

ஆழ்வார்தாம் திவ்ய மஹிஷிகளுடையவும், திவ்யஸூரிகளுடையவும், முக்தருடையவும், முமுக்ஷுக்களுடையவும் படிகளையுடையராயிருக்கையாலே உடையவரும் இவர் விஷயத்திலேயாயிற்றீடுபட்டிருப்பது.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான பெரியஜீயரருளிச்செய்த

திருவாய்மொழி நூற்றந்தாதி

மூ.—உயர்வேபரன்படியை யுள்ளதெல்லாந்தான்கண்டு
உயர்வேதநேர்கொண்டுரைத்து-மயர்வேதும்
வாராமல் மானிடரை வாழ்விக்கும்மாறன்சொல்
வேராகவே விளையும்வீடு. (க)

http://acharya.org

(உயர்வேபரன்படியை யுள்ளதெல்லாந்தான் கண்டு) பரத்வத்தில் பரத்வமாயிற்று இத்திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கப்படுகிறது.

ஸர்வஸ்மாத் பரத்வத்தையாயிற்று. "உயர்வற உயர்நலம்" என்றருளிச் செய்தது;

உள்ளதெல்லாமாவது—முதற்பாட்டில் கல்யாணகுணயோகமும் நித்யவிபூதி யோகமும் விக்ரஹ வைலக்ஷண்யமும், இரண்டாம் பாட்டில், இவற்றுக்காஸ்ரயமான திவ்யாத்மஸ்வரூபம் சேதநா சேதந விலக்ஷணமென்னு மதுவும், மூன்றாம் பாட்டில் நித்ய விபூதியோபாதி ததியத்வாகாரத்தாலே அவனுக்கந்தரங்கமாய்த் தோற்றுகிற லீலாவிபூதி யோகமும், நாலாம்பாட்டில் அந்த லீலாவிபூதியினுடைய ஸ்வரூபம் அவனதீநமென்னுமதுவும், ஐந்தாம்பாட்டில் அதினுடைய ஸ்திதியும் அவனதீநமென்னு மதுவும், ஆறாம்பாட்டில் அதினுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் அவனதீநமென்னுமதுவும், ஏழாம்பாட்டில் ஜகத்துக்குமீஸ்வரனுக்கு முண்டான ஶரீராத்ம பாவமும், எட்டாம்பாட்டில் (இதுக்கிசையாதகுத்ருஷ்டி நிரஸநமும்) த்ரிமூர்த்தி ஸாம்யவாத நிரஸநமும், ஒன்பதாம்பாட்டில் ஶூந்யவாதி நிரஸநமும், பத்தாம்பாட்டில் வ்யாப்தி ஸௌகர்யமுமாகிறவிவை. இப்படி, உள்ளதெல்லாவற்றையும், (தான் கண்டு.) திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்ய மே யோகமைஶ்வரம்' என்னும்படி* மயர்வறமதிநலமருளி, அவன் ப்ரஸாதத்தாலே காட்டக்கண்டு.

(உயர்வேத நேர்கொண்டுரைத்து) அபௌருஷேயமாய் நித்ய நிர்தோஷமாய் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்கள் போலே ஹேத்வந்தரங்களாலழிக்க வொண்ணாதாகையாலே ஸர்வப்ரமாணோத்க்ருஷ்டமான ஶ்ருதிச்சாயையாலேயருளிச்செய்து. இப்படிவேதமார்க்கா நுஸாரியாயாயிற்று முதற்பாட்டுதொடங்கி யருளிச் செய்தது; அத்தைப்பற்றவிறே (உயர்வேதநேர்கொண்டுரைத்து) என்றிவரருளிச்செய்கிறது, "சுடர்மிகுசுருதி" என்றிறே ஶ்ருதிப்ரமாணத்தை யங்கீகரித்தருளிற்று. "அஹந்தா ப்ரஹ்மணஸ் தஸ்ய" என்று ஸ்வரூபாந்தர்பாவமுண்டாகையாலே ஸ்வரூபம் புக்கிடத்தே ஸ்வரூபநிரூபக பூதையான பிராட்டியுமுண்டாகக் குறையில்லை.

(மாறன் சொல் வேராகவே விளையும் வீடு) அதாவது-இப்படி ஸகல ஜீவோஜ் ஜீவநதத்பரரான வாழ்வார் திவ்யஸூக்தியடியாக பகவத்ஜ்ஞாநமுண்டாய், அதடியாக மோக்ஷலாப மென்றபடி; ஸூக்திமூலமாகவே முக்திபலிக்குமிறே. ததுக்தியாலேயாதல், தத்விஷயமான வுக்தியாலேயாதலாகலாமிறே. "தென்குருகூர்நகர்நம்பிக்கன்பனாய் மதுரகவி சொன்னசொல் நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே" என்னக்கடவதிறே.

மூ.—வீடு செய்து மற்றெவையு மிக்குபுகழ் நாரணன்தாள்
நாடுநலத்தாலடைய நன்குரைக்கும்— நீடுபுகழ்
வண்குருகூர் மாறனிந்த மாநிலத்தோர் தாம்வாழப்
பண்புடனேபாடி யருள்பத்து.

(வீடுசெய்து) இதில் தம்முடைய திருவுள்ளம்போலே அநுபவத்துக்குத் துணையாய்த் திருந்தும்படி ஸம்ஸாரிகளைக்குறித்துப் பரோபதேசம் பண்ணுகிற பாசுரத்தை‡ யநுபவித்து அருளிச்செய்கிறார்.

http://acharya.org

பகவத்வ்யதிரிக்த விஷயங்களின் தோஷபாஹுள்யத்தையும் பகவத்குண வைலக்ஷண்யத்தையு முபதேசியா நின்றுகொண்டு அப்ராப்த விஷயங்களைவிட்டு ப்ராப்த விஷயமான வெம்பெருமானை பஜியுங்கோளென்கிற* வீடுமின் முற்றத்திலர்த்தத்தை "வீடுசெய்து" இத்யாதியாலே யருளிச்செய்கிறார்.

(மற்றெவையும்) பஜநவிரோதிகளாய் அஹங்கார ஹேதுவாயுள்ள தடங்கலும் முமுக்ஷுவுக்கு த்யாஜ்யமிறே.

(நாடுநலத்தாலடைய நன்குரைக்கும்) "வீடுசெய்மின்" "இறையுள்ளுமினீரே" என்று நாடாகவே ஆஶ்ரயிக்கும்படி இவருபதேசிக்கிறது. அத்தை நினைத்திறே "நாடுநலத்தாலடைய" என்கிறது. நலத்தாலடைகையாவது-"எல்லையிலன்னலம் புல்கு" "அவன் முற்றிலடங்கே" "ஈசனடங்கெழிலஃதென்றடங்குகவுள்ளே" "இறையுள்ளிலொடுங்கே" "ஒடுங்க வவன்கண்" என்று அங்காபரிஷ்வங்கம்போலே அபிநிவேஶத்தாலே யாஶ்ரயிக்கும்படியை விதித்தபடி.

உபதேஶத்துக்கு நன்மையாவது-நிர்ஹேதுகமாகவும், உபதேஶ்யார்த்தங்களில் ஸங்கோசமின்றிக்கே உபதேசிக்கையுமென்றபடி.

(பண்புடனேபாடியருள்பத்து) பண்பு-ஸ்வபாவம். தம்முடைய க்ருபாஸ்வபாவத்தாலேயாதல், ஔதார்யஸ்வபாவத்தாலேயாதல், பரப்பறப் பாடி யருளினது பத்துப்பாட்டாயிற்று.

"பாட்டுக்கு க்ரியையும், பத்துக்குக் கருத்தும்" என்கையாலே பத்துப்பாட்டுக்கு முயிர்ப்பாட்டு ப்ரதாநமாயிருக்கும், அந்த நிதாநப்பாட்டுக்கு ஶேஷமாயிருக்கும் மற்றப் பாட்டடங்கலும்; இது இத்திருவாய்மொழி திவ்யப்ரபந்தத்துக்கெல்லா முள்ள தொன்றிறே. "வீடுமினென்று த்யாஜ்யோபாதேய தோஷகுணபரித்யாக ஸமர்ப்பண க்ரமத்தை ஸாலம்பநமந்த்ரமாக வுபதேசித்து" என்று ஆசார்யஹ்ருதயத்திலே நாயனாருமருளிச் செய்தார். இத்தை பக்திபரமாக யோஜித்து பாஷ்யகாரர் பாஷ்யம் தலைக்கட்டியருளினபின்பு, ப்ரபத்திபரமாக யோஜித்த க்ரமதத்தைப்பற்றவாயிற்று ஆசார்யர்களெல்லாரு மப்படியே யோஜித்தார்கள்; இவருமப்படியே யருளிச்செய்தார்.

மூ.—பத்துடையோர்க்கென்றும் பரனெளியனும் பிறப்பால்
முத்திதரு மாநிலத்தீர் மூண்டவன்பால்—பத்திசெயும்
என்றுரைத்த மாறன்றனின் சொல்லாற்போம் நெடுகச்
சென்ற பிறப்பாமஞ்சிறை.

(பிறப்பால்) அவதாரத்தாலே; 'பலபிறப்பாயொளிவரும்' என்றத்தை நினைக்கிறது.

(முத்திதரும்). அவதரித்தவிடத்தே பக்ஷிக்கும் ரக்ஷஸ்ஸுக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கும்.

(நெடுகச் சென்ற பிறப்பாமஞ்சிறை) அநாதிகாலம் தீர்க்கமாய்ப்போந்த ஜந்மமாகிற க்ரூரமானசிறை. "அறுவர்தம்பிறவியஞ்சிறை" என்றத்தை யநுவிதாநம் பண்ணினபடி.

http://acharya.org

" த்யக்த்வாதேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்னக்கடவதிறே.

மூ.—அஞ்சிறையபுட்கள் தமை யாழியானுக்கு நீர்
என்செயலைச் சொல்லுமென விரந்து—விஞ்ச
நலங்கியதும் மாறனிங்கே நாயகனைத்தேடி
மலங்கியதும் பத்திவளம்

(ஆழியானுக்குநீர்) "கடலாழிநீர் தோற்றி யதனுள்ளே கண்வளருமடலாழி யம்மானை" என்றத்தைக் கடாக்ஷித்தபடி. முதல் தூதுக்கு விஷயம் வ்யூஹமிறே.

(என்செயல்) தன்னுற்றாமையை ஆவிஷ்கரித்தமை; "என்பிழையே நினைந்தருளி யருளாத திருமாலார்க்கென் பிழைத்தாள் திருவடியின் தகவினுக் கென்றொருவாய்ச் சொல்" என்று அவனபராத ஸஹத்வத்தை ஆவிஷ்கரித்ததும் இதிலேஸூசிதம்.

மூ.—வளமிக்கமால் பெருமை மன்னுயிரின் தன்மை
உளமுற்றங்கூடுருவ வோர்ந்து—தளர்வுற்று
நீங்கநினை மாறனை மால் நீடுலகு சீலத்தால்
பாங்குடனே சேர்த்தான் பரிந்து.

அவன் பெருமையையும் தம் சிறுமையையும் நினைத்து "ஸர்வபோக்யனானவனை அயோக்யனான நான் கிட்டி தூஷிப்பதில் அகன்றுபோகை நன்றென்று தாமகலப்புக, "ஆழ்வீர்! உம்முடையபொல்லாங்கைப்பாராதே நம்முடைய செல்லாமையைப்பாரீர்" என்று "ஆக்ரம்யலோகாந்" என்கிற த்ரிவிக்ரமாபதாநஸித்தமான தன் ஸௌசீல்யத்தையும், நவநீதசௌர்யவ்ருத்தாந்தஸித்தமான தன் செல்லாமையையுங்காட்டித் தம்மை அவன் சேர்த்துக்கொள்ள, அத்தாலே தாம் அகலுகை தவிர்ந்து பொருந்தின படியை யருளிச் செய்கிற*வளவேழுலகிலர்த்தத்தை "வளம்மிக்க" இத்யாதியாலே யருளிச் செய்கிறார்.

திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி இவரையும் சேர விரும்பினான். "வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான் பொய்கலவாது, என் மெய்கலந்தானே" என்னக்கடவதிறே.

மூ.—இவையறிந்தோர் தம்மளவிலீசனுவந்தாற்ற
அவயவங்கடோறுமணையும்—சுவையதனைப்
பெற்றார்வத்தான்மாறன் பேசின சொற்பேச, மால்
பொற்றாள் நஞ்சென்னிபொரும்.

(இவையறிந்தோர் தம்மளவில்) இந்த ஆர்ஜவகுணத்தை யறிந்தவர்கள் விஷயத்திலே. (ஈசனுவந்தாற்ற வவயவங்கள் தோறுமணையும் சுவையதனைப்பெற்று) ஸர்வேஸ்வரன் ஹ்ருஷ்டனாய் ஸாத்மிக்க ஸாத்மிக்க, ஸர்வாவயவங்களிலும் ஸம்ஸ்லேஷிக்கும் ரஸந்தன்னைப் பெற்றுப் பொறுக்க பொறுக்க உறுப்புத்தோறும் சுறிப்புத்திரக் கலக்குமதான பெருப்பேற்றைப்பெற்று.

http://acharya.org

"என்னுடைச்சூழலுளானே" "அருகலிலானே" 'ஒழிவிலனென்னோடுடனே' கண்ணனென்னொக்கலையானே' "மாயனென்னெஞ்சினுளானே" 'என்னுடைத், தோளிணையானே' "என்னுடை நாவினுள்ளானே" 'கமலக் கண்ணனென்கண்ணினுளானே" 'என்னெற்றியுளானே' 'என்னுச்சியுளானே' என்று தலைக்குமேலே ஏறினபடியை அடியொற்றினபடி.

மூ.—திண்ணிதாமாறன் திருமால் பரத்துவத்தை
நண்ணியவ்தாரத்தே நன்குரைத்த—வண்ணமறிந்து
அற்றார்கள் யாவரவரடிக்கே யாங்கவர்பால்
உற்றாரை மேவிடாதான். (௯)

(நண்ணியவதாரத்தே நன்குரைத்த) திருமால் பரத்துவத்தை அவதாரத்தே நண்ணி நன்குரைத்த. முதற்றிருவாய்மொழியிலே ஸ்ருதிச்சாயையாலே பரத்வே பரத்வத்தை யருளிச்செய்தாப்போலன்றிக்கே; இதிஹாஸபுராண ப்ரக்ரியையாலே அதிஸுலபமான அவதாரத்திலே பரத்வத்தை யாஸ்ரயணீயமாம்படி நன்றாக வருளிச்செய்த.

இப்படி யருளிச்செய்யுமிடத்து (௪) "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்தி: அபிசாப்யய:" என்றும் "ஸ ஏஷ ப்ருது தீர்க்காக்ஷஸ் ஸம்பந்தீ தே ஜநார்தந:" என்றும் "அர்ச்ச்ய மர்ச்சிது மிச்சாமஸ் ஸர்வே ஸம்மதந்துமர்ஹத" என்றும் "பாதேந கமலாபேந ப்ரஹ்மருத்ரார்சிதேந ச" என்றும் ப்ரமாணங்களைப் பின்சென்றிறே யருளிச்செய்தது;

மூ.—புகழொன்று மாலெப்பொருள்களுந்தானாய்
நிகழ்கின்றநேர் காட்டிநிற்க—மகிழ்மாறன்
எங்குமடிமைசெய விச்சித்து வாசிகமாய்
அங்கடிமை செய்தான் மொய்ம்பால்.

(எப்பொருள்களுந்தானாய் நிகழ்கின்ற நேர்காட்டிநிற்க) ஸமஸ்த வஸ்துக்களும் தானென்னும்படி ஸர்வஸப்த வாச்யனாய் வர்த்திக்கிற ப்ரகார ப்ரகாரி பாவத்தை ப்ரகாஸிப்பித்துக்கொண்டு இவர்க்கு ஜ்ஞாந ஸாக்ஷாத்காரமாம்படிநிற்க.

(மகிழ்மாறன்) வகுளதரரான வாழ்வார். (எங்குமடிமை செய விச்சித்து) ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே யடிமை செய்ய விச்சித்து (வாசிகமாயங்கடிமை செய்தான்) அப்படியாசைப்பட்ட அவ்விஷயத்திலே-"என்கோ" "என்கோ" என்று வாசிகமாக வடிமை செய்தார்.

மொய்ம்பு-மிடுக்கு, "கண்ணவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றும், "வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" என்றும், 'கண்ணாயேழுலகுக்கு முயிராயவெங்கார்வண்ணனை விண்ணோர் தாம் பரவும் பொழில் வேங்கடவேதியனை" என்றும், "தாய் தந்தையுயிராகின்றாய்-பாகின்றதொல் புகழ் மூவுலகுக்கும் நாதனே பரமா தண் வேங்கடமேகின்றாய்' என்றும், "திருவேங்கடத்தானுக்கு என் கட்பாசம் வைத்தபரஞ்சுடர்ச்சோதிக்கு" என்றும், "அம்பரம்" இத்யாதியாலும்—அவனுடைய வுபயவிபூதி நிர்வாஹகத்வத்தையும் அந்தர்வ்யாப்தியையும் ஸர்வகாலவர்த்தித்வத்தையு

http://acharya.org

மருளிச் செய்கையாலே, வ்யாப்த்ய நுஸந்தாந ரூபவாசிகைங்கர்யம் *திருவேங்கடத் தென்னுனை யென்னப்படுகின்ற பெருமானுக்கேயிறே யேற்றிருப்பது "அத்தைப்பற்ற விறே" "அங்கடிமைசெய்தான்" என்றிவரருளிச்செய்தது.

மூ.—செய்யபரத்துவமாய்ச் சீரார்வியூகமாய்த்
துய்யவிபவமாய்த் தோன்றிவற்றுள்—எய்துமவர்க்கு
இந்நிலத்திலர்ச்சாவதார மெளிதென்றான்
பன்னுதமிழ்மாறன் பயின்று.

(அர்ச்சாவதாரமெளிதென்றான்) ஸௌலப்யத்தாலே அர்ச்சாவதாரம் ஸமாஶ்ர யணத்துக்கு, சக்ஷுர்விஷயமுமாய், ஸித்யஸந்நிதியுமுண்டாகையாலே அதிஸுலபமென் கிறார். "நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும் நீள்கடல் வண்ணன்" என்றத்தை நினைக்கிறது.

"எளிவரும் இயல்வனுமென்றவைபரத்வமாம்படி அவனுடைய ஸௌலப்ய காஷ்டையைக்காட்டி" என்றாரிறே.

"ஶ்ரீமத்யாயதநே விஷ்ணோஶ் ஶிஶ்யே நரவராத்மஜ:" என்றும்,

"நாராயணமுபாகமத்" என்றும்-விபவத்தாலே அர்ச்ச்யமான வேற்றமுண்டா யிறேயிருப்பது.

(பன்னுதமிழ்மாறன்பயின்று).

த்ரவிடத்தையேநிரூபகமாக வுடையரானவாழ்வார், "பண்ணியதமிழ்" என்னும் படி ப்ரமாண சரமத்தை வெளியிட்டாப்போலே, ப்ரமேயசரமமான அர்ச்சாவதார மெளிதென்று வெளியிட்டருளினாரென்கை.

மூ.—ஒருநாயகமாயுலகுக்கு வானோர்
இருநாட்டிலேறி யுய்க்குமின்பம்—திரமாகா
மன்னுயிர்ப்போகந்தீது மாலடிமையே யினிதாம்
பன்னி யிவைமாறனுரைப்பால்.

(மன்னுயிர்ப்போகந்தீது). இறுகலிறப்பு என்று ஸங்கோசரூபமோக்ஷமாகை யாலே அதுவும் தோஷயுக்தமாயிருக்கும். மன்னுயிர்ப்போகமென்கையாலே —நித்ய மான வாத்மாநுபவம் கீழிலவைபோலே அஸ்த்திரபோகமன்றிக்கே நித்யபோகமா யிருந்ததேயாகிலும், பரப்ரஹ்மாநுபவத்தைக் குறித்துச் சிற்றின்பமாயிருக்குமாகை யாலே—தீதென்றது.

மூ.—வீற்றிருக்குமால் விண்ணில் மிக்கமயல்தன்னை
யாற்றுதற்காத் தன் பெருமையானதெல்லாம்—தோற்றவந்து
நன்றுகலக்கப்போற்றி நன்குகந்து வீறுரைத்தான்
சென்றதுயர்மாறன் தீர்ந்து.

http://acharya.org

(வீற்றிருக்குமால்) இதில்—அப்ராக்ருத விபூதியிலஸாதர்ரணாகாரத்தைக் காட்டவநுபவித்து ஹ்ருஷ்டராகிற படியைப் பேசின'பாசுரத்தை யநுவதித்தருளிச் செய்கிறார். விலக்ஷண ஸ்வரூபகுண விக்ரஹ விபூஷணாயுத பத்நீ பரிஜந விஶிஷ்டனாய்க்கொண்டு பரம பதத்திலே வ்யாவ்ருத்தி தோற்றவிருக்கிறமேன்மையும், லீலாவிபூதியிலுள்ளாரெல்லாரையும் ஸ்ருஷ்ட்யநுப்ரவேஶாதிகளாலே ரக்ஷிக்கிறவளவன்றிக்கே மநுஷ்யாதிரூபேண வந்தவதரித்து ரக்ஷித்துக்கொண்டு போருகிறபடியையும் இவர்க்குக் காட்டிக்கொடுத்து, ஸர்வேஶ்வரன் இவரோடேவந்துபூர்ணஸம்ஶ்லேஷம் பண்ணியருள, அத்தைக்கண்டு *சூழ்விசும்பணிமுகிலுக்கு மேல் அங்கே சென்றால் பண்ணுகிறமங்களாஶாஸநத்தை, இங்கேயிருந்து அவனுடைய வுபயவிபூத்யைஶ்வர்யத்துக்கும் மங்களாசாஸநம்பண்ணிக்ருதக்ருத்யராய், "உபயவிபூதியிலுமென்னோடொப்பாரில்லை" என்றுஹ்ருஷ்டராகிற *வீற்றிருந்தேழுலகில் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் "வீற்றிருக்குமால் விண்ணில்" இத்யாதியாலே யென்கை.

மூ.—ஏறுதிருவுடைய வீசனுகப்புக்கு
வேறுபடிலென்னுடைமை மிக்கவுயிர்—தேறுங்கால்
என்றனக்கும் வேண்டாவெனுமாறன்றாளே நெஞ்சே
நந்தமக்குப்பேருகநன்னு.

(ஏறுதிருவுடையவீசன்) பிராட்டி ஏகாயநையாகையாலே "நஹி மே ஜீவிதேந" இத்யாதியாலே-அத்தலைக்குறுப்பல்லாத வாத்மாத்மீயங்களில் நசையற்றபடி சொன்னாள்; இவர் மிதுநபரராகையாலே "திருமகளும் கூறுளுந் தனியுடம்பன்" என்றும், "மலர்மாதருறைமார்பன்" என்றும், "படநாகத்தணைக்கிடந்த பருவரைத்தோள் பரம்புருடன்" என்றும் இப்படி ஶ்ரிய:பதியாயிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய வுகப்புக்குப் புறத்தியான மாமைமுதலானவுடைமையோடு உயிரோடுவாசியற வேண்டாவென்கிறார்.

மூ.—நண்ணாதுமாலடியை நானிலத்தே வல்வினையால்
எண்ணாத்துன்பமுறுமிவ்வுயிர்கள்—தண்ணிமையைக்
கண்டிருக்கமாட்டாமற் கண்கலங்கு மாறனருள்
உண்டு நமக்குற்ற துணை யொன்று.

(நானிலத்தே) நாலுவகைப்பட்ட பூமியிலே. அதாவது-குறிஞ்சி நிலமான திருமலைகளிலும், முல்லைநிலமான திருக்கோட்டியூர் திருமோகூர் தொடக்கமான ஸ்தலங்களிலும், மருதநிலமான கோயில் பெருமாள்கோயில் தொடக்கமான ஸ்தலங்களிலும், நெய்தல் நிலமான திருவல்லிக்கேணி திருப்புல்லாணி திருவல்லவாழ் திருவண்வண்டூர் தொடக்கமான ஸ்தலங்களிலும், ஸுலபனாயிறே அவனிருப்பது: அந்தஸௌலப்யமே ஹேதுவாக அவன் திருவடிகளை யாஶ்ரயியாதே.

(தண்ணிமையைக் கண்டிருக்கமாட்டாமல்) இவர்களநர்த்தத்தைக் கண்டாற்றமாட்டாமால்.

(கண்கலங்குமாறன்) திருக்கண்களுந் திருவுள்ளமும் கலங்கிப்போருமாழ்வார்.

http://acharya.org

(அருளுண்டு நமக்குற்றதுணையொன்று) இப்படி ஈஶ்வரனுங்கூடக் கைவிட்ட ஸம்ஸாரிகளையுமகப்பட விடமாட்டாமல் ஈஶ்வரனோடே மன்றாடு மாழ்வாருடையவருள், அந்தரங்கமான ரக்ஷையாக நமக்கொன்றுண்டு, வேறொரு ரக்ஷகாந்தரந்தேடவேண்டா, தானேரக்ஷகமாயிருக்கும். " அருள் கொண்டாடுமடியவரின்பமெய்த அருள் கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினனருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கதே" என்னக்கடவதிறே.

மூ.—ஒன்றுமிலேத்தே விவ்வுலகம் படைத்த மால்
அன்றியென வாருமறியவே— நன்றாக
முதலித்துப் பேசியருள் மொய்ம்மகிழோன்றாடொழவே
காதலிக்கு மென்னுடையகை.

ஒன்றுந் தேவிலர்த்தத்தை " ஒன்றுமிலேத்தேவு " என்றுதொடங்கியருளிச்செய்கிறாரென்கை.

(முதலித்துப்பேசியருள் மொய்ம்மகிழோன்) அதாவது இனிபரத்வ விஷயமாகப்பரோபதேஶம்பண்ண வேண்டாதபடி நன்றாகவே சேதநர் திருந்தும்படி

அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தை யுபதேசிக்கையாலே, பரத்வ விஷயஶங்கைதீர்ந்து திருந்தக்கண்டு, சாத்தினவழகிய திருமகிழ் மாலையும் ஸம்ருத்தமாய் அதுவேநிரூபகமாம்படியான வாழ்வாரென்கை. " நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன் " என்றத்தைப்பின் சென்றபடி.

கேஸரமாலாலங்க்ருத வக்ஷஸ்தலரான வாழ்வார்
காதலிக்கை—பத்தி பண்ணுகை. கௌதூஹலிக்கையாகவுமாம்.

மூ.—பொலிகபொலிகவென்று பூமகள்கோன்தொண்டர்
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி—உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன் சொல்
மருந்தாகப் போகும் மனமாசு.

பூமகள்கோன் தொண்டர் மலிவாவது

நித்யஸித்தர் ஶ்வேத த்வீபவாஸிகள் முதலான திருமாலடியாரெங்கும் திரண்டஸம்ருத்தி. நித்யஸித்தர்க்கும் ஶ்வேதத்வீபவாஸிகளுக்கும் ஸமாநராய்த் திருந்தத் திருந்தின ஶ்ரீவைஷ்ணவர்களென்றுமாம்.

(உலகில் திருந்தாதார்தம்மைத்திருத்திய மாறன்சொல் மருந்தாகப் போகும்மனமாசு) ஒன்றும்தேவி லுபதேஶத்திலுந்திருந்தாதேபொதுங்கியிருந்தவர்களைக் குறித்து,

பரத்வோபதேஶம் பண்ணித் திருத்தியும், அதிலும் திருந்தாதவர்களைத்

http://acharya.org

தேடித்தடவிப் பிடித்து ப்ரத்யவாயபுரஸ்ஸரமாகத் திருத்தியும் சொல்லு கிற ஆழ்வார் ஸ்ரீஸூக்த்பௌஷதமடியாக மனோமாலின்யம் நிவ்ருத்தமாம். ஸ்ரீவைஷ்ணவ ஸாஜாத்யபுத்தியும், தேவதாந்தரங்களிடத்தில் பரத்வபுத்தியு மிறே—மனோமாலிந்யமாவது ; "மனனகமலமறக் கழுவி" என்றாரிறே

"விஷவ்ருக்ஷபலங்கள் கைக்கூடினவர் அடிமைபுக்காரையுமாட்செய் வாரையுங்காண, லோகத்வீபாந்தரங்களினின்றும் போந்த தேவர்குழாங்களைக் கண்டு காப்பிட்டு ப்ரஹ்லாதவிபீஷணர் சொற்கேளாத வரக்கரசுரர் போல் வாரைத் தடவிப்பிடித்து, தேசகாலதோஷம்போக எங்குமிடங்கொண்டவர்களை மேவித்தொழுது உஜ்ஜீவியுங்கோள். நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதை களாக நிறுத்தினவனை மேவிப்பரவு மவரோடொக்கத் தொழில் யுகதோஷமில்லை யாமென்று விஷ்ணுபக்திபராக்கி" என்றிறே யருளிச்செய்தது.

மூ.—வைகல் திருவண்வண்டூர் வைகுமிராமனுக்கென்
செய்கைதனைப் புள்ளினங்காள்செப்புமெனக்-கைகழிந்த
காதலுடன் தூதுவிடுங்காரிமாறன்கழலே
மேதினியீர் நீர்வணங்குமின்.

(வைகல் திருவண்வண்டூர் வைகுமி ராமனுக்கு) "தேறு நீர்ப்பம்பைவட பாலைத் திருவண்வண்டூர், மாறில் போரரக்கன்மதிள் நீறெழச்செற்றுகந்த ஏறுசேவகனார்" என்றத்தை நினைக்கிறது. இரண்டாம் தூதுக்குவிஷயம் விபவ மிறே. "வ்யவஸாயஜ்ஞர்ரக்ஷணஸ்தைர்யம் பம்போத்தரதேசஸ்தம்" என்ரு ரிறே. திருவண்வண்டூரிலே பிற்பட்டாரை ரக்ஷிக்கைக்கு ஸர்வகாலமும் நித்ய வாஸம்பண்ணுகிற சக்ரவர்த்தித்திருமகனுக்கு ஜநககுலஸுந்தரி "ஜீவந்தீம்" என்று ஆள் விட்டதும் பம்பாபரிஸர பர்வதத்திலே வர்த்திக்கிறவரைக் குறித்தாயிற்று.

மூ.—பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி
என்னிடரைமாலுக்கியம்புமென—மன்னுதிரு
நாடுமுதற்றூது நல்கிவிடு மாறனையே
நீடுலகீர் போய்வணங்குநீர்.

(மன்னுதிருநாடு முதற்றூதுநல்கிவிடு) திருநாடுமுதலாவது—"மூன்றாம் தூதுக்கு விஷயம் பரத்வத்வயம்" என்கையாலே திருநாடும் நெஞ்சநாடும் விஷயம். "மாமதுவார்தண்டுழாய் முடிவானவர்கோனைக்கண்டு" என்றும், "மாசறுநீலச்சுடர் முடிவானவர்கோனைக்கண்டு" என்றும், "கார்த்திரள் மாமுகில்போல் கண்ணன் விண்ணவர்கோனைக்கண்டு" என்றும், "எங்குச் சென்றாகிலுங்கண்டு" என்றும்-பரத்வாந்தர்யாமித்வ விஷயதூத ப்ரேஷண மாயிருக்குமித்திருவாய்மொழி,

http://acharya.org

மு.—உலகுய்யமால் நின்றவுயர்வேங்கடத்தே
அலர்மகளை முன்னிட்டவன்றன்—மலரடியே
வன்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன்றாளிணையே
உன்சரணாய் நெஞ்சமேயுள்.

(அவன்றன் மலரடியே வன்சரணாய்ச்சேர்ந்தமகிழ்மாறன்) "திரு வேங்கடத் தானே புகலொன்றில்லா வடியே னுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே" என்று தம் வெறுமையை முன்னிட்டு அவன்றிருவடிகளை நிரபேக்ஷோபாயமாக ஸ்வீகரித்த ஆழ்வாருடைய திருவடிகளே உனக்கு உபாயமாகஸ்வீகரி. "அகல கில்லேனென்று-பூர்வவாக்யமநு ஸந்தித்தார்" என்னும்படி ஸக்ரமமாக ஶரண வரணம் பண்ணுகையாலே, சாத்தின திருமகிழ்மாலையும் ஸம்ருத்தமாயிற்று. ஶரண்யன் * தண்டுழாய் விரைநாறுகண்ணியனைப்போலே, ஶரணாகதரான இவரும் மகிழ்மாறனானர். அதுஶேஷித்வத்யோதகம். இதுஶேஷத்வத்யோதகம். அவர் பூந்துழாயானடியை யடைந்தாப் போலே, இவரும் "மகிழ் மாறன்றாளிணையேயுன் சரணாய் நெஞ்சமே யுள்" என்கிறார்; நெஞ்சே! வகுளாபிராமமான திருவடிகளை யுனக்கு உபாயமாக அத்யவஸித்துப்போரு என்கிறார்.

மு.—கண்ணிறைய வந்துகலந்தமாலிக்கலவி
திண்ணிலையாவேணுமெனச் சிந்தித்துத்-தண்ணிதெனு
மாருயிரினேற்றமதுகாட்ட வாய்ந்துரைத்தான்
காரிமாறன்றன்கருத்து

(தண்ணிதெனுமாருயிரினேற்றமதுகாட்ட) இவர் 'சிறியேனுடைச் சிந்தை" என்றநுஸந்தித்துப்போருகிற வாத்மாவினுடைய பெருமையானதைக் காட்டியருள. (ஆய்ந்துரைத்தான்) ஆத்ம ஸ்வரூபவைலக்ஷண்யத்தை யாராய்ந் தருளிச்செய்தார்.

அதாவது-"தாஸஸ்ய" "தாஸோஹம்" என்னும்படி, "கண்கள் சிவந்து" என்று தொடங்கி "அடியேனுள்ளான்" என்றும் "அடியேனுள்ளான்" என்று தொடங்கி "உணர்விலும்பரொருவனே" என்றும் "உணர்விலும்பரொருவனை" என்று தொடங்கி "என்னுணர்விலுள்ளே யிருத்தினேன்" என்று இரண்டரைப் பாட்டாலும் தனக்கு ஸ்ரீகௌஸ்துபம்போல ஶேஷமாயிருக்கிற படியையும்,

ஆத்மாவினுடைய ப்ரக்ருதே: பரத்வமும். ஜ்ஞாத்ருத்வாதிகளும் போக்யதையும் ஜ்ஞானாநந்தத்வமும் முதலாக வருளிச் செய்தவையென்கை.

மு.—எங்காதலுக்கடி மாலேய்ந்தவடிவழகென்
றங்காதுபற்று சாவாங்கவன்பா—லெங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப்போகவிடுமாறன் தான்
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும்.

http://acharya.org

"தம்பிழையுய்சிறந்த செல்வமும் படைத்தபரப்பும் தமரோட்டைவாஸ மும் மறப்பித்த க்ஷமா தீக்ஷா ஸாரஸ்யஸௌந்தர்யங்களை யுணர்த்தும் வ்யூஹவி பவ பரத்வத்வயார்ச்சைகள் தூ துநாலுக்கும்விஷயம்" என்றிறே ஆசார்ய ஹ்ருதயத்திலே நாயனருளிச் செய்தது.

"அபராத ஸஹத்வாச்ச விபோஸ்ஸம்பந்தவைபவாத் | ஐகரஸ்யாச்ச ஸௌந்தர்யாத் கடகாங் யாசதேமுநி:" என்றிறே வாதி கேஸரி அழகிய மணவாள ஜீயரு மருளிச்செய்தது.

மூ.—கண்ணனடியிணையிற் காதலுறுவார் செயலை
திண்ணமுறவே சுருங்கச்செப்பியே—மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான் மாறன்
ஆளபுகழ்சேர் தன்னருள்.

(மண்ணவர்க்கு) பூமியிலுண்டான ஸர்வாத்மாக்களுக்கும் (தானுப தேசிக்கை தலைக்கட்டினான்மாறன்) பிராட்டி (க) "விதித:" இத்யாதி யாலே பரோபதேசத்தை முடித்தாப் போலே, கீழுபதேசித்துக் கொடுபோந்த பரோபதேசத்தைப் பரிஸமாப்திபண்ணி யருளினார் பெருமதிப்பரான வாழ்வார்.

மூ.—அருளாலடியிலெடுத்த மாலன்பா
லிருளார்ந்த தம்முடம்பை யிச்சித்து—இருவிசும்பி
லித்துடன் கொண்டேக இசைவுபார்த்தேயிருந்த
சுத்திசொல்லுமாறன் செஞ்சொல்.

(இசைவுபார்த்தேயிருந்த சுத்திசொல்லும்மாறன் செஞ்சொல்) விதி பாதந்த்ரனாய், ஸரைஸ்துஸங்குலாம்க்ருத்வா" இத்யாதிப்படியே பிராட்டி திருவுள்ளக்கருத்தைப்பின்சென்று செய்தாப்போலே, இவர நுமதிபார்த்தே யிருந்தவவனுடையஸூக்தியைச் சொல்லுமாழ்வாருடைய ஸ்ராவ்யமான ஸப்தங்கள்.

இவர் தம் தேஹத்தையொழியக்கொடுபோக வேணுமென்றபடியே பாதந்த்ரனாய் நின்றகுணஸூக்தியைப் பேசினபடியென்கை. * விதிவகையே நடத்துமவனே உபதேஸ ஸத்பாத்ரமென்ற பாத்ரஸூக்தியிறே.

http://acharya.org

மூ.—செஞ்சொற்பரன்றனது சீராருமேனிதனில்
வஞ்சித்துச்செய்கின்றவாஞ்சைதனின்—விஞ்சுதலைக்
கண்டவனைக்காற்கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட
திண்டிறல்மாறன்நந்திரு.

(சீரரும் மேனிதனில்) * தனிச்சிறையில் விளப்புற்று அஸ்நாதையா யிருந்த பிராட்டிவடிவைக் காணவாசைப்பட்டாப்போலே, * பிறவியஞ்சிறை யிலே ஜ்ஞாநபக்த்யாதிகள் விஞ்சியிருக்கிற விக்ரஹத்திலே.

(கைவிடுவித்துக்கொண்டதிண்டிறல்மாறன்) ஸர்வஶக்தி, "ஶரீரத்தோடே கொடுபோகவேணும்" என்று கரக்ரஹணம்பண்ண, இவர், சரணக்ரஹணம் பண்ணி விடுவித்துக்கொண்ட த்ருடமான ஶக்தியையுடைய ஆழ்வார், (நந்திரு) ஸம்பச்ச ஸாத்விகஜநஸ்ய" என்னும்படி ஆழ்வாரான மாறன் நம்முடைய ஸம்பத்து.

மூ.—திருமால்தம்பால் விருப்பஞ்செய்கின்றநேர்கண்டு
அருமாயத்தன்றகல்விப்பானென்—பெருமால் நீ
இன்றென் பாற்செய்வானென்னென்ன விடருற்றுநின்ருன்
துன்னுபுகழ்மாறனைத்தான் சூழ்ந்து.

(அருமாயத்தன்றகல்விப்பானென் பெருமால் நீ யின்றென்பால் செய் வானென்னென்ன) அன்றநாதிகாலம் துரத்யயமான ப்ரக்ருதியிலேயிட்டு வைத்து அகற்றிவிடுவானென்? இன்று நிர்ஹேதுகமாக நிரவதிக வ்யா மோஹத்தை, ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் நிரஸ்த ஸமஸ்த ஹேயனான நீ, அஜ்ஞனாய் அஶக்தனாய் ஹேயஸம்ஸர்க்கார்ஹனாயிருக்கிற வென்விஷயத் திலிப்படிச் செய்வானென்னென்றுகேட்க. "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னையென்னுள் வைத்தான் | அன்றென்னைப்புறம் போகப் புணர்த்ததென் செய்வான் | குன்றென்னத்திகழ் மாடங்கள் சூழ்திருப்பேரா | னென்றெனக் கருள் செய்ய வுணர்த்தலுற்றேனே' என்றத்தைக்கடாக்ஷித்தருளிச் செய்தபடி.

இப்படி அநர்த்யநாதரஹேதுசொல்லென்று மடியைப்பிடித்துக்கேட்க, அவனும் சிலஹேது பரம்பரைகளை இவருத்தரத்துக்கு ப்ரத்யுத்தரமாகச் சொல்லிக்கொடுபோர, இவர் தம்நாவீறுடைமையாலே அவனை நிருத்தரனும் படிபண்ண (என்னவிடருற்றுநின்ருன்) இப்படி இவரருளிச்செய்ய, மேல் போக்கடிகாணமல் தரையைக்கீறிக்கவிழ்தலையிட்டு ஸ்தப்தனாய் நின்ருன்.

(துன்னுபுகழ்மாறனைத்தான் சூழ்ந்து) "இது நிர்ஹேதுகமாகாதே!" என்று அவன் விஷயீகாரத்திலே விக்ருதராய் அத்தாலே வந்த ஸம்ருத்தமான யஶஸ்ஸையுடைய வாழ்வாரை, அந்த யஶஸ்ஸோபாதியாக த்தானும்சூழ்ந்து- இடருற்றுநின்ருன்!. "ஸர்வஜ்ஞனும் நிருத்தரனாய்நிற்பதே" என்று இவர்க்கீடு பாடாயிருக்கிறது.

http://acharya.org

மூ.—சூழ்ந்துநின்ற மால் விசும்பில் தொல்லேவழி காட்ட
ஆழ்ந்ததனை முற்று மநுபவித்து—வாழ்ந்தங்
கடியருடனே யிருந்தவாற்றை யுரைசெய்தான்
முடிமகிழ்சேர்ஞானமுனி.

(சூழ்ந்துநின்றமால்விசும்பில் தொல்லேவழிகாட்ட) கீழ் இவரைச்சூழ்ந்து கொண்டு நிருத்தராய்நின்ற ஸர்வேஶ்வரன், "ஏஷாஸாத்ருஶ்யதே" இத்யாதிப் படியே பரமாகாஶத்தில் "ஜகதஶ்ஶாஶ்வதே மதே" என்று பூர்வமார்க்கமான அர்ச்சிராதிமார்க்கத்தைக் காட்ட, அமந்த்ரஜ்ஞோத்ஸவகோஷம்போலே ஏறப் பெறுகிற வெழுச்சியை ஸூசிப்பிக்கிற மேக ஸமுத்ர பேரீ கீத காஹள ஶங்க ஶீஸ்துதிகோலாஹலம் செவிப்படும்படியையும், அலங்காரவிதிம்க்ருத்ஸ்நாம் காரயாமாஸ வேஶ்மந:" என்கிறபடியே அங்குள்ள ஆதிவாஹிகஸத்கார க்ரமத்தையும், மேல்நித்யஸூரிகள் ப்ரத்யுத்கதராய் ஸத்கரிக்கும்க்ரமத்தையும் த்வாராத்யக்ஷராதரிக்கும்க்ரமத்தையும், திவ்யாப்ஸரஸ்ஸத்கார க்ரமத்தையும், ஸர்வேஶ்வரனும் பெரியபிராட்டியாரு மாதரிக்கும்படியையும், திவ்யஸூரி பரிஷத்திலேயிருந்து ஆநந்தநிர்ப்பரரா யநுபவிக்கும்படியையும், "தொல்லே வழிகாட்ட" என்றவதிலேயிவ்வளவு மநுவர்த்தித்தபடி.

மூ.—முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கித்
தனியாகிநின்று தளர்ந்து—நனியாம்
பரமபத்தியால்நைந்து பங்கயத்தான்கோனை
யொருமையுற்றுச் சேர்ந்தானுயர்ந்து.

"கண்டுகளிப்பவளவும்-பரஜ்ஞாந கர்ப்பபரபக்தி, இருந்தமையென்றது பூர்ணபரஜ்ஞாநம், முடிந்த அவாவென்றது-பரமபக்தி. இவை ஜ்ஞாநதர்ஶந ப்ராப்த்யவஸ்தைகள்" "ஏவம் விதமான பரமபக்தியாலே பரிபக்வராய் பலத் தாடே சேர்ந்தார்" என்கிற திருவாய் மொழியினர்த்தத்தை இப்ரபந்தத்திலிப் பாட்டாலே ஸேகரித்தருளினாராயிற்று.

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

---

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீ. உ. வே ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
காரப்பங்காடு ஜீயர் ஸ்வாமி

http://acharya.org

ஸ்ரீ. உ. வே. ந்யாயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
வேங்கடாசார்ய] ஸ்வாமி

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீரங்க விமானம்

Released by Maran's Dog ,Toronto, Canada

http://acharya.org